உ
கற்பகந் துணை.
மெய்கண்ட மயம்.
திருச்சிற்றம்பலம்.

சிவஞான சித்தியார்

சுபக்கச் சுருக்க வினாவிடை.

செய்தவர்:
சுத்தாத்துவித சைவ சித்தாந்தப் பேராசிரியர்,
சபா. சிவப்பிரகாசம் பிள்ளை,
சிதம்பரம்.

வெளியிட்டவர்:
சித்தாந்த சிகாமணி,
ஆதி. தியாக. தண்டபாணி செட்டியார்,
பரங்கிப்பேட்டை.

சார்வரி, புரட்டாசி, 4உ
1960.

இதன் விலை] [ரூபாய் 2—50.

உ

சிவமயம்

சிவஞான சித்தியார்

சுபக்கச் சுருக்க வினாவிடை.

அரங்கேற்றியவர்:-

சென்னை அறநிலை பாதுகாப்புத் துறையாளர்,

உயர்திரு. அ. உத்தண்டராமன் பிள்ளை, I. A. S.

அவர்கள்

இடம்:

திருத்துறையூர், அருணந்திசிவாச்சாரியர்

ஆலயம்.

காலம்:

சார்வரி ஆண்டு புரட்டாசி 22

(7—10—1960).

உ

கற்பகந் துணை.

மெய்கண்ட மயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவஞான சித்தியார்

சுபக்கச் சுருக்க வினாவிடை.

செய்தவர்:

சுத்தாத்துவித சைவ சித்தாந்தப் பேராசிரியர்,

சபா. சிவப்பிரகாசம் பிள்ளை,

சிதம்பரம்.

வெளியிட்டவர்:

சித்தாந்த சிகாமணி,

ஆதி. தியாக. தண்டபாணி செட்டியார்,

பரங்கிப்பேட்டை.

சார்வரி, புரட்டாசி, 4உ

1960.

இதன் விலை] [ரூபாய் 2—50.

பாண்டியன் அச்சகம், சிதம்பரம்.

மெய்கண்டமயம்.

மெய்கண்டதேவ நாயனுர் வரலாறு.

நடுநாட்டிலே பெண்ணுகடம் என்னும் திருப்பதியிலே சுமார் 700-ஆண்டுகளுக்கு முன்பு கார்காத்த வேளாள சைவ குலத்திலே அச்சுதகளப்பாளப் பிள்ளை என்பவர் ஒருவர் இருந்தார். அவருக்குப் புத்திரப்பேறில்லை. அதனல் தனது கிரியா குருவாகிய திருத்துறையூர் சகல ஆகம பண்டிதர் என்னும் அருணந்தி சிவாச்சாரியாரிடம் குறை கூறினர், அருணந்தி சிவாச்சாரியார் தேவாரத் திருமுறையில் கயிறுசாத்திப் பார்த்தார். அதில் திருவெண்காட்டுப் பதிகமாகிய திருஞான சம்பந்தர் திருவாய் மலர்ந்தருளிய பாடலாகிய, பேயடையா பிரிவெய்தும் என்னும் முதற்குறிப்புள்ள பாடல் உதயமாயிற்று. அதனல் அச்சுதகளப் பாளப் பிள்ளையை திருவெண்காட்டுக்குச் சென்று முக்குளம் மூழ்கி மூர்த்தியைத் தரிசிக்கக் கட்டளையிட்டார். அச்சுதகளப்பாளப் பிள்ளை தன் மனைவியுடன் திருவெண்காடு சென்று முக்குளம் மூழ்கி மூர்த்தியைத் தரிசித்து வந்தார். ஓர் ஆண் மகவு உதித்தது, அம்மகவுக்கு சுவேதாரண்ணியப்பெருமான் என்று திருநாமமிட்டார். அப்பிள்ளையை அவரம்மான் திருவெண்ணெய்நல்லூரில் வளர்த்து வந்தார். அக்குழந்தைக்கு இரண்டு வயது நிரம்பியது. ஒருநாள் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தது. ஆகாயவழிச் சென்ற பரஞ்சோதி முனிவர் அக்குழந்தையைக் கண்டார். இறைவனருளால் சிவஞானபோத நூலை அக்குழந்தைக்கு உபதேசித்து தமிழுலகம் உய்யும்பொருட்டு இதனை தமிழில் இயற்றுக என்று கட்டளையிட்டு, மெய்கண்டதேவர் என காரணப் பெயருந் தந்து கைலைக்கெழுந்தருளினர். அம்மெய்கண்டதேவ நாயனர் அவ்வூர் பொல்லாப் பிள்ளையின் உதவியால் சிவஞானபோதம் என்கிற நூலை தமிழில் செய்து திருத்துறையூர் அருணந்திசிவாச்சாரியார் முதலிய 49-பேருக்கு உபதேசித்து திருவெண்ணெய்நல்லூரில் ஐப்பசிச் சுவாதி நாளில் எல்லாம் வல்ல இறைவன் திருவடி நிழலிலமர்ந்தருளினர். முற்றும்.

சபா. சிவப்பிரகாசம் பிள்ளை.

உ

மெய்கண்டமயம்.

சிவஞானசித்தியார் செய்தருளிய

அருணந்திசிவாச்சாரியார் வரலாறு.

சுமார் 700-ஆண்டுகளுக்கு முன்னம் நடுநாட்டிலே திருத்துறையூர் என்னுந் திருப்பதியில் ஆதிசைவப்பிராமணர் குலத்தில் ஒருவர் இருந்தார், அவர் இளமையிலேயே சகல ஆகமங்களையும் கற்று வல்லவராயினர் அதனுல் அவர் சகல ஆகமபண்டிதர் என்று பெயர் பெற்றார். பின் அருணந்திசிவாச்சாரியார் என்கிற தீக்ஷா நாமமும் பெற்றார். அவர் திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளியிருந்த பெண்ணுகடம் மெய்கண்டதேவ நாயனரிடம் சிவஞானபோத நூலைச் செவ்வனே கற்றுத்தேறி அதனை உலகம் உய்யவிரித்து வழிநூலாக சிவஞான சித்தியார் என்ற ஒரு நூலை பரபக்கம் சுபக்கமெனச் செய்து இருபா இருபது என்னும் நூலையும் செய்தருளி அந்நூல்களை பெண்ணுகடம் மறைஞான தேசிகருக்கு உபதேசித்து திருத்துறையூரிலேயே புரட்டாசிமீ மக நட்சத்திரத்தில் இறைவன் திருவடி நிழலையடைந்தார்.

முற்றும்.

சபா. சிவப்பிரகாசம் பிள்ளை.

திருச்சிற்றம்பலம்.

மாதவச் சிவஞான முனிவர் வரலாறு.

தென்பாண்டி நாட்டிலே விக்கிரமசிங்கபுரம் என்ற திருப்பதியிலே சைவ வேளாளர் குலத்திலே ஆநந்தக்கூத்தருக்கு மயிலம்மையார் பால் உதித்தவர். முக்களாலிங்கர் என்னும் பெயர்பெற்றவர் இளமையிலேயே தமிழ்க்கல்வியும், ஆரியமும் கற்றவர். அடியார் பத்தி சிவபத்தியில் சிறந்தவர். ஒருநாள் திருவாவடுதுறையிலிருந்து தன்னூருக்கு வந்த அடியார்களுக்குத் திருவமுது செய்விக்க எண்ணித் தந்தையார் ஊரிலில்லாமையால் தாயாரிடம் சொல்லி திருவமுது செய்வித்தார். அவ்வடியார்கள் திருவாவடுதுறைக்குச் செல்லும்போது தந்தையார் அனுமதிபெற்று திருவாவடுதுறை சென்றார். அவ்வூர் ஆதீன கர்த்தரிடம் சிவதீக்கையும் சந்நியாசமும் பெற்றார். மெய்கண்டசாத்திரங்களையும், தென்மொழி வடமொழியிலுள்ள இலக்கண இலக்கியங்களையும், தருக்கங்களையும் கற்றுப் பயின்று அநேக நூல்களை இயற்றியருளினார். காஞ்சீபுரம் சென்றார். சிவஞானபோதத்துக்கு மாபாடியமும் சிற்றுரையும் செய்தருளினார். சாலிவாகன சகாப்தம் 1708 விசுவாவசு (17-4-85 சித்திரை 8-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஆயிலியத்தில் திருவாவடுதுறையில் இறைவன் திருவடி நிழலை யடைந்தார்

சபா சிவப்பிரகாசம் பிள்ளை.

உ

கற்பகந்துணை.

பதிப்புரை.

சிவத்துக்குமேல் தெய்வம் வேறில்லை. சிவஞானசித்திக்குமேல் நூல் வேறில்லையென்றும், பார் விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப்பாதி போதும் என்று சிவபோகசார நூலுடையாரும், பாதி விருத்தத்தால் பார்விருத்தமாக உண்மை சாதித்தார் பொன்னடியைச் சாரும் நாள் எந்நாளோ என்று தாயுமான சுவாமிகளும், புகழ்ந்தோதிய சிவஞான சித்தியார் சுபக்கத்துக்கு மாதவச்சிவஞான யோகிகள் முதலியோர், தடை விடைகளால் பொருள் விளங்கக் கூறியிருப்பினும், அதனைக் கற்றோரேயன்றி மற்றோரும் எளிதிற் கற்கவேண்டி, கடவுள் திருவருளைத் துணைகொண்டு அடியேன் சிவஞான சித்தியார் சுபக்கச் சுருக்க வினாவிடையென்று ஒருநூல் எழுதி வெளியிட்டிருக்கிறேன். இதனைக் கண்ணுறும் அன்பர்கள் தங்களுக்குப் புலப்படும் பிழைகளை அடியேனுக்குத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன். கல்வி கற்கும் சிறுவர், சிறுமிகளும், வயது சென்ற பெரியார்களும், மாதுமணிகளும் தினே தினே சிறுகச் சிறுகக் கற்று, மனப்பாடம் செய்து சிவஞானச் செல்வர்களாய் விளங்க கேட்டுக்கொள்ளுகிறேன். இந்நூலை அச்சிடுவதற்குப் பொருளுதவி செய்த சிவபுண்ணியச்சிலர்களுக்கு எனது மனமார்ந்த வணக்கம்.

அவர்கள் நீடுழி வாழ்க. வாழ்க

சார்வரி௵
புரட்டாசி௴ 4௳
19—9—1960.

சபா. சிவப்பிரகாசம் பிள்ளை,
சுத்தாத்துவித சைவசித்தாந்தப் பேராசிரியர்,
12, பழஞ்சாலியத்தெரு, சிதம்பரம்.

மெய்கண்டமயம்.

மதிப்புரை.

சுத்தாத்துவித சைவ சித்தாந்தப் பேராசிரியர் சபா. சிவப்பிரகாசம் பிள்ளை அவர்கள் இளமையிலேயே முற்செய்தவத்தால் தமிழில் இலக்கண இலக்கியப் புலமையைச் சிறக்கப்பெற்று தீக்கை பெற்று மெய்கண்ட நூல்களைத் தக்காரிடத்துப் பயின்றவர்கள் பலருக்கும் கற்பித்தவர்கள் தமிழாசிரிய வேலையினின்றும் ஓய்வுபெற்ற பிறகு 30 ஆண்டுகளாக மெய்கண்ட நூல்களை தமிழகத்திலே வாழ்வாரனைவரும் சைவநூல் ஓதியுணர்ந்து ஒழுக வேண்டுமென்ற பேரார்வத்தால் அல்லும் பகலும் அயராது பலருக்கும் பொருள் விரும்பாது உடல் நலனையும் பாராது பாடஞ்சொல்லி வருகின்றவர்கள். சிறிது கற்றவர்களும் இந்நூற்களின் பொருளுணருமாறு சிவஞான போதம் மூலமும் உரையும், சிவஞானபோதச் சிற்றுரையும் விளக்கமும் முதலிய எழுதி வெளியிட்டுள்ளார்கள். சிவஞான சித்தியாரையும் அனைவரும் உணருமாறு அந்நூல்களின் பாடல்களைக்குறித்து மிகஎளிய நடையில் கருத்து சிறிதும் பிறழாதவாறும், அதைவிட்டு விலகாமலும் கருத்தை வினாவிடைகளாக வெளியிட்டுள்ளார்கள். இன்றியமையாத இடங்களை நன்கு விளக்கமாகவும் எழுதியுள்ளார்கள். அப்பெரும் நூலை எளிய நடையில் அனைவரும் கற்றுணருமாறு வினாவிடை வகையில் எழுதி வெளியிட்ட இப்பெரியார் அவர்கட்கு சைவ நன்மக்கள் என்றும் நன்றிமறவாக் கடப்பாடுடையவர்கள். இந்நூலை சைவ நன்மக்களும் பிறரும் வாங்கிப் படித்துணர்ந்து அவ்வழி ஒழுகுவதே கைம்மாறு வேண்டாமல் செய்த பெரியவர்கட்கு செய்யவேண்டிய கடமையாகும். இந்நூலாசிரியர் இன்னும் பல ஆண்டுகள் நோயின்றி நெடிது இனிது வாழ்ந்து ஏனைய நூல்களையும் வெளியிட அருளுமாறு அம்பலத்தாடுவான் மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குகின்றேன்.

சிதம்பரம்,
10—9—1960,
சார்வரி, ஆவணி,
26உ.

கு. திருநாவுக்கரசு,
வித்துவான், சித்தாந்தப் புலவர்,
தமிழாசிரியர், இராமசாமிச் செட்டியார் உயர்நிலைப்பள்ளி
பண்ணூற் போதகர் நாவலர் சைவ சித்தாந்தக் கல்லூரி,
சிதம்பரம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சுத்தாத்துவித சைவ சித்தாந்தப் பேராசிரியர்,

சபா. சிவப்பிரகாசம் பிள்ளை

மாணுக்கர்

தில்லைத் திருமுறைக்கழகத் தலைவர்

ஆ. சு. கணபதிப் பிள்ளை

இயற்றியது

சிறப்புப்பாயிரம்.

திருக்கயிலைச் சந்தான அருணந்தி சிவமருளும்
சிவஞான சித்தி நூற்குப்

பெருக்கவுரை பேணுமறு வர்செய்தார் பின்னர்வினு
விடையாகப் பிறங்கு மிந்நூல்

கருக்குழிதீர் சிவக்கலையோ டிலக்கணமும் களிப்பிலெனக்
குரைத்தருளும் குருசித் தாந்தப்

பெருக்கமுறு பேராசான் சபாபதியின் மைந்தன்சிவப்
பிரகாசப் பெருநா வோனே.

அணிந்துரை.

திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்.,

ஆணையர், அறநிலைய நிர்வாகத்துறை, சென்னை.

ஒரு கோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய்ஐங் கரத்தன் ஆறு
தரு கோட்டம் பிறைஇதழித் தாழ்சடையான்
தருமொருவா ரணத்தின் தாள்கள்
உரு கோட்டன் பொடும் வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திரு கோட்டும் அயன்திருமால் செல்வமுமொன்
றோ வென்னச் செய்யும் தேவே.

அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேறும்
குறியது வுடைத்தாய் வேதாகமங்களின் குறியிறந்தங் (கு)
அறிவினில் அருளால் மன்னி அம்மை யோடப்பனுகிச்
செறிவொழியாது நின்ற சிவனடி சென்னிவைப்பாம்.

சைவ சமய நூல்கள், தோத்திரங்கள், சாத்திரங்கள் என இருவகைப்படும். அவைகளை அறிவு நூல்கள், அன்பு நூல்கள் என்றும் கூறலாம். தோத்திரங்கள் பன்னிரு திருமுறைகள், சாத்திர நூல்கள் பதினுன்கு. திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞான சித்தியார் (பரபக்கம், சுபக்கம்) இருபாவிருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினு வெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறிவிளக்கம், சங்கற்ப நிராகரணம் ஆகிய பதினுன்கும் சித்தாந்த சாத்திரம் எனப்படும். இவற்றிற்கு மெய்கண்ட சாத்திரம் என்ற பெயரும் வழங்கப்படுகிறது. திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் இவை மெய்கண்டார் காலத்துக்கு முந்தியவை என்பது ஆராய்ச்சியறிஞர்கள் கண்ட முடிவு.

சிவஞானபோதம், மெய்கண்டார் அருளிச்செய்தது சிவஞான சித்தியார் என்ற நூலை அருளியவர் அருணந்தி சிவாச்சாரியார். இவர் கி. பி. பதின்மூன்ரும் நூற்ருண்டிலே ஆதி சைவ மரபிலே திருத்துறையூரிலே தோன்றியவர். சகலாகம பண்டிதர் என்ற பெயருடன் மெய்கண்டார் குடும்பத்துக்குக் குலகுருவாக இருந்து பின்னர் மெய்கண்ட தேவரின் முதன் மாணவர் ஆனர். இவர் இயற்றிய சிவஞான சித்தியார் சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினன்கனுள் மிகவும் விரிவானது. பரபக்கம், சுபக்கம் என்ற இருபெரும் பகுதிகளையுடையது. மெய்கண்டாருடைய ஆணையின் வண்ணம், சிவஞானபோதம் என்ற தமது ஆசிரியர் நூலை முதல் நூலாகக்கொண்டு சிவஞான சித்தியார் என்ற வழிநூலை ஆக்கினர். இந்நூலின் விரிவும், அதனல் உண்டாகும் தெளிவும் பற்றியே இது பதினன்கு சாத்திரங்களுள் சிறந்ததாகப் போற்றப் படுகிறது. சிவத்தின்மேல் தெய்வமில்லை, சிவஞானசித்திக்குமேல் சாத்திரமில்லை என்பது பழமொழி சிவபோகசாரம் என்ற நூலில்,

> ஆருறுதத்துவமும் ஆணவமும் வல்வினையும்
> நீருக முத்திநிலை நிற்போர்க்குப் - பேருக
> பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
> ஓர் விருத்தப்பாதி போதும்.

என அதன் பெருமை விளங்கக் கூறப்படுகிறது பாதிவிருத் தத்தால் பார் விருத்தமாக உண்மை சாதித்த நூல்எனத் தாயு மான சுவாமிகள் புகழ்ந்துள்ளனர். பரபக்கம் என்ற பகுதியில் ஏனைய மதவாதிகளின் கூற்றுக்களும் அவற்றின் மறுப்புக்களும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. சுபக்கம் என்ற பகுதியில் சைவசித்தாந்த சமயத்தின் கோட்பாடுகள் நன்கு விவரிக்கப்பட் டுள்ளன, சுபக்கத்துக்கு உரை வகுத்தவர் மறைஞான தேசிகர், சிவாக்கிர யோகியர், நிரம்ப அழகிய தேசிகள். ஞானப்பிரகாசர், சிவஞான முனிவர். சுப்பிரமணிய தேசிகர் என்ற அறுவர். இவற்றை அறுவர் உரை என்று கூறுவர், இந்த ஆறு உரை களையும் நன்கு கற்றுத் தெளிந்து கொழும்பு திரு. மு திருவிளங்கம் என்ற பேரறிஞர் ஒரு தெளிவான விளக்க உரையை இவ்விருப தாம் நூற்ருண்டில் இயற்றியுள்ளனர். தூத்துக்குடி சைவசித்

தப் பேராசிரியர் திரு. ந சிவகுருநாதப்பிள்ளை அவர்கள் சித்தியார் ஆராய்ச்சி என்ற அரியதொரு ஆராய்ச்சி நூலை இயற்றி இருக்கின்றனர். இவையெல்லாம் தமிழறிவும் சைவசமய நூற் பயிற்சியுமுடையார்க்கே நன்கு உணர்ந்துகொள்ள முடியும். சித்தாந்தக் கொள்கைகளை எளிதில் சாதாரண அறிவுள்ளவர்களும் கற்றுத் தெரிந்துகொள்ளும் வகையில் சிதம்பரம் சைவப் பேரறிஞர் திரு, சபா. சிவப்பிரகாசம் பிள்ளை அவர்கள் சிவஞான சித்தியார் சுபக்கத்திற்குக் கேள்வியும் விடையுமாக அமைந்த இந்த நூலை இயற்றியுள்ளார்கள். சுபக்கத்தின் பாடல் தொகையை,

ஐந்துதுதி யீரேழு மளவையாகு
மாதிதனி லெழுபதுபின் தொண்ணூற்ருறு
நந்து சதுட்டய நாற்பானவமும் பின்னவமும்
நனி நான்கு நாற்பதினி லொன்றிழிந்தீராறும்
கந்தன் முகமோராறுங் கரமங்கீராறும்
கருதிடுவங் கணபதியைங் கரமுமிருபதமும்
சிந்தையிவை மூவென்ப தோடு முந்நூறும்
சிவஞான சித்தி சுவபக்க மெனத்தெளியே.

என்ற பாடலால் அறிகிருேம். பிள்ளையவர்கள் இந்தநூலில் அந்த 37 செய்யுட்களுக்கும் சூத்திரம், அதிகரணம், செய்யுள் என்று பிரித்துக்கொண்டு வினவிடைகளால் அவற்றின் நுண் பொருள்களை விளக்கியுள்ளார்கள். மூலச் செய்யுட்களையும் சேர்த்து அச்சிட்டால் நூல் மிகவும் விரிவாகும் ஆனமையின் செய்யுட்களின் முதலும் இறுதியுமே தலைப்பாகக் குறிக்கப்பெற் றிருக்கிறது. இந்த வினவிடை நூலைப்படிப்போர் மூல நூலையும் உடன்கொண்டு கற்றுத் தெளிதல் நற்பயன் அளிக்கும். ஒவ்வொரு சூத்திரத்தின் முதலிலும் அந்த சூத்திரத்தில் கூறப்படும் பொருள் யாதென்று விளக்கிய பின்னரே மற்ற செய்யுட்கள் வினவிடை மூலம் விவரிக்கப்பட்டுள்ளன. சிவஞான போதத்துக்கு ஒரு அரிய சிற்றுரையும் விளக்க உரையும் எளிய இனிய தமிழில் எழுதிச் சைவராகப் பிறந்த ஒவ்வொருவரும் கற்றுத் தெளிந்து பயன்பெறும் வண்ணம் உதவிபுரிந்த முதுபெரும்

புலவர் சபா. சிவப்பிரகாசம் பிள்ளையவர்கள் இவ்வரிய நூலைத் தம்முடைய முதிர்ந்த வயதில், ஆழ்ந்து அகன்ற நுண்ணிய அனுபவ முதிர்ச்சியில் கண்ட உண்மைகளைக் கொண்டு எளிதாக யாவரும் அறிந்துகொள்ளும் வண்ணம் இயற்றிக் கொடுத்தமைக்குச் சைவ உலகம் என்றும் நன்றிசெலுத்தும், கடப்பாடுடையது

அருளினால் ஆகமத்தே அறியலாம் அளவினாலும்
தெருளலாம் சிவனைஞானச் செய்தியாற் சிந்தையுள்ளே
மருளெலா நீங்கக்கண்டு வாழலாம் பிறவிமாயா
இருளெலா மிரிக்கலாகும் அடியரோடிருக்கலாமே

அ. உத்தண்டராமன்,
22—9—1960.

உ

சிவஞான சித்தியார் சுபக்கச் சுருக்க

வினாவிடை

பாராட்டுப்பா,

தில்லை மூதூர் ஆடிய சிவன்றன்
அடியவர்க் கருள அருளுருக் கொண்டே
நெற்றிக் கண்ணும் நீல கண்டமும்
மறைத்துக் குருவென வந்தனன் எனவே
எழுத்தறி வித்த இறைவன்; எங்குரு;


ஆயிரம் பிறைகாண் அருந்தவப் பெரியன்;
சைவசித் தாந்த சாத்திர கலாநிதி;
சிவப்பிர காசச் செல்வன்; முப்பொருள்
உணரா மாக்கள் புலன்வழி ஒழுகி
நாத்திகம் பேசி நரகத் துழலா'து'

இன்பம் துய்த்து வாழ இரங்கியே
திருத்துறைப் பதியருள் நந்தி சிவனார்
செப்பிய சித்தி வைப்பு நிதியெலாம்
வினாவிடை நூலென விளக்கி அருளினன்;
அந்நூல், அரும்பொருள் அறிந்தே அனைவரும்

கற்றும், கேட்டும், உற்றும், உணர்ந்தும்
இம்மையில் இன்ப நலனெலாம் எய்திப்
பன்முறை பயின்று பாராட் டுதுமே!

தலைமைத் தமிழாசான்,
உயர்நிலைப் பள்ளி
பண்ணுருட்டி

S. தங்கவேலன்,



சுத்தாத்துவித சைவ சித்தாந்தப் பேராசிரியர்:

சபா. சிவப்பிரகாசம் பிள்ளை.

உ

ஸ்ரீ கற்பகம் துணை.

மெய்கண்டமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவஞானசித்தியார் சுபக்கச்சுருக்க வினவிடை

எழுதியருளிய

உயர்திரு. சபா. சிவப்பிரகாசம் பிள்ளை அவர்கள் வரலாறு.

சிதம்பரத்துக்கடுத்த வீரசோழகன் என்னும் ஊரில் கார்காத்த சைவ வேளாளர் பெரிய குடும்பத்தில் சபாபதி பிள்ளை அம்புஜம்மையாருக்கு ஆறுவது மகவாக 1872-ல் ம. உடையூரில் அம்மான் வீட்டில் மெய்கண்டதேவ நாயனர் சிவப்பேறடைந்த தினமான ஐப்பசி அமாவாசை சுவாதியில் தோன்றினர். சிவப்பிரகாசர் என்ற பிள்ளைத் திருநாமம் பெற்றார். ஒன்றைவிட்ட அம்மானகிய மகாவித்துவான் பெருநிலக்கிழார் சுப்பிரமணியப் பிள்ளை என்பார் இவருக்கு ஏழாவது வயதில் சமயதீட்சையும் செய்வித்து, பன்னிரண்டு வயதுக்குள் சிறிது ஆங்கிலமும், தமிழ் இலக்கண இலக்கியங்களையும் கற்பிக்க கற்று வல்லர் ஆயினர். பன்னிரண்டு வயதளவிலேயே சித்திரக்கவி முதலான பல கவிகளும் இயற்றும் திறம்பெற்றார். அரசாங்கத் திரவிய சகாயம் பெறும் தமிழ்க்கல்விச்சாலை வைத்தார். 1890-ல் ஆசிரியர் போதனை முறை நற்சாட்சியும் பெற்றார். பல கிராமங்களில் தமிழ் பயிற்றி கல்யாண சுந்தரஅம்மையை திருமணம் செய்துகொண்டார் அம்மையார்கணவர் எண்ணியவெலாம் குறிப்பினலே உணர்ந்து, பணிசெய்து கற்புக்கரசியாய் வாழ்ந்துவர ஞானனந்தவல்லி என்னும் ஒரு பெண்ணையும், நடனசபேசன் என்னும் ஒரு ஆணையும் பெற்றார். இவ்வாறு இப்பெரியார் இல்லறம் நடத்திக் கொண்டு சிதம்பரத்தில் ஆறுமுக நாவலர்க் கல்விச்சாலையில் தலைமையாசிரியர் பதவிபெற்று, ஆறுமுக நாவலர் மாணவரான தர்க்ககுடாரதாலுதாரி என்கின்ற திருஞான சம்பந்தப்பிள்ளையிடம் தருக்கநூல் கேட்டு ஆடூரில் தமிழ்க்கல்விச் சாலை வைத்து எங்கும் தமிழையும், சைவத்தையும் வளர்த்து

சில ஊர்களில் சிவாலயங்களையும் கட்டுவித்தார். விசேடநிர்வாண தீட்சை பெற்று சிவபூசை வழுவாது செய்வாராயினர். செப்பறைச் சுவாமிகளென்னும் சிதம்பர சுவாமிகளிடம் சித்தாந்த நூல்களைக் கேட்டார். சிதம்பரம் பச்சையப்பன் உயர்தரக் கல்விச்சாலையிலும், ஆறுமுகநாவலர் கல்விச்சாலையில் தமிழாசிரியராகவும், அத்தமிழ்க் கல்லூரியில் தலைவராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றார். சித்தாந்த நூல்களை வேதனம் (சம்பளம்) பெருது ஏனையோருக்குக் கற்பித்து வந்தார். பலரை சிவபூசை பண்ணுமாறு செய்வித்தார்.

22 — 6 — 1950 விகுருதியாண்டு ஆனித் திருமஞ்சனத் தேர் திருநாளன்று தில்லை நடராசர்கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில் குடந்தை சைவப் புரவலர் திரு. ப. தி. சோ. குமாரசுவாமிச் செட்டியார் அவர்களால் இப்பெரியாருக்கு சுத்தாத்துவித சைவ சித்தாந்தப் பேராசிரியர் என்னும் பட்டம் வழங்கப்பெற்றது. தற்போது சென்னை அறநிலையப் பாதுகாப்பாளராயுள்ள உயர்திரு. உத்தண்டராமப் பிள்ளை பி. ஏ , பி. எல் , ஐ எ. எஸ். அவர்களின் கட்டளையின்மேல் திருப்பெண்ணகடம் மெய்கண்டார் ஆலயத்தில், மெய்கண்டார் திருநட்சத்திரத்தில் ஆண்டுதோறும் சிவஞான போதம் பன்னிரண்டு சூத்திரங்களையும் பதினைந்து நாட்கள் சொற்பொழிவு செய்துவந்தார் திருக்கழிப்பாலை வாரவழிபாட்டுச் சங்கத்தார், தில்லை சாதுக்கூடத்தில் கோடை விடுமுறையில் ஆசிரியர்களுக்கென சித்தாந்தப் பாடம் இப்பெரியாரைக் கொண்டு ஆண்டுதோறும் நடத்தி வருகின்றார்கள்.

திருக்கழிப்பாலை வாரவழிபாட்டுச் சங்கத்தினருள் ஒருவராகிய சொக்கலிங்க முதலியாரின் முயற்சியால் சித்தாந்த நூலை யாவரும் எளிதில் கற்கவேண்டி சிவஞான முனிவர் செய்தருளிய சிற்றுரைக்கு மாறுபடாது. சிவஞானபோதச் சிற்றுரைச் சுருக்கம் என்று ஒரு சிறுநூல் தனது எண்பதாவது வயதில் இயற்றினர். அதனை சென்னை அறநிலையப் பாதுகாப்பாளர் அவர்கள் அரங்கேற்றினர். பின்னர் அச்சிறு நூலைக்கொஞ்சம் விரித்து சிவஞான போதச சிற்றுரையும், விளக்கமும் என்று எழுதியருள அது திருவெண்காட்டு ஸ்ரீ சுவேதாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தான வெளியிடாக அச்சிட்டு வெளிவந்துள்ளது பின் சிவஞான சித்தியாரை கல்வியில் வல்லவரே யன்றி ஏனைய எளியோரும் கற்றுணர்ந்து தமிழுலகம் உய்யும் வண்ணம் சிவஞான சித்தியார்

சுபக்கச் சுருக்க வினவிடை என்னும் இவ்வரிய நூலை தனது எண்பத்தெட்டாவது வயதிலும் எழுதியுதவியுள்ளார்கள். ஆதலின் இப்புலவர் பெருமானுக்கு இத்தமிழுலகம் நன்றி செலுத்தப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. இதனை அச்சிடப் பொருளுதவி செய்து ஊக்குவித்த சிவபுண்ணியச் சீலர்களுக்கும் இத்தமிழுலகம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. அதனை யச்சிட்டுதவிய சிதம்பரம் பாண்டிய னச்சகத்தார்க்கும் நன்றிபாராட்டக் கடமைப் பட்டுள்ளோம். ஏனைய சித்தாந்த சாத்திரங்களுக்கும் அரும்பத உரைகளும், வினவிடைகளும் எழுதிவைத்துள்ளார்கள். அதனைத் தமிழுலகம் பயன்பெறுமாறு செய்வது நம்மனோர் கடமையாம். இத்துணை அரியபெரிய சித்தாந்த சிரோன்மணியாகிய பெரியார் அவர்கள் இதற்குமேலும் நூறுண்டு சந்ததியுடன் விளங்க இருந்து, இதுபோன்ற பலநூல்களை எளியநடையில் ஆக்கித்தரும் ஆற்றலுடன், சகலநன்மைகளும் பெற்று நோயின்றிவாழ எல்லாம் வல்ல இறைவன் அனுக்கிரகம் செய்தருள வேண்டுமென முழு முதலாகிய கடவுளை, மனம், மொழி மெய்களால் வாழ்த்தி வணங்குகிறேன்.

இன்னனம்,

ஆதி, தியாக. தண்டபாணிச் செட்டியார்,

பறங்கிப்பேட்டை.

உ

கற்பகந்துணை.

மெய்கண்ட மயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவஞான சித்தியார் சுபக்கச் சுருக்க வினாவிடை.

நூல்

விநாயகர் வணக்கம்

காப்பு

ஒரு கோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய் ஐங்கரத்தன் ஆறு
தரு கோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
தருமொரு வாரணத்தின் தாள்கள்
உரு கோட்டன் பொடும் வணங்கி யோவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திரு கோட்டும் அயன்திருமால் செல்வமும் ஒன்
றோவென்னச் செய்யுந் தேவே.

——

உ

கற்பகந் துணை.

சிவஞான சித்தியார் சுபக்கச் சுருக்க வினாவிடை

பிரமாண இயல்.

1. கேள்வி:- பிரமாண இயல் என்றால் என்ன?
பதில்:- அளவையின் இலக்கணத்தைக் கூறும் பிரிவு.

2. கே: பிரமாணம் என்றால் என்ன?
ப: அளவு

3. கே: அளவு என்றால் என்ன?
ப: அறிவால் அளப்பது. அதாவது அறிவின் வல்லமையால் அளந்து பார்ப்பது. (சூ-ம் 1, கே. 10 ஐ பார்.)

4. கே: இயல் என்றால் என்ன?
ப: இலக்கணம்.

5. கே: அளவை எத்தனை வகைப்படும்?
ப: (1) காட்சி அளவை (2) அனுமான அளவை (3) ஆகம அளவை என மூன்று வகைப்படும்.

6. கே: காட்சி அளவை என்பது என்ன?
ப: (1) கண்ணால் உருவத்தை நேரில் காண்பதும் (2) காதால் சத்தத்தை நேரில் கேட்பதும் (3) மூக்கால் வாசனையை நேரில் அறிவதும் (4) வாயால் சுவையை நேரில் சுவைப்பதும் (5) உடம்பால் குளிர்ச்சியையும், சூட்டையும் நேரில் அறிவதுமாம். (ஆகவே, மெய், வாய், கண், மூக்கு, செவிகளால் நேரில் அறிவதேயாம்.) (சூ-ம் 1, அதி. 1, செ. 2. கே. 6-ஐ பார்)

7. கே: அநுமான அளவையாவது யாது?
ப: நேரில் பார்த்ததைக் கொண்டு நேரில் பார்க்காததை கருத்தால் அறிந்து சொல்லுவது. (சூ-ம் 1, அதி. 1, செ. 2, கே. 6-ஐ பார்)

8. கே: ஆகம ஆளவையாவது யாது?

ப: (1) நூல்களால் அறிவதும் (2) பத்திரிகைகளால் அறிவதும் (3) அறிஞர்களால் அறிவதுமாம். (சூ-ம் 1, அதி. 1, செ. 2, கே. 6-ஐ பார்.)

9. கே: காட்சி அளவைக்கு வேறு பெயர் என்ன?

ப: காண்டல் அளவை (அதாவது பிரத்தியக்ஷப் பிரமாணம்)

10. கே: அநுமான அளவைக்கு வேறு பெயர் என்ன?

ப: கருதல் அளவை (அதாவது கருதல் என்ருல் யோசித்தல்.)

11. கே: ஆகம அளவைக்கு வேறு பெயர் என்ன?

ப: உரை அளவை (உரை என்ருல் சொல்லாம்.)

12. கே: காட்சி அளவைக்கு ஒரு உதாரணம் சொல்?

ப: மின்னல் மின்னியது பார்த்தேன். இடி இடித்தது கேட்டேன். தேன் தித்தித்தது சுவைத்தேன். மல்லிகைவாசனை வீசிற்று முகந்தேன். காற்று குளிர்ந்தது உணர்ந்தேன்.

13. கே: அநுமான அளவைக்கு உதாரணஞ் சொல்?

ப: இன்று இரவு நன்ருக தூங்கிப்போனேன். விடிந்ததும் தெருவில் வந்து பார்த்தேன் தெருவில் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. அதனுல் இராத்திரி மழை பெய்திருக்கிறது. என்று தெரிந்து கொண்டேன். ஆனுல் மழை பெய்ததை நான் பார்த்ததில்லை.

14. கே: ஆகம அளவைக்கு ஓர் உதாரணம் சொல்?

ப: சிவஞானபோதம் என்ற நூலை இன்னுர் செய்தார் என்று எனக்குத் தெரியாது. சிவஞானபோதம் என்ற நூலை வாசித்துப் பார்த்தேன். அதை மெய்கண்டதேவர் செய்தார் என்று தெரிந்துகொண்டேன். அதுபோல சிவஞான சித்தியார் என்ற நூல் யாரால்செய்யப்பட்டது என்று எனக்குத்தெரியாது. சிவஞான சித்தியார் என்ற நூலை வாசித்துப் பார்த்தேன். அந்த சிவஞான சித்தியார் என்ற நூல் மெய்கண்டதேவ நாயனுருடைய மாணுக்கர் அருணந்தி சிவாசாரியரால் செய்யப்பட்டதென்று தெரிந்து கொண்டேன். அவர் செய்தபோது நான் பார்த்ததில்லை.

1960 ஏப்ரல் 4-ம் நாள் திருவெண்காட்டில் அறுபத்து மூவர் கும்பாபிஷேகம் என்று தினமணி பேப்பரால் தெரிந்து கொண்டேன். இமயமலேயின் மேலுள்ள கைலாச மலேக்கு சில பெரியோர்கள் இப்போது போய்வந்திருக்கிருர்கள் என்று சில பெரியோர்கள் சொல்லக்கேட்டு கைலாச மலே வடக்கே இருக்கிறதென்று தெரிந்துகொண்டேன் நான் போய் பார்த்த தில்லே.

சிவஞான சித்தியார் முதல் சூத்திரம்.

1. கே: இந்த சிவஞான சித்தியார் என்ற நூலேச் செய்தவர் யார்?

ப: திருத்துறையூர், அருள்நந்தி சிவாச்சாரியார்.

2. கே: அருணந்தி சிவாச்சாரியாருக்கு வேறு பெயர் என்ன?

ப: சகல ஆகம பண்டிதர்.

3. கே: முப்பொருள்கள் எவை?

ப: (1) பதி (2) பாசம் (3) பசு

4. கே: பதி யென்ருல் பொருள் என்ன?

ப: கடவுள் (கடவுள் ஒன்றே பல அல்ல.

5. கே: பாசம் என்ருல் என்ன?

ப: உயிர் உள்ளபோதே அந்த உயிரோடு இருந்து கொண்டு அந்த உயிரின் அறிவை மறைத்துக் கொண்டிருக்கிற ஆணவம் என்கிற அழுக்கு. அந்த பாசமும் ஒன்றே பல அல்ல.

6. கே: பசு என்ருல் என்ன?

ப: உயிர் (உயிர்கள் பல, ஒன்றன்று)

7. கே: ஒரே ஒரு ஆணவமலம் பல உயிர்களின் அறிவை எப்படி மறைக்கும்?

ப: சூரியன் மறைந்தபின் ஒரே ஒரு இருட்டு வருகிறது. அந்த இருள் ஒன்றே, மனிதர், மிருகங்கள், பறவைகள் முதலியவைகளின் பல கண்களே மறைப்பது போல ஆணவம் என்கிற ஒரு இருள் பல உயிர்களின் அறிவை மறைக்கும்.

8. கே: உண்மை என்பதற்குப் பொருள் என்ன?

ப: உண்டு என்பதாம். அதாவது இருக்கிறது என்பதாம்

9. கே: முப்பொருள்கள் உண்டு என்று எத்தனை சூத்திரங்களில் அளவை கூறுகின்றார்?

ப: முதல் சூத்திரத்தில் பதி உண்டு என்று அளவை கூறுகின்றார். இரண்டாஞ் சூத்திரத்தில் பாசம் உண்டு என்று அளவை கூறுகின்றார். மூன்றாஞ் சூத்திரத்தில் பசு உண்டு என்று அளவை கூறுகின்றார். ஆக மூன்று சூத்திரங்களில் அளவை கூறுகின்றார்.

10. கே; அளவை என்றால் பொருள் என்ன?

ப: அறிவால் அளப்பது. (பிரமாண இயல் கே. 3-ஐ பார்)

சூத்திரம் 1, செய்யுள் 1. ஒருவனோ.........நின்றே.

1. கே: பிரபஞ்சம் என்றால் என்ன?

ப: உலகம்.

2. கே: உலகத்துக்குப் பிரபஞ்சம் என்று ஏன் பெயர்வந்தது?

ப: பஞ்சம் என்றால் விரிவு என்று பொருள். அதாவது மிகவும் விசாலமானது என்பது பொருள். (இன்னம் ஒரு பொருள்) பஞ்சம் என்றால் ஐந்து, அதாவது மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்கிற இவை ஐந்துங் கூடியது என்பது பொருள். பிர என்பது பஞ்சம் என்கிற சொல்லுடன் கூடிய சொல்.

3. கே: தொகுதி என்றால் என்ன பொருள்?

ப: கூட்டம்.

4. கே: உலகம் என்பது எது?

ப: பூமியும், பூமியிலுள்ள உயிருள்ள பொருள்களும், உயிரில்லாத பொருள்களும், நீரும், நீரிலுள்ள உயிருள்ள பொருள்களும், உயிரில்லாத பொருள்களும், நெருப்பும், காற்றும், வெளியும் உலகமாம்.

5. கே: இந்தச் செய்யுளில் இந்த உலகம் எத்தனை வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது?

ப: ஒருவன், ஒருத்தி, ஒன்று என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது அவன், அவள், அது என்று மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றது.

6. கே: ஒருவன் என்பது எதைக் குறிக்கின்றது?

ப: மனிதர்களிலுள்ள ஆணை மாத்திரம் குறிக்கும். மிருகம் முதலியவைகளிலுள்ள ஆணைக் குறிக்காது.

7. கே: ஒருத்தி என்பது எதைக் குறிக்கின்றது?

ப: மனிதர்களிலுள்ள பெண்ணை மாத்திரம் குறிக்கும். மிருகம், பறவை முதலியவைகளிலுள்ள பெண்ணைக் குறிக்காது.

8. கே: ஒன்று என்றது எதைக் குறிக்கும்?

ப: உயிருள்ள மிருகம், பறவை முதலியவைகளையும் குறிக்கும். உயிரில்லாத மண், நீர் முதலிய எல்லாப் பொருள்களையும் குறிக்கும்.

9. கே: அவயவம் என்றால் என்ன பொருள்?

ப: உறுப்புக்கள், அதாவது ஒரு பொருளிலிருந்து பிரிகிறவைகள். (சூ-ம். 1, அதி. 1, செ. 27, கே. 22-ஐ பார்க்க)

10. கே: நமது உடம்பிலேயுள்ள அவயவங்கள் எவை?

ப: கை, கால், கண், மூக்கு, செவி, தலை, முதலியனவாம்

11. கே: அவயவி என்றால் எது?

ப அவயவங்களை தன்னிடத்தே யுடையது எதுவோ அது அவயவியாம். (சூ-ம். 1, அதி. 1, செ. 27, கே. 22 ஐ பார்க்க)

12. கே: கை, கால், உடம்பு இவற்றுள் அவயவி எது?

ப: உடம்பு.

13. கே: ஒரு மரத்திலுள்ள அவயவம் எவை? அவயவி எது?

ப: கிளை, இலை, பூ, காய் முதலியன அவயவம். மரம் அவயவி.

14. கே: இந்தச் செய்யுளில் உலகத்திற்கு என்ன என்ன அவயவங்கள் இருக்கின்றன என்கிறார்?

ப: ஒருவன், ஒருத்தி, ஒன்று என்ற அவயவங்கள் இருக்கின்றன. அதாவது அவன், அவள், அது என்ற அவயவங்கள் இருக்கின்றன என்கிறார்.

15. கே: இந்த உலகத்தில் அவயவி எது? ஏன்?

ப: உலகமே அவயவி, ஒருவன், ஒருத்தி, ஒன்று என்ற அவையவங்களை உடைமையால்.

16. கே: வருமுறையாவது யாது?

ப: சற்காரிய முறை.

17. கே: சற்காரியம் என்ருல் என்ன?

ப: உள்ள பொருளே உற்பத்தியாகும் என்பதாம். (எனவே இல்லாத பொருள் உற்பத்தியாகாது என்பதாம். இன்னும் ஒரு பொருள் சத்துப்பொருளே காரியப்படும் என்பதாம்.) (சத்து + காரியம் = சத்காரியம்).

18. கே: உள்பொருள்கள் எவை?

ப: மனிதர், மிருகம் முதலிய உற்பத்தியாகிற எல்லாப் பொருள்களுமாம்.

19. கே: இல்பொருள்கள் எவை?

ப: உற்பத்தியாகாத பொருள் இல்பொருளாம். முயல் கொம்பு, ஆமை மயிர் முதலியவை. முயல் உள்பொருள், முயல் கொம்பு இல்பொருள், ஆமை உள்பொருள், ஆமை மயிர் இல்பொருளாம். முயல் கொம்பும், ஆமை மயிரும் உற்பத்தியாகாதபடியால், இல்பொருளாம்.

20. கே: ஒருவன், ஒருத்தி, ஒன்று என்ற பிரபஞ்சம் எப்படிப் பட்டது?

ப: தோன்றலும் உடையது, நிற்றலும் உடையது, அழிதலும் உடையது. அதாவது பிறக்கும், இருக்கும், இறக்கும்.

21. கே: எப்படி பிறக்கும், இருக்கும், இறக்கும்?

ப: தானே பிறக்காது, தானே இருக்காது, தானே இறக்காது. ஒருவனுலேயே பிறக்கும், இருக்கும், இறக்கும்.

22. கே: அப்படி செய்கிறவன் யாவன்?

ப: கடவுள், மனிதனல்லன்.

23. கே: ஏன் மனிதனுக இருக்கக் கூடாது?

ப: ஒருவனை பிறக்கும்படி செய்யவும், அவனை இருக்கும்படி செய்யவும், அவனை இறக்கும்படி செய்யவும் மனிதனுக்கு அவ்வளவு அறிவும் வல்லமையும் இல்லாதபடியால் மனிதனுக இருக்க முடியாது

24. கே: தோன்றல் என்றால் என்ன?

ப: பிறத்தல்

25. கே: நிற்றல் (அதாவது இருத்தல்) என்றால் என்ன?

ப: வாழ்ந்துகொண்டிருத்தல்.

26. கே: அழிதலாவது யாது?

ப: இறத்தல் (அதாவது ஒடுங்குகிறது அல்லது அடங்குகிறது.

27. கே: வினை முதல் என்றால் என்ன?

ப: ஒன்றைச் செய்பவன். அதாவது கர்த்தா.

28. கே: அவாய் நிற்றல் என்றால் என்ன?

ப: ஒன்றை ஆசைப்பட்டிருத்தல். (அதாவது) ஒரு சொல்தன்னை முடிக்க வேறே ஒரு சொல்லை விரும்பி இருப்பது.

29. கே: அவாய் நிலைக்கு ஒரு உதாரணம் சொல்லு?

ப: இல்பொருள் தோன்றாது. உள்பொருளே தோன்றும் என்றால் எதனால் தோன்றும் என்று அவாய் நிற்றலால் எதனால் என்பது அவாய் நிலை. (சூ-ம் 2. கே. 1-ஐ பார்க்க)

30. கே: ஈறு என்றால் என்ன?

ப: கடைசி (அதாவது) இறப்பு.

31. கே: ஈறும் ஆகியவன் யார்?

ப: அழிக்கிறவன். (அதாவது சங்காரம் செய்கிறவன்.) (அதாவது சங்காரமூர்த்தி)

32. கே: சங்காரம் என்றால் என்ன?

ப: அழித்தல்.

33. கே: ஏதுவாய என்றால் என்ன?

ப: காரணமாகிய என்பதாம்.

34. கே. சங்காரகாரணர் உலகமெல்லாம் அழிந்தபின் எப்படி இருப்பார்?

ப: அநாதி, முத்த, சித்துருவாய் நிற்பார். (சூ-ம் 2, அதி. 1, செ. 1, கே. 10-ஐ பார்க்க)

35. கே: அநாதி யென்றால் பொருள் என்ன?

ப: பிறப்பு இல்லாதவர்.

36. கே: அநாதி என்பதை எப்படி பிரிக்கலாம். (சூ-ம் 2, அதி. 1, செ. 3, கே. 2-ஐ பார்க்க)

ப: ந+ஆதி என்று பிரிக்கலாம். (சூ-ம் 1, அதி. 1, செ.1 கே. 4-ஐ பார்க்க)

37. ந என்பதன் பிறகு முதலில் ஒரு உயிர் எழுத்து வந்து புணர வடமொழியில் ஒரு உதாரணம் சொல்லு? (தென்மொழியில் சொல்லாதே).

ப: ந+ஏகம் = அநேகம்.

38. கே: ந என்பதன் பிறகு முதலில் ஒரு உயிர் மெய் எழுத்து வந்து புணர வடமொழியில் ஒரு உதாரணம் சொல்லு? (தென்மொழியில் சொல்லாதே).

ப: ந+நீதி=அநீதி.

39. கே: ந என்பதற்குப் பொருள் என்ன?

ப: இல்லை என்பது பொருள்.

40. கே: ஆதியென்றால் பொருள் என்ன?

ப: பிறப்பு என்பது பொருள் (அதாவது முதல்)

41. கே: முத்தன் என்றால் பொருள் என்ன?

ப: எல்லாப் பற்றும் விட்டவன். (பற்று=ஆசை)

42. கே: சித்து என்றால் பொருள் என்ன?

ப: அறிவுடையவன்.

43. கே: அநாதி, முத்த, சித்துரு என்றால் பொருள் என்ன?

ப: பிறப்பு இறப்பு இல்லாதவன், எல்லா ஆசைகளையும் விட்டவன், அறிவுப்பொருளா யிருப்பவனாகிய பதி என்பது பொருள். (சூ-ம் 2, செ. 1, கே. 10-ஐ பார்க்க)

44. கே: பெத்தம் என்றால் பொருள் என்ன?

ப. எல்லாப் பற்றையும் உள்ள என்பது பொருள்.

45. கே: அநாதி, பெத்த, சித்துரு என்றால் பொருள் என்ன?

ப: பிறப்பும் இறப்பும் இல்லாதது. எல்லா ஆசைகளையும் உடையது, அறிவுள்ளதாகிய உயிர் என்பது பொருள்.

46. கே: மன்னிநின்று என்பதற்குப் பொருள் என்ன?

ப: நிலைபெற்றிருந்து என்பதாம்.

47. கே: மருவிடும் என்பதற்குப் பொருள் என்ன?

ப: முன்போலவே மருவிவிப்பர் அதாவது முன் போலவே உற்பத்தி செய்வர் சர்வ சங்காரமூர்த்தி என்பதாம்.

முதல் சூத்திரம், முதலதிகரணம், செய்யுள் 2.
(உதிப்பதும்.........மேதினிக்கே.)

1. கே: அதிகரணம் என்ருல் பொருள் என்ன?

ப: சில விஷயங்கள் நிலேத்திருக்கிற இடம்.

2. கே: என்ன என்ன விஷயங்கள்?

ப: (1) தன்னுல் கூறப்படும் பொருள், (2) அப்படி கூறப்படும் பொருளில் உள்ள ஐயப்பாடு, (3) அப்படி கூறப் படும் பொருளுக்கு பிறர் கூறும் மறுப்பு, (4) அந்த மறுப்பை நிராகரிக்கும் சித்தாந்தமுமாம்.

3. கே: அதிகரணம் என்பதற்கு இன்னும் வேறு பொருள் என்ன?

ப: ஆதாரம் என்றும் ஒரு பொருள் உண்டு. சூ. 1, அதி. 3, செ. 65, கே: 14-ஐ பார்க்க)

4. கே: அதிகரணம் என்பதற்கு இன்னும் வேறு பொருள் என்ன?

ப: சூரணி என்று ஒரு பொருள் உண்டு.

5. கே: நூலாசிரியர் முதற்செய்யுளில் என்ன என்ன சொன் ஞர்?

ப: (1) உலகம் உள்பொருள் (2) உள்பொருளாகிய இந்த உலகத்தை ஒரு கடவுள் பிறப்பித்து, காப்பாற்றி, அழிக் கிருர். (3) அப்படி அவர் அழிக்கிறபடியால் அழிக்கிற அந்த கடவுளே உலகத்துக்கு முதற் கடவுள் என்று சொன்ஞர்.

6. கே: அவற்றைக்கேட்ட உலோகாயதன் எப்படிமறுத்தான்?

ப: (1) உலகம் உள்பொருளல்ல நித்தப் பொருள் (2) உலகம் அநாதியாயுள்ளது. ஆதலால் அதனேப் பிறப்பிக்க வும் வேண்டாம், காப்பாற்றவும் வேண்டாம், அழிக்கவும் வேண்டாம். (3) ஆதலால் பிறப்பிக்க, காப்பாற்ற, அழிக்க ஒரு கடவுளும் வேண்டாம் என்று மறுத்தான்.

7. கே: உலோகாயதன் சொன்னதை நூலாசிரியர் என்ன சொல்லி பரிகரித்தார்?

ப: (1) உலகம் உனக்கு நித்தமாய்த் தோன்றுகிறது. (2) அப்படி உனக்கு நித்தமாய்த் தோன்றுகிற உலகம் பிறப்பையும், அழிவையும் தன்னோடு கூடவே கொண்டுள்ளது. (3) ஆதலால் பிறப்பையும் அழிவையும் செய்ய ஒரு கடவுள் வேண்டுமென்று சொல்லி பரிகரித்தார்.

8. கே: இந்த பரிகாரத்தால் என்ன விளங்குகிறது?

ப: (1) உலகம் நித்தமல்ல (2) அநாதி அல்ல. (3) தோன்றி நின்று அழிவது என விளங்குகிறது.

9. கே: உலோகாயதர் என்பவர் யார்?

ப: (1) கண்ணால் கண்டதையே உண்டு என்பவர், (2) காணாதவைகளை இல்லை யென்பவர், அதாவது, மெய், வாய், கண், மூக்கு, செவிகளால் அறிவதையே ஒப்புக்கொள்வார். அதாவது காட்சிப் பிரமாணத்தை மாத்திரம் ஒப்புக்கொள்வார். அநுமானப் பிரமாணம் ஆகமப் பிரமாணத்தை ஒப்புக்கொள்ள மாட்டார். (பிரமாண இயல் கே: 6,7,8-ஐ பார்க்க)

10. கே: சிவஞானசித்தியார் என்ற நூல் எத்தனை பிரிவு?

ப: பரபக்க நூல் என்றும், சுபக்க நூல் என்றும் இரண்டு வகைப்படும்.

11. கே: பரபக்க நூல் என்றால் என்ன?

ப: சித்தாந்தி அல்லாத மற்ற மதத்தினர்களுடைய கொள்கையைக் கூறும் நூல்.

12. கே: சுபக்க நூல் என்றால் என்ன?

ப: மற்றவர் சொல்லுகிற மறுப்பை பரிகரித்து சித்தாந்தி தன் கருத்தைக் கூறும் நூல்.

13. கே: பரிகரிக்கிறது என்றால் என்ன பொருள்?

ப: காரணங்காட்டி பொய் என்று தள்ளுபடி செய்கிறது.

14. கே: சித்தாந்தியல்லாத மற்றவர்களில் சிலரைக் கூறு?

ப: உலோகாயதன், புத்தன், சமணன்.

முதல் சூத்திரம், முதலதிகரணம், செய்யுள் 3.
(இயல்புகாண் ... ... அசேதனத்தால்)

1. கே: இயல் என்றால் என்ன பொருள்?
ப: மாறுபடாமல் ஒரே விதமாய் இருப்பது.

2. கே: விகாரம் என்றால் என்ன பொருள்?
ப: மாறுபடுவது.

3. கே: செயல் என்றால் என்ன பொருள்?
ப: விகாரப்படுவது, மாறுபடுவது.

4. கே: செய்தி என்றால் என்ன பொருள்?
ப: விகாரப்படுவது, மாறுபடுவது.

5. கே: நூலாசிரியர் முதலதிகரணம் இரண்டாவது செய்யுளில் உலகம் எப்படிப்பட்டது என்று சொன்னார் (செய். உதிப்பதும்...... மேதினிக்கே)

ப: உலகம் உதிப்பதும் ஈறுமாகியது என்றார். அதாவது தோற்றமும் கேடும் உடையது என்றார்.

6. கே: உலோகாயதன் உதிப்பதையும் அழிவதையும் எப்படிப்பட்டதென்று மறுத்தான்?

ப: அந்த தோற்றமும், கேடும் இயல்பு, அதனால் அதற்கு வினைமுதல் வேண்டாம் என்றான்.

7. கே: நூலாசிரியர் தோற்றமும் கேடும் எப்படிப்பட்டதென்று சொல்லி பரிகரித்தார்?

ப: தோற்றமும், கேடும் இயல்பல்ல, விகாரமாகும். விகாரமாதலை இயல்பு என்று சொல்லக்கூடாது. அந்த விகாரத்தைச் செய்ய ஒரு வினைமுதல் வேண்டுமென்று சொல்லி பரிகரித்தார்.

8. கே: மறுபடியும் உலோகாயதன் என்ன சொல்லி மறுத்தான்?

ப: அப்படி விகாரமாதலே இயல்பு என்று சொல்லி அதற்கு வினைமுதல் வேண்டாம் என்றான்.

9. கே: அதை நூலாசிரியர் என்ன சொல்லி பரிகரித்தார்?

ப: விகாரம்வேறு, இயல்புவேறு, விகாரமாதலே இயல்பு என்று சொல்லுகிற உங்களுக்கு விகாரத்தின் வேறாய் இயல்பு என்பது ஒன்றில்லை எனப்படும். அப்படிப்படவே தோற்றி

மாய்தலாகிய காரியத்தைச் செய்ய ஒரு வினைமுதல் வேண்டப் படும் என்று சொல்லி பரிகரித்தார்.

10. கே: பின்பு உலோகாயதரில் ஒரு சாரார் எப்படி மறுக் கிறார்கள்?

ப: தோன்றுவதும் மாய்வதும் இயல்பல்ல விகாரந்தான் என ஒப்புக்கொண்டு ஆனாலும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு ஆகிய நான்கு பூதங்களும் இயல்பாயுள்ளன. அவையே வினை முதலாய் நின்று தோற்றிமாய்தலாகிய விகாரத்தைச் செய்யும். இதற்கு வேறாக ஒருவினை முதல் வேண்டாம் என்று மறுத்தார். ஆகாயம் இவருக்கு உண்டு என்பதில்லை. அதனால் நான்கு பூதங்களுமே வினைமுதல் என்றார்.

11. கே: உலோகாயதரில் ஒருசாரார் மறுத்ததை நூலாசிரியர் எப்படி பரிகரித்தார்?

ப: நீங்கள் சொன்ன பிருதிவி, அப்பு, தேயு, வாயு, அகிய நான்கு பூதங்களும் ஒன்றால் ஒன்று செய்யப்படுதலாலே அவை நான்கும் செயப்படு பொருளேயாம். வினைமுதலாக மாட்டா. ஆதலால் செயல்படும் அந்த பூதங்களுக்கு வேறாக செயல்படாத வினைமுதலாகிய கர்த்தா வேறு வேண்டப்படும். வினைமுதல் என்றாலும் கர்த்தா என்றாலும் செய்பவன் என்றா லும் ஒன்றே என்று சொல்லி பரிகரித்தார்.

12· கே: செயப்படுபொருள் என்றால் என்ன?

ப: ஒருவனால் செய்யப்பட்ட பொருள்.

13. கே: செயப்படுபொருளுக்கு ஒரு உதாரணம் சொல்?

ப: குடம், சட்டி, பானை முதலியன செயப்படுபொரு ளாம். குயவனால் செய்யப்பட்டமையால். இவைபோல ஆடை, கோபுரம், வீடு, உலகம் எல்லாம் செயப்படுபொருளாம்.

14. கே: சாத்தன் தன்னைக் குத்தினான் என்றதில் செயப்படு பொருள் எது? வினை முதல் எது?

ப: குத்தினது கை, சாத்தனல்ல, ஆதலால் கை வினை முதல், கைகுத்த, குத்தப்பட்டது சாத்தனுடைய உடம்பு. ஆத லால் உடம்பு செயப்படுபொருள். தன்னை என்றது தன்னு டைய உடம்பை என்பது பொருளாம். ஆதலால் வினைமுதல் வேறு, செயப்படுபொருள் வேறு.

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 4.
(நிலம்புனல்.........வேண்டும்.)

1. கே: உலோகாயதரில் ஒரு சாரார், பிருதிவி, அப்பு, தேயு, வாயு இந்த நான்கு பூதங்களும் செயப்படு பொருளல்ல. வினைமுதல் என்று எப்படி சொல்லுகிறார்?

ப: (1) இந்த நான்கில் காற்று என்பது பிருதிவி, அப்பு, தேயு என்கிற மூன்று பூதங்களையும் காணும்படி நிலைபெறுத்தி அந்தக் கூட்டத்தில் காற்றும் நிலைபெறும். ஆதலால் காற்று செயப்படு பொருளல்ல வினைமுதலாம். (2) இந்த நான்கில் நெருப்பு என்பது பிருதிவி, அப்பு, காற்று, என்கிற மூன்று பூதங்களையும் அழித்து அந்த கூட்டத்தில் நெருப்பும் அழிவெய்தும். ஆதலால் நெருப்பு செயப்படுபொருள்ல்ல வினைமுதலாம் (3) இந்த நான்கில் நீர் என்பது பிருதிவி, தேயு, வாயு என்கிற மூன்று பூதங்களையும் தோற்றுவித்து அந்த கூட்டத்தில் நீரும் தோன்றும். ஆதலால் நீர் செயப்படுபொருளல்ல வினைமுதலாம். (4) இந்த நான்கில் பிருதிவி என்பது அப்பு, தேயு, வாயு என்கிற மூன்று பூதங்களிலிருந்து உண்ணப்படும் பொருளைத் தந்து அந்த கூட்டத்தில் பிருதிவியும் பயனைத்தரும். ஆதலால் பிருதிவி செயப்படுபொருளல்ல, வினைமுதலாம். ஆதலால் இந்த பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்கிற நான்குமே வினைமுதலாம் வேறே வினைமுதல் வேண்டாம் என்று சொல்லுகிறார்.

2. கே: பிருதிவி, அப்பு, தேயு, வாயு ஆகிய நான்கு பூதங்களும்வினைமுதலல்ல, செயப்படுபொருளேயாம் என்பதற்கு நூலாசிரியர் என்ன காரணம் சொன்னார்.

ப: (1) காற்று, நீரால் தோற்றப்படுகிறது, பிருதிவியால் பயனைத் தருகிறது, அனலால் அழிக்கப்படுகிறது. ஆதலால் காற்று செயப்படுபொருள். (2) நெருப்பு, நீரால் தோற்றப்படுகிறது, காற்றால் நிலைபெறுகிறது, பிருதிவியால் பயனைத் தருகிறது. ஆதலால் நெருப்பு செயப்படுபொருள். (3) நீர், காற்றால் நிலைபெறுகிறது, பிருதிவியால் பயனைத் தருகிறது, அனலால் அழிகிறது. ஆதலால் நீர் செயப்படுபொருள். (4) பிருதிவி

நீரால் தோற்றப்படுகிறது, நெருப்பால் அழிக்கப்படுகிறது, காற்ருல் நிலைபெறுகிறது. ஆதலால் பிருதிவி செயப்படுபொருள் ஆதலால் வினைமுதல் வேறு வேண்டப்படும்.

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 5.
(சார்பினில்... ... ...அன்றே.)

1. கே: சார்பு என்ருல் என்ன பொருள்?
ப: ஆதாரம் (அதாவது) பின்னுல் உண்டாகிற பொருளுக்கு முன்னே இருக்கும் பொருள்.

2. கே: கணம் என்ருல் பொருள் என்ன? (கணம் வடமொழி)
ப: க்ஷணம்.

3. கே: பங்கம் என்ருல் பொருள் என்ன?
ப: அழிவு அல்லது கெடுதி.

4. கே: கணபங்கம் என்ருல் என்ன பொருள்?
ப: க்ஷணத்தில் அழிவது.

5. கே: சவுத்திராந்திகர் என்பவர் யார்?
ப: புறப்புறச் சமயத்தார் அறுவரில் ஒருவர்.

6. கே: புறப்புறச் சமயமென்ருல் என்ன?
ப: வேதங்களுமில்லை ஆகமங்களுமில்லை என்று சொல்லுவது. (சூ-ம் 1, அதி. 1, செ. 7, கே. 2-ஐ பார்க்க)

7. கே: சௌத்திராந்திகர் கொள்கை என்ன?
ப: (1) உலகம் இல்பொருள் (2) அந்த உலகம் க்ஷணத்தில் தோன்றி அழியும் என்பதும் (3) வித்தின் கேட்டில் அங்குரம் போல முற்கணத்தில் தோன்றிய பொருள், பிற்கணத்தில் தோன்றும் பொருளுக்கு ஆதாரம், அதாவது சார்பு என்பதுமாம். ஆதலால் தோற்றமும் நாசமும் செய்ய ஒரு கர்த்தா வேண்டாம் என்பது அவர் கொள்கை.

8. கே: வித்தின் கேட்டில் அங்குரம்போல என்ருல் பொருள் என்ன?
ப: விதைகெட்டு பின் முளை உண்டாகும் என்பது பொருள்.

9. கே: வித்து, முளை இவ்விரண்டில் ஆதாரம் எது? ஆதேயம் எது?

ப: வித்து ஆதாரம், முளை ஆதேயம்.

10. கே: மாத்துமிகர் கொள்கை என்ன?

ப: உலகம் இல்பொருளுமல்லாமல் உள்பொருளுமல்லாமல் இருக்கிற அநிர்வசனமாய் உள்ள பொருள் தோன்றும் என்பது.

11. கே: அநிர்வசனம் என்பதற்குப் பொருள் என்ன?

ப: உள் பொருளுமல்லாமல் இல் பொருளுமல்லாமல் இருப்பது. சொல்ல முடியாதது, சூனியமாயுள்ளது.

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 6.
(உள்ளதும்.........இயற்றுவானுல்.)

1. கே: மாத்துமிகர் கொள்கையை நூலாசிரியர் எப்படி பரிகரிக்கிருர்?

ப: அநிர்வசனப் பொருள் என்பது ஒன்று உண்டோ இல்லையோ என்று நான் கேட்டால் நீர் உண்டு என்று பதில் சொன்னுல் அநிர்வசனப் பொருள் உள்பொருளாகி விடுகிறதே. இல்லை என்று பதில் சொன்னுல் அநிர்வசனப் பொருள் இல் பொருளாகிவிடுகிறதே. ஆதலால் அநிர்வசனம் என்பது போலியாய் விடுகிறது. ஆகவே அநிர்வசனப் பொருள் தோன்ருது என பரிகரித்தார்.

2. கே: பாரிசேடம் என்ருல் பொருள் என்ன?

ப: சேடம் என்ருல் மிகுதி, பாரி என்பது சேடத்தோடு கூடிய சொல்.

3. கே: (1) சித்தாந்தி உலகம் உள்பொருள் அது தோன்றும் என்ருர் (2; சவுத்திராந்திகர் உலகம் இல் பொருள் அது தோன்றும் என்ருர் (3) மாத்துமிகர் உலகம் இல்பொருளுமில்லாமல் "உள் பொருளுமல்லாமல் அநிர்வசனமா யிருக்கும் பொருள் அது தோன்றும் என்ருர். இந்த மூன்றில் இல்பொருளுந் தோன்ருது. அநிர்வசனப்

பொருளுந் தோன்ருது என்ருல் மூன்றில் பாரி சேடமாய் இருப்பது எது?

ப: உலகம் உள்பொருளேயாம்.

4. கே: பாரிசேட அளவையால் என்ன அறியப்படுகிறது?

ப. உலகம் உள்பொருள் என்று ஏற்படுகிறது.

5. கே: உலகம் எத்தனை வகைப்படும்?

ப: காரண உலகம் என்றும் காரிய உலகம் என்றும் இருவகைப்படும்.

6. கே: காரணம் என்பது என்ன?

ப: ஒரு காரியம் உண்டாவதற்கு முதன் முதலாயுள்ள பொருள்.

7. கே: காரியம் என்பது என்ன?

ப: செய்யப்பட்டது. அதாவது காரணத்திலே இருந்து உண்டாவது.

8. கே: காரணத்திலிருந்து காரியம் எப்படித் தோன்றும்?

ப: காரணமான பொருளை ஒருவன் வைத்துக்கொண்டு அதில் வேறு சில பொருள்களால் ஒன்று செய்ய காரியம் உண்டாகும்.

9. கே: காரணம் எத்தனை வகை?

ப: (1) முதற்காரணம் (2) துணைக்காரணம் (3) நிமித்த காரணம். (சூ-ம் 2, கே. 10-ஐ பார்க்க)

10. கே: முதற்காரணம் என்பது என்ன?

ப: ஒரு காரியம் செய்ய முதல் முதல் வேண்டிய அவசிய மான பொருள் அது காரியமான பொருளோடு கூடியிருப்பது.

11, கே: துணைக்காரணம் என்பது என்ன?

ப: முதற்பொருளால் காரியம் ஆகிறவரையில் கூடவே யிருந்து காரியம் ஆனவுடன் நீங்கிப்போகிறவை.

12. கே: நிமித்தகாரணம் என்பது என்ன?

ப. காரியத்தைச் செய்கிறவன்.

13. கே: காரணத்திலிருந்து காரியம் ஒரு கர்த்தாவால் வெளிப் படும் என்பதை இச்செய்யுளில் எப்படி விளக் கிக்காட்டுகிருர்.

ப: மண்ணாகிய முதற்காரணத்திலிருந்து குடம், சால், கரகம் முதலிய காரியங்களை சக்கரம், கோல் முதலிய துணைக் காரணங்களைக்கொண்டு குயவனாகிய நிமித்த காரணன் செய்வான். ஆடை முதலியவைகளை மண்ணாகிய காரணத்தி லிருந்து செய்யமாட்டான்.

14. கே: உடன்பாடு என்பது என்ன?
ப: சம்மதமானது (உள்ள பொருள்)

15. கே: எதிர்மறையாவது யாது?
ப: சம்மதமில்லாதது (இல்லாதது)

16. கே: அநுவாதம் என்றால் என்ன?
ப: முன்னே சொன்னதை பின்னும் சொல்லுவது.

17. கே: திகிரி என்றால் என்ன?
ப: சக்கரம்.

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 7.
(ஒருபொருள் ... ... கருத்தாவாலாம்.)

1. கே: சமணர் என்றால் யார்?
ப: புறப்புறச் சமயத்தார் அறுவரில் ஒருவர்.

2. கே: புறப்புறச் சமயம் என்றால் என்ன? (சூ-ம். 1, அ.1 செ. 5, கே. 6 ஐ பார்க்க)
ப: வேதங்களுமில்லை, ஆகமங்களுமில்லை யென்பது.

3. கே: சமணர் என்ன சொல்லுகிறார்?
ப: இல்லது தோன்றும் என்று சவுத்திராந்திகர் சொன்னதும் பொருந்தாது. இல்லதும் அல்லதும் அல்லாத பொருள் தோன்றும் என்று மாத்திமிகர் சொன்னதும் பொருந்தாது. ஆதலால் இல்லதும் உள்ளதுமாய் நிற்கும் பொருள் தோன்றும் ஆனதால் இதற்கு ஒரு கர்த்தா வேண்டாம் என்று சொல்லு கிறார்.

4. கே: சமணர் சொன்னதற்கு நூலாசிரியர் என்ன பரிகாரம் சொன்னார்?

ப: உண்டுமாய் இல்லையுமாய் மாறுபட்ட இரண்டு தன்மை ஒரு பொருளுக்கு பொருந்துதல் கூடாது என்று சொன்னார்.

5. கே: அதைக்கேட்ட சமணர் உண்டுமாய் இல்லையுமாய் என்பதற்கு பொருள் என்ன சொன்னார்?

ப: சமணர் காரண ரூபமாய் உண்டு, காரிய ரூபமாயில்லை என்று சொன்னார்.

6. கே: காரண ரூபமாயுண்டு, காரிய ரூபமாயில்லை என்று சமணர் சொன்னதை ஆசிரியர் எப்படி மறுக்கிறார்?

ப: காரணத்துக்கும் காரியத்துக்கும் தம்முள் வேற்றுமையில்லை, காரணம் உள்பொருளாகவே காரியமும் உள்பொருளாகும். காரணததில் காரியம் சூக்கும ரூபமாயுள்ளது. அது பின் தூலமாய் விளங்கித் தோன்றுவதற்கு ஒரு வினைமுதல் வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும் என்றார்.

7. கே: தூலம் என்றால் என்ன?

ப: கண்ணுக்குத்தெரியும் பெரிய வடிவு.

8. கே: சூக்குமம் என்றால் என்ன?

ப: கண்ணுக்குத்தெரியாத வடிவம்.

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 8.
(காயத்தின் ... ... அழிதலாலே.)

1. கே: பிரபஞ்சம் எத்தனை வகைப்படும்?

ப: காயப்பிரபஞ்சம், உலகப் பிரபஞ்சம் என இரண்டு வகைப்படும்.

2. கே: காயப்பிரபஞ்சம் என்பவை எவை?

ப: உயிர்கள் தங்கியிருக்கிற எல்லா உடம்புகளுமாம். அதாவது மனிதர், மிருகம் முதலியவைகளின் உடம்பு.

3. கே: உலகப் பிரபஞ்சம் என்றால் என்ன?

ப: மண், நீர், நெருப்பு, காற்று, வெளி முதலிய உயிரில்லாத பொருள்களாம்.

4. கே: ஆண், பெண், அலி என்கிற அவயவம் எந்த உலகத்துக்கு உண்டு, எந்த உலகத்துக்கு இல்லை?

ப: ஆண், பெண், அலி, என்கிற அவயவம் காயப் பிரபஞ்சத்துக்கு உண்டு, உலகப் பிரபஞ்சத்துக்கு இல்லை.

5. கே: நிர் அவயவம் என்றால் என்னபொருள்?

ப: அவயவம் இல்லைஎன்பதாம்.

6. கே: நிர் என்றால் என்ன?

ப: இல்லையென்பது பொருள்.

7. கே: மீமாஞ்சகர் என்பவர் யார்?

ப: புறச்சமயத்தார் அறுவரில் ஒருவர்.

8. கே: புறச்சமயத்தார் கொள்கை என்ன?

ப: வேதத்துள் விதிவாக்கியம் தவிர மற்றவைகள் எல்லாம் புனைந்துரை ஆதலால் அவை பிரமாணம் ஆகாஎன்பதாம்.

9. கே: ஆசிரியர் உலகத்துக்கு தோற்றமும் கேடும் உண்டு என்றதை மீமாஞ்சகர் எப்படி மறுக்கிறார்?

ப: காயத்துக்கே அவயவப் பகுப்பு உடைமையால் காயத்துக்கே தோற்றமும் கேடும் உண்டு என்று கண்டோம். உலகத்துக்கு தோற்றமும் கேடும் கண்டோமில்லையே. அப்படியிருக்க காயத்துக்கும் உலகத்துக்கும் ஒப்ப தோற்றக் கேடுகள் உண்டென்பது பொருந்தாது என மறுக்கிறார்.

10. கே: மீமாஞ்சகர் மறுத்ததை ஆசிரியர் எப்படி பரிகரிக்கிறார்!

ப: ஆண், பெண், அலி என்கிற அவயவப் பகுப்பு உடம்புக்கு உடைமையால் உடம்புக்கு தோற்றக் கேடுகள் உண்டு என்று நீ கண்டாயல்லவா; அதுபோல உலகுக்கும் மண், நீர், நெருப்பு, காற்று, வானம் என்கிற அவயவப்பகுப்பு உடைமையால் உலகுக்கும் தோற்றம், நிலை, கேடுகள் உண்டு என்று அறிவாயாக என்று பரிகரித்தார்.

11. கே: மாயத்த என்பதற்குப் பொருள் என்ன?

ப: மயக்கத்தைச் செய்கிற என்பது பொருள்.

12. கே: ஆயித்தான் என்பதற்குப் பொருள் என்ன?
ப: ஆய இதனல் என்பது பொருள்.

13. கே: விதிவாக்கியம் என்றல் என்ன?
ப: இதனைச் செய்க என்று வேதத்தில் நியமிக்கப்படும் வாக்கியம்.

14. கே: புனைந்துரை என்பதற்குப் பொருள் என்ன?
ப: கட்டிச் சொல்வது.

15. கே: ஒன்றின் ஒன்று என்பதற்கு ஆசிரியர் என்ன பொருள் சொன்னர்?
ப: ஒன்று = உலகமானது, ஒன்றின் = காயம்போல என்று சொன்னர்.

16. கே; ஒன்றின் ஒன்று என்பதற்கு மீமாஞ்சகர் என்ன பொருள் கொள்வார்?
ப: வானம் முதலிய ஐந்தும் முறையே ஒன்றிலிருந்து ஒன்று தோன்றும் என்பார். (அது பொருந்தாது)

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 9.
(ஓரிடம் அழிய.................செல்லும்.)

1. கே: பாரிடம் என்பதற்குப் பொருள் என்ன?
ப: (1) பார்த்து அறியப்பட்ட இடம், (2) பார்த்து அறியப்படுகிற இடம் (3) பார்த்து அறியப்படுமிடம் என்பது பொருள்.

2. கே: உலகத்துக்கும் காயம்போல தோற்றமும் நிற்றலும் கேடும் உண்டு என்று ஒப்புக்கொண்ட மீமாஞ்சகர் பின்னும் எப்படி மறுக்கிறர்?
ப: உலகமெலாம் ஒரே காலத்தில் அழியும் என்றல் உலகம் அநாதி என்கிற வேதத்தோடு பொருந்தாதே, அதுவேயன்றி மறுபடியும் உலகம் தோன்றுவதற்கு ஓர் பொருத்தமும் இல்லையே, ஆதலால் இந்த உலகத்திலே ஒருபக்கம் அழியும். ஒருபக்கம் நிற்கும் என்பதுவே பொருத்தமாகும் என மறுக்கிறர்.

3. கே: நூலாசிரியர் என்ன பரிகாரம் சொன்னர்?

ப: தம்முள் ஒரு ஜாதியாகிய நெல்லும் சடம் தம்முள் ஒரு சாதியாகிய எள்ளும் சடம். இவைபோன்ற வித்துமுதலாகிய சடப் பொருள்கள் எல்லாம் ஒவ்வொரு காலம் வந்தால் ஒரே காலத்தில் முளைக்கின்றன. ஒவ்வொரு காலம் வந்தால் எல்லாம் ஒரே தடவையில் அழிகின்றன. அதை நாம் பார்த்திருக்கிறோம். அதுபோலவே சடப்பொருளாகிய இந்த உலகமும் ஒரு காலம் வந்தால் எல்லாம் ஒரேதடவையில் தோன்றும், ஒருகாலம் வந்தால் ஒரே தடவையில் அழியும் என்று பரிகாரம் சொன்னார்.

4. கே: சடம் என்பதற்குப் பொருள் என்ன?
ப. அறிவில்லாத பொருள் என்பதாம்.

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 10.
(காலமே.........காண்)

1. கே: பின்பும் மீமாஞ்சகர் என்ன சொல்லி மறுக்கிறார்?
ப: காலம் வந்திட வித்து முதலாகிய ஒரு சாதிப் பொருள்கள் தோன்றும், அழியும், என்று சித்தாந்தியாகிய நீங்களே சொல்லுகிறபடியால், அந்த காலமே கடவுளாகக் காணலாமே, வேறே கடவுள் வேண்டாமே, என்று மறுத்தார்.

2. கே: அதற்கு நூலாசிரியர் என்ன பரிகாரம் சொன்னார்?
ப: அது நல்லதே. ஆனாலும் அந்த காலம் சடமாதலால் அது கருத்தாவாகாது. அறிவுடையவனாகிய கருத்தா ஒருவன் வேண்டும். அந்த கர்த்தா செய்கிற தோற்றக்கேடுகளுக்கு அந்தக் காலம் துணைக்காரணமாகும் அந்தக் காலம் நிமித்த காரணனாக ஆகாது. (சூ. 1, அதி 1, செ. 6, கே. 10-ஐ பார்) சூ. 2, கே. 3:5-ஐ பார்.)

சூத்திரம். 1, அதிகரணம். 1, செய்யுள். 11,
(அழிந்தபின் ....அன்றே.)

1. கே: தார்க்கிகர், வைபாடிகர், ஆசீவகர், சவுத்திராந்திகர் என்கிற நால்வரில் தார்க்கிகர் என்ன சொல்லி மறுக்கிறார் (இவர்கள் அணுகாரண வாதிகள்)

ப: உலகம் முழுவதும் அழிந்தபின்னர். பரமாணுக்களே காரணமாயிருந்துகொண்டு தமக்கு அவ்வணுக்கள் கன்மத்தையும் காரணமாகக்கொண்டு, பிரபஞ்சமாய்த்தோன்றி நின்று அழியும் பரமாணுக்கள்போலவும், கன்மத்தைப்போலவும் இறைவன் இச்சையும் ஒரு காரணமாகும். அதுவேயன்றி இறைவனே பிரபஞ்சத்தைத் தோற்றி அழிப்பான் என்பது பொருந்தாது என மறுக்கிறுர்.

2. கே: நூலாசிரியர் அதற்கு என்ன பரிகாரம் சொல்லுகிறுர்?

ப: உலகம் ஒடுங்கும்போது பரமாணுவுங் கூடவே ஒடுங்குகிறது. அதன்றி அணுவுஞ்சடம், கன்மமுஞ்சடம், சடமாகிய பொருள் இரண்டு எப்படி கூடும். எப்படி தோற்றி, நிறுத்தி, அழிக்கும். அப்படிச்செய்ய சித்துப்பொருள் ஒன்று வேண்டுமே, அந்தச் சித்துப்பொருள்தான் முதற்கடவுள் என பரிகரித்தார்.

3. கே: பரமாணு என்றுல் என்ன? (பரம் + அணு = பரமாணு)

ப: மண், நீர், நெருப்பு, காற்று, வானம், இவை அழியும் போது, ஒவ்வொன்றிலும் ஒவ்வொருதுளி அழியாமலிருக்க, மற்றத் துளிகள் அழியும். அப்படி அழியாமல் இருக்கும் துளியே பரமாணுவாகும். (இதுவே அணுகாரண வாதம்)

4. கே: கன்மம் என்றுல் என்ன?

ப: உயிர்கள் செய்த புண்ணிய பாவங்கள்.

சூத்திரம். 1, அதிகரணம். 1, செய்யுள். 12,
(காரண அணுக்கள் .... கண்டால்)

1. கே: சத்திரூப சமூகம் என்றுல் என்ன?

ப: சத்திபென்றுல் வல்லமை சமூகம் என்றுல் கூட்டம். அதனுல் இறைவனுடைய வல்லமையெல்லாம் கூடிய கூட்டம்.

2. கே: மறுபடியும் தார்க்கிகர் எப்படி மறுக்கின்றுர்?

ப: காரணத்திலிருந்து காரியந்தோன்ற வேண்டும். அப்படியிருக்க காரணமாகிய அணுகெடும் என்கிறீர்கள். காரணமாகிய அணுகெட்டால் காரியமாகிய உலகமில்லையே, ஆதலால் அணு கெடாது என்கிறுர்.

3. கே: நூலாசிரியர் அதற்கு என்ன பரிகாரம் கூறுகிறார்?

ப: அணுகாரணமல்ல காரிப்பொருள். அது உலகுக்கு முதற்காரணமாகாது. காரியப்பொருளெல்லாம் அழியும். ஆதலால் அழியாமல் நிலைபெற்றுடைய மாயையே முதற்காரணம் அது சத்திருப சமூகமாயுள்ளது. அணுக்கள் அழிந்துவிட்டால் உலகம் காரியப்படுதற்கு என்னதடை. மாயை இருக்கிறதே என்று கூறுகிறார்.

சூத்திரம். 1, அதிகரணம். 1, செய்யுள். 13,
(காரியம்........கருதிடாயே)

1. கே: பின்னும் தார்க்கிகர் அணுகாரணமாயிருக்க, காரணமாகிய அணுவை காரியம் என்பது எப்படி என்கிறார்.

ப: மண்குடத்துக்கு அவயவம். அதுபோல பிருதிவி, அப்பு, தேயு, வாயுக்களுக்கு அணு அவயவம் அந்த அணுக்களுக்கும் அவயவம். இருத்தலால் அணுகாரியம்.

2. கே: அணுக்களுக்கு எப்படி அவயவம் உண்டு?

ப: அணுக்கள் சையோகப்படுதலால், அவயவம் உண்டு

3. கே: சையோகம் என்பது என்ன?

ப: ஒன்றோடொன்று கூடுதல்.

சூத்திரம். 1, அதிகரணம் 1, செய்யுள். 14,
(தோற்றமும் ....மதித்திடாயே)

1. கே: 13-வது செய்யுளில் மாயைதரும் என்பதற்கு நூலாசிரியர் சொன்ன பிரமாணம் எது?

ப: வேத மொழியும், உலக மொழியும், பிரமாணம்.

2. கே: வேதமொழி எது?

ப: மாயையே பிரகிருதி என்பது (5-வது கேள்வியைப் பார்)

3. கே: உலகமொழி எது?

ப: வித்தினிடத்திலே இலை முதலியன முக்கியமாய் அடங்கி இருந்தால் அவ்விலை முதலியன தூலமாய் வெளிப்

படும். இலே முதலியன முக்கியமாய் அடங்கி இல்லாவிட்டால் இலே முதலியன தூலமாய் வெளிப்படுவன இன்றாம் என்பது.

4. கே: இத்தால் என்பதற்குப் பொருள் என்ன?
ப. இதனாலும் என்பது பொருள்

5. கே: மாயையே பிரகிருதி என்பதற்குப் பொருள் என்ன?
ப. மாயையே முதற்காரணம் என்பது பொருள்

6. கே: இதனானும் என்றதில் உள்ள உம்மை எதைக் குறிக்கிறது.
ப: மாயைக்கு (காரிய உறுப்பின்மையேயன்றி என்பதைக் குறிக்கிறது.)

சூத்திரம். 1, அதிகரணம். 1, செய்யுள். 15.
(மாயையின் ... ... ஆமே.)

1. கே: மாயையே முதற்காரண்ம் என்பதனை (அதாவது மாயை தரும் என்பதனை) வலியுறுத்திய ஆசிரியர், இன்னும் என்ன என்ன தர்க்கங் கூறி மாயை முதற்காரணம் என்பதனை வலியுறுத்துகிறார்.

ப: (1) உலகம் இல்பொருள் அதுவேதோன்றி, நின்று, அழியும் எனக் கொள்கின்றவர்களுக்கு இல்பொருளாகிய முயலின் கொம்பு முயலிடத்திலே உண்டாகவேண்டும். அது உண்டாகாமையால் உலகமும் இல்பொருளாகாது. உள் பொருளேயாம். என தர்க்கங்கூறி மாயைதரும் என மாயையே முதற்காரணம் என்பதனை வலியுறுத்தினார்.

(2) அதுவேயும் அன்றி, உலகம் உள்பொருளே எனக்கொள்பவர்கள், மரத்திலிருந்து உதிர்ந்த இலேகளே மீளவும் அம்மரத்தில் உண்டாகவேண்டும் என்றால், அது பொருந்தும். எப்படி என்றால், உதிர்ந்த எலேகளிலுள்ள பல சத்திருப சமூகங்களே அம்மரத்தில் சூக்குமமாய் அடங்கியிருப்பதால் உதிர்ந்த இலேகளே அம்மரத்திலிருந்து கன்மமும் காலமும் கூடியபோது தோன்றும் என தர்க்கங் கூறி மாயை

தரும். அதனுல் மாயையே முதற் காரணம் என்பதனை பின்னும் வலியுறுத்தினுர்.

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 16.
(கருது காரணம் ... ...கேணீ)

1. கே: பின்னும் தார்க்கிகர் எப்படி மறுக்கிருர்?

ப: உள்ளது தோன்றும் என்று சற்காரியவாதம் கூறுபவர்களுக்கு உலகம் அழிபொருள் என்ருல் எப்படிபொருந்தும் பொருந்தாதே என மறுக்கிருர்.

2. கே: தார்க்கிகர் சொன்னதை நூலாசிரியர் எப்படி பரிகரிக்கிருர்?

ப: காரணமும் உள்பொருள், காரியமும் உள்பொருள். அதனுல் காரியப் பிரபஞ்சமும் அநாதியாகிய நித்தப்பொருளே காரணப் பிரபஞ்சமும் அநாதியாகிய நித்தப்பொருளே. ஆனுல் காரியப்பிரபஞ்சம் ஒரு காலத்திலே ஒரு கர்த்தாவாலே தோன்றுதலும் ஒரு காலத்திலே மறைதலும் உண்டு. அதனுல் அந்த வேறுபாடு பற்றி அழிபொருள் என்னப்படும், ஆதியென்றும் சொல்லப்படும். அந்த வேறுபாடு இல்லாதபோது நித்தப் பொருளேயாம். *(சூ. 1, அ. செ. 6, கே. 4.)*

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 17.
(புத்திமற் காரியத்தால் ... ...வேண்டும்)

1. கே: ஏனையவை யெல்லாம் என்பன எவை?

ப: உலகம் உள்பொருள் என்றது ஒன்று, உலகத்துக்கு ஒரு கடவுள் உண்டு என்பது ஒன்று. உலகம் தோன்றிநின்று அழியும் என்பது ஒன்று.

2. கே: சாங்கியர் என்ன சொல்லுகிருர்?

ப: மாயையே தன் காரியமாகிய பிரபஞ்சத்தைத்தரலாமே இதற்கு ஒரு கருத்தா வேண்டாமே. மற்ருெரு கடவுள் உலகத்தைத் தருகிருர் என்பது பொருந்தாது என்ருர்.

3. கே: அதற்கு நூலாசிரியர் என்ன சொன்னுர்?

ப: *(1)* குடம் குயவனுல் செய்யப்படும் காரியப்பொரு

ளாறுற்போல, பிரபஞ்சம் எல்லாம் சேதனமான அறிவுள்ள ஒரு பொருளால் செய்யப்படும் காரியப் பொருளாம்.

(2) ஆன்மா அறிவுள்ள பொருளாயினும் அது பூதம் முதலானவைகளாலாகிய தனு, கரணம் முதலானவைகளைப் பெற்றுலன்றி அறியமாட்டாது ஆதலால் அந்த் ஆன்மாவாலும் பிரபஞ்சத்தைத் தரமுடியாது.

(3) மாயையோ பிரபஞ்சத்துக்கு முதற்காரணமாயினும், அது அறிவுள்ள பொருளல்ல. அதனல் இந்த பிரபஞ்சத்தைத் தரமுடியாது.

(4) ஆதலால் இம்மூன்றிலும்வேருய் மாயையிலிருந்து பூதம் முதலியவைகளைத் தோற்றுவிக்க ஒரு கடவுள் வேண்டும் என்றுர்.

4. கே: தனு, கரணம் என்றுல் பொருள் என்ன?

ப: தனு என்றுல் உடம்பு, கரணம் என்றுல் கருவி அதாவது அவயவம்.

5. கே: சேதனன் என்பதற்குப் பொருள் என்ன?

ப: புத்திமான் என்பது பொருள்.

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 18.

(காரிய காரணங்கள் ... ...எல்லாம்)

1. கே: ஒரு காரியஞ் செய்வதற்கு என்ன என்ன காரணங்கள் வேண்டும்?

ப: முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம் வேண்டும். (சூ. 2, முதலில் பார்) 6 செ. பார்)

2. கே: பிரபஞ்சமாகிய காரியஞ் செய்வதற்கு என்ன என்ன காரணம் வேண்டும்?

ப: முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம் வேண்டும் (சூ. 1, அ. 1, செ. 6, 8 ஐ பார்க்க)

3. கே: பிரபஞ்சத்துக்குரிய முதல் காரணம் எது? துணைக் காரணம் எது? நிமித்தகாரணம் எது?

ப: முதற்காரணம் மாயை, துணைக் காரணம் இறைவனுடைய சத்தியும் சத்தியின் வழித்தாகிய கன்மமும், நிமித்த காரணம் சிவபிரான்.

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 19:
(விந்துவின் ... ... நின்றே)

1. கே: இது முதல் 9 செய்யுட்களால் என்ன என்ன சொல்லுகிறார்?

ப: தருபவன் ஒருவனால் காரண காரியங்கள் தருகிற விதமும், காரண காரியங்களின் இயல்பும், ஆசிரியனால் ஆக்குமாறும் கூறுகிறார்.

2. கே: காரியப் பிரபஞ்சம் எத்தனை வகைப்படும்?

ப: (1) சுத்தப் பிரபஞ்சம், (2) சுத்த அசுத்தப் பிரபஞ்சம் (3) அசுத்தப் பிரபஞ்சம் என மூன்று வகைப்படும்.

3. கே: சுத்தப்பிரபஞ்சம் எவை?

ப: (1) சுத்தவித்தை. (2) ஈசுரம், (3) சாதாக்கியம் (4) சத்தி, (5) சிவம்

4. கே: சுத்த அசுத்தப் பிரபஞ்சம் எவை?

ப: (1) காலம் (2) நியதி (3) கலை (4) வித்தை (5) அராகம் (6) புருடன் (7) மாயை.

5. கே: அசுத்தப் பிரபஞ்சம் எவை?

ப: பூதம் 5; தன்மாத்திரை 5; கன்ம இந்திரியம் 5; ஞான இந்திரியம் 5; அந்தக்கரணம் 4; ஆக 24. (செ. 27, கே. 5 ஐ பார்க்க)

6. கே: பூதம் ஐந்து எவை? (செ. 27, கே. 5)

ப: பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம். அதாவது மண், நீர், நெருப்பு, காற்று, வெளி.

7. கே: தன்மாத்திரை ஐந்து எவை? (செ. 27, கே. 5)

ப: சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் (இவை விஷயம் அல்ல) விஷயத்துக்கும் இதே பெயருண்டு.

8. கே: கன்ம இந்திரியம் ஐந்து எவை? (செ. 27, கே. 5)

ப: வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்.

9. கே: ஞான இந்திரியங்கள் எவை? செ. 27, கே. 5)

ப: மெய், வாய், கண், மூக்கு, செவி.

10. கே: அந்தக்கரணங்கள் நான்கு எவை? (செ.2 , கே.5)
ப: மனம், புத்தி, சித்தம், ஆங்காரம்.

11. கே: சுத்தப் பிரபஞ்சம் ஐந்தும் எதிலிருந்து உண்டாகின்றன?
ப: சுத்த மாயையிலிருந்து உண்டாகின்றன.

12. கே: சுத்த மாயைக்கு வேறு பெயர் என்ன?
ப: விந்து என்று பெயர்.

13. கே: சுத்த அசுத்தப் பிரபஞ்சத்துக்கு வேறுபெயர் என்ன?
ப: அசுத்த மாயை என்று பெயர்.

14. கே: அசுத்தப் பிரபஞ்சத்துக்கு வேறுபெயர் என்ன?
ப: பிரகிருதிமாயை என்று பெயர்.

15. கே: சுத்த மாயை எப்படிப்பட்டது?

ப: மலத்தோடும், கன்மத்தோடும் கலவாமல் முதற் காரணமாய் நிற்பது.

16. கே: அசுத்தமாயை எப்படிப்பட்டது?

ப: சுத்தமாயையானது, அசுத்தமாயையிலும், பிரகிருதி மாயையிலும் கலந்து மேலாய் நிற்க, அந்த சுத்தமாயையானது சுத்தமாயையின் கீழாய் அடங்கி மலத்தோடும், கன்மத்தோடும் கலந்து முதற்காரணமாய் நிற்பது.

17. கே: பரிணாமம் என்றால் என்ன?
ப: வேறுபாடு

18. கே: வியாபகம் என்றால் என்ன?
ப: எங்கும் நிறைந்திருப்பது.

19. கே: பிரகிருதி மாயை எப்படிப்பட்டது?
ப: அசுத்தமாயையின் தூலப்பரிணாமமாயுள்ளது.

20. கே: சுத்தப் பிரபஞ்சத்துக்கு முதற்காரணம் எது?
ப: சுத்தமாயை.

21. கே: சுத்தா சுத்தப் பிரபஞ்சத்துக்கு முதற் காரணம் எது?
ப: அசுத்தமாயை.

22. கே: அசுத்தப் பிரபஞ்சத்துக்கு முதற்காரணம் எது?
ப: பிரகிருதி மாயை

23. கே: சுக்த மாயையிலிருந்து என்ன என்ன தத்துவங்கள் தோன்றும்?
ப: (1) சூக்குமம் (2) பைசந்தி (3) மத்திமை (4) வைகரி (இவையே நான்கு வாக்குகளாம்)

24. கே: சிருட்டிமுறை என்றால் என்ன?
ப: உற்பத்தியாகிற வரிசை.

25. கே: சங்கார முறை என்றால் என்ன?
ப: ஓடுங்கும் வரிசை.

26 கே: சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்பது எந்த முறை?
ப: ஒடுங்கு முறை (சிருட்டிமுறை யல்ல)

27. கே: போக்கிய தத்துவங்கள் எவை?
ப: பிரகிருதி மாயையிலிருந்து உண்டாகிற 24 தத்துவங்களுமாம். (5-வது கேள்வியைப் பார்)

28. கே: அவ்வியக்தம் என்றால் என்ன?
ப: பிரிவு இல்லாதது.

29. கே: வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்றால் பொருள் என்ன?
ப. வாய், கால், கை, மலம் வழியும் வழி, (ஆண் குறி, பெண் குறி)

30. கே: அசுத்த மாயைக்கு வேறுபெயர் என்ன?
ப: மோகினி

31. கே: பிரகிருதி மாயைக்கு வேறு பெயர் என்ன?
ப: மான்

32. கே: விந்து, மோகினி, மான் மூன்றும் என்ன உருவம்?
ப: சட உருவம்

33. கே: சட உருவமாயுள்ள விந்து, மோகினி, மான் மூன்றும் எப்படி தத்துவங்களைத் தோற்றுவிக்கும்?

ப: சிவசத்தியினுடைய சங்கற்பரூப சந்நிதியிலிருந்து தோற்றுவிக்கும்.

34 கே: அதோ மாயை என்பது எது?

ப: அசுத்தமாயை.

35. கே: அநந்தன் செய்யும் தொழில் யாது?

ப: அசுத்தமாயையிலிருந்து, காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் இவைகளைத் தோற்றுவிப்பது.

36. கே: ஸ்ரீகண்டர் செய்யுந் தொழில் எது?

ப. பிரகிருதிமாயையிலிருந்து கொண்டு 24 தத்துவங்களை யும் தோற்றுவிப்பது. (5-வது கேள்வியைப் பார்)

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 20

(வைகரி...... உடைத்தாம்)

1. கே. அத்தவசனம் என்றால் பொருள் என்ன?

ப: நினைந்த பொருளைச் சொல்லும் சொல்.

2. கே: வன்னம் என்றால் பொருள் என்ன?

ப: அக்கரங்கள் (அதாவது) எழுத்துக்கள்.

3. கே: வைகரிவாக்கின் இரண்டு இலக்கணங்கள் எவை?

ப: (1) தன் செவிக்கும் பிறர் செவிக்கும் கேட்கட்படும், (2) நினைந்த பொருளைச் சொல்லும் சொல்லாய் இருக்கும், (3) சொல்வானுக்கும், கேட்பானுக்கும் சவிகற்ப உணர்வு உண்டாதற்குக் காரணமாயிருக்கும் என்னும் இந்த மூன்றை யும் உடைய இலக்கணம் ஒன்று. உதானன் என்கிற காற்றால் தள்ளப்பட்டு மத்திமைத் தானத்திலே சூக்கும ரூபமாய்ப் பிரிந்து உருத்தோன்றிய எழுத்துக்கள், அகங்காரத்தால் செலுத் தப்படுகிற பிராணன் என்னும் காற்றால் தள்ளப்பட்டு எழுந்து புறத்தே அடைகிற இலக்கணம் ஒன்று, இந்த இரண்டு இலக் கணத்தையும் உடையது.

4. கே: சவிகற்ப உணர்வு என்றால் என்ன?

ப: சந்தேகமில்லாமல் இன்னதென்று தெளிவாய்த் தெரிந்துகொள்ளுகிற அறிவு அதாவது சிறப்பறிவு.

5. கே: நிர்விகற்ப உணர்வு என்றால் என்ன?
ப: சந்தேகமாக அறிகிற அறிவு, அதாவது பொது அறிவு (சூ. 1, அ. 1, செ. 22, கே. 7 ஐ பார்க்க)

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 21.
(உள்ளுணர்.........வேறதாயே)

1. கே: மத்திமை வாக்கின் இரண்டு இலக்கணங்கள் எவை?
ப: (1) செவியால் கேட்கப்படாததாயுள்ளது, (2) மெல்லோசையாய்க் கண்டத்தில் விளங்குதல் உள்ளது. (3) சொல்லுவான் தன்னுள்ளே உணரும் சவிகற்ப உணர்வுக்கு ஏதுவாய் உள்ளே உணரப்படும் ஓசையாயுள்ளது என்கிற இந்த மூன்றையும் உடைய இலக்கணம் ஒன்று. பிராணவாயுவின் தொழிற்பாடின்றி, உதானவாயுவின் தொழிற்பாடு மாத்திரமே அங்கு உண்டாயிருத்தலால், சூக்கும ரூபமாய் அக்கரங்கள் பிரிந்து தோன்றினும், பல், இதழ், நா, அண்ணத்தில் பட்டு சிதறிப்போதல் இன்மையும் என்கிற இலக்கணம் ஒன்று. ஆக இந்த இரண்டு இலக்கணங்களை யுடையது.

2. கே: அண்ணம் என்பது எது?
ப: மேல்வாய்

3. கே: இதழ் என்பது எது?
ப: உதடு

4. கே: சவிகற்ப உணர்வு என்றால் என்ன? (சூ. 1, அ. 1, செ. 20 கே. 4 ஐ பார்க்க)
ப: சிறப்பறிவு

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 22.
(வேற்றுமைப்.........நிற்கும்)

1. கே: பஞ்சவன்னங்கள் எவை?
ப: பச்சை, நீலம், மஞ்சள், வெண்மை, கறுப்பு.

2. கே: விபாகம் என்றால் என்ன?
ப: பிரிவு.

3. கே: அடைவு என்றால் என்ன?
ப: முறைமை.

4. கே: வன்னம் என்றால் என்ன?
   ப: வர்ணம் அதாவது நிறம்.

5. கே: பைசந்திவாக்கின் இரண்டு இலக்கணங்கள் எவை?
   ப: மேலே விளங்கித் தோன்றுவனவாகிய ஐந்து நிறங்களையும், சூக்குமரூபமாய் முறைமைப்பட ஒடுக்கி நிற்கிற மயில் முட்டையின் நீர்போல, பலவகைப்பட்ட எழுத்துக்கள், மத்திமைத்தானத்தில் பிரிவுபட விளங்கித் தோன்றும் முறைமையினை அடக்கி, மிகவும் சூக்கும ரூபமாய்க் கொண்டு சிந்தையின் கண் நிற்றல் என்கிற இலக்கணம் ஒன்று. நிருவிகற்ப உணர்வுக்கு ஏதுவாதலும் என்கிற இலக்கணம் ஒன்று. ஆக இந்த இரண்டு இலக்கணங்களை உடையது.

6. கே: இலக்கணம் என்றால் என்ன?
   ப: அடையாளம்.

7. கே: நிருவிகற்பம் என்றால் என்ன? (சூ. 1, அ. 1, செ. 20 கே. 5 ஐ பார்க்க)
   ப: பொது அறிவு.

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 23.
(சூக்கும வாக்கு ....இனரும்)

1. பரசரீரம் எவை?
   ப: (1) காரணசரீரம் (2) கஞ்சுக சரீரம் (3) குணசரீரம்

2. கே: காரணசரீரம் எவை?
   ப: அசுத்த மாயையில் அநந்த தேவரால் கலக்குண்ட பாகம்.

3. கே: கஞ்சுக சரீரம் எவை?
   ப: கலாதிகள்.

4 கே: குணசரீரம் எவை?
   ப: முக்குணங்கள்.

5. கே: சித்திபத்துவம் என்றால் என்ன?
   ப: அறியாமல் இருப்பது.

6. கே: அபரமுத்தி என்றால் என்ன? சூ. 1, அதி. 1, செ. 25 கே 3-ஐ பார்.

ப: பதமுத்தி (அதாவது) அதிகாரத்தில் இருத்தல்.

7. கே: வியஞ்சகம் என்றால் என்ன?

ப: காட்டுங்கருவி.

8. கே: விருத்தி என்றால் என்ன?

ப: படங்குடிலாவது (அதாவது) துணியே கூடாரமாவது போன்றது.

9. கே: சூக்கும வாக்கின் இலக்கணம் எது?

ப: (1) பரசரீரத்தின் உள்ளாக நாத மாத்திரையாய் விளங்குதலும் (2) ஞானமாத்திரைக்கு காரணமாதலுமாகிய இலக்கணமாம்.

10. கே: சூக்கும வாக்கு எப்படிப்பட்டது?

ப: பைசந்தி, மத்திமை, வைகரியாய் விருத்திப்படுவதாகிய தன் அதிகார மாத்திரைக்கே அழிவுண்டாக, தான் சுத்தமாயா ரூபமாய்க் கேடின்றி நிலைபெறுவதாம்.

11. கே: சூக்குமவாக்கை எப்படி காணலாம்?

ப: தவவிசேடத்தால் காணலாம்.

12. கே: தவவிசேடத்தால் காணப் பெறுவார்க்கு என்ன பயன்?

ப: அபரமுத்திப் பெரும் போகம் உண்டாம்.

13. கே: அபரமுத்திப் பெரும் போகம் என்றால் என்ன?

ப: (1) நீங்காத பேரறிவும் (2) ஆனந்தமும் (3) சுதந்திரமும் (4) நித்தியத்துவமும் உண்டாகும் (5) நாசம், உற்பத்தியால் வரும் இளைப்பு இல்லையாகும்.

14. கே: சூக்கும வாக்கு எது?

ப: சுத்தமாயையேயாம்.

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 24.

(நிகழ்ந்திடும்... ... ...நல்லோர்)

1. கே: நிவிர்த்தி முதலிய கலைகள் எவை?

ப: (1) நிவர்த்திகலை (2) பிரதிட்டா கலை (3) வித்தியா கலை (4) சாந்திகலை (5) சாந்தியதீதா கலை.

2. கே: சிவதத்துவம் முதலிய பஞ்சதத்துவங்கள் எவை?

ப: (1) சிவம் (2) சத்தி (3) சாதாக்கியம் (4) ஈச்சுரம் (5) சுத்தவித்தை.

3. கே: பரிணாமமாவது யாது? (கே 21 ஐ பார்க்க)

ப: வேறுபடுவது. (பால் தயிராய் வேறுபட்டால் போன்றது)

4. கே: சத்தப்பிரம வாதிகள் யார்?

ப: சிவதத்துவமாகிய ஐந்தாய் விளங்கும் நால்வகை வாக்குக்களையே பிரமம் என்பவர், அதுவே உலகங்களாய் விரியும் என்பவர்.

5. கே: பிரமம் என்றால் என்ன?

ப: கடவுள்.

6. கே: சைவசித்தாந்திகளின் கொள்கை என்ன?

ப: சிவதத்துவமாக ஐந்தாய் விளங்கும் நால்வகை வாக்குக்களை பிரமம் அன்று அது மாமாயை என்பார்.

7. கே: மாமாயை என்பது என்ன?

ப: சுத்தமாயை

8. கே: பரிக்கிரக சத்தியென்றால் என்ன?

ப: தொழிலுக்குக் காரணமாயிருப்பது அதாவது கிரியா சத்தி.

9. கே: சுத்தமாயை பிரமத்திற்கு எப்படிப்பட்டது?

ப: பரிக்கிரகசத்தியாயுள்ளது.

10. கே: சமுதாய வாதம் என்றால் என்ன? (புத்தர், சமணர் கொள்கை)

ப: காரியப்படுதலால் எள்ளாலாகிய குப்பைபோலும் என்பதாம்.

11. கே: சமுதாயம் என்றால் என்ன? சூ. 1, அதி. 1, செய். 27, கே. 20-ஐ பார்

ப: கூட்டம்.

12. கே: ஆரம்பவாதம் என்றால் என்ன? (தார்க்கிசர் கொள்கை)

ப: காரியப்படுவதெல்லாம் நூலாலாகிய ஆடைபோலும் என்பதாம். (சூ. 1, அதி. 1, செ. 27, கே. 15-ஐ பார்)

13. கே: விவர்த்தன வாதம் என்றால் என்ன? (மாயாவாதி கொள்கை)

ப. காரியப்படுவதெல்லாம் பேய்த்தேராலாகிய நீர்த் தோற்றம் போலும் என்பதாம்.

14. கே: பரிணாமம் எத்தனை வகை?

ப: முழுவதும் பரிணமித்தல் ஏகதேசத்தில் பரிணமித்தல் என இரண்டுவகை.

15. கே: முழுவதும் பரிணமித்தல் எப்படி

ப: பாலில் உண்டாகிய தயிர்போல முழுவதும் வேறு படுதல்.

16. கே: ஏகதேசத்தில் பரிணமித்தல் எப்படி

ப: நெய்யில் உண்டாகிய புழுப்போல ஏதோ கொஞ்சம் வேறுபடுவது.

17. கே: வைகரி முதலிய நான்கு வாக்குக்களும் நிவிர்த்தி முதலிய பஞ்ச கலைகளைப் பற்றுக்கோடாகச் சார்ந்து சிவதத்துவம் முதலிய பஞ்ச தத்துவங் களில் எப்படி இருக்கும்?

ப: வைகரி வாக்கு தூலவைகரி யென்றும, சூக்கும வைகரி யென்றும் இருவகைப்படும். பின்னர் (1) தூலவைகரி சாந்தியாதீத கலையைப் பற்றுக்கோடாகக் கொண்டு சிவதத்து வத்தில் இருக்கும். (2) சூக்குமவைகரி சாந்திகலையைப் பற்றுக் கோடாகக் கொண்டு சத்தி தத்துவத்தில் இருக்கும். (3) மத் திமைவாக்கு வித்தியா கலையைப் பற்றுக்கோடாகக் கொண்டு சாதாக்கிய தத்துவத்தில் இருக்கும். (4) பைசந்திவாக்கு பிர திட்டா கலையைப் பற்றுக்கோடாகச் சார்ந்து ஈசுர தத்துவத்தில் இருக்கும். சூக்குமவாக்கு நிவிர்த்தி கலையைப் பற்றுக்கோடா கச் சார்ந்து சுத்த வித்தியா தத்துவத்தில் இருக்கும்.

18. கே: நிவிர்த்தாதி கலையைப் பற்றித் திகழ்ந்திடும் அஞ்ச தாக என்பதற்கு வேறுமோர் பொருள் என்ன?

ப: நிவிர்த்தி கலையுள்பட்ட புவனவாசிகளுக்குத் தூலதம மாயும், பிரதிட்டையுட்பட்ட புவனவாசிகளுக்குத் தூலதரமாயும் வித்தையுட்பட்ட புவனவாசிகளுக்குத் தூலமாயும், சாந்தியுட் பட்ட புவனவாசிகளுக்கு சூக்குமமாயும் சாந்தியாதீத கலையுட் பட்ட புவனவாசிகளுக்கு சூக்கும தரமாயும் என ஐவகைப் படுதலும் என்று உரைத்தலுமாம்.

19. கே: தரம் என்பதற்குப் பொருள் என்ன?
ப: மேலானது இதனை தாரதம்மியம் என்பதனுல் அறிக
20. கே: தமம் என்பதற்குப் பொருள்என்ன?
ப: கீழானது. இதனை தாரதம்மியம் என்பதனுல் அறிக.
21. கே: சித்தாந்தி கொள்ளும் வாதங்கள் எவை?
ப: பரிணுமவாதம், விருத்திவாதம். (சூ. 1, அ. 1, செ. 24, கே. 3 ஐ பார்க்க)
22. கே: விருத்தி என்பது எப்படி?
ப: ஒன்றிலிருந்து வேறொன்று உற்பத்தியாவது.
23. கே: சுத்தமாயையின் காரியம் எப்படிப்பட்டது?
ப: விருத்தி.
24. கே: அசுத்த மாயையின் காரியம் எப்படிப்பட்டது?
ப: பரிணுமம்.

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 25.
(வித்தைகள் ....மாகிநின்றே)

1. கே: வைந்தவம் என்ருல் என்ன?
ப: சுத்தமாயை (அதாவது) விந்து.
2. கே: அணுசதாசிவர் என்பவர் யார்?
ப: (1) பிரணவர் (2) சுதர் (3) சுதிப்தர் (4) காரணர் (5) சுசிவர் (6) ஈசர் (7) சூக்குமர் (8) காலர் (9) சம்பு (10) தசேசர் இவர்கள் பத்துபேரும் சாதாக்கிய தத்துவத்திலே சதாசிவரைச்சூழ சேவித்துக்கொண்டிருப்பவர், பிரளயாகலருக்கு பக்குவத்தில் அநுக்கிரகம் செய்பவர்.
3. கே: அபரமுத்தி யென்ருல் என்ன? (சூ. 1, அ. 1, செ.23 கே. 6 ஐ பார்க்க)
ப: பதமுத்தி (அதாவது) அதிகாரத்தில் இருத்தல்.
4. கே: அபரமுத்தர் என்பவர் யார்?
ப: (1) மந்திரேசுரர் (2) மந்திரமயேசுரர் (3) அணுசதாசிவர்.
5. கே: பரம் என்ருல் என்ன?
ப: மேல்.

6. கே: சுத்தமாயை எவ்வெவைகளுக்கு முதற்காரணம்?

ப; வாக்குக்கள், மந்திரேசர், மந்திரமகேசுரர் சதாசிவர் முதலிய அபரமுத்தர்களுக்கு வேண்டப்படும் சுத்தாத்துவாக்கள் எவற்றினுக்கும் முதற்காரணம்.

7. கே: சுத்தாத்துவாக்கள் எவை?

ப: (1) பதாத்துவா (2) வன்னத்துவா (3) புவனத்துவா (4) மந்திராத்துவா (5) தத்துவாத்துவா (6) சரீரம் (7) போகம் (8) கரணம் என்பவைகளாம்.

8. கே: பதாத்துவாக்கள் எவை?

ப: ஓம் வியோமவியாபிநே முதல் 81 பதங்கள்.

9. கே: வன்னத்துவா எவை?

ப: உயிர் 16, மெய் 35, ஆக 51 எழுத்துக்கள்

10. கே: புவனத்துவா எவை?

ப: 224 புவனங்க்ள்.

11. கே: மந்திராத்துவா எவை?

ப: 11 மந்திரங்கள் (சிவஈசானமுதல்)

12. கே: தத்துவாக்கள் எவை?

ப: பிருதிவிமுதல் நாதம் வரையிலுள்ள 36 தத்துவங்கள்

13. கே: போகம் என்றல் என்ன?

ப: அநுபவித்தல்

14. கே: உபாதானம் என்றல் என்ன?

ப: முதற்காரணம்

15. கே: அத்துவா என்றல் என்ன?

ப: வழி .

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 26.

(மூவகை அணுக்க.........சேரலாமே)

1. கே: அணு என்றல் என்ன?

ப: உயிர்

2. கே: மூவகை அணுக்கள் யார் யார்?

ப: (1) விஞ்ஞானகலர் (2) பிரளயாகலர் (3) சகலர்

3. கே: விஞ்ஞானகலர் யார்?

ப: ஆணவமலம் ஒன்றே உடையவர்

4. கே: பிரளயாகலர் யார்?

ப: ஆணவம், கன்மம், என்னும் இரண்டு மலங்களை யுடையவர்

5. கே: சகலர் யார்?

ப: ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களை யும் உடையவர்.

6. கே: வியஞ்சகம் என்றால் என்ன?

ப: காட்டுங்கருவி

7. கே: ஒரு தலையென்றால் என்ன?

ப: நிச்சயம்

8. கே: சே என்றால் என்ன?

ப: ரிஷபம் அதாவது இடபம்

9. கே: பரமுத்தி என்றால் என்ன?

ப: மேலான முத்தி (அதாவது) பிறப்பு இறப்பு இல்லா மையாகிய முத்தி

10. கே: விஞ்ஞானகலருக்கும், பிரளயாகலருக்கும் சரீரம் உண்டா?

ப: சரீரம் உண்டு

11. கே: அவசித்தாந்தம் என்றால் என்ன?

ப: சித்தாந்தத்துக்கு ஒவ்வாதது.

சூத்திரம் 1, அதிகரணம 1, செய்யுள் 27.
(அருவினில்.........உடனுமாவன்)

1. கே: மாயையிலிருந்து எவை எவை தோன்றும்?

ப: கலாதியும், மூலப்பகுதியும், குணதத்துவம் முதலான வையும் தோன்றும்

2. கே: மாயை, கலாதி, மூலப்பகுதி, குணம் இவைகளுக்கு வேறுபாடு என்ன?

ப: மாயை சூக்குமமானது, கலாதி தூலமாயுள்ளது, கலாதியிலும் மூலப்பகுதி தூலமாயுள்ளது, மூலப்பகுதியிலும் குணதத்துவம் முதலானவை தூ லமாயுள்ளது.

3. கே: கலாதிகள் எவை?

ப: (1) காலம் (2) நியதி (3) கலை (4) வித்தை (5) அராகம் (6) புருடன்

4. கே: மூலப்பகுதி என்பது எது?

ப: பிரகிருதிமாயை

5. கே: குணதத்துவம் முதலானவை எவை?

ப: குணம், புத்தி, ஆங்காரம், மனம், ஞான இந்திரியம், கன்ம இந்திரியம், தன்மாத்திரை, பஞ்சபூதங்கள். (சூ. 1, அ. 1, செ. 19, கே. 4, 5, 6, 7, 8, 9, 10 ஐ பார்க்க)

6. கே: அங்காங்கி பாவம் என்ருல் என்ன?

ப: அவயவமும், அவயவியுமாம்

7. கே: காரியப்பிரபஞ்சம் எவை?

ப: 36 தத்துவங்களுமாம்

8. கே: காரணப் பிரபஞ்சம் எவை?

ப: மாயை

9. கே: மாயாவாதியின் கொள்கை எது?

ப: அநிர்வசனத்திலிருந்து உலகந்தோன்றும் என்பது

10. கே: அநிர்வசனம் என்ருல் பொருள் என்ன? (சூ.1, அ.1, செ. 5, கே. 10 ஐ பார்)

ப: உள் பொருளுமல்லாமல் இல் பொருளுமல்லாமல் இருப்பது அதாவது சொல்லமுடியாதது அதாவது சூனியம்.

11. கே: அநிர்வசனத்திலிருந்து உலகம் தோன்றும் என்கிற மாயாவாதியை எப்படி மறுக்கிருர்?

ப: சூனியமாகிய அனிர்வசனத்திலிருந்து உலகம் எப்படி தோன்றும் தோன்ருது. அருவமாகிய மாயையிலிருந்து உருவ மாகிய உலகம் தோன்றும் என்று மறுக்கிருர்.

12. கே: அருவம், உருவம் என்ருல் பொருள் என்ன?

ப: அருவம் என்ருல் சூக்குமமாயுள்ளது. உருவம் என்ருல் தூலமாயுள்ளது.

13. கே: சமுதாய வாதமாவது யாது?

ப: காரியப்படுவது எள்ளாலாகிய குப்பை போன்றது. (சூ. 1, அ. 1, செ. 24, கே. 7 ஐ பார்க்க)

14. கே: சமுதாய வாதியின் கொள்கை என்ன?

ப: அவயவி என்பது ஒன்றில்லை. அவயவமே அவயவியாய்த் தோன்றும் என்பது.

15. கே: அவயவமே அவயவி என்பது பொருந்தாது என்று எப்படி மறுக்கிறார்?

ப: அங்காங்கி பாவமாகி என்று மறுக்கிறார்.

16. கே: அங்காங்கி பாவமாகி என்றால் என்ன?

ப: அங்கம் அங்கி என்கிற அவயவப் பகுப்பு உடையனவாகி என்பதாம்.

17. கே: ஆரம்பவாதியின் கொள்கை என்ன?

ப: நிலம் முதலிய உருவப் பொருளிலிருந்து கந்தம் முதலிய அருவந் தோன்றும் என்பதாம்.

18. கே: ஆரம்பவாதம் என்றால் என்ன?

ப: நூலாலாகிய ஆடைபோல உலகம் உருவத்திலிருந்து அருவந்தோன்றும் என்பதாம். (சூ. 1, அ. 1, செ. 24, கே. ஐ பார்க்க)

19. கே: உருவத்தில் அருவந்தோன்றாது என்று நூலாசிரியர் எப்படி மறுக்கிறார்?

ப: உருவினில் உருவமாயே உதிக்கும் என்றார்.

20. கே: நையாயிகர் கொள்கை என்ன?

ப: காரண காரியங்களுக்கு வேற்றுமை உண்டு என்பது

21. கே: நையாயிகர் கொள்கையை எப்படி மறுக்கிறார்?

ப: காரண காரியங்களுக்கு வேற்றுமை இல்லை என மறுக்கிறார்.

22. கே: முதல்வன் எல்லா உயிர்களிலும் கலந்தும், வேருகியும், உடனுமாயும் எப்படி நிற்பான்?

ப: அநந்தர் சிகண்டரால் உலகங்களை காரியப்படுத்தும் போது அவர்களோடு கலந்தும், பொருள் தன்மையால் வேருயும், அவர்களைச் செலுத்துதலாலே உடனாயும் நிற்பார்.

23. கே: காரணமும் காரியமும் வேற்றுமை யில்லாமல் எப்படியிருக்கும்?

ப: பரிணாமமாதலை நோக்க பேதாபேதமாம், சற்காரியமாதலை நோக்க அபேதமாகும்.

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 28.
(அருஉருஈறுதாகும்........உணர்ந்து கொள்ளே)

1. கே: மாயாவதி என்னவென்று மறுக்கிறுர்?

ப: அருவமாகிய மாயை உருவமாகிய பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும் என்று (27-வதுசெய்யுள் 11-வதுகேள்வியில்) சொன்னீர்களே அது பொருந்தாது. ஏன் எனின் அவிகார மாகிய மாயையிலிருந்து விகாரமாகிய பிரபஞ்சம் தோன்றுது என்று மறுக்கிறுர்.

2. கே நூலாசிரியர் அந்த மறுப்புக்கு என்ன பரிகாரம் சொன்ஞர்?

ப: ஏ. மாயாவாதியே, நீ, உன் மசத்தில், அருவும் அவி காரியுமாகிய ஆகாயத்திலிருந்து உருவும் விகாரியுமாகிய வாயு முதலிய பூதங்கள் தோன்றும் என்று சொன்ஞயல்லவா? அதுவுமன்றி அந்த ஆகாயத்திலிருந்து பல முகில்களும், முகி லில் பல விகாரங்களும், பல ஓசைகளும், உருவமாகிய பல மின்னல்களும், பல இடிகளும் இன்னும் பலவுந் தோன்றும் என்றது பொருந்தாதே. அதனே மறந்தாயோ, அப்படி கூறு தல் உனக்கே குற்றம் என்று அறிவாயாக எனபரிகாரஞ் சொன்ஞர்.

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 29.
(மண்ணினிற்... ... ...கேள் நீ)

1. கே: குலாலன் என்ருல் யார்?

ப: குயவன்.

2. கே: ஆரியன் என்ருல் யார்?

ப: சிவன்.

3. கே: கண்ணுதல் என்ருல் பொருள் என்ன?

ப: கருதுதல் அதாவது யோசித்தல்.

4. கே: கடம், படம் என்ருல் பொருள் என்ன?

ப: கடம் என்ருல் குடம், படம் என்ருல் துணி.

5. கே: அநுவாதம் என்ருல் பொருள் என்ன?

ப: முன் சொன்னதைப் பின்னும் சொல்லுதல்.

6. கே: புரோவாதம் என்றால் பொருள் என்ன?
ப: முன்னே சொன்னது.

7. கே: குயவன் குடஞ் செய்வதற்கு குடஞ்செய்ய முதற் காரணமாகிய மண்ணிலிருந்து கொண்டு குடத்தைச் செய்வான். ஆரியன் உலகங்களைச் செய்யும்போது எங்கிருந்துகொண்டு செய்வான்?
சூ. 1, அ. 2, செ. 30. (சீலமோ... ... கண்ணே)
ப: ஆரியனுடைய தன்மை, வாக்குமனாதீத மானதால் அவன் நிற்கும் நிலையும் மனாதீதமாயுள்ளது என்பதாம். இன்னும் உலகம் எல்லாவற்றையும் காரியப்படுத்தும் காலதத்துவமானது உலகத்தை காரியப்படுத்தும்போது எல்லாப் பொருள்களுக்கும் காலம் ஆதாரமாய் நிற்கும். ஆனால் தனக்கு ஒரு ஆதாரம் இன்றியே நிற்கும். அதுபோல உலகங்களைக் காரியப்படுத்தும்போது சிவசத்தியே ஆதாரமின்றி காரியப்படுத்தும்.

8. கே: அதீதம் என்பதற்குப் பொருள் என்ன?
ப: கடந்தது (அதாவது) அப்பாற்பட்டது.

9. கே: கோசரம் என்பதற்குப் பொருள் என்ன?
ப: அறியப்படுவது.

10. கே: காலம் உலகத்தை எப்படி காரியப்படுத்தும்?
ப: எல்லாப் பொருள்களையும் காலம் தோற்றுவித்து, நிறுத்தி, பின் நாசம் பண்ணும்

11. கே: கண் என்றால் பொருள் என்ன?
ப: அறிவு (நேத்திரமல்ல)

12. கே: கடவுட் கண்ணே என்றால் என்ன பொருள்?
ப: கடவுளின் அறிவு (அதாவது) சிவசத்தி

13. கே: அவத்தை என்பதற்குப் பொருள் என்ன?
ப: நிலை.

14. கே: காலமானது, தொழில் வேறுபாட்டால் என்ன என்ன அவத்தை அடையும்?
ப: செல்காலம், நிகழ்காலம், எதிர்காலம், கணம், இலவம், துடி எனபலவகைப்படும்.

15. கே: முதல்வன் ஒரு தொழில் செய்யும்போது அவத்தைப் படுவாஞ?

ப: அவத்தைப்பட மாட்டான்.

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 31.
(கற்றநூல்.........அன்றே)

1. கரணம் என்ருல் என்ன?

ப: கருவி.

2. கே: சாக்கிரம் முதலிய அவத்தைகள் எவை?

ப: (1) சாக்கிரம் (2) சொப்பனம் (3) சுழுத்தி (4) துரியம் (5) துரியாதீதம்.

3. கே: சாக்கிராவத்தை என்ருல் என்ன?

ப: 35 கருவிகளோடு ஆன்மா புருவமத்தியிலிருந்து அறிவது.

4. கே: சொப்பனவத்தை என்ருல் என்ன?

ப: ஆன்மா, 25 கருவிகளோடு கண்டத்திலிருந்து அறிவது.

5. கே: சுழுத்தி அவத்தை என்ருல் என்ன?

ப: ஆன்மா 3 கருவிகளோடு இதயத்திலிருந்து அறிவது

6. கே: துரியாவத்தை யென்ருல் என்ன?

ப: புருடன் இரண்டு கருவிகளோடு உந்தியிலிருந்து அறிவது.

7. கே: துரியாதீத அவத்தை என்ருல் என்ன?

ப: ஒரு கருவியோடு மூலாதாரத்தில் புருடன் இருத்தல்

8. கே: முதல்வன்படும் அவத்தைகள் எவை?

ப: இலயம், போகம், அதிகாரம் என்னும் மூன்று அவத்தைகளாம்.

9. கே: இலய அவத்தை என்ருல் என்ன?

ப: முதல்வன் ஒடுக்கி நிற்கும் நிலை.

10. கே: போக அவத்தை என்ருல் என்ன?

ப: முதல்வன் காத்தல் நிலை.

11. கே: அதிகார அவத்தை என்ருல் என்ன?

ப: படைத்தல் நிலை.

12. கே: வாதனுருபம் என்றால் என்ன?
ப: பழகியபழக்கம்.

13. கே: ஆன்மபோதம் என்றால் என்ன?
ப: உயிரின் அறிவு.

14. கே: முதல்வன் இலயம், போகம், அதிகாரமாகிய அவத்தைப்படுங் காலத்தில் எப்படி இருப்பான்.
ப: கற்றநூலின் பொருளும், சொல்லும் வாதனுருபமாய் புத்திதத்துவத்தை ஒட்டி நின்று, ஆன்மபோதத்தில் ஒடுங்கித் தோன்றும்போது, அந்த ஆன்மபோதம் அது பற்றித் தொடக்குறுதவாறு போல முதல்வன் தொடக்குறுதலின்றி நிற்பன்.

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 32.
(உயிரவை........ ஈசன்)

1. கே: அழிக்கிற கடவுளாலே அழிந்த உலகம், உயிரோடு கூடி அழிந்த படியே இராமல் மறுபடியும் அந்த கடவுளிடத்திலிருந்து ஏன்தோன்றவேண்டும்?
ப: உயிர்களின் கூடவே இருக்கிற ஆணவமலம் பக்குவம் அடைவதற்காகத் தோன்றும்.

2. கே: மறுபடியும் உயிரோடு கூடி தோன்றுகிற உலகம் முன்னம் அழியாமல் இருக்கலாமே ஏன் அழிய வேண்டும்?
ப: உயிரின் இளைப்பு ஒழிதற்காக

சூத்திரம் 1, அதிகரணம் 1, செய்யுள் 33.
(தோற்றுவித்.........காசினிக்கே)

1. கே. ஒரே கடவுள் உலகத்தைத் தோன்றச்செய்து, நிலைப்பித்து, பின்னர் அழிக்கின்ற இந்த மூன்று தொழில்களையும் இடையறுது செய்வானுயின் பாரம் அடைந்து விகாரம் அடையமாட்டானே.
ப: இல்லை.

2. கே: அது எப்படி?
ப: சூரியன் ஒன்றுஞ் செய்யாதிருக்கும்போதே சூரியன் தன் சந்நிதியில் காந்தக்கல்லை கனலைக் கக்கச் செய்கிறது. தாம

ரையை மலரச் செய்கிறது, பூமியில் நீரை சுவறச் செய்கிறது. இங்ஙனம் சூரியன் தனக்குரிய முத்தொழிலைச் செய்தும் சூரியன் விகாரம் எய்தாமைபோல என்றறிக.

(சூ. 1, அ. 2, செ. 34, 35)
(உரைத்த .. .. நண்ணலாலே)
(இறுதியாங் . ... கரணத்தாலே)

3. கே: படைத்தல் பிரமனுக்கும், காத்தல் விஷ்ணுவுக்கும் அழித்தல் அரனுக்கும் என்று ஆகமங்களில் கூறியிருக்க படைத்தல், காத்தல், அழித்தலாகிய மூன்று தொழில்களும் ஒருவனுக்கே ஆக்கினது என்ன காரணம் என்று பௌராணிகர் கேடடகேள்விக்கு நூலாசிரியர் என்ன விடை கூறினர்.

ப: அயன்மால் இருவரும் புண்ணிய விசேடத்தால் முதல்வனுடைய அதிகார சத்தியைப் பெற்றுடையவராதலால் படைப்பார், காப்பார் என்று கூறப்பட்டது. அத்தொழில்கள் அவர்களுக்கு சுதந்திரமில்லை. அம்மூன்று தொழிலும், அழிக்கிற அரனுக்கே உண்டு என்று, வேதம், புராணம், இதிகாசங்களில் கூறப்பட்டிருக்கிறது என்றார். அதுவுமன்றி சங்கார காலத்தில் அயனும், அரியும் தங்கள் தங்கள் தொழிலோடு நிலைபெறுவாராயின் உலகம் சங்காரமாகாதே. ஆதலால் சங்கார காலத்தில் அயனும், அரியும் இருத்தல் கூடாதே. சங்காரக் கடவுள் சிலவற்றை சங்கரிக்காமல் விட்டு மற்றவற்றைச் சங்கரிப்பானு, சங்காரக்கடவுள் என்பவன் முழுவதும் சங்கரித்து தான் மாத்திரம் எஞ்சிநிற்பவனே யாம். அவனே மீளவும் தோற்றுவித்து நிறுத்துவான் என்பது தானே விளங்குமே என்றார்.

4. கே: பௌராணிகர் கொள்கைகளை யுடையவர் யார் யார்?
ப: பாஞ்சராத்திரியும், இரணியகருப்ப மதத்தினருமாம்.

5. கே: பௌராணிகரை மறுத்தபடியால் இன்னும் யார் யார் மறுக்கப்பட்டவராவர்?
ப: பாஞ்சராத்திரியும், இரணியகருப்ப மதத்தினரும்.

சூத்திரம் 1, அதிகரணம் 2, செய்யுள் 36.
(சொன்ன ....சொல்லலாமே)

1. கே: சங்காரக் கடவுள், தோற்றம், நிறுத்தல், அழித்த லாகிய தொழில்களை எப்படி செய்வார்?
   ப: விளையாட்டாகச் செய்வார்.

2 கே: விளையாட்டு என்பதற்குப் பொருள் என்ன?
   ப. எளிதாக என்பதாம்.

3. கே: எளிதாகச் செய்தலுக்கு ஒரு உதாரணங் கூறு.
   ப: ஐங்கலப் பாரஞ்சுமத்தல் சாத்தனுக்கு ஒரு விளையாட்டு.

4. கே: அவ்வளவு எளிதாகச் செய்வதற்கு என்ன காரணம்
   ப: பெத்தகாலத்தில் உயிர்களுக்கு சுவர்க்காதிபோகங் களையும் பதமுத்திகளையும் கொடுத்தற்பொருட்டும், முத்தி காலத்தில் வீடுபேறு கொடுத்தற் பொருட்டுமாம்.

5. கே: என்னகாரணம் என்று கேட்டால், போகங் கொடுக்க வும் பதமுத்தி கொடுக்கவும் வீடுபேறு கொடுக்க வும் என்று பயனைக் கூறுவது ஏன் செப்பு வழுவாகாது.
   ப: புத்தி, முத்தி வழங்கவும், மலங்கள் எல்லாம் துடைப்பவும், செய்தலால் அருள் செய்தலே காரணம் என்பது தாற்பரியமாதலின் வழுவாகாது.

சூத்திரம். 1, அதிகரணம் 1, செய்யுள். 37,
(அழியபு ....எல்லாம்)

1. கே: ஐந்தொழில்கள் எவை?
   ப: படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், (அதாவது) பிறப்பித்தல், நிறுத்துதல் அழித்தல் மறைத்தல், அருளல் (அதாவது) தோற்றம், நிலை, ஒடுக்கம், மறைப்பு, அருள்

2. கே: ஒடுக்கம் எதற்காக?
   ப: இளைப்பாற்ற (இதுவும் அருளேயாம்) மறமல்ல.

3. கே: தோற்றம் எதற்காக?

ப: அவரவர்களுடைய கன்மம் முழுவதையும் கழித்து மலபாகம் வருவதற்காக. இதுவும் அருள்.

4. கே: நிலை எதற்காக?

ப: கன்மம் தொலையவேண்டி கன்மத்தை அனுபவிக்கச் செய்வதற்காக. இதுவும் அருளே.

5. கே: மறைப்பு எதற்காக?

ப: இருவினை ஒப்புச்செய்து மலங்களை முதிர்விக்கவாம் இதுவும் அருளே.

6. கே. அருள் எதற்காக?

ப: பாசம் விடுவதற்காக. இதுவும் அருளே.

7. கே: முன்னே (34-வது செய்புளில்,) தோற்றம். நிலை, இறுதி என்று முத்தொழில் கூறி இந்தச் செய்யுளில், அழிப்பு, ஆக்கம், காப்பு மறைப்பு, அருள் என்று ஐந்தொழில் கூறியதுபற்றி, அறிவும் மலைக்காதோ?

ப: மலைக்காது ஏன் எனின், மறைப்பு என்பது நிலையில் அடங்கும். அருள் என்பது இறுதியிலடங்கும். ஆதலால் மலைக்காது இவை தம்முள் வேற்றுமைகாட்டியவாறு.

8. கே: நாத்திகர் மதம் என்ன?

ப: சங்காரக் கடவுள் செய்யுந் தொழில் மறம் என்பது

9. கே: மாயாவாதி மதம் என்ன?

ப: சங்காரக் கடவுள் செய்யுந் தொழில் வீண் தொழில் என்பது.

10. கே: பரிணமவாதியின் மதம் என்ன?

ப: சங்காரக்கடவுள் செய்யுந் தொழில் தன்பொருட்டு என்பதாம்.

சூத்திரம் 1, அதிகரணம் 2, செய்யுள் 38:
(அருவமோ.........உள்ளவாமே)

1. கே: ஐந்தொழில் செய்யும் முதல்வனுக்கு வடிவம் வேண்டுமா?

ப: வடிவம் அவசியம் வேண்டும்.

2. கே: முதல்வனுடைய வடிவம், அருவமா, உருவாருபமா, உருவமா?

ப: மூன்றுமேயாம்,

3. கே: தடத்த வடிவம் என்றால் என்ன?

ப: பொது உருவம் (அதாவது) அருவம், உருவாருபம், உருவம்.

4. கே: சிறப்பு வடிவத்துக்குப் பெயர் என்ன?

ப: சொருப வடிவம்.

சூத்திரம் 1, அதிகரணம் 2, செய்யுள் 39-40.

(நண்ணிடும் .... காணே) (வித்தக .... ஆமே)

1. கே: முதல்வனுக்கு உருவமும் உண்டு என்று ஆசிரியர் சொன்னதில், பிறர் அந்த உருவத்துக்கு என்ன குற்றம் கூறுகின்றார்கள்?

ப: உருவம் எல்லாம் ஒரே தன்மை உடையனவேயாம் முதல்வனுக்கு உருவம் உண்டு என்று நீங்கள் சொன்னால், நம்முடைய உருவம் பரதந்திரமுடையன. ஒருவனால் செய்யப் பட்டன. அதுபோல முதல்வனுடைய உருவமும், பரதந்திர முடையதாதல் வேண்டும். ஒருவனால் பண்ணப்பட்டதாதல் வேண்டும் ஆதலால் உருவத்தில் வேற்றுமை இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அந்த உருவத்தால் பயனில்லையென்று குற்றங் கூறினர்.

2. கே: அதற்கு ஆசிரியர் என்ன பரிகாரஞ் சொன்னார்?

ப: முதல்வன் தன் விருப்பப்படி உருவங்கொள்ளுவான் ஆதலால் முதல்வனுக்கு வேறொருவர் உருவத்தை உண்டாக்க வேண்டாம் என்று பரிகரித்தார்.

3. கே: இதற்கு பிறர் என்ன குற்றம் கூறுகிறார்?

ப: முதல்வன் விருப்பப்படி உருவங்கொள்ளுதல் போலவே யோக சித்தர்களும் தங்கள் விருப்பப்படி உருவங் கொள்ளுவார்கள். அதனால் முதல்வனை யோகசித்தர்களில் ஒருவன் என்று சொல்லலாமே என்றார்.

4. கே: இதற்கு ஆசிரியர் சொன்ன பரிகாரம் என்ன?

ப: யோக சித்தர் தங்கள் விருப்பப்படி உருவங்கொள்ளு தல் முடியாது. யோக சித்தர்கள் தங்களுக்கு ஒரு உருவம்

இருக்கும் வேறே ஒருருவத்தை முதல்வன் அருளால் கொள்ளு வார்கள். அந்த உருவம் மாயா வடிவமே. அருள்வடிவாகாது. ஆதலால் யோக சித்தர் முதலிய நம்முடைய உருவத்துக்கும் முதல்வனுடைய உருவத்துக்கும் வேற்றுமை உண்டு என்றார்.

சூத்திரம் 1, அதிகரணம் 2, செய்யுள் 41
(மாயைதான்.........தன்னால்)

1. கே: என்ன வேறுபாடு?
   ப: அங்கம், அங்கி என்கிற வேறுபாடு
2. கே: அங்கம் எது? அங்கி எது?
   ப: பதியும், பசுவும் அங்கி, அறிவும், தொழிலும், முதன்மையும் அங்கம்
3. கே: வேறுபாட்டை விவரித்துச் சொல்லுங்கள்?
   ப: யோகிகளும் நாமும் மலத்தைப்பற்றிக் கிடக்கும் பசுக்கள். அதனால் ஒன்றையே அறிதலும், ஒன்றையே செய்தலும் ஒன்றிலே முதன்மையாதலுமாகிய அற்ப ஞானம், அற்பத் தொழில், அற்ப முதன்மை உடையவராவோம். முதல்வன் ஆணவம் அகன்ற அறிவுள்ளபதி. அதனால் எல்லா ஞானமும் எல்லாத் தொழிலும் எல்லா முதன்மையும் உடையவனாவான் என்பதாம்.

சூத்திரம் 1, அதிகரணம் 2, செய்யுள் 42.
(சத்தியே.........கேணி)

1. கே: முதல்வனுடைய வடிவம் எப்படிப்பட்டது?
   ப: சத்திவடிவம்.
2. கே: சத்திவடிவம் என்று ஆசிரியர் சொன்னதற்கு பிறர் என்ன குற்றம் கூறி என்ன சொல்லும்படி சொல்லுகிறார்?
   ப: சத்திவடிவமாயிருந்தாலும், வடிவம் எல்லாம் பரிணாமமாதலால் நித்தமாயுள்ளதாகாதே. அழியுமே என்று குற்றங் கூறி முதல்வனுடைய வடிவம் அருவம் என்று சொல்லுங்கள் என்றார்.

3. கே: அருவம் என்பதற்கு என்ன குற்றம் ஆசிரியர் கூறுகிறார்?

ப: ஆறு அத்துவாக்களேயும் கடந்தவனுதலால், ஆறு அத்துவாக்களுக்குள்ள அருவம் என்பது பொருந்தாது.

4. கே: ஆறு அத்துவாக்கள் எவை?

ப: (1) வன்னுத்துவா (2) பதாத்துவா (3) மந்திராத்துவா (4) புவனுத்துவா (5) தத்துவாத்துவா (6) கலாத்துவா.

5. கே: அத்துவா என்பதற்குப் பொருள் என்ன?

ப: வழி.

6. கே: வன்னுத்துவா என்பது என்ன?

ப: ச முதல் சං வரையிலுள்ள உயிர் 16-ம் க முதல் க்ஷ வரையில் உள்ள மெய் 35-ம்

7. கே: பதாத்துவா என்பது என்ன?

ப: ஓம், வியோமவியாபிநே முதல், ஓம் சிவாயநமோ நமகா ஓம், வரை 81 பதங்கள்.

8. கே: மந்திராத்துவா என்பது என்ன?

ப: சிவ, ஈசான, தத்புருஷ, அகோர, வாமதேவ, சத்தியோஜாத, அஸ்தர, கவச, சிகா, சிரோ, இருதய ஆக 11.

9. கே: புவனுத்துவா எவை?

ப: 224 புவனங்கள்.

10. கே: தத்துவாக்கள் எவை?

ப: 36 தத்துவங்கள்.

11. கே: கலாத்துவா எவை?

ப: (1) நிவிர்த்திகலே (2) பிரதிட்டாகலே (3) வித்தியாகலே (4) சாந்திகலே (5) சாந்தியதிதாகலே ஆக 5.

12. கே: கண்டிதப் பொருள் என்றுல் என்ன?

ப: வேறுபட்டு அழிவது.

சூத்திரம். 1, அதிகரணம். 2, செய்யுள். 43,
(உலகினிற் ....குறித்திடாயே)

1. கே: ஆறு அத்துவாக்களின் இயல்பு என்ன?

ப: ஆகாயமாகிய அருவப் பொருள் நிலம் முதலிய உருவப்பொருளாகாது, நிலம் முதலிய உருவப்பொருள் ஆகாய முதலிப அருவப்பொருளாகாது, சந்திரன் முதலிய அருஉருவப் பொருள் அரு இயல்பையும் உடையதாகாது உரு இயல்பையும் உடையதாகாது. இப்படி ஆறத்துவாவுட் பட்ட பொருளெல்லாம் ஒன்றுபிறதொன்றின் இயல்புடையது ஆகாது. ஆதலால் முதல்வனை அருவப்பொருள் என்பது பொருந்தாது. அவன்மாட்டாமையை உடையவனுவான்.

சூத்திரம். 1, அதிகரணம். 2, செய்யுள். 44,
(பந்தமும் .... மாற்றமின்றே.)

1. கே: அநாதி, முத்த. சித்துருவாகிய எந்தையின் இயல்பு எப்படிப்பட்டது?

ப: எந்தை, (1) கட்டு, வீடு என்கிற பந்தங்களுடைய, பசு பாசங்களினுடைய இயல்புடையவன் அல்லன் (2) எழுவாய் இறுவாய் இலன் (3) எழுவாய் இறுவாய் இலனுகலால் அளவைகட்கு எட்டாதவன் (4) அருவம், உருவம், அருவுருவம் என்னும் முக்கூற்றுள் இன்னனுவன் என்று அம்முக்கூறு படும். விருத்தி, பரிணமம், விவர்த்தனம் என்பவற்றுள் ஒன்றில் படுவன் படானென்று கூறுவதற்கு ஓராசங்கையுமில்லை ஆசங்கையில்லையாகவே பரிகாரமுமில்லையாம்.

2. கே: பரிணமம் என்றுல் என்ன?

ப: பால் தயிராவதுபோல வேறுபடுதல்.

3. கே: விருத்தி என்றுல் என்ன?

ப: ஒன்றிவிருந்து வேறென்று தோன்றுதல்.

4. கே: விவர்த்தனம் என்றுல் என்ன?

ப: ஒன்றை மற்றென்றுக நினைத்தல்

சூத்திரம் 1, அதிகரணம் 2, செய்யுள் 45.
(குறித்ததொன் ... ... அருளினுலே)

1. கே: விகாரப்படுதற்குக் காரணம் எது?

ப: பரதந்திரம்

2. கே: உத்தேசப்படுதற்குக் காரணம் எது?
   ப: சிற்றுணர்வு சிறு செயல்கள்

3. கே: தொடக்குறுதற்குக் காரணம் எது?
   ப: விருப்பு வெறுப்புக்கள்.

4. கே: முதல்வன் எதனுல் நினைந்ததொரு வடிவத்தைக் கொள்வான்?

ப: பரதந்திரம் இல்லாதவன். சிற்றுணர்வு, சிறுதொழில் இல்லாதவன், விருப்பு வெறுப்பு இல்லாதவன். ஆதலால் நினைந்ததொரு வடிவத்தை உடையவனுவான்.

சூத்திரம் 1, அதிகரணம் 2, செய்யுள் 46.
(ஆரணம்.........சென்றிடாவே)

1. கே: உயிர்க்கு தன்னுடம்பை இயக்குதற்கு எந்த உருவம் வேண்டும்?

ப: வேறே ஒரு உருவமும் வேண்டாம். தன் உருவமே போதும்.

2. கே: முதல்வனுக்கு உருவம் எது?
   ப: உலகமே உருவம்.

3. கே: முதல்வனுக்குத் தன் உருவமாகிய உலகத்தைத் தொழிற்படுத்த எந்த உருவம் வேண்டும்?

ப: வேறே ஒரு உருவமும் வேண்டாம், தன் உருவமே போதும்.

4. கே: அப்படியிருக்க முதல்வன் ஏன் உருவங்கொள்ளல் வேண்டும்?

ப: (1) ஆரணங்களையும் ஆகமங்களையும் கோவைப்பட அருளிச்செய்பவும், (2) அந்த வேதாகமங்களை குருபரம்பரையின் வைத்தற்பொருட்டும், (3) பிரளயாகலரும் சகலரும் பொருளியல்பு உணர்ந்து வீடுபேறடையும் பொருட்டும் உருவம் வேண்டும்.

5. கே: ஆரணங்களையும் ஆகமங்களையும் ஏன் கோவைப் படச் செய்தல் வேண்டும்?

ப: பிரளயாகலரும் சகலரும் ஒருவர் உணர்த்தினலன்றி உணரமாட்டாராகலான் கோவைப்படச் செய்தல் வேண்டும்.

6. கே: பிரளயாகலருக்கு எப்படி உணர்த்துவார்?
ப: முன்னிலேயிலிருந்து உணர்த்துவார் (குருவாயிருந்து)

7. கே: சகலருக்கு எப்படி உணர்த்துவார்?
ப: படர்க்கையிலிருந்து உணர்த்துவார் (மனிதனுக இருந்து).

8. கே: யாருக்கு குருபரம்பரையின் அருளுவார்?
ப: திருமால் முதலிய தேவர்க்கும், மானுடர்க்கும், நரகர் முதலியோர்க்கும்.

சூத்திரம். 1, அதிகரணம் 2, செய்யுள். 47,
(உருவருள்.........அன்றே)

1. கே: முதல்வனுக்கு உருவமாகிய தனு உண்டாகவே இன்னும் எவ்வெவைகள் உண்டாகவேண்டும்?
ப: தனு உண்டாகவே, தனுவுக்குரிய தொழில், கரணம், புவனம், போகங்சளும் உண்டாகவேண்டும்.

2. கே: முதல்வனுக்கு தனுகரணபுவன போகங்கள் உண்டானல் நம்மனேர்போல சுட்டியுணரப்படுவானே, சுட்டியுணரப்படுவானுதலால் வாக்கு மனதீதன் என்றல் ஏன் வழுவாகாது?
ப: அரனுடைய உரு அருளாகலால், தொழில்களும், குணங்களும், கரணங்களும், கை, கால் முதலிய உறுப்புக்களும், புவனபோகங்களும், அருள்வடிவே, இவ்வருள்வடிவெல்லாம் உயிர்களின் பொருட்டன்றி தன் பொருட்டன்மையால் சிந்திதனுயினும் அசிந்திதனேயாம்.

3. கே: சாங்கங்கள் அல்லது பிரத்தி அங்கங்கள் எவை?
ப: கரம், சரணம் முதலியவை, கரம்-கை; சரணம்-கால்.

4. கே: உபாங்கங்கள் எவை?
ப: புவனம், போகங்கள்.

சூத்திரம் 1, அதிகரணம் 2, செய்யுள் 48.
(உலகினே ....ரெல்லாம்)

1. கே: விச்சுவாதிகன் என்றுல் பொருள் என்ன?

ப: அரனுடைய உருவம், உலகத்தைக் கடந்து நின்றது என்பதாம்.

2. கே: விச்சுவ காரணன் என்றால் பொருள் என்ன?

ப: (அரனுடைய உருவம்) உலகந்தோன்றவும் ஒடுங்கவும் காரணமாயுள்ளது என்பதாம்.

3. கே: விச்சுவத்துக்கு அந்தரியாமி என்றால் பொருள் என்ன?

ப: (அரனுடைய உருவம்) உலகத்துக்கு உயிராயுள்ளது என்பதாம்.

4. கே: விச்சுவரூபியென்றால் பொருள் என்ன?

ப: (அரனுடைய உருவம்) உலகம் அரனுடைய உருவமேயாம் என்பதாம்

5. கே: இந்த நான்குக்கும் சாட்சி எது?

ப: வேதத்தில் கூறும் சுருதியே சாட்சி.

6. கே: சுருதி என்றால் பொருள் என்ன?

ப; வேதத்தின் ஒரு பகுதி

7. கே: உலகம் எங்கேயிருந்து தோன்றுகிறது, எங்கே போய் ஒடுங்குகிறது?

ப: மாயையில் தோன்றுகிறது, மாயையில் ஒடுங்குகிறது.

8. கே. உலகத்துக்கு ஆதாரம் எது?

ப: மாயை.

9. கே: மாயைக்கு ஆதாரம் யார்?

ப: முதல்வன்

10. கே: மாயையில் தோன்றி ஒடுங்கும் உலகத்தை வேறு எவ்விதம் கூறுவர்?

ப: முதல்வனிடத்திலே தோன்றி முதல்வனிடத்திலே ஒடுங்கும் என்பார்.

11. கே: அப்படி சொல்லுவதற்கு எது ஆதாரம்?

ப: கிழங்கிலிருந்து தோன்றுகிற தாமரையை பங்கஜம் என்பதுவே ஆதாரம்.

12. கே: பங்கஜம் என்றால் பொருள் என்ன?

ப: பங்கம் என்றால் சேறு; ஜம் என்றால் உற்பத்தியாவது. ஆகவே பங்கஜம் என்றால் சேற்றில் உற்பத்தியாவது என்பதாம். (இது அசிந்திதன் என்பதற்கு சாட்சி)

சூத்திரம் 1, அதிகரணம் 2, செய்யுள் 49.
(தேவரின் .... ஓரார்)

1. கே: வேதத்தில் கூறும்சுருதியை அறியாதவர்கள் முதல்வனை எப்படிப்பட்டவர் என்பார்கள்.

ப: பிரமன், விஷ்ணு முதலிய தேவர்களில் சிவனும் ஒருவன் என்பார்

2. கே: ஏன் அப்படி கூறுவார்?

ப: விச்சுவாதிகன் முதலிய நான்கினையும் உடையவன் சிவன் என்று சுருதியில் கூறுவதை வலியுறுத்தும் புராணங்களையும் அறியாதவர் ஆதலால்

3. கே: அந்த புராணங்கள் எவை?

ப: அயனும், அரியும், அடிமுடி தேடி அறியாவண்ணம் நீண்ட முதல்வன் நிலைகூறும் புராண வசனம் ஒன்று, பிரமன், விஷ்ணு, உருத்திரனாகிய மும்மூர்த்திகளும் முதல்வனுடைய உறுப்பில் தோன்றிநின்ற திருவடியின் இயல்பு கூறும் புராண வசனம் ஒன்று, முதல்வனுடைய வடிவிலே உண்டான விதங்களே உலகில் விளையும் என்று கூறும் புராண வசனம் ஒன்று, அர்த்தநாரீசுர வடிவ கூறும் புராண வசனம் ஒன்று, ஆகிய இப்படிப்பட்ட புராண வசனங்களாம் (இந்த செய்யுள் அசிந்திதன் என்பதற்கு சாட்சி)

சூத்திரம் 1, அதிகரணம் 2, செய்யுள் 50.
(போகியாயிருந்து ... ... என்பர்)

1. கே: முதல்வனுடைய பெருமைகள் எவை?

ப: (1) உயிர்களுக்குப் போகம் கொடுத்தற்பொருட்டு முதல்வன் போகவடிவங் கொண்டார்

(2) உயிர்கள் செய்த வினைகளை ஒழித்தற்பொருட்டு முதல்வன் கோரவடிவங்கொண்டார்.

(3) உயிர்களுக்கு யோகமுத்தி உதவுதற்பொருட்டு முதல்வன் யோகவடிவங் கொண்டார்.

சூத்திரம் 1, அதிகரணம் 2, செய்யுள் 51.
(ஒன்றேடு ……… ஓரார்)

2. கே: இம் மூன்று வடிவம் எதற்காகக் கொண்டார்?

ப: உயிர்களுக்கு அநுக்கிரகம் செய்யும் பொருட்டாம். (இது ஒரு அதிசய நிலே)

சூத்திரம் 1, அதிகரணம் 2, செய்யுள் 52.
(நாயகன்………என்ஞர்)

1. கே: முதல்வனுடைய செயலெல்லாம் அருள்புரிதொழில் என்பதற்கு ஒரு உதாரணஞ் சொல்?

ப: முதல்வி திருக்கண்புதைத்த திருவிளேயாடலே உதாரணம்.

2. கே: திருக்கண் புதைத்த திருவிளேயாடலேக் கூறு?

ப: முதல்வி மகிழ்ச்சியால் முதல்வனுடைய இரண்டு கண்களேயும் தன் இரு கையாலும் மூடினவுடனே, உலகம் இருளாகிவிட்டது, அப்போது உயிர்கள் துன்பமடைந்தன. முதல்வன் உயிர்களுக்கு அன்புசெய்யும் பொருட்டு நெற்றிக் கண்ணுல் ஒளியைத்தந்து காப்பாற்றினர் என்பதாம்.

சூத்திரம் 1, அதிகரணம் 2, செய்யுள் 53.
(நண்ணுதல்………ஓரார்)

1. கே: முதல்வன் கொள்ளும் வேடமெல்லாம் அருள்புரி தொழில் என்பதற்கு ஒரு உதாரணம் கூறு?

ப: முதல்வன் யோகத்தில் இருக்கும்போது மன்மதன் இருக்கவும், பாணத்தை ஏவியும் பயன்படாமல் தேவர் முதலி யோர் காமத்தால் மெலிவுற்றதே ஒரு காரணம், பின்விண்டு மன்மதனே ஏவ, மன்மதன் நெற்றிக்கண்ணுல் எரிக்கப்பட பார்வதியை முதல்வன் மணந்தபோது உயிர்கள் இன்பமடைந் தன என்பது ஒரு உதாரணமாம்.

2. கே: ஸ்ரீகண்ட உருத்திரர் என்பவர் யார்? முதல்வன்யார்?

ப: ஸ்ரீகண்ட உருத்திரர் 24 தத்துவங்களே மாத்திரம் அறிப்பவர், 36 ஐயும் அறிப்பவர் முதல்வர்.

3. கே: ஸ்ரீகண்ட உருத்திரருக்கும் முதல்வனுக்கும் உள்ள ஒற்றுமை எவை?

ப: வடிவங்களும் ஒன்றே, பெயர்களும் ஒன்றே, தொழில்களும் ஒன்றே.

4. கே: மகேசுர மூர்த்தங்கள் எத்தனை?

ப: 25

5. கே: 25 மகேசுர மூர்த்தங்களைக் கூறு?

ப: (1) சந்திரசேகரர் (2) உமாமகேசுரர் (3) ரிஷபாரூடர் (4) சபாபதி (5) கல்யாணசுந்தரர் (6) பிக்ஷாடனர் (7) காமாரி (8) அந்தகாரி (9) திரிபுராரி (10) சலந்தராரி (11) வித்வம்சர் (12) வீரபத்திரர் (13) நரசிங்கநிபாதர் (14) அர்த்தநாரீசுரர் (15) விக்கிராதரர் (16) கங்காளர் (17) சண்டேசானுக்கிரகர் (18) நீலகண்டர் (19) சக்கராயப்பிரதர் (20) கசமுகானுக்கிரகர் (21) ஏகபாதர் (22) சோமாஸ்கந்தர் (23) அனங்கபிருது (24) தட்சிணாமூர்த்தி (25) லிங்கோற்பவர்.

சூத்திரம் 1, அதிகரணம 2, செய்யுள் 54.
(படைப்பாதி.........சொல்லொணாதே)

1. கே: முதல்வனுக்கு இவ்வடிவங்கள் அவசியமானது என்பதற்குக் காரணம் என்ன?

ப: (1) படைப்புத் தொழிற்கும், (2) பத்தர்களுக்கு இருவினையொப்பில் அருளுதற்பொருட்டுச் செய்யுந் திரோதானத் தொழிற்கும், (3) உயிர்களுக்கு இன்பஞ் செய்வதாகிய திதித் தொழிற்கு மாதராளோடு இயையவேண்டுதலானும், முத்தி அளிப்பதாகிய அநுக்கிரகத்துக்கு யோகிருந்து காட்டவேண்டுதலானும், சங்காரத் தொழிற்கும் அவசியம் வேண்டும்.

2. கே: படைப்புத் தொழில் எப்படி நடக்கிறது?

ப: முதல்வனுடைய திருமேனியிலுள்ள ஒவ்வொரு உறுப்புக்களிலிருந்து இயங்கியல் பொருளும் நிலையியற் பொருளும் தோன்றுகின்றன.

3\. கே: இயங்கு இயல்பொருள் என்றால் என்ன?

ப: ஒரு இடத்தைவிட்டு மற்றொரு இடத்துக்குப்போகும் பொருள். (அவையாவன) மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வனவாம்.

4\. கே: நிலையியற் பொருள் என்றால் என்ன?

ப: இருந்த இடத்தைவிட்டு நீங்காத பொருள்கள். (அவையாவன) மரம், செடி, முதலியன.

5\. கே: இருவினை ஒப்பு என்றால் என்ன?

ப: இனி ஆன்மா அனுபவிக்க வேண்டிய இன்பமும் இல்லாமல், துன்பமும் இல்லாமல் ஒத்துப்போதல்.

6\. கே: திரோதானத்தொழில் என்றால் என்ன?

ப: மறைத்தல் (அதாவது) ஆனந்தத்தில் அழுத்தல்

7\. கே: பாவனை என்றால் என்ன?

ப: திரோதானத் தொழில்.

8\. கே: இயங்குதல் என்றால் பொருள் என்ன?

ப: இடம்விட்டுப் பெயர்தல்.

9\. கே: ஊன நடனம் என்பது என்ன?

ப: மறைக்கும் தொழில்

10\. கே: வாமபாகம் என்றால் என்ன?

ப: இடப்பக்கம்.

சூத்திரம் 1, அதிகரணம் 2, செய்யுள் 55,
(உருமேனி... ... ...வடிவுகாணே)

1\. கே: சத்காரியம் என்றால் என்ன?

ப: சத்துப்பொருளே காரியப்படும் என்பதாம், அதாவது உள்ள பொருளே தோன்றும் என்பதாம் இல்பொருள் தோன்றாது என்பதாம்.

2\. கே: தூலப்பொருள் உண்டு என்றமையால், சத்காரிய இயல்புபற்றி என்ன உண்டு என்று ஏற்படுகிறது?

ப: சூக்குமப் பொருள் உண்டு என்று ஏற்படுகிறது.

3. கே: அது எப்படி?

ப: தூலம் ஒடுங்குவதற்குக் காரணம், சூக்குமமாதலின்

4. கே: உருவம் உண்டு என்றமையால் சத்காரிய இயல்பு பற்றி என்ன உண்டு என்று ஏற்படுகிறது?

ப: அருவம் உண்டு என்று ஏற்படுகிறது.

5. கே: அது எப்படி?

ப: உருவம் ஒடுங்குதற்கு அருவம் காரணமாதலாலே.

6. கே: உருமேனி தரித்துக்கொண்டது என்றமையால் சற்காரிய இயல்புபற்றி என்ன ஏற்படுகிறது?

ப: அருவத்திருமேனி உண்டு என்று ஏற்படுகிறது.

7. கே: உருவம் அருவம் என்பதில் தூலம் எது; சூக்குமம் எது?

ப: உருவம் தூலம்; அருவம் சூக்குமம்.

8. கே: ஏன் அப்படி?

ப: உருவத்துக்குக் காரணம் அருவம்; அருவத்தின் காரியம் உருவம். தூலத்துக்குக் காரணம் சூக்குமம்; சூக்குமத்தின் காரியம் தூலம்

9. கே: அருவத்திருமேனி எப்படி உண்டு?

ப: அருவம் எனப்படும் சூக்குமப் பொருள், பின் உருவம் எனப்படும் தூல அவத்தையை யடையும்போது, அருவத்துக்கும் உருவத்துக்கும் பொதுவாகிய ஒரு அவத்தை உண்டு என்று ஏற்படுகிறது அதனுல் அரு உருவத்திருமேனியும் உண்டு என்று ஏற்படுகிறது.

10. கே: அருவம், உருவம், அருஉருவம் ஆகிய இந்த மூன்று உருவங்களையும் முதல்வன் ஏன் எடுக்க வேண்டும்.

ப: நம்முடைய பிறவிக்குக் காரணமாகிய மாயையின் உருவத்தை ஒழித்தற்காக முதல்வன் கொண்ட கருணையே காரணம்.

11. கே: முதல்வனுடைய திருமேனியெல்லாம் ஒரு நிகரன என்பதற்குப் பொருள் என்ன?

ப: எல்லாம் கருணை வடிவே.

சூத்திரம் 1, அதிகரணம் 2, செய்யுள் 56.
(அத்துவா.........எல்லாம்)

1. கே: முதல்வனுடைய வடிவம் எப்படிப்பட்டது?
   ப: கருணை வடிவம், மாயை வடிவமல்ல.

2. கே: ஆகமங்களிலே முதல்வனுக்கு ஆறு அத்துவாக்களையும் வடிவம் என்று சொல்லுகிறதே அதனால் அது மாயை வடிவந்தானே?

   ப: அல்ல. ஆறு அத்துவாக்களிலும் முதல்வன் கலந்து எல்லாமாய் நிற்றலாலே, அந்த ஆறு அத்துவாக்களும் முதல்வனுக்கு வடிவம் என்று ஆகமங்களில் சொல்லப்பட்டது. இன்னும் சடப்பொருள்களையும் சிதசுப்பொருள்களையும் செலுத்தி உடனுமாய் நிற்றலானும் ஆறு அத்துவாவும் முதல்வனுக்கு வடிவு என்று சொல்லிற்று. அது உபசாரமேயாம்.

3. கே: உபசாரம் என்றால் என்ன?

   ப: ஒன்றுக்குள்ளதை அதனோடு பொருந்திய மற்றொன்றுக்குச் சொல்வது உபசாரம். முதல்வனுடைய திரோதான சத்தியால் ஆறு அத்துவாக்களோடும் அவனுக்குளதாகிய இயைபு நோக்கி ஆறு அத்துவாக்களும் வடிவு என்றது உபசாரம். சத்தியின் இயல்பை முதல்வனுக்குச் சொன்னது உபசாரம்.

சூத்திரம் 1, அதிகரணம் 3, செய்யுள் 57 58.
(மந்திரம்.........நிற்கும்) (சுத்தமாம்.........எல்லாம்)

1. கே: உபாதானங்கள் என்றால் என்ன?
   ப: முதற்காரணங்கள்.

2. கே: உலகத்துக்கு முதற்காரணங்கள் எவை? அதாவது உபாதானங்கள் எவை?
   ப: (1) விந்து (2) மோகினி (3) மான்

3. கே: விந்து என்றால் எது?
   ப: சுத்தமாயை

4. கே: சுத்தமாயை எவைகளுக்கு உபாதானம்?

ப: (1) சிவன் (2) சத்தி (3) சாதாக்கியம் (4) ஈச்சுரம் (5) சுத்த வித்தைகளுக்கு

5. கே: மோகினி என்ருல் எது? (சுத்ததத்துவம் என்பவை இவைகளே)

ப: அசுத்தமாயை.

6. கே: அசுத்த மாயை எவைகளுக்கு உபாதானம்?

ப: (1) காலம் (2) நியதி (3) கலை (4) வித்தை (5) அராகம் (6) புருடன் என்கிற ஆறுக்கும் உபாதான மாம். (சுத்தா சுத்த தத்துவம் என்பவை இவைகளே)

7. கே: மான் என்ருல் எது?

ப: பிரகிருதி மாயை

8. கே: பிரகிருதி மாயை எதற்கு உபாதானம்?

ப: அசுத்த தத்துவம் எனப்படும் 23 தத்துவங்களுக்கும் உபாதானமாம்.

9. கே: 23 தத்துவங்கள் எவை எவை?

ப: (1) குணம் (2) புத்தி (3) ஆங்காரம் (4) மனம் (5) ஞானேந்திரியம் 5 (6) கனமேந்திரியம் 5 (7) தன்மாத்திரை 5 (8) பூதங்கள் 5 ஆக 23.

10. கே: ஆர் அதீதம் என்ருல் பொருள் என்ன?

ப: அருமையாகிய சிவசத்தி

11. கே: விந்து, மோகினி, மான் இம்மூன்றில் மேலாகியது எது?

ப: விந்து.

12. கே: பஞ்சப்பிரம மந்திரங்கள் எவை?

ப: (1) ஈசானம் (2) தத்புருஷம் (3) அகோரம் (4) வாமதேவம் (5) சத்தியோஜாதம் என 5.

13. கே: ஆறு வடிவங்கள் எவை?

ப: வன்னம், பதம், மந்திரம், தத்துவம், புவனம், கலை,

14. கே: ஆறு வடிவங்களுள் மந்திர வடிவம் ஏன் விசேட உரிமையுடையது?

ப: (1) அம் மந்திரங்களில் சிவசத்தி சேரப்பட்டு நிற்றலாலும், (2) விந்து என்கிற மாயையிலிருந்து அவை தோன்றி

யது ஆதலாலும் (3) அச் சிவசத்தி சாதகராவார் கணிக்குமாறு அவற்றைச் செலுத்தி கணித்தபின் பயன் கொடுத்தற் பொருட்டு அவற்றை வாயிலாகக்கொண்டு அதனல் போகம் வீடுகளை அளித்தலாகிய பயனும்பற்றி விசேடம் எனச் சொல்லுவர்.

சூத்திரம் 1, அதிகரணம் 3, செய்யுள் 59.
(மந்திர........ மன்றே.)

1. கே: மந்திர வடிவுகளிலும், பஞ்சப்பிரம வடிவத்தை சிறந்தெடுத்து ஓதியதற்குக் காரணம் என்ன?

ப: மற்றை மந்திரங்களுக்கெல்லாம் முற்படத் தோன்றியது அதனுலும், மூலமாயிருத்தலாலும், திரோதான சத்திக்கு முற்பட இசையச் செய்தலாலும்.

2. கே: திரோதான சத்திக்கு இசையச் செய்த உபசார வடிவு எவை?

ப: அத்துவா மூர்த்தி, மந்திரமூர்த்தி, பஞ்சப்பிரமமூர்த்திகளெல்லாம் உபசார வடிவு.

3. கே: திரோதானசத்தி என்ருல் என்ன?

ப: ஆதிசத்தி.

4. கே: முதல்வனுக்கு உபசாரத் திருமேனி எவை?

ப: மந்திரவடிவம், பஞ்சப்பிரமமந்திர வடிவம், அத்துவா வடிவம்.

சூத்திரம் 1, அதிகரணம் 3, செய்யுள் 60.
(அயன்றனை ... ...ஒரோஒன்ருமே.)

1. கே: அயனுடைய உருவம், அரியினுடைய உருவம், முதலிய உருவத்தையும், அரனுடைய உருவோடு ஒத்த உருவாக வைத்து, மந்திர நியாசம், அத்துவ நியாசம் முதலியன நூல்களிலே விதித்தலினல். அந்த அயனும், அரியும் அரனேடு ஒத்த முதல்வராகார். என்பதற்குக் காரணம் என்ன?

ப: படைப்பு முதலாகிய தொழில்களைச்செய்யும் சென்னி முதலிய சிவசத்திகளில் ஒரோஒன்று அந்த அயன், அரி, முதலானவரிடத்தில் பதிந்து நின்று அவர்களைத் தொழிலில் செலுத்துதலால் அந்த பொருத்தத்தாலே வேதாகமங்களில் உபசாரமாகச் சொல்லப்பட்டது. ஆதலால் ஒத்த உருவினர் அல்லர்.

சூத்திரம் 1, அதிகரணம் 3, செய்யுள் 61
(சத்திதான் .... வாரும்)

1. கே. அரனுடைய சத்தி எத்தனை?

ப: சத்தி ஒன்றேதான். அந்த ஒன்றே, காரியவேறுபாட்டால் பலவகைப்படும்.

2. கே: ஒரே ஒரு சத்தி பலவகைப்படுவது எப்படி?

ப: அரசனிடத்தில் உள்ள சத்தி ஒன்றே ஒன்றுதான். அந்த ஒரே சத்தி மந்திரிகளிடத்திலுமிருக்கும். படைத்தலைவர்களிடத்திலுமிருக்கும். பாடிகாவலரிடத்திலுமிருக்கும். மற்றுமுள்ளவரிடத்திலுமிருக்கும். இப்படி நின்று செய்யுங் காரிய வேறுபாட்டால், பல்வேறு வகைப்பட்டாற்போல, சிவசத்தி ஒன்றே, அயன், அரி முதலானவரிடத்தில் நின்று காரிய வேறுபாட்டால் செநநி முதலியவாய் பலதிறப்படும்.

3. கே: மந்திரி, படைத்தலைவர், பாடிகாவலர் முதலானவர்கள் செய்யுங் காரியங்களுக்கு, வேறு வேறு சத்திகள் உண்டு, அரசனுடைய சத்தியல்ல, என்றால் குற்றம் என்ன?

ப: மந்திரி, படைத்தலைவர், பாடிகாவலர்கள் எவை எவை செய்தாலும், அரசன் நினைத்தபடியே முடியுமேயன்றி அவரவர் நினைத்தபடி முடியாது. அதுபோலவே போகங்களும், வீடுகளும் அரன் நினைத்தபடியே முடியுமேயன்றி, காரியங்களைச் செய்கிற அயன், அரி நினைத்தவண்ணம் முடியாது. என்பதனால் அரனுடைய சத்தியொன்றே என்று அறியப்படும்.

4. கே: பாடிகாவலர் என்றால் யார்?

ப: ஊர் காப்பாளர்.

5. கே: அயன், அரி, நினைத்தபடி முடியாமல், அரன் நினைத்தபடியே முடியும் என்பதற்கு உதாரணம் காட்டு?

ப: அரனை நீக்கிவிட்டு தக்கன் செய்த வேள்வி தக்கனும் அயனும், அரியும் எண்ணியபடி முடிந்ததா இல்லையே. அது வேயன்றி மார்க்கண்டனுக்குக் கொடுத்த வாழ்நாள், என்றும் பதினாறுனதும் அறிவாயாக. அதுவுமன்றி திருப்பால் கடலில் உண்டான விஷத்தை அரன் சாப்பிட்டு மற்றவர்களைக் காப்பாற்றியதுமே உதாரணமாகும்.

சூத்திரம் 1, அதிகரணம் 3, செய்யுள் 62.

(சத்தி .... எல்லாம்.)

1. கே: சிவசத்தியின் சொரூபம் எது?

ப: உயிர்களுக்கு அநுக்கிரகம்மாத்திரம் குறித்துப் பொது வகையால் அறிந்தும், அறிவித்தும் நிற்பதாகிய தடையிலா ஞானம் ஒன்றே சிவசத்தியின் சொரூபம்.

2. கே: அந்த சிவசத்தியாகிய ஞானத்துக்கு வேறு பெயர் எது?

ப: பராசத்தி.

3. கே: அந்த பராசத்தி இன்னும் எப்படி நிற்கும்?

ப: திரோதான சத்தியாக நிற்கும்.

4. கே: ஏன் திரோதான சத்தியாக நிற்கும்?

ப: உயிர்களுக்கு மலம் பக்குவமாதற்காக.

5. கே: மலம் பக்குவமாதற்காக அந்த சத்தி என்ன செய்ய வேண்டும்?

ப: ஐந்தொழில் செய்ய வேண்டும்.

6. கே: ஐந்தொழில்கள் எவை?

ப: படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்.

7. கே: அந்த பராசத்தி இன்னும் எத்தனை வகைப்படும்?

ப: இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என மூத்திறப் படும்.

8. கே: இச்சா சத்தியும், கிரியா சத்தியும் எதிலிருந்து தோன்றும்?
ப: ஞான சத்தியிலிருந்து தோன்றும்.

9. கே: தடைசெய்யும் ஞானம் எது?
ப: திரோதான சத்தி.

10. கே: தடைசெய்யா ஞானம் எது?
ப: ஞானசத்தி.

11. கே: கிரியை என்றால் என்ன?
ப: வியாபாரம்.

சூத்திரம் 1. அதிகரணம் 3, செய்யுள் 63.
(ஒன்றதாய்........எல்லாம்)

1. கே: பராசத்தியாவது யாது?
ப: தடையிலா ஞானமாய் பொதுமையில் ஒன்றாய் இருப்பது.

2. கே: இச்சாசத்தி யென்றால் என்ன?
ப: இச்சா சத்தியானது முதல்வன் உயிர்களுக்கு மலத்தை நீக்கி சிவத்தை அளித்தற்கு உளதாகிய கருணையாம்

3. கே: பராசத்தி எத்தனை வகைப்படும் ஏன்?
ப: மூன்று வகைப்படும், வியாபார பேதத்தால்.

4. கே: ஞானசத்தி யென்பது என்ன?
ப: கருணையைச் செய்வதற்கான உபாயங்களை யெல்லாம் முதல்வன் அறிவதாம்.

5. கே: கிரியாசத்தி யென்றால் என்ன?
ப: கிரியாசத்தியானது அருளின் வேறல்லாதது தான். ஆனால் அதனால் அறிந்தபோதே, கருணையும் அதனைச் செய்யும் உபாயங்களையும் அப்படியே எண்ணிச் செய்வதாம்.

சூத்திரம் 1, அதிகரணம் 3, செய்யுள் 64.
(சீவனும் ....பண்பிற்றாகும்)

1. கே: முதல்வனுக்கு, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியா சத்தி இம்மூன்றும் உண்டு என்பதுபோல உயிர்களுக்கும் இம்மூன்றும் உண்டோ.

ப: உண்டு.

2. கே: அப்படியானல் பசுவானது பதியை ஒக்குமோ?

ப: ஒப்பாகாது.

3. கே: ஏன் ஒப்பாகாது?

ப: உயிர்களுக்குரிய இச்சை, ஞானம், கிரியை மூன்றும் கேவலத்தில் மூலமலத்தால் மறைபடுந் தன்மையை யுடையன. சகலத்தில் கன்மத்துக்குத் தக்கவாறு ஏகதேசப்பட்டு முதல்வன் பயனளிக்க அநுபவிக்குந் தன்மையையும் உடையன. இன்னும் அக்கன்மத்தால் வரக்கூடிய போகப் பயன் போல சுத்தத்தில் அதனின் வேருகிய முத்திப்பயனை முதல்வன் கொடுப்பக் கொள்ளும் உரிமையும் உடையன· முதல்வனுடைய இச்சை, ஞானம், கிரியைகளுக்கு இத்தன்மை கிடையாது. ஆதலால் இரண்டும் ஒப்பாகாது.

சூத்திரம் 1, அதிகரணம் 3, செய்யுள் 65.
(ஞானமே ...... ஞமே)

1. கே: வியாபரிக்கும் என்ருல் பொருள் என்ன?

ப: வியாபாரமாம். அ தா வ து கருமமாம், அதாவது, தொழிலாம்.

2. கே: இச்சாசத்தி எப்படி வியாபரிக்கும்?

ப: ஏற்றக்குறைவு இல்லாமல் எப்போதும் ஒரே அளவாக வியாபரிக்கும்.

3. கே: ஞானந்தனியாய் வியாபரிக்கும்போது அதற்குப் பெயரென்ன.

ப: சிவன் என்று பெயர்.

4. கே: ஞானம் கிரியையேயாய் வியாபரிக்கும்போது அதற்குப் பெயர் என்ன?

ப: சத்தியென்று பெயர்

5. கே: ஞானமும், கிரியையும் ஒத்து சமமாய் வியாபரிக்கும் போது பெயர் என்ன?

ப: சதாசிவம் என்று பெயர்.

6. கே: ஞானம் குறைந்து கிரியை ஏறி வியாபரிக்கும்போது பெயர் என்ன?

ப. மகேசுரன் என்று பெயர்?

7. கே: கிரியை குறைந்து ஞானம் ஏறி விபாபரிக்கும்போது பெயர் என்ன?

ப: சுத்தவித்தை என்று பெயர்.

8. கே: சிவன், சத்தி, சதாசிவம், மகேசுரன், சுத்தவித்தை என்கிற ஐந்து தெய்வங்களும் எதிலடங்கும்?

ப: (1) இலயம் (2) போகம் (3) அதிகாரம் என்கிற மூன்று அவத்தையிலடங்கும்.

9. கே: அவத்தை என்ருல் பொருள் என்ன?

ப: நிலே.

10. கே: இலய அவத்தை என்ருல் பொருள் என்ன?

ப: ஒடுக்கும் நிலே.

11. கே: போக அவத்தை என்ருல் பொருள் என்ன?

ப: காக்கும் நிலே.

12. கே: அதிகார அவத்தை என்ருல் பொருள் என்ன?

ப: படைக்கும் நிலே.

13. கே: இந்த ஐந்து பெயர்களேயும் மூன்று அவத்தைகளேயும் உடையவன் யார்?

ப: மகா உருத்திரன் ஒருவனே (அதாவது) சுத்த சிவன் ஒருவனே இந்த எல்லாப் பொருள்களேயும் உடையவன்.

14. கே: அதிகரணம் என்பதற்குப் பொருள் என்ன?

ப: ஒரு பிரிவுள்ள இடம், அல்லது சூரணி, ஆதாரம் என்றும் பெயருண்டு.

15. கே: இந்த மூன்று அவத்தைகளுக்கும் ஆதாரம் எவை?

ப: சிவம், சத்தி, சதாசிவம், மகேசுரன், சுத்தவித்தை என்கிற ஐந்து தத்துவங்களுமேயாம். முன்னே சொன்ன சிவம், சத்தி, சதாசிவம், மகேசுரன், சுத்தவித்தை என்கிற ஐந்தும் தெய்வமாம்.

சூத்திரம் 1. அதிகரணம் 3. செய்யுள் 66,
(வித்தையோ.........கருமத்தாலே)

1. கே: அதிட்டானம் என்பதற்குப் பொருள் என்ன?

ப: வடிவம் என்பதாம். (வடிவம் என்பது உபசாரம்) நிலைக்களம்.

2. கே: உபசாரம் என்ருல் பொருள் என்ன?

ப: ஒரு பொருளைச் சொல்லுவதற்கு அப்பொருளோடு கூடிய வேருெரு பொருளைக் கூறுவதாம்.

3. கே: சிவனுக்கு சுதந்திர வடிவம் எது?

ப: சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்கிற ஐந்து தத்துவங்களுமாம்.

4. கே ஏன் ஐந்து வகைப்பட வேண்டும்?

ப: அந்த அந்த வியாபாரங்களுக்கு இடமாம்.

5. கே: இந்த ஐந்தில் முன்னே உண்டானது எது? பின்னே உண்டானவை எவை?

ப: முன்பின் சொல்ல முடியாது.

6. கே: முன்பின் சொல்ல முடியாதென்ருல், வித்தையோ டீசர் சாதாக்கியம் சத்திசிவம் என்று ஏன் முன் பின்ருகச் சொன்னுர்.

ப: முன் பின்ருக நிகழும் ஞானசத்தி கிரியாசத்தியின் வியாபார பேதத்தால் கூறினுர். இவைகளுக்குப் பின்னே தான் காலம் தோன்றிற்று. அதனுல் இவை உண்டாவதற்கு காலதத்துவம் காரணமாக இல்லை.

7. கே: வியாபாரபேதம் பற்றி எப்படி முன்பின் தோன்றிற்று?

ப: முன்னே சிவம் பின் சத்தி அதன்பின் சதாசிவம் அதன் பின் மகேசுரம் அதன் பின் சுத்தவித்தை தோன்றிற்று.

8. கே: காலவரையறையைக் கடந்ததற்கு என்ன பெயர்?

ப: நித்திய அதிட்டானம் என்று பெயர்.

9. கே: இவ்வைந்தும் சிவனுக்கு ஏன் சுதந்திர வடிவமாயிற்று?

ப: சிவன்தானே அதிட்டித்து நின்று செலுத்துதலினுல் சுதந்திரவடிவம். அநந்ததேவர் முதலியோர் வாயிலாகநின்று அதிட்டிக்கப்படும் மாயேயம் போலல்ல.

10. கே: இவ்வைந்துக்கும் முன் பிற்பாடு கூறினது ஏன் குற்றமாகாது?

ப: கலைபித்திரியெனப் பெயர்பெற்று காலத்தானமாய் நிற்கும் சத்தியே காரணம். ஆதலால்

சூத்திரம் 1, அதிகரணம் 3, செய்யுள் 67.
(ஒருவனே............நிற்கும்.)

1. கே: சுத்தசிவன் ஒருவனே, இலயசிவன், போகசிவன், அதிகாரசிவன் என்று தம்முள்ளே மூன்றவத்தை எய்தினுன் என்ருல் ஏன் விகாரம் அடைந்தான் என்று சொல்லக்கூடாது.

ப: யாராவது ஒருவனே இராவணன் என்றும், நளன் என்றும், ராமன் என்றும், கூத்துக்குரிய பலவேடங்கட்டி நடித்தாலும் அவன் தன் தன்மையில் சிறிதும் வேறுபடமாட்டான் அதுபோலவாம்.

2. கே: அந்த சுத்தசிவன் ஏன் பேதவடிவங் கொள்ள வேண்டும்?

ப: ஐந்தொழில் செய்ய.

3. கே: அப்படி சுத்தசிவன் கொள்ளும் வடிவெல்லாம் சத்திக்கு வேறல்ல என்பதற்கு உதாரணம் எது?

ப: மரமும் வைரமும் வேறல்ல ஒன்றே ஆனுல்போல, குண குணித் தன்மையே உதாரணம்.

4. கே: குணகுணித் தன்மை என்பது எப்படி?

ப: குணம் என்பது தன்மை, குணி என்பது அந்தத் தன்மையை உடையது.

5. கே: அப்படியானுல் குணம் எது? குணி எது?

ப: சிவனுடைய சத்தியே குணம், சிவன் குணி.

6. கே: சத்தியென்ருல் பொருள் என்ன?

ப: சத்தியால் காணப்படுவது சத்தி.

சூத்திரம் 1, அதிகரணம் 3, செய்யுள் 68.
(பொன்மை.........முளையானன்றே)

1. கே: படிகம் என்ருல் என்ன?

ப: கண்ணுடி.

2. கே: வண்ணம் என்றால் என்ன?

ப: நிறம்.

3. கே: பளிங்கு என்றால் என்ன?

ப: கண்ணாடி.

4. கே: பளிங்கின் செய்கை என்ன?

ப: பளிங்கானது, பொன்னிறம், நீலநிறம் முதலிய பல நிறங்களையும் பற்றுமலே இருக்கும். ஆனால், பளிங்கினுடைய நிறமே அந்த நிறங்களைப் பற்றும். பளிங்கு அப்போது அந்தந்த நிறமாய் வேற்றுமையின்றி நிற்கும்.

5. கே: முதல்வனுடைய செய்கை எப்படிப்பட்டது?

ப: படிகத்தின் செய்கையைப் போன்றதே. அதாவது முதல்வன் பேதப்படுகிறதில்லை. முதல்வன் தனது சத்தியில் காணப்படும் பேதங்களெல்லாம் தானாய்த் தோன்றுவான். அப்போது வேற்றுமையின்றி படிகம் போல நிற்பன்.

6. கே: படிகமும் முதல்வனும் எப்படி ஒப்பு?

ப: (1) படிகம் போன்றவன் முதல்வன் (2) படிகத்தினுடைய நிறமே சத்தி, (3) படிகத்தின் நிறத்தில் பல பல வன்னங்கள் காணப்படும். அதுபோல முதல்வன் சத்தியில் பல பல பேதங்கள் காணப்படும். (4) படிகம் நிறத்தோடு வேற்றுமையின்றி நிற்றல்போல, முதல்வன் சத்தியின் பேதங்களில் வேற்றுமையின்றி நிற்பான்.

சூத்திரம் 1, அதிகரணம் 3, செய்யுள் 69.
(சத்தியுஞ்.........ஓரார்)

1. கே: இறைவன் தன்னுள்ளே சத்தியுஞ் சிவமுமாய இரு வகைப்பட்ட குணங்கள் வைத்ததற்குக் காரணம் என்ன?

ப: பல்வேறு வகைப்பட்ட உயிர் வடிவங்களெல்லாம் குறியிலும் குணத்திலும் ஆண் பெண் என இருவேறு வகையுள் அடங்கி தம்முள் கூடிக் களித்து வாழும் பொருட்டாம்.

2. கே: இப்படி உயிர் வடிவங்கள் எல்லாம் ஆணும் பெண்ணுமாய் வாழும் வாழ்வெல்லாம் எதனால் வந்த வாழ்வு.

ப: சிவசத்தி மணந்ததனுல் வந்த வாழ்வு.

3. கே: இலிங்காங்கம், பகாங்கம் என்ருல் என்ன?

ப: இலிங்காங்கம் ஆண்குறி, பகாங்கம் பெண்குறி.

4. கே: அச்சு என்ருல் என்ன?

ப: உடம்பு.

5. கே: அச்செல்லாம் எப்படி இருக்கிறது?

ப: இலிங்காங்கம் பகாங்கமாயிருக்கிறது.

6. கே: பீட இலிங்க வடிவம் எப்படி இருக்கிறது?

ப: சிவமும் சத்தியும் கொண்டருளிய வடிவமாக இருக்கிறது.

7. கே: கரிகரம், பணிபணம் என்பதற்குப் பொருள் என்ன?

ப: கரத்தை யுடையது கரி, பணத்தையுடைபது பணி.

8. கே: ஆணுக்குரிய குணம் எது?

ப: ஆளுங்குணம் அதாவது ஆண்மைக் குணம்.

9. கே: பெண்ணுக்குரிய குணம் எது?

ப: அடக்கம் அதாவது அமைதிக்குணம்.

10. கே: இதுவரையில் கூறிய வாழ்க்கைகள் எவை எவை?

ப: (1) உலகமெல்லாம் அவயவப் பகுப்பு உடையன (2) முத்தொழிலே யுடையன. (3) ஒரு கர்த்தாவை யுடையன (4) சர்வ சங்காரமூர்த்தியே கர்த்தா. சர்வ சங்கார மூர்த்தியிடமிருந்தே உலகம் தோன்றி, ஒடுங்கும் என்பனவாம்.

சூத்திரம் 1, அதிகரணம் 3, செய்யுள் 70
(சிவனரு.........இயல்பினுலே)

1. கே: தடத்த லக்கணம் என்ருல் என்ன?

ப: பொது அடையாளங்கள்.

2. கே: சொருப லக்கணம் என்ருல் என்ன?

ப: சிறப்பு அடையாளங்கள்.

3. கே: பொது அடையாளங்கள் என்ருல் என்ன?

ப: பல பொருள்களுக்குள்ள அடையாளங்கள்.

4. கே: சிறப்பு அடையாளங்கள் என்ருல் என்ன?

ப: ஒரு பொருளுக்கே உரிய அடையாளங்கள்.

5, கே: சிவனுக்குரிய தடத்த இலக்கணங்கள் எவை?

ப: (1) சிவபெருமான் அருவும் உருவும் இல்லாதவன் (2) சித்தும் அசித்தும் அல்லாதவன் (3) சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்கிற ஐந்து தொழில்களில் ஒன்றும் செய்வானும் அல்லன் (4) தவம் முதலியவற்றிற்குரிய போகவடிவம் யோகவடிவம் கொள்வானுமல்லன் ஆதலால் அந்த முதல்வன் தடத்த லக்கணமாகிய இவற்றைப் பொருந்தி நின்றானாயினும் அவற்றைச் சிறிதும் பொருந்தாத சொருப லக்கணத்தையுடையான் என்பதாம்.

முதல் சூத்திரம் முடிந்தது.

இரண்டாம் சூத்திரம்.

1. கே: அவாய் நிலையென்றால் என்ன?

ப: ஒரு சொல்தன்னை முடிக்க வேறொரு சொல்லை ஆசைப்பட்டு நிற்பது.

2. கே: அவாய் நிலைக்கு ஒரு உதாரணஞ் சொல்லிக்காட்டு.

ப: நான் எழுந்ததும் என்று சொல்லிவிட்டு ஒன்றுஞ் சொல்லாமலிருந்தால் என்ன எழுந்ததும் என்றாயே மறுபடி ஒன்றுஞ் சொல்லவில்லையே என்று கேட்பீர்களல்லவா? அப்போது எழுந்ததும் என்ற சொல்தன்னை முடிக்கும் சொல்லை அவாவிநிற்கிறதல்லவா? அதுதான் அவாய்நிலை.

3. கே: புனர் உற்பவம் என்றால் என்ன?

ப: மறு பிறப்பு.

4. கே: நிமித்த காரணன் என்றால் என்ன?

ப: ஒரு காரியத்தைச் செய்பவன்.

5. கே: உலகத்துக்கு நிமித்த காரணன் யார்?

ப: பதி.

6. கே: துணைக்காரணம் என்றால் என்ன?

ப: காரியம் முடியும் வரை உதவி செய்வது.

7. கே: உலகத்துக்குத் துணைக் காரணங்கள் எவை?

ப: சத்தி துணைக்காரணம், சத்தியின் வழிவந்த வினையும் துணைக்காரணம்.

8. கே: முதற்காரணம் என்றால் என்ன?

ப: காரியம் செய்வதற்கு வேண்டிய முக்கியமான பொருள்.

9. கே: உலகத்துக்கு முதற்காரணம் எது?

ப: மாயை.

10. கே: முதற் சூத்திரத்தில் என்ன கூறினார்?

ப: நிமித்த காரணமாகிய பதி உண்டு என்பதற்கு அளவை கூறினார்.

11. கே: இரண்டாஞ் சூத்திரத்தில் என்ன கூறுகிறார்?

ப: முதற்காரணம், துணைக்காரணங்கள் உண்டு என்பதற்கு அளவை இன்னும் இந்த இரண்டு காரணங்களாலும் உலகம் காரியப்படுமாறும் கூறுகிறார்.

சூத்திரம் 2, செய்யுள் 1.
(உலகெலாமாகி.........எங்கும்)

1. கே: சிவபிரான் புநர் உற்பவம் செய்யுங்காலத்தில் எப்படி நிற்பான்?

ப: சத்திரூபமாகியும் நிற்பான், பதிரூபமாகியும் நிற்பான்.

2. கே: சத்தி ரூபமாக எப்படி நிற்பான்?

ப: உயிர்களிடத்திலே கலந்தும் நிற்பான், உயிர்களுக்கு வேறுமாகியும் நிற்பான். உயிர்களோடு உடனாய்க் கூடவும் இருப்பான்.

3. கே: உயிர்களிலே கலந்து நிற்பது எப்படி?

ப: உடலுக்குள் உயிர் வேறாயில்லாமல் உடலெங்கும் கலந்து இருப்பது போல, உயிர்கள்வேறு, தான்வேறு, என்று இல்லாமல் உயிர்களிலெல்லாம் கலந்து நிற்பான்.

4. கே: உயிர்களுக்கு வேறாய் எப்படி நிற்பான்?

ப: சூரியனுடைய ஒளியால் கண் பார்க்கிறது. பார்த்தாலும் சூரியன் வேறு கண் வேறாய் பிரிந்து இருப்பது போல, கடவுளாலே உயிர் அறிந்தாலும் உயிர்வேறு, கடவுள் வேறாய் நிற்பன்.

5. கே: கடவுள் உடனுமாய் எப்படி நிற்பன்?

ப: கண் ஒருபொருளைப் பார்க்கும்போது, உயிரினுடைய அறிவு அந்த கண்ணொளியோடு உடனாக இருக்கக் காண்கிறது. (அதுபோல) முதல்வன் உயிருக்கு உயிராகி உடனாய் நிற்பன்.

6. கே: பதி ரூபமாய் எப்படி நிற்பன்?

ப: சிவபிரான் தன்னுடைய ஆணையால் உண்டாகும், நல்வினை, தீவினைகளுக்குத் தக்கவாறு, உயிர்கள் ஐந்தொழி விற்பட்டுச் செல்லும்போது அந்த ஐந்தொழில்களை நடத்துவதாகிய பதி ரூபமாய் நிற்பன்.

7. கே: தாதான்மியம் என்றால் என்ன?

ப: பிரிவு இல்லாமல் இருப்பது (அதாவது) நீங்காமல் இருப்பது (தத்+அன்மியம்) தாதான்மியம்.

8. கே: அத்துவிதம் என்றால் என்ன?

ப: பிரிக்க முடியாதது.

9. கே: சொயம்பிரகாசம் என்றால் என்ன?

ப: சொந்தமாயிருப்பது, அதாவது தன்னுண்மையில் நிற்பது. அதாவது ஒன்றிலும் தோயாமல் நிற்பது.

10. கே: அநாதி, முத்த, சித்துரு என்றால் என்ன?

ப: பிறப்பு, இறப்பு இல்லாமல் இருப்பவன். எல்லா ஆசைகளையும் விட்டவன், அறிவுப் பொருளாயிருப்பவன் பதி என்பதாம்.

11. கே: சத்தி ரூபமாகியும், பதி ரூபமாகியும் நிற்குஞ் சிவபிரான் ஐந்தொழில் செய்யுங்கால் எப்படி நிற்பான்?

ப: ஐந்தொழிலின் தன்மை தனக்குண்டாகாதபடி, அத்தன்மைகளுக்கு வேறாயும் அவற்றோடு கலந்தும் உடனாகியும் நிற்பன்.

12. கே: சிவபிரான் என்ன என்ன பெயர்பெற்று நிற்பன்?

ப: சிவம் எனவும், சத்தி யெனவும், பதி யெனவும் பெயர் பெற்று நிற்பன்.

13. கே: சிவபிரான், எப்பொழுது சிவன் என்று பெயர் பெறுவான்?

ப: ஒன்றிலும் தோயாமல் தானே சுயம்பிரகாசமாய் நிற்கும் தன்னுண்மையில் சிவம் என நிற்பன்.

14. கே: சிவபிரான் எப்பொழுது சத்தியென நிற்பன்?

ப: உலகெலாமாகியும், வேருகியும், உடனுமாயும் உயிர்களின் வழி நிற்கும்போது.

15. கே: சிவபிரான் எப்பொழுது பதியென்று பெயர் பெறுவான்?

ப: தாதான்மியத்தால் இருதிறப்பட்டு, பின் ஐந்தொழில் செய்யுங்கால், பதியெனப் பெயர் பெற்று நிற்பன்.

சூத்திரம் 2, அதிகரணம் 1, செய்யுள் 2,
(ஒன்றென.........சேர்ந்தே)

1. கே: வேதத்தில் ஆன்மா ஒன்று என்று சொல்லியிருக்க, உயிர்களோடு கலந்தும், உயிர்களோடு உடனுகியும், நிற்பன் என்று உயிர்களைப் பன்மையாகச் சொன்ன காரணம் என்ன?

ப: வேதத்தில் ஆன்மா ஒன்று என்று சொன்னதற்குப் பொருள், பரமான்மா ஒன்று என்றதேயாம். அதனுல்தான் இதற்குமுன் செய்யுளில் வேருய் என்றும், ஒன்ருகிய அகரம் போல உடனுமாய் என்றும் சொன்னுர்.

2. கே: ஒன்ருகிய அகரம்போல உடனுமாய் என்பது எப்படி?

ப: வாய்திறக்காமல் எந்த எழுத்துஞ் சொல்ல முடியாது, வாய் திறந்து ஏதாவதொரு எழுத்தைச் சொல்ல ஆரம்பிக்கும்போதே அகர ஓசையே முன்னே வருவதால் எல்லா எழுத்துக்களிலும் அகரம் உடனுமாய் நிற்கிறது.

சூத்திரம் 2, அதிகரணம் 1, செய்யுள் 3.
(உருவொடு... ... ... நின்றே)

1. கே: தநு என்ருல் என்ன?

ப: உடம்பு.

2. கே: அபேதம் என்ருல் என்ன?

ப: வேறுவேருய் இல்லாமை.

3. கே: அபேதம் என்பதை எப்படி பிரிக்கலாம்?
ப: ந+பேதம்=அபேதம்.

4. கே: பேதம் என்ருல் என்ன?
ப: வேருய் என்பதாம்.

5. கே: பேதாபேதம் என்ருல் என்ன?
ப: வேருகியும், வேருகாமலும் என்பதாம்.

6. கே: முதல்வன் உயிர்களில் எப்படி பொருந்தி வாழ்வன்?
ப: முதல்வன் உயிர்களில், அபேதமாய்க் கலந்து நிற்பன் அப்படி நின்ருலும் முதல்வன் முதல்வனேயாம், உயிர் உயிரேயாம், முதல்வன் உயிராகமாட்டான். உயிர் முதல்வனுகாது. அப்படியாயினும் உயிர் அந்த உடலில் வேருகியும் உடம்பாகியும் நிற்றல் காணப்படும். அதுபோல முதல்வன் உயிர்களில் வேருகியும் உலகெலாமாகி நிற்பன்.

7. கே: உயிர் உடலில் எப்படி மருவியிருக்கிறது?
ப: உயிர், உடம்பு, ஐம்பொறி முதலியவைகளோடு கூடி உடம்பாக நின்றபோதும் உயிர் உயிரே, உடம்பு உடம்பே, உயிர் உடம்பாகாது, உடல் உயிராகமாட்டாது. அவ்வாருயினும் உயிர் அந்த உடம்பில் வேருகியும் உடனுமாய் நிற்றல் காணப்படும்.

சூத்திரம்2, அதிகரணம் 2, செய்யுள் 4,
(இருவினை ... ... கண்ணே)

1. கே: தரணி என்ருல் யார்?
ப: மருத்துவன், அதாவது வயித்தியன்.

2. கே: தரணி என்பது மருத்துவனுக்கு எப்படி பெயராயிற்று?
ப: தரணம் என்ருல், கடத்தல் என்பது பொருள், இந்த இடத்தில் நோயைக் கடப்பித்தலால் மருத்துவனுக்குப் பெயராயிற்று.

3. கே: உயிர்களுக்கு இன்பத்துன்ப அநுபவம் எப்படி வந்தது?
ப: முற்பிறவிகளில் செய்யப்பட்டுக் கிடந்த நல்வினை தீவினைகளுக்கு ஈடாக வந்தது.

4. கே: அடுத்த பிறவியில் எப்படி வினையேறும்?

ப: இப்பிறவியில் அநுபவிக்கப்படும் இன்பத் துன்பங்களாலே செய்யும் நல்வினை தீவினைகள் ஏறுதலால் மறு பிறவிக்கும் வினையேறும்.

5. கே: வினை எவை? பயன் எவை?

ப: நல்வினை தீவினைகள் வினையாம், இன்பத்துன்பங்களாகிய துறக்கமும் நரகமும் பயனும்.

6. கே: முற்பிறவிகளில் செய்த நல்வினை தீவினைகளாலாகிய இன்பத்துன்பங்கள் எங்கே நிலைபெற்றிருக்கும்?

ப: உடம்பிலே நிலைபெற்றிருக்கும்.

7 கே: அந்த வினைப்பயன்களைத் தருபவன் யார்?

ப: முதல்வன்

8. கே: யாரைப்போலத் தருவான்?

ப: வேந்தனையும் மருத்துவனையும் போல.

9. கே: முதல்வன் வினைப்பயன்களை எப்படி கூட்டுவன்?

ப: முதல்வன் தன்னுடைய ஆணையால் கூட்டுவன்.

10. கே: அந்த நல்வினையும், நல்வினையின் பயனாகிய இன்பமும் தீவினையும், தீவினையின்பயனாகிய துன்பமும் ஏன் தானேவந்து கூடாது?

ப: நல்வினையும் சடம், தீவினையும் சடம், இன்பமும் சடம், துன்பமும் சடம், ஆதலால் வந்து கூடாது.

11. கே: வேந்தனும் மருத்துவனும் முதல்வனுக்கு ஒப்பு எப்படி?

ப: வேந்தன் குடிகள் செய்கிற நன்மைக்குத்தக்கவாறு இன்பமுட்டி தீவினைக்குத்தக்கவாறு துன்பப்படுத்துவான். மருத்துவன் நோய்க்குத்தக்கவாறு, சுட்டு, அறுத்துத் துன்பப்படுத்தியும், தேன், நெய் கொடுத்து இன்பப்படுத்துவான் அதுபோல

சூத்திரம். 2, அதிகரணம். 2, செய்யுள். 5-6,
(இருவினை.........அன்றே) (தன்னியல்.........திடாவே)

1. கே: இன்பத் துன்பங்களின் தன்மையை, இயல்பு என்றால் என்ன குற்றம்?

ப: இயல்புக்கு ஒரே தன்மையுள்ளது, தம்முள் மாறு பட்ட இரண்டு தன்மை ஒரு பொருளுக்கு இராது.

2. கே: ஒரு பொருளுக்கு தம்முள் மாறுபட்ட இரண்டு தன்மை எப்போது உண்டாகும்?

ப: காரணமிருந்தால் உண்டாம்.

3. கே: தண்ணீருக்கு வாசமும் வெப்பமும் எதனால் உண் டாகிறது?

ப: இயற்கையால் இல்லை, செயற்கையால் உண்டா கிறது.

4. கே: அது எப்படி?

ப: வாசனை மலர் சேரும்போது வாசமும், நெருப்பு சேரும்போது வெப்பமும் உண்டாகிறது.

5. கே: தண்ணீருக்கு இயற்கையான தன்மை எது?

ப: குளிர்ச்சி (அதாவது) தட்பம், தண் = குளிர்ச்சி, நீர் = ஜலம்

6. கே: உயிர்களுக்கு இன்பத்துன்பங்கள் உண்டாவதற்குக் காரணம் என்ன?

ப: உயிர்கள் முற்பிறவிகளில் செய்த நல்வினை தீவினை யே காரணம்.

7. கே: இன்ப துன்ப நுகர்ச்சி எதற்கு உண்டு, எதற்கு இல்லை?

ப: சித்தாகிய உயிருக்கு உண்டு. சடமாகிய உயிரில் லாத பொருள்களுக்கில்லை.

8. கே: சஞ்சிதவினை யென்றால் என்ன?

ப: உயிர்கள் முன்னே செய்த வினைகள்.

9. கே: உயிர்களுக்கு இன்ப துன்பங்கள் உண்டாவதற்குக் காரணம் எது?

ப: முற்பிறவியில் செய்த சஞ்சித வினையே காரணம்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 7-8.

(இம்மையின் ....மிங்கே) (இருவினைக்.........துள்ளே)

1. கே: இப்பிறவியிலே இன்பம் அனுபவிப்பவர் யார்?

ப: முயற்சியுடையவர்.

2. கே: இப்பிறவியில் துன்பம் அநுபவிப்பவர் யார்?
   ப: முயற்சியில்லாதவர்.

3. கே: இப்பிறவியிலே முயற்சியுடையவர் இன்பத்தை அடைவார், முயற்சியில்லாதவர் துன்பத்தை அநுபவிப்பார் என்றிருக்க, இன்ப துன்பத்துக்குக் காரணம் முன்செய்த நல்வினை தீவினை யென்பது எப்படி?

ப: காரணங்கொள்ளாவிட்டால், இப்பிறவியிலே ஒருவன் யாதொரு முயற்சியும் செய்யாமலிருக்கும்போது அவனுக்கு பொருள் முதலியவை வந்துசேருகிறது. முயற்சி செய்கிறவனுக்கு ஒன்றுங்கூடி வருகிறதில்லை. அதனோடு சோம்பலும் உண்டாகிறதல்லவா? இப்படி மாறுபடுகிறதே. அப்படி மாறுபடக் காரணம் என்ன? அதுவே சஞ்சித வினையாம்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 9.
(பேறிழவு... ... ...மென்றே)

1. கே. இப்போது நாம் அநுபவிக்கிற இன்பதுன்பங்களுக்குக் காரணம் எது?

ப: இன்பத்துக்குக்காரணம் செல்வம், துன்பத்துக்குக் காரணம் வறுமை.

2. கே: ஒருவருக்த உயர்வு இழிவு எதனால் வருகிறது?
   ப: செல்வம் வறுமையால் வருகிறது.

3. கே: முன்னமேயே கருவினுள் அமைந்து கிடந்தவை? எவை

ப; (1) செல்வமும் வறுமையும் (2) உயர்வும் இழிவும் (3) இன்பமும் துன்பமும்.

4. கே: செல்வம வறுமை (2) உயர்வு இழிவு, இன்ப துன்பம் இவை கருவினுள் எப்படி கிடந்தன.

ப: இந்த ஆறுக்கும் விதையாய் நிலைபெற்றுக் கிடந்தன. சூக்குமமாய் அமைந்து கிடந்தன.

5. கே. அவை ஆறும் எப்போது தூலமாய் வரும்?
   ப: இப்போது செய்கிற முயற்சியால் தூலமாய் வரும்.

6. கே: அந்த முயற்சி எப்படிப்பட்டது?

ப: அந்த ஆறையும் அநுபவிக்கத் துணைக்காரணமாயுள்ளது. அதுவுமல்லாமல் வேறோர் உடம்பில் உண்டாகிற அந்த அறுவகைக்கும் வித்தாய் நிலைபெறுவதாம்,

7. கே: பிணி என்றால் என்ன?

ப: துன்மம் (வியாதி அல்ல).

8. கே: அந்த ஆறும் எப்படி வித்தாய் வரும்?

ப: முற்பிறவியில் நிகழ்ந்த முயற்சியே இப்பிறவியில் வரும் அந்த ஆறுக்கும் விதையாய் காரணமானாற்போல இப்பொழுது செய்யும் முயற்சி மறுபிறவிக்கும் வித்தாம்.

9. கே: மூப்பு என்றால் என்ன?

ப: உயர்ச்சியாம் (கிழமல்ல).

10. கே: சாக்காடு என்றால் என்ன?

ப: இழிவு (மரணமல்ல.

11. கே: இந்தச் செய்யுளில் முன்பு செய்த கன்மம் இனிச் செய்கன்மம் என்றது எதை?

ப: முயற்சியை.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 10.
(உடற்செயல்.........போல்)

1. கே: கன்மம் எப்படி உண்டாயிற்று?

ப: இந்த உடம்பின் செய்கையால்.

2. கே: இந்த உடம்பு எப்படி உண்டாயிற்று?

ப: முன் உடம்பால் செய்த கன்மங்காரணமாக.

3. கே: கன்மத்தால் உடம்பும், உடம்பால் கன்மமும் உண்டாம் என்பதற்கு உதாரணந்தருக.

ப: வித்தின் கண்மாமும், மரத்தின் கண் வித்தும் உண்டாதல் போல.

4. கே: வித்து முன்னே உண்டாயிற்று? மரம் முன்னே உண்டாயிற்று?

ப: இவற்றுள் முற்பிற்பாடு சொல்ல முடியாது.

5. கே: முற்பிற்பாடு சொல்லமுடியாத பொருள்களை எப்படிப் பட்டதென்று சொல்வார்கள்?

ப: தொன்று தொட்டு பிரவாக அநாதியாய் வரும் என் பார்கள்.

6. கே: பிரவாக அநாதி யென்றால் என்ன?

ப: எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கிற வெள்ளம்போல என்பதாம்.

7. கே: அப்படி ஒரு முடிவு இல்லாமல் வருவதற்குப் பெயர் என்ன?

ப: அநவத்தை என்று பெயர்.

8. கே: இந்த மயக்கத்தை எப்படி தீர்க்கலாம்

ப: இந்த இரண்டுக்கும் மூலமாகிய சூக்கும உடம்பு ஒன்று உண்டு என்பதை அறிவதே வழி.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 11.

(முற்செய்........செய்தி)

1. கே: இதுவரை கூறியவற்றால் என்ன தெரிந்துகொண்டீர்?

ப: முற்பிறவியில் செய்த கன்மம் அதாவது விதி அதாவது முயற்சி இப்பிறவியில் அநுபவிக்கிற செல்வம், வறுமை, உயர்வு, இழிவு, இன்பம், துன்பம் இந்த ஆறுக்கும் காரணமென்று தெரிந்து கொண்டோம்.

2. கே: இன்னும் என்ன தெரிந்து கொண்டீர்?

ப: இப்போது நாம் செய்யும் முயற்சி அந்த ஆறையும் இப்போது நாம் அநுபவிப்பதற்கு துணையென்று தெரிந்து கொண்டோம்.

3. கே: இதம், அகிதம் என்றால் என்ன?

ப: இதம் என்றால் இன்பம், அகிதம் என்றால் துன்பம்.

4. கே: இப்போது நாம் அநுபவிக்கிற ஆறுக்கும் ஈடாகவந்த முயற்சி மேலே எடுக்கும் உடலில் சேருதற்குரிய வினையாவது எப்படி?

ப: இப்போது நாம் அநுபவிக்கிற இன்பதுன்பங்கள் முற்பிறவியில் செய்த முயற்சியானால், இப்போது நாம்செய்யும் முயற்சி மறுபிறவிக்கு வரும் என்பது எளிதில் அறியலாமே.

5. கே: அப்படியானால் ஒரு முயற்சியுமில்லாமல் சும்மா இருப்பவர்களுக்கு அந்த ஆறும் இல்லையே?

ப: அப்படியல்ல. அநுபவம் இல்லாமல் யாரும் சும்மா இருக்கமுடியாது. அநுபவமெல்லாம் முயற்சியிலேயே நடக்கும். அந்த அநுபவத்துக்கு பிராரத்தவினை யென்று பெயர். அந்த பிராரத்தத்தை அநுபவித்தே யாகவேண்டும். அநுபவம் உள்ள வரையில் முயற்சியும் நிச்சயமாக உண்டு. அநுபவம் உள்ள போது முயற்சி யில்லாமலிருந்தாலும் மறுபிறவிக்கு வரக்கூடியது ஒன்றுமில்லை யென்பது பொருந்தாது.

5. கே: பிராரத்த வினையென்றால் என்ன?

ப: இப்போது அநுபவிக்கிற இன்பம், துன்பம், செல்வம், வறுமை, உயர்வு, இழிவு.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 12
(மேலைக்கு ....யோடே)

1. கே: செயல்வகை யென்றால் என்ன?

ப: செய்கிற தொழிலாம் (செ. 16-ல் கே. 2-ஐ பார்)

2. கே: கருத்துவகை என்றால் என்ன?

ப: எண்ணத்தால் வருவதாம்.

3. கே: ஆகாமிய வினையென்றால் என்ன?

ப: இப்போது நாம் செய்கிற தொழில்.

4. கே: உலகத்தில் மரம் முதலியன எதற்காக இருக்கின்றன?

ப: உணவின் பொருட்டு கனி முதலியவைகளைத் தர.

5. கே: உணவின் பொருட்டு விளைந்த கனி முதலாயின எப்படி உபயோகப்படுகின்றன?

ப: உணவாகியும் வித்துமாகியும் உதவுகின்றன.

6. கே: முயற்சி எப்படி செய்யப்படுகிறது?

ப: நாம் என்கிற முயற்சியால் செய்யப்படுகிறது.

7. கே: முயற்சி எத்தனை வகைப்படும்?

ப: செயல்வகை என்றும், கருத்துவகை யென்றும் இருதிறப்படும்.

8. கே: செயல்வகையால் செய்வது எதைத்தரும்?
 ப: வினைக்கீடாகவரும் அநுபவத்தைத்தரும்
9. கே: கருத்து வகையால் செய்வது எதைத்தரும்?
 ப: இதம் அகிதம் எனப்படும் ஆகாமிய வினையைத் தரும்.

சூத்திரம். 2, அதிகரணம். 2, செய்யுள். 13,
(இதமகிதங்கள்.........ஈவனன்றே)

1. கே: இதம் அகிதங்களின் இயல்பு எவை?
 ப: இதம் என்பது, மனம், வாக்கு காயங்களால் உயிர்களுக்கு வேதாகமங்களில் சொல்லப்பட்ட உறுதிப் பொருள்களைச் செய்வதாம். அகிதம் என்பது வேதாகமங்களில் சொல்லப்பட்டவற்றைச் செய்யாமையேயாம்.
2. கே: இதமகிதஞ் செய்தால் என்ன பயன்?
 ப: இன்பத் துன்பங்கள் உண்டாம்.
3. கே: அந்த இன்பதுன்பங்களை யார் கொடுப்பர்?
 ப: முதல்வனே கொடுப்பன்.
4. கே: ஏன் முதல்வன் கொடுக்கவேண்டும்?
 ப: அந்த இதம் அகிதங்களை அறியவல்லவன் முதல்வனே யாதலால் அவனே ஏற்றுக்கொண்டு பயன் அளிப்பன்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 4,
(இறைவன் ....வைப்பன்)

1. கே: உயிர்கள் செய்கிற இதமகிதங்களை முதல்வன் ஏற்றுக்கொள்ள காரணம் என்ன?
 ப: எங்கும் நிறைந்திருக்கிற அம்முதல்வன் உயிர்கள் முத்தியடைவதற் பொருட்டு உயிர்களின் மேல் வைத்திருக்கிற கருணையே காரணம்.
2. கே: இதம் அகிதங்களால் உண்டாகிய பயன் எத்தனை வகைப்படும்?
 ப: இன்பம் துன்பம் என இரண்டு வகைப்படும்.
3. கே: ஏன் இரண்டு வகைப்படும்?
 ப: காரணம் இரண்டு வகையாதலினால்.

4. கே: இரண்டு வகைக் காரணம் என்ன என்ன?
   ப: (1) அநுக்கிரகம் (2) நிக்கிரகம்
5. கே: அநுக்கிரகம் என்றால் என்ன?
   ப: நல்வழிப்படுத்தல்.
6. கே: நிக்கிரகம் என்றால் என்ன?
   ப: கண்டித்தல் அதாவது துன்புறுத்தல்.
7. கே: அநுக்கிரகம் யாருக்குச் செய்வர்?
   ப: அறம் செய்வோருக்கு.
8. கே: நிக்கிரகம் யாருக்குச் செய்வர்.
   ப: பாவஞ் செய்வோருக்கு.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 15.
(நிக்கிரகம்....... என்றும்)

1. கே: பாவஞ் செய்கிறவர்களை முதல்வன் கண்டித்தல் எப்படி கருணையாகும்?

ப: நேசத்தால் நல்வழிப் படுத்தற்பொருட்டு கண்டித்தலால் கருணையேயாம்.

2. கே: எப்படி எப்படி கண்டிப்பார்?

ப: அடிப்பார், நீக்குவார், அச்சப்படுத்துவார், அறஞ் செய் என்பார்.

3. கே: திரோபவம் என்றால் என்ன?
   ப: ஆசையில் அழுத்துதல்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 16.
(தந்தையாய்.........என்றும்)

1. கே: இப்படி உயிர்களைக் கண்டித்தல் கருணை என்பதற்கு ஒரு உதாரணம் சொல்?

ப: தந்தையும், தாயும், தங்களுடைய புதல்வர்கள் தங்கள் சொல்வழி நடக்காவிட்டால் அப்பிள்ளைகளை வளாரினால் அடித்தும் விலங்கும் இட்டு அச்சப்படுத்துவார்கள். இது கருணையேயாம்.

2. கே: இந்த கருணை எப்படி தோன்றுகிறது?

ப. செயல் வகையால் கோபம்போலத் தோன்றுகிறது. கருத்துவகையால் அருளேயாம். (செ. 12-ல் 1, 2, கே. பார்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 17-18.
(செயல்களே … …போல்) (செய்க்கிடும்… …உண்டோ)

1. கே: அவரவர்கள் செய்கிற வினையாகிய புண்ணிய பாவங்களே, இன்ப துன்பங்களைக் கொடுக்குமே அதற்கு முதல்வன் வேண்டாமே என்றால் என்ன குற்றம்?

ப: ஒருவர் செய்த புண்ணிய பாவங்களாகிய வினைகள் முழுதும், செய்தபொழுதே கெட்டொழியும். ஆதலால் அவை பின்னிருந்து எப்படி பயனைத்தரும். தராது, ஆதலால் அதனைத் தருதற்கு ஒரு முதல்வன் வேண்டும் என்பதாம்.

2. கே: வயலின்கண் இட்ட தழைகள் கெட்டுதான் பயனைத் தருகிறது? சாப்பிடப்பட்ட மருந்தும் கெட்டபின் தான் பயனைத் தருகிறது? அதுபோல இந்த புண்ணிய பாவங்களாகிய வினைகள் கெட்டே பயனைத்தரும் என்றால் ஏன் பொருந்தாது?

ப: தின்னப்பட்ட சோறு, வெற்றிலைப்பாக்கு முதலியவைகளும், உண்ணப்பட்டவர்களுடைய வயிற்றிலே கெட்டால், உடம்பின் கண் வருவது மலமேயன்றி வேறில்லை. அதுபோல கெட்டவை பயன்தரமாட்டா. ஆனால் கெட்டவை பயன்தருவது ஏதோ சில வற்றிலே உண்டு.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 19.
(திரவியம் . ……கருதினையே)

1. கே: கெட்டுப் பயன் தருபவை சிலவற்றிலேயே உண்டு என்றால், தழை முதலிய பொருள்கள் கெட்டுப் பயன் தருதலால் தழை முதலியவைகளை வினைக்கு உவமை சொன்னால் ஏன் பொருந் தாது?

ப: தழை முதலியவைகள் கிடந்த இடத்தே கெட்டு கெட்ட விடத்திலேயே பயனைத் தருகின்றன. வினையோ செய்யுமிடமாகிய இவ்வுடம்பிலே கெட்டு மற்றொரு உடம்பிலே பயனைத் தருகின்றன. ஆதலால் தழை முதலியவைகள் வினைக்கு உவமையாகமாட்டா.

2. கே: தழை முதலியவற்றை வினைக்கு உவமை கூறியது மற்று எப்படி பொருந்தும்.

ப: சேர்ந்த இடத்தில் பயனைத் தராமல் கேடுமாத்திரம் உடையபொருள்கள் பல உள்ளன. அவைகள் மற்றோரிடத்தில் பலிக்கும் எனக்கொண்டு உவமிக்க அமையும்.

3. கே: மற்றோரிடத்தில் பயனுதற்குரிய வினைதானே ஏன் பயனுக வரக்கூடாது?

ப: நீயொழுகக்காய்ந்த பாத்திரத்தில் ஊற்றிய நீர் சுவறிப்போதல் காணப் படுதலால் வேறிடத்தில் பயனுதற்குரிய வினைதானே பயனைத்தராது.

4. கே: திரவியம்உவமையன்றுஎனமறுத்தல் ஏன்பொருந்ாது?

ப: இருமையினும் வினைசெய்தாரில் வேற்றுமையின்மையின் செய்தார் வினை அவர் அறிவின் கண்ணே அடங்கி செய்கிடும் தழை முதலியனபோல ஆண்டு பயனைத்தோற்றுவிக்கும் ஆதலால்

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 20.

(செய்தவர் ... ... ஆய்ந்தே)

1. கே: வினைக்குப் பயனுவன யாவை?

ப: துறக்கம், நிரயம், நிலம், என்னும் பல வேறுபட்ட புவன போகங்களாம்.

2. கே: துறக்கம் முதலியன எங்கிருந்து உண்டாம்?

ப: (வயலின் விளைவுபோல) வினை செய்தவர்களின் ஆன்மபோதத்தில் கிடந்து பின்பு உளவாம்.

3. கே: ஆன்மபோதத்தில் கிடந்து துறக்க நிரயங்கள் உண்டாம் என்பது எதைப்போல இருக்கிறது?

ப: சொல்மாத்திரமே யன்றி பொருள்படாது. (இந்திர ஜாலம்போலிருக்கிறது)

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 21.
(தானம்............தீர்)

1. கே: (1) தானம் செய்த பொருள் (2) அதை வாங்கினவர் (3) செய்தவர் (4) செயல் முதலிய செயல்களெல்லாம், செயப்படு பொருளில் கிடந்து பயன் தரும் என்றால் என்ன குற்றம்?

ப: செயப்படுபொருள் முதலிய அனைத்தும் நிலைபேறின்றி கெட்டொழியும் ஆதலால் தராது.

2. கே: தானம் என்றால் பொருள் என்ன?

ப: பாவ புண்ணியங்கள்.

3. கே: வேறேயார் பயன் தரவேண்டும்?

ப: நிலைபேறுடைய கடவுள் தரவேண்டும்.

4. கே: கடவுள் தருதற்கு என்ன பொருத்தம்?

ப: முயற்சியென்பது முன்னை வினையை அநுபவித்தற் பொருட்டு தரப்படும் முதல்வனது ஏவல் வினையாம் ஆதலால்.

5. கே: அந்த முயற்சியை நாம் எப்படி செய்தல் வேண்டும்?

ப: நாம் என்கிற முனைப்பில்லாமல் செய்தல் வேண்டும்.

6. கே: நாம் என்னும் முனைப்பால் செய்தால் என்ன உண்டாம்?

ப: பாவ புண்ணியம் உண்டாம்.

7. கே: அந்த பாவ புண்ணியங்களின் பயனைத் தருபவன் யார்?

ப: அதை ஏவின கடவுளே தருவார். (அது அவருடைய கடப்பாடாம்)

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 22.
(உலகுடல்.........அருளினாலே)

1. கே: காரகம் என்றால் என்ன?

ப: வினைச்சொல்லால் முடியும் சொற்கள் எல்லாம் காரகமாகும்.

2. கே: காரகம் ஏழையும் கூறு?

ப: (1) உடல் (2) கருவி (3) காலம் (4) செயப்படு பொருளாகிய பலம் (5) இன்னதற்காக என்கிறநியதி (6) இது பயனாக என்கிற நியதி (7) செயல்.

3. கே: உயிர் வினைகளை எப்படி சம்பாதிக்கும்? எப்படி அநுபவிக்கும்?

ப: ஏழு காரகங்களையும் உயிர் தனக்குக் காரகமாகக் கொண்டு செய்யும்.

4. கே: உயிர் இந்த ஏழு காரகங்களையும் ஏன் துணையாகக் கொள்ளவேண்டும்? காரகங்கள் உயிரிடம் போய் ஏன் கூடக்கூடாது?

ப: காரகங்கள் ஏழும் சடமானபடியால் தாமேபோய்க் கூடாது.

5. கே: உயிர் அந்த ஏழு காரகங்களையும் தன்னிடத்தில் ஏன் நிறுத்திக்கொள்ளக் கூடாது?

ப: அந்த ஏழு காரகங்களும்இல்லாமல் உயிர் அறியாது.

6. கே: ஏழு காரகங்களும் உயிரும் எப்படி கூடிற்று?

ப: முதல்வனே தன்னுடைய அருளால் பொருந்தச் செய்வன் ஆதலால் அவன் பணியே.

7. கே: வினைமுதல் என்றால் என்ன?

ப: செய்பவன்.

8. கே: பாரிசேடம் என்றால் என்ன?

ப: மிகுதி (அதாவது) பாக்கியாயிருப்பது.

9. கே: பாரிசேடம் எது?

ப: பதி.

10 கே: எப்படி பதி பாரிசேடம்?

ப: பதி, பசு, பாசம், என்கிற மூன்றில் உலகமாகிய காரகமும் கூடாது, உயிரும் அறியாது என்றால் சேடமாயிருப்பது பதியேயாம்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 23.

(ஒழுக்கம்........அறங்கள்)

1. கே: ஒழுக்கம் என்றால் என்ன?

ப: உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல்.

2. கே: முதல்வனுடைய பணிகள் எவை?

ப: ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு சீலம்.

வழுக்கிலாத் தவந்தானங்கள் வந்தித்தல் வணங்கல் [வாய்மை
அழுக்கிலாத் துறவடக்கம் அறிவொடர்ச்சித்தலாதி
இழுக்கிலா அறங்களானல் இரங்குவான் பணிஅறங்கள்

3. கே: அறஞ்செய்பவர்களுக்கு வேண்டப்படுபவை எவை?

ப: ஒழுக்கம் முதலிய பதினறுமாம்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 24.
(மனமது.........அன்றே)

1. கே: 23-வது செய்யுளில் கூறிய ஒழுக்கம் முதலிய பதினறு பேறுகளை யுடையனுயினும் அவற்றிற்கு எதிர் மறையாகிய பதினறையும் நீக்கினவனுயினும் என்னசெய்தல் வேண்டும்?

ப: நினைந்ததொரு கடவுளை மனம் வாக்குக் காயங்களால் வழிபடல் வேண்டும்.

2. கே: அப்படி வழிபட்டால் எந்த தெய்வம் பயன்தரும்?

ப: சிவபிரானே அந்த வழிபாட்டை ஏற்றுக்கொண்டு பயன்தருவார்.

3. கே: சிவபிரான் எப்படி வந்து பயன்தருவார்?

ப: இச்சித்த தெய்வத்தினிடமாக இருந்து பயன்தருவார்.

சூத்திரம் 2. அதிகரணம் 2, செய்யுள் 25.
(யாதொரு..... .. செய்வனன்றே)

1. கே: வழிபடப்பட்ட தெய்வம் தம்மை வழிபட்டவர்களுக்கு ஏன் பயனைத் தராது?

ப: வழிபடப்பட்ட தெய்வத்தினிடமாக நின்று அறிபவன் சிவனே ஆதலால் அவனே தருவன் மற்றைத் தெய்வங்கள் பிறக்கும் இறக்கும் ;ஆதலால் அந்த தெய்வங்கள் தரமாட்டா.

2. கே: யோனி என்ருல் என்ன?

ப: பெண்குறி.

3. கே: நால்வகை யோனிகள் எவை?

ப: (1) அண்டஜம் (2) சுவேதஜம் (3) உத்பித்ஜம் (4) சராயுஜம்.

4. கே: இவைகளுக்கு தமிழ்ப் பெயர் என்ன?

ப: அண்டஜம் என்றால், அண்டம் முட்டை, ஜம்பிறப்பன அதாவது முட்டையில் தோன்றுவனவாகிய காகம், பருந்து முதலியனவாம், சுவேதஜம் என்றால், சுவேதம் வியர்வை ஜம்பிறப்பன அதாவது வியர்வையில் பிறப்பனவாகிய, பேன், கம்பளிப்பூச்சி முதலியன. உத்பித்ஜம் என்றால், உத் - மேலே, பித் - பிளந்து, ஜம் - பிறப்பன, அதாவது வித்து, வேர், கிழங்கு முதலியவைகளை பிளந்துகொண்டு மேலே தோன்றும் மரம், செடி முதலியன. சராயுஜம் என்றால், சராயு - கருப்பை ஜம் - தோன்றுவன. அதாவது கருப்பையில் பிறப்பனவாகிய மனிதர், மிருகம் முதலியனவாம்.

5. கே: உயிர் வருக்கங்களுக்கும் கடவுளுக்கும் வேறுபாடு என்ன?

ப: நால்வகை யோனியில் பிறப்பன எவை? அவை உயிர் வர்க்கங்களாம், நால்வகை யோனியில் பிறக்காதது எது அது தெய்வம்.

6. கே: சிவனுக்கும் மற்றைத் தெய்வங்களுக்கும் வேற்றுமை என்ன?

ப: சிவன் ஒருவனே பிறந்து இறக்காதவன். மற்றைத் தெய்வங்கள் பிறக்கும் இறக்கும்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 26
(இங்கு ....அளிப்பன்)

1. கே: மற்றைத் தெய்வங்களுக்குச் செய்யும் வழிபாட்டை அந்தந்த தெய்வங்கள், ஏற்றுக்கொள்ளாமல், பரமசிவனே ஏற்றுக்கொண்டு அதற்குத் தக்க பயனை, அவனே தருவான் என்பதற்கு ஒரு உதாரணம் தருக.

ப: பசுவையும், பார்ப்பாரையும், தாயையும், தந்தையையும் வழிபடுகிறார்கள். அப்படி வழிபடுபவர்க்கு அதற்குத்

தக்கபயனை பசுவோ, பார்ப்பாரோ, தாயோ தந்தையோ வந்து பயன் தருகிருர்கள் இல்லையே, அதையறிந்து மறுமைக்கண் வந்து பயன் தரும் கடவுள் வேறே. அதுபோல

2. கே: ஒரு தெய்வத்தை வழிபட்டால் அந்த தெய்வமேவந்து பயன் தருமென்று கேட்கப்படுதலால், அந்தத் தெய்வமும் வந்து பயன் தருமோ?

ப: இல்லை, இல்லை, இல்லை.

3. கே: அதற்கு ஒரு உதாரணஞ் சொல்லு?

ப: அரசனுடைய உத்திரவே, அமைச்சர் முதலாயினுரிடத்திலிருந்து பிறர்க்குக் கொடுப்பதுபோல, முதல்வனே தன்னுடைய உத்திரவை தன் ஏவல் வழி நிற்கும் கடவுளரிடம் வைத்துப் பயன்கொடுப்பன். அதுவேயன்றி வினையில் கட்டுப்பட்டு பரதந்திரராயிருக்கும் கடவுள் பயன்தர மாட்டார்.

4. கே: அக்கடவுளர், பசுவானதால் அவர்களிடத்துச் செய்யும் புண்ணியம் பசு புண்ணியமா, பதி புண்ணியமா? (அதாவது சிவ புண்ணியமா?)

ப: பசு புண்ணியம், பதி புண்ணியம் என பிரிவுபட்டது செய்வாருடைய கருத்து வகையாலேயாம், ஏற்றுக்கொள்ளுகிற தெய்வத்தினுடைய கருத்து வகையல்ல. அதனுல் சொல்ல முடியாது.

சூத்திரம் 2, அதிகரணம 2, செய்யுள் 27.
(காண்பவன்.........கொள்ளே)

1. கே: எந்தக் கடவுளருடைய பூசை நிச்சயமாக செய்யத் தக்கது?

ப: சிவபெருமானுடைய பூசையே செய்யத்தக்கது.

2. ஏன்?

ப: ஒன்றிலும் விருப்பிலனுகிய சிவபெருமான், உயிர்களிடத்து வைத்த கருணையே விருப்பமாகக் கொண்டிருத்தலாலும், புண்ணியம் என்பது வேதாகமங்களில் அந்த இறைவனுல் விதிக்கப்பட்ட விதியாகலானும், அதுவே நல்ல அறமாகும்

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 28.
(தாவரசங்கமங்கள் ... ... செய்தே)

1. கே: அந்தக் கடவுள் எந்த இடத்தில் தங்கியிருப்பார்?
   ப: சதா சிவதத்துவத்தில் தங்கியிருப்பார்.

2. கே: சதாசிவ தத்துவத்தில் தங்கியிருக்கும் கடவுள் பிறர் செய்யும் பூசனையை எப்படி ஏற்றுக்கொள்வார்?
   ப: புறத்திலே கோயிலில் உள்ளிருக்கும் திருமேனியையும், சிவனடியார் திருவேடத்தையும் ஆதாரமாகக் கொண்டும், அகத்திலே உயிர்களிடமாகக் கொண்டும் பூசையை ஏற்றுக் கொள்வார்.

3. கே: நாம் வழிபட வேண்டிய அவசியமான இடங்கள் எவை?
   ப: கோயில், அடியார், உயிர்.

4. கே: தாபரம் என்றால் என்ன?
   ப: மரம், கல், செம்பு முதலியன.

5. கே: சங்கமம் என்றால் என்ன?
   ப: அசையும் பொருள்களாகிய உயிர்கள்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 29.
(அரனடிக்கு... ... ...ஆயத்தே)

1. கே: அறமும், பாவமும் பயன்தரும் விதம் எப்படி?
   ப: ஏற்றுக்கொள்பவருடைய வன்மை, மென்மை பற்றியேயாம். செய்கிறவர்களுடைய வன்மை மென்மை பற்றி அல்ல. செய்வினைகளுடைய வன்மை மென்மை பற்றியும் அல்ல.

2. கே: அது எப்படி?
   ப: அன்புடையவர் செய்கிற பாவமும் அறமாகும். அன்பில்லாதவர் செய்கிற புண்ணியமும் பாவமாகும். அதுபோல

3. கே: இதற்கு ஒரு உதாரணந்தருக.
   ப: அநேக வரங்களைப் பெற்ற கடவுளரில் ஒருவனாகிய தக்கன்செய்த அன்பில்லாத பெரிய யாகபுண்ணியம் பாதகமாய்

முடிந்ததே. மனிதரில் ஒருவனுகிய சண்டீசர் செய்த கொலைப் பாதகம் புண்ணியமாக முடிந்ததே உதாரணம்.

சூத்திரம் 2. அதிகரணம் 2. செய்யுள் 30,
(மறைகள் .... தாகும்)

1. கே: மறைகள் என்பவை எவை?
ப: ஈசனுடைய சொல்.

2. கே: நிரயம் என்பது என்ன?
ப: ஈசனுடைய சொல்வழி நடவாதாரை தண்டித்தல் பொருட்டு ஈசனுல் அமைக்கப்பட்ட சிறைக்கூடம்.

3. கே. துறக்கம் என்பது என்ன?
ப: ஈசனுடைய சொல்வழி நடப்போரை செல்வத்தோடு வாழ்வித்தற்பொருட்டு ஈசனுல் அமைக்கப்பட்ட ராஜதானி. (அரசன் வகிக்கும் நகரம்)

4. கே: இருவினைகள் எப்படிப்பட்டவை?
ப: அழிவு எய்துவனவாம்.

5. கே: இதம் அகிதம் என்றுல் என்ன?
ப: இதம் என்றுல் புண்ணியம், அகிதம் என்றுல் பாவம்.

6. கே: உயிர்களுக்கு இன்பதுன்பங்கள் எதனுல் வரும்?
ப; இறைவனுடைய கட்டளையால் வரும்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 31.
(ஆணையால்........காண்)

1. கே: அரசனுடைய ஆணை எப்படிப் பட்டது?
ப: அரசன் தன்வழி நடவாதவரை தண்டித்து சிறையில் வைப்பன். தன் சொல்வழி நடப்பவரை வாழ்வித்து தன்கீழ் அதிகாரமும் செய்யவைப்பான்.

2. கே. மந்திரி முதலானோர் தண்டிக்கிறுர்களே, அதிகாரமுங் கொடுக்கிறுர்களே அவை யாருடையது?
ப: அவைகளும் அரசனுடைய ஆணையேயாம்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 32, (அரசனும்.........ஈதால்)

1. கே: அரசன் தண்டனை செய்வது யாருடைய செயல்?
ப: ஈசனுடைய அருள் வழியேயாம். அரசனுக்கு சுதந்திரமல்ல.

2. கே: அரசனுடைய தண்டனை வைத்தது எதற்காக?
ப: நரகதண்டனை வராமைக்காகவும், நரகதண்டனையை உண்டு என்று அறிவுறுத்தவுமேயாம்.

3. கே: நரக தண்டம் உண்டு என்று அரசன் எப்படி அறிவுறுத்துகிறுன்?
ப: இனி பாவஞ்செய்யின் இப்போது தண்டிக்கிற தண்டனையைப் பார்க்கிலும் இன்னும் கொடிதான தண்டஞ் செய்வேன் என்று எடுத்துச் சொல்லுதல்.

4. கே: அப்படி அரசன் சொல்வதால் பயன் என்ன?
ப: அறிவுடையோர் பின்பு விதிப்படி நடப்பார், நரகமும் சேரார்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 33. (அருளினுல்.........நாதன்)

1. கே: பாவமாவது யாது?
ப: வேதம், ஆகமமாகிய நூல்வழி நில்லாமையேயாம்.

2. கே: புண்ணியமாவது யாது?
ப: நூல்வழி நின்று, அருள்வழி நில்லாமை, புண்ணியம்

3. கே: அருள்வழி நில்லாமை எப்படி புண்ணியம்?
ப: நூல்வழி நிற்றலே புண்ணியமாம்.

4. கே: சிவபிரான் யாருக்கு சமம்?
ப: மருத்துவனுக்குச் சமம்.

5. கே: மருத்துவன் என்ன செய்வன்?
ப: நோய்க்குத் தகுந்த மருந்தைக் கொடுத்து நோயை நீக்குவன்.

6. கே: சிவன் எப்படி மருத்துவனுக்குச் சமமாவன்?
ப: புண்ணிய பாவமாகிய நோய்க்குத் தக்க மருந்தாகிய இன்பதுன்பங்களைக் கொடுத்து புண்ணிய பாவமாகிய நோயை நீக்குவன்.

7. கே: உயிர்களுக்கு நோய்கள் எவை?
ப: புண்ணிய பாவங்கள்.

8. கே: புண்ணிய பாவங்களாகிய நோய்க்கு மருந்துகள் எவை?
ப: இன்ப துன்பங்கள்.

9. கே: சிவனுக்கு வைத்தியநாதன் என்று ஏன் பெயர்?
ப: மருந்து கொடுத்து நோயை நீக்குவதால்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 34.
(மருத்துவன்.........தீர்ப்பன்)

1. கே: வாகடம் என்பது என்ன?
ப: வைத்தியநூல்.

2. கே: ஆன்மிகம் என்றால் என்ன?
ப: உயிர்கள் துன்பப்படுத்துவதால் வரும் நோய்கள் பாம்பு கடித்தல் முதலியன.

3. கே: பௌதிகம் என்றால் என்ன?
ப: நிலம், நீர், நெருப்பு, காற்று, இடி, மின்னலால் வரும் நோய்கள், இடிவிழுதல் முதலியன

4. கே: எதன்படி நடந்தால் பிணிகள் வரமாட்டா?
ப: வாகட நூல்வழி நடந்தால் பிணிகள் வரமாட்டா.

5. கே: தைவீகம் என்றால் என்ன?
ப: தெய்வத்தால் வரும் வியாதிகள், கண்கெடல், நொண்டி, ஊமை முதலியன.

6. கே: எவற்றால் வரும் பிணிகளுக்கு வைத்தியன் மருந்து கொடுத்து பிணியை நீக்குவான்?
ப: ஆன்மிகத்தாலும், பௌதிகத்தாலும் வரும் பிணிகளுக்கு வைத்தியன் மருந்து கொடுத்து பிணியை நீக்குவன்.

7. கே: எதனுல் வரும் பிணிகளுக்கு வைத்தியன் மருந்து கொடுக்கமாட்டான்?

ப: தைவிகத்தால் வரும் பிணிகளுக்கு வைத்தியன் மருந்து கொடுக்கமாட்டான்.

8. கே: தைவிகத்தால் வரும் பிணிகளைத் தீர்க்க என்ன பரி காரம் சொல்லுவன்?

ப: தானங்கள், பூசனைகள், ஓமங்கள் முதலியன செய்யச் சொல்லுவான்.

9. கே: வாகடத்தின் வழி தவருமல் நடக்கவும் பிணிவரு கிறதே அது எப்படி வருகிறது?

ப: அது தெய்வத்தால் வருவதேயாம். (அதுதான்பிராரத் தவினை.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 35.
(மண்ணுளே ... ...அறுப்பன்)

1. கே: மருத்துவனும் இறைவனும் இன்னும் எப்படி ஒப்பா வார்?

ப: மருத்துவன் அன்போடும், உறுதியோடும் அறுத்தும் சுட்டும் சில நோயை நீக்குவன். சில நோய்களை தித்திக்கும் சர்க்கரையும் பாலும் கொடுத்து நீக்குவன். அதுபோல இறை வனும் இன்பமாகிய மருந்தையும் துன்பமாகிய மருந்தையும் கொடுத்து நல்வினையாகிய நோயையும் தீவினையாகிய நோயை யும் தீர்ப்பன்.

2. கே: அருத்தியோடும் என்றல், கட்டி என்றல் பொருள் என்ன?

ப: அன்போடு என்றும் சர்க்கரை யென்றும் பொருளாம்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 36.
(பூதனுசரீரம்... ... ...எல்லாம்)

1. கே: பூதனுசரீரம் என்றல் என்ன?

ப: புறத்தே தெரிகிற இந்த தூல உடம்பு.

2 கே: புரியட்டருபம் என்றல் எவை?

ப: உள்ளே உள்ள சூக்கும உடம்பு (அதாவது) சத்தம் பரிசம், ரூபம், ரசம், கந்தம், மனம், புத்தி, அகங்காரமாகிய எட்டுங் கூடிய உடம்பு.

3. கே: தூல உடம்பு எப்படிப்பட்டது?

ப: உடனுக்குடன் அழியும்.

4. கே: சூக்கும உடம்பு எப்படிப்பட்டது?

ப: சங்கார காலம்வரை அழியாமலிருந்து சங்காரகாலத்தில் அழியும்.

5. கே: யாதனுசரீரம் என்றால் எது?

ப: சுவர்க்கத்தில் நரகத்தில் கிடக்கும் உடம்பு. (சூக்கும உடம்பிலிருந்து சுவர்க்க நரகம்போக எடுக்கும் உடம்புமாம்.

6. கே: பூதசார சரீரம் என்றால் எது?

ப: துறக்கத்தில் இன்புறும் உடம்பு.

7. கே: நுண்ணுடம்பு எது?

ப: புரியட்டக உடம்பு.

8. கே: கஞ்சுக உடம்பு என்றால் என்ன?

ப: கலை, வித்தை, ராகம், புருடன், மாயை என்கிற ஐந்துங்கூடின உடம்பு.

9. கே: பஞ்சகஞ்சுகம் என்றால் எவை? (சூ. 2, அ. 3, செ. 56, கே 3-ஐ பார்)

ப: கலை, வித்தை, ராகம், புருடன் மாயையேயாம். (காலம், நியதி கிடையாது.)

10. கே: குண உடம்பு எது?

ப: புரியட்டக உடம்பே குண உடம்பாம்.

11. கே: காரண உடம்பு எது?

ப: ஆன்மா மலத்துடன் புருடதத்துவத்தில் இருப்பது.

12. கே: உயிர்கள் தூல உடம்பைவிட்டு நீங்கி சூக்கும உடம்பிலிருந்து யாதனுசரீரம் எடுத்து சுவர்க்க நரகங்களில் இன்பதுன்பங்களை இறைவன் கட்டளையால் அநுபவித்த பிறகு எங்கே செல்லும்.

ப: பிறகு வினைச்சேடத்தை அநுபவித்தற் பொருட்டு அந்த சூக்கும உடம்போடு நிலத்தில்வந்து கருப்பையில் விழும்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 37.
(உடல்.........மன்றே)

1. கே: பூதனுசரீரமும், யாதனுசரீரமும் எடுக்கும் விதம் எப்படி?

ப: பூதனுசரீரம் போனவுடன் யாதனு சரீரத்தை எடுக்காமல் வேறே ஓர் பூதனுசரீரத்தை யெடுத்தலும் உண்டு. யாதனுசரீரம் போனவுடன் பூதனுசரீரத்தை எடுக்காமல் வேறே ஓர் யாதனுசரீரத்தை எடுத்தலும் உண்டு

2. கே: ஒரு சரீரத்தைவிட்டு மற்றொரு சரீரத்தை எடுக்க இடையில் எவ்வளவு காலம் செல்லும்.

ப: இடைவிடாது சரீரம் எடுத்தலுமுண்டு, இடைவிட்டு சரீரம் எடுத்தலுமுண்டு.

3. கே: ஏன் இப்படி சரீரம் எடுப்பதிலும் வேறுபாடு, காலத்திலும் வேறுபாடு?

ப: வினைகளுடைய வன்மை மென்மைக்குத் தக்கவாறே யாகும்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 38.
(பன்னகம்........போல்)

1. கே: பன்னகம், அச்சு, பரகாயம், நனவு இவைகளுக்குப் பொருள் என்ன?

ப: பன்னகம் - பாம்பு; அச்சு - யோனி; பரகாயம் - வேறுடம்பு; நனவு - நினைவு.

2. கே: உயிர்கள் முன்னுடம்புவிட்டு வானேறிப் போய் வேறோர் உடம்பை எடுப்பதற்கு உதாரணஞ் சொல்லு?

ப: (1) பாம்பு முன்னைத் தோலாகிய உடம்பைவிட்டுச் சென்று, மற்றொரு தோலாகிய உடலினைப் பற்றுகிறது. (2) பறவைகள் முன்னை முட்டையாகிய இடத்தினை விட்டுச்சென்று மற்றோர் இடத்தினைப் பற்றுகின்றன. (3) பரகாயப் பிரவேசஞ் செய்வோர், முன்னை அச்சினைவிட்டுச் சென்று வேறே ஓர் அச்சினைப் பற்றுகிறார்கள்.

3. கே: பாம்பு, பறவை, பரகாயம் செய்வோர்போல, உயிர்கள் வேறோர் உடம்பில் நிலைபெறும்போது எத்தன்மைத்தாய் இருக்கும்?

ப: உயிர்கள் வேறாகாமல், உடலும், இடமும், யோனியும் வேறுபட்டு நிற்கும்.

4. கே: நனவுணர்வு மாறி, கனவுணர்வைத் தலைப்படுதல் போல என்ற உதாரணம் எதனைத் தெரிவிக்கிறது?

ப: நனவிலே உள்ள அறிவு கனவிலே வேறுபடுதல் போல அறிவு வேறுபட்டிருக்கும் என்பதற்கு உதாரணம்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 39.
(தன்மமோ ....நிற்கும்)

1. கே: சதசத்து என்றால் என்ன?

ப: (சத்து + அசத்து = சதசத்து) சத்தையும் அசத்தையும் அறிகின்ற ஆன்மா.

2. கே: சத்து அசத்து என்றால் பொருள் என்ன?

ப: சத்து அறிவுடைய பொருள். அசத்து அறிவில்லாத பொருள்.

3. கே: காரண ஏது என்றால் பொருள் என்ன?

ப: காரணத்தைக்கண்டு காரியம் உண்டு என்று அறிதல், இடி மின்னலாகிய காரணத்தைக் கண்டு காரியமாகிய மழை உண்டு என்று அறிதல்.

4. கே: காரிய ஏது என்றால் என்ன?

ப: காரியத்தைக் கண்டு காரணமுண்டென்று அறிவது. புகையாகிய காரியத்தைக் கண்டு காரணமாகிய நெருப்பு உண்டென்றறிதல்.

5. கே: கன்மம் என்பது என்ன?

ப: முற்பிறவியில் ஆன்மாவால் செய்யப்பட்ட தருமமும் அதருமமுமாம்.

6. கே: தருமம் அதருமத்தின் பயன் என்ன?

ப: இன்ப துன்பங்கள்.

7. கே: கன்மத்துக்கு முதற்காரணம் எது?
ப: காமியம்.

8. கே: மும்மலங்கள் எவை?
ப: ஆணவம், மாயை, கன்மம்.

9. கே: அநுமித்து அறிதல் என்றால் என்ன?
ப: யோசித்து அறிதல்.

சூத்திரம். 2, அதிகரணம். 2, செய்யுள். 40.
(இருவினை.........செல்லும்)

1. கே: சந்தானம் என்றால் என்ன?
ப: ஒன்றன்பின் ஒன்றாக வருவது?

2. கே: பிரவாக அநாதி என்றால் என்ன?
ப: இடையறாத வெள்ளம் போல வந்துகொண்டிருப்பது.

3. கே: காரியப் பிரபஞ்சம் என்றால் என்ன?
ப: உற்பத்தியும் நாசமும் உடைய இந்த உலகம்.

4. கே: இருவினையின் சொரூபம் என்ன?
ப: (1) நாசமும் உற்பத்தியும் செய்யப்படும் (2) காரியப் பிரபஞ்சமாகிய உலகம் போல ஆதியும் அந்தமும் உடையது (3) பிரவாக அநாதியாய் ஆணவம் மாயைகளின் காரியங்களோடு கூடி உயிரைப் பந்திக்கும் (4) தன்னுடைய காரிய வேறுபாட்டுக்குத் தக்கபடி அந்த உயிர்க்கும் பலவகைப்பட்ட யோனிகளைத் தோற்றுவிக்கும் (5) சூக்குமமாய் நின்று இறைவன் ஆணையில் நடக்கும்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 41.
(சங்கமந்.........அருந்துவாரோ)

1. கே: சராசரம் என்பதைப் பதம் பிரித்து பொருள் கூறு?
ப: சரம்+அசரம்=சராசரம்; சரம்+அசைந்து நடக்கும் பொருள். அசரம் இடம்விட்டு நீங்காத பொருள்கள்.

2. கே: சங்கமம் தாபரங்கள் என்றால் என்ன?
ப: சங்கமம் என்றால் இடம்விட்டு நடக்கும் பொருள்.

தாபரங்கள் என்றால் இடம்விட்டு நீங்காத பொருள்கள்.

3. கே: சங்கமங்களும், தாபரங்களும் வினைக்கீடாகப் பிறக்கும்போது எப்படி பிறக்கும்?

ப: யோனியில் மாறிப்பிறக்கும்.

4. கே: மானிடர் இன்பத்தை மேலுலகத்தில் அநுபவிக்கும் போது மானுடராகியே அநுபவிப்பாரா தேவராகி அநுபவிப்பாரா?

ப: தேவராகியே அநுபவிப்பார்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 42.
(நார்களாய்.........நண்ணிடாரே)

1. கே: மேலுலகத்தில் மாநுடர் மாநுடராகியே இன்பத்தை அநுபவிப்பார் என்றால் என்ன குற்றம்?

ப: தேவருலகம் மண்ணுலகமாயிற்று.

2. கே: மாநுடர் எப்படி தேவராவர்.

ப: அச்சுமாறி தேவராவார்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 43.
(வண்டுகளாகி.........தெங்கே)

1. கே: மயிர்க்குட்டி, வேட்டுவன் என்பதற்குப் பொருள் என்ன?

ப: மயிர்க்குட்டி என்றால் புழு. வேட்டுவன் என்றால் செங்குளவி.

2. கே: காட்சி அளவை என்றால் என்ன?

ப: கண்ணால் நேரில் காண்பது முதலியன.

3. கே: உரையளவை என்றால் என்ன?

ப: நூலால் அறிவது.

4. கே: அச்சுமாறும் என்பதற்கு உதாரணம் சொல்லு?

ப: (1) மயிர்க்குட்டி வண்டுகளாக மாறும் (2) புழு வேட்டுவனாக மாறும்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 44.
(அகலிகை.........தானே)

1. கே: அச்சுமாறும் என்பதற்கு வேறு உதாரணங் கூறு?

ப: (1) அகலிகை கல்லானுள் (2) மீன், ஆமை, பன்றி, குதிரை, ராமன், கிருஷ்ணன். வாமனன், பலராமனுக மாயோன் ஆனுன் (3) சிலந்திப்பூச்சி அரசனுக அச்சு மாறிற்று (4) எலி மாவலி அரசனுக மாறிற்று.

2. கே: அகலியையின் சாபத்தை விளக்கு?

ப: இந்திரனைப் புணர்ந்த அகலிகை தன் கணவனுகிய கௌதமரின் சாபத்தால் கருங்கல்லாய் அச்சுமாறி பின் அவர் சாபத்தீர்வால் இராமர் கால்பட்டதும் பெண்ணுயினுள் என்பதாம்.

3. கே: அரியின் சாபத்தை விளக்கு?

ப: பிருகு முனிவரின் சாபத்தால் மாயோன் மச்சம் முதலாகிய பத்துவிதத்தால் அச்சுமாறிப் பிறந்தார்.

4. கே: சிலந்தி எப்படி அரசனுக மாறிற்று?

ப: சிவலிங்கத்தின்மேல் தழைகள் விழாதபடி நாவல்மரத்தில் சிலந்தி தான் நூலால் பந்தலிட்டதினுல் சூரியகுலத்தில் ஓர் அரசனுக அச்சுமாறிப் பிறந்தது.

5. கே: எலி எப்படி மகாபலி அரசனுகமாறிற்று?

ப: சிவன்கோவிலில் எரிகிற விளக்கு அணையாமல் தூண்டினுல் புண்ணியமென் றறியாத ஒரு எலி அணையும் விளக்கிலுள்ள எண்ணெயைக் குடிக்கும்போது திரி நன்ருய் எரிந்த புண்ணியத்தால் மகாபலிச் சக்கரவர்த்தியாய் அச்சுமாறிப் பிறந்தது.

சூத்திரம். 2, அதிகரணம். 2, செய்யுள். 45,
(செப்பினுய் .. . ...யாகும்)

1. கே: வினைப்பயன் என்ருல் என்ன?

ப: முதல்வனுடைய சாப அருள்.

2. கே: சாபத்தாலே உயிர்கள் அச்சுமாறிப் பிறக்கும். கன்மத்தாலே உயிர்கள் அசசுமாறிப் பிறக்காது என்ருல் ஏன் பொருந்தாது?

ப: எல்லாம் முதல்வன் செயலேயாகலான் பொருந்தாது

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 46.
(அவ்வவ…… …ருனே)

1. கே: பாரிசேடம் என்ருல் பொருள் என்ன?

ப: சேடம் என்ருல் சேஷம், சேஷம் என்ருல் மிகுதி, பாரி என்பது துணைச்சொல்.

2. கே. வினைகள் அவ்வகைகளுக்கு ஈடாகிய தனுக்களையும் புவனங்களையும் நேராக அறிநது சென்று ஏன் சேரமாட்டா?

ப: வினைகள் சடமாகலான் நேராக அறிந்து சென்று சேரமாட்டா.

3. கே: உயிர்கள் அறிவுடைமையால் அந்த வினையின் பயனை அறிந்து தனுகரணங்களை எடுத்துக்கொண்டு ஏன் அநுபவிக்கக்கூடாது?

ப: உயிர்கள் அறிவுடையதாயினும் தமக்கென அறிவில்லாமையால் கன்மத்தின் பயனை தாமே அறிந்து எடுத்துக் கொண்டு அநுபவிக்கமாட்டா.

4. கே: (1) வினையும் அணையமாட்டா (2) உயிரும் அநுபவிக்கமாட்டா என்ருல் அணையச் செய்வது எது? அநுபவிப்பது எது?

ப: இறைவனே அணையச் செய்வான். அநுபவிக்கச் செய்வான்.

5. கே: அச்சை யார் மாற்றுவார். ஏன் மாற்றுவார்?

ப: இறைவன் எல்லா அச்சுக்களையும் செய்வான் மாற்றுவான்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 47.
(மாறியில் ……..லாகும்)

1. கே: பரிணமித்தல் என்ருல் என்ன?

ப: வேறுபடுதல்.

2. கே: சற்காரியவாதம் என்ருல் என்ன?

ப: உள்ளது தோன்றும் என்பது.

3. கே: அச்சுமாறிப் பிறக்கும் என்றால் எங்கே யிருந்து பிறக்கும்?

ப: காரணமாகிய சூக்கும உடம்பிலிருந்து காரியமாகிய தூல உடம்பு உண்டாகும்.

4. கே: காரணம் ஒன்றாயிருக்க அதிலிருந்து உண்டாகிற காரியம் பலவாயிருப்பது எப்படி?

ப: செய்கிறவனுடைய வல்லமையினாலே ஒன்று பலவாகும்.

5. கே: ஒன்றை பலவாகச் செய்ய ஒரு உதாரணம் சொல்லு?

ப: பொன்னாலாகிய ஒரு ஆரம் சங்கிலி முதலிய ஆபரணங்களாக மாறபடும்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 48.
(சூக்குமம்...... போல்)

1. கே: சூக்கும உடம்பிலிருந்து தூல உடம்புகள் தோன்றும் என்பதற்கு ஒரு உதாரணங்கூறு?

ப: மரவேரிலிருந்து வேறும் ஒரு மரம் தோன்றுவதாம்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 49.
(விதிப்படி... ...தாமே)

1. கே: அருத்தாபத்தி யென்பது என்ன?

ப: பகலில் உண்ணாள் என்றால் இரவில் உண்பாள் என்பது பொருள்.

2. கே: தூல உடம்புகெட்டபோது சூக்கும உடம்பும் அழியும் என்றால் என்ன குற்றம்?

ப: தூல உடம்பு தோன்றும்போது சூக்கும உடம்பிலிருந்து தோன்றும் என்பதற்கே உவமை சொல்லப்பட்டதே அல்லாமல் தூல உடம்பு கெட்டபோது சூக்கும உடம்பும் கெடும் என்பது பொருந்தாது.

3. கே: சூக்கும உடம்பிலிருந்து தூல உடம்பு தோன்றும் என்பதற்கு உதாரணம் சொல்லு?

ப: சந்திரனுக்கு பதினாறு கலைகள் இருந்தன. அவற்றில் ஒருகலை அழியாமலிருக்க அதிலிருந்து மற்றைக் கலைகள் தோன்

றுவதும் ஒடுங்குதலும்போல காரணமாகிய சூக்கும உடம்பு அழியாமலிருக்க அதிலிருந்து தூல உடம்புகள் தோன்றும் என்பதாம்.

4. கே: ஆசங்கை என்பதற்குப் பொருள் என்ன?
ப: சந்தேகம், அல்லது வினு.

5. கே: பாகதச் சிதைவு என்ருல் பொருள் என்ன?
ப: சிறிதுபாகம் குறைவுடையது.

6. கே: ஐம்பெரும் பூதங்கள் எவை?
ப: (1) பிருதிவி, (2) அப்பு, (3) தேயு, (4) வாயு, (5) ஆகாசம்.

7. கே: சூக்கும பூதங்கள் எவை?
ப: தன்மாத்திரைகள்.

8. கே: தன்மாத்திரைகள் எவை?
ப: (1) சத்தம் (2) பரிசம் (3) ரூபம் (4) ரசம் (5) கந்தம்

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 50.
(தூலமாமுரு.........போது)

1. கே: தூல உடம்புக்கு முதற்காரணம் எது?
ப: சூக்கும உடம்பு.

2. கே: சூக்கும உடம்புக்கு முதற்காரணம் எது?
ப: மூலப்பகுதி.

3. கே: மூலப்பகுதிக்கு முதற்காரணம் எது?
ப: மோகினி.

4. கே: பரம முதற்காரணம் எது?
ப: மோகினியே பரமமுதற்காரணம்.

5. கே: குண்டலினி சத்தி என்பது எது?
ப: விந்து சத்தியாம்.

6. கே: விந்து சத்தி எப்படிப் பட்டது?
ப: தூல உடம்புக்கும், சூக்கும உடம்புக்கும், மூலப்பகுதிக்கும், மோகினிக்கும், வியாபகமாயுள்ளது. சுத்தமாயிருப்பது

7. கே: இருவகைப் பிரபஞ்சம் எவை?
   ப: சுத்தப்பிரபஞ்சம், அசுத்தப்பிரபஞ்சம்.

8. கே: சுத்தப்பிரபஞ்சம் எது?
   ப: குண்டலினி சத்தி

9. கே: அசுத்தப் பிரபஞ்சம் எவை?
   ப: தூல உடம்பு, சூக்கும உடம்பு, மூலப்பகுதி, மோகினி என்பவைகளாம்.

10. கே: சுத்தப்பிரபஞ்சம், அசுத்தப் பிரபஞ்சம் ஆகிய இரண்டும் எப்பொழுது உண்டாவன? ஏன் உண்டாவன?
   ப: ஆன்மா பக்குவம் அடைதற்காகவும் சிவத்தினைச் சேர்தற்காகவும் பெத்த காலத்து உண்டாவன.

11. கே: பெத்தகாலம் என்பது எது?
   ப: 36 கருவிகளோடும் கூடியிருக்கிற காலம்.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 51
(அரன்விதி………சூட்டும்)

1. கே: அவத்தை என்பதற்குப் பொருள் என்ன?
   ப: நிலை.

2. கே: இறைவனுக்குரிய அவத்தைகள் எவை?
   ப: (1) இலயம் (2) போகம் (3) அதிகாரம்

3. கே: இலயம் என்றால் என்ன? சூ. 1, அ. 2, செ. 31-ல் கே. 9, 10, 11-ஐ பார்.
   ப: ஒடுக்கும் நிலை.

4. கே: போகம் என்றால் என்ன?
   ப: காத்தல் நிலை.

5. கே: அதிகாரம் என்றால் என்ன?
   ப: படைத்தல் நிலை.

6. கே: நோய்கள் எவை? மருந்துகள் எவை?
   ப: மலமும், கன்மமும் நோய்கள், தநு, கரணம் முதலானவை, மருந்து.

சூத்திரம் 2, அதிகரணம் 2, செய்யுள் 52.
(எழுமுடல்.......முன்னேன்)

1. கே: மாயேயம் என்பது என்ன?
ப: மாயையின் காரியம். அதாவது உலகமெல்லாம் மாயேயம்.

2. கே: முதல்வன் உயிர்களுக்குள்ள மலத்தை எதனுல் நீக்குவன்?
ப. மலத்தை மலத்தால் நீக்குவன்.

3. கே: யாரைப்போல நீக்குகிருன்?
ப: துணியிலுள்ள அழுக்கை, சாணி, உவர் மண்ணுகிய அழுக்கால் நீக்குகிற வண்ணுனைப்போல.

சூத்திரம் 2, அதிகரணம் 3, செய்யுள் 53.
(நித்தமாய்.........மன்றே)

1. கே: உலகுக்கு முதற்காரணம் எது?
ப: மாயை.

2. கே: மாயையின் இலக்கணங்கள் எவை?
ப: நித்தமாய், அருவாய், ஒன்ருய். உலகம் உண்டாக விதையாய், சடமாய், எங்கும் நிறைந்ததாய், முதல்வனுக்கு பரிக்கிரக சத்தியாய், தநு, கரண, புவன, போகமாய், உயிர்களுக்கு விபரீத உணர்வைச் செய்வதாய் உள்ளது.

3. கே: பரிக்கிரக சத்தி என்ருல் என்ன?
ப: தொழிலுக்குக் காரணமாயிருக்கிற கிரியா சத்தி.

4. கே: அநிர்வசனம் என்ருல் பொருள் என்ன?
ப: இன்னதென்று சொல்லமுடியாதது.

5. கே: முக்குணங்கள் எவை?
ப: சாத்வீகம், தாமதம், இராசதம்.

சூத்திரம் 2, அதிகரணம் 3, செய்யுள் 54.
(மாயையிற்.........எல்லாம்)

1. கே: மாயையிலிருந்து உண்டாவன எவை?

ப: காலதத்துவமும், நியதி தத்துவமும், கலாதிகளும், தோன்றும்.

2. கே: காலதத்துவம் எத்தனை வகைப்படும்?

ப: (1) இறந்தகாலம் (2) நிகழ்காலம் (3) எதிர்காலம் என மூன்று வகைப்படும்.

3. கே: காலதத்துவத்துக்கு என்ன என்ன தொழில்கள் உண்டு.

ப: தோற்றம், நிலை, இறுதி என்னும் முத்தொழில்கள் உண்டு.

4. கே: காலதத்துவம் தனக்குரிய முத்தொழில்களால் என்ன செய்யும்?

ப: தனக்குக் கீழுள்ள, உடலும், உலகுமாகிய, காரியப் பிரபஞ்சத்தை காலவரையறையில் படுத்தி கன்மத்தை வரை யறை செய்யும்.

சூத்திரம் 2, அதிகரணம் 3, செய்யுள் 55.
(நியதி ....பண்ணும்)

1. கே: மாயையிலிருந்து முதன் முதலாக எந்த தத்துவம் தோன்றும்?

ப: கால தத்துவந்தோன்றும்.

2. கே: கால தத்துவத்துக்குப் பிறகு எது தோன்றும்?

ப: மாயையிலிருந்தே நியதி தத்துவந் தோன்றும்.

3. கே: நியதி தத்துவத்தின் செய்கை என்ன?

ப: அவரவர்கள் செய்த கன்மத்தை அவரவர்களே அநு பவிக்கும்படி முதல்வனுடைய ஆணையால் நியமிக்கும்.

4. கே: நியதிக்குப் பிறகு எந்த தத்துவந் தோன்றும்?

ப: அந்த மாயையிலிருந்தே கலை என்கிற தத்துவந் தோன்றும்

6. கே: கலை என்கிற தத்துவத்தின் செயல் என்ன?

ப: ஆணவத்தை சிறிது நீக்கி, கிரியா சத்தியை விளக்கி, முதல்வன் ஆணையால் வினைக்கீடாக வருகிற போகத்தில் செலுத்தி நிற்கும்.

6. கே: பின் எந்த தத்துவம் எதிலிருந்து தோன்றும்?
ப: வித்தியா தத்துவம் கலையிலிருந்து தோன்றும்.

7. கே: வித்தியா தத்துவம் என்ன செய்யும்?
ப: அறிவை சிறிதே உதிக்கப் பண்ணும். (அதாவது) ஆன்மாவினுடைய ஞானசக்தியை ஏகதேசத்தில் விளக்கி முதல்வனுடைய ஆணையால் போகத்தில் செலுத்தி நிற்கும்.

சூத்திரம் 2, அதிகரணம் 3, செய்யுள் 56.
(வித்தை.........நிற்பனன்றே)

1. கே: வித்தியா தத்துவத்திலிருந்து எந்த தத்துவம் தோன்றும்?
ப: அராக தத்துவந் தோன்றும்.

2. கே: அராக தத்துவம் என்ன செய்யும்?
ப: இச்சா சத்தியை விளக்கி போகத்தில் செலுத்தி நிற்கும்.

3. கே: பஞ்ச கஞ்சுகம் எவை? சூ. 2, அ. 2, செ. 36, கே. 9-ஐ பார்.
ப: காலம், நியதி, கலை, வித்தை, அராகம்.

4. கே: புருட தத்துவம் என்பது எது?
ப: பஞ்சகஞ்சுகங்களையும் உடைய உயிர், இச்சை, கிரியை, ஞானம் என்கிற மூன்றினையும் மருவி பொதுவகையால் புருட தத்துவம் எனப் பெயர்பெறும்.

5. கே: உன் முகம் என்றால் என்ன?
ப: நேர் முகம்.

6. கே: பொதுவகையால் உயிர் புருடதத்துவம் எனப் பெயர் பெறும் என்றால் சிறப்பு வகையால் அந்த உயிர் புருட தத்துவமென எப்போது பெயர்பெறும்?
ப: மூலப்பகுதியில் தோன்றுகிற, அவிச்சை, அஞ்ஞானம் பஞ்சகிலேசமும் உண்டானபோது.

7. கே: புருடதத்துவம் என்பது எது?
ப: போகத்தில் உன்முகமாகிய உயிரே புருடதத்துவம்.

சூத்திரம் 2, அதிகரணம் 3, செய்யுள் 57.
(வருங்குண.........பெத்தமாமே)

1. கே: கலையிலிருந்து, வித்தையும், வித்தையிலிருந்து அராகமுந் தோன்றினபின் இன்னும் எதுதோன்றும்?

ப: மூலப் பிரகிருதி தோன்றும். (அவ்வியக்த குணவடிவாயிருக்கும்.)

2. கே: அவ்வியக்த குணவடிவம் என்றால் என்ன?

ப: பிரிக்கமுடியாததாய், சாத்விகம், இராசதம், தாமதமாகிய மூன்று குணங்களும் சேர்ந்தே இருப்பது.

3. கே: மூலப் பிரகிருதியிலிருந்து எந்த தத்துவம் தோன்றும்?

ப: குணதத்துவந் தோன்றும், அவிச்சையுந் தோன்றும்.

4. கே: அவிச்சை எப்படிப் பட்டது?

ப: விபரீத உணர்வை உடையது.

5. கே: விபரீத உணர்வு என்றால் என்ன?

ப: ஒன்றை மற்றொன்றாக நினைப்பது. (பழுதையை பாம்பென நினைப்பது)

6. கே: குணதத்துவம் எத்தனைவகை?

ப: (1) சாத்விகம் (2) ராசதம் (3) தாமதம்

7. கே: வியக்தம் என்றாலென்ன? அவ்வியக்தம் என்றால் என்ன?

ப: பிரிக்கக்கூடியது, பிரிக்க முடியாதது.

8. கே: சாத்விகம், ராசதம் தாமதம் என்கிற மூன்று குணங்களும் எத்தனை வகைப்படும்?

ப: சாத்துவிகத்தில் சாத்துவிகம், சாத்துவிகத்தில் ராசதம், சாத்துவிகத்தில் தாமதம் எனவும், ராசதத்தில் ராசதம், ராசதத்தில் சாத்துவிகம், ராசதத்தில் தாமதம் எனவும், தாமதத்தில் தாமதம், தாமதத்தில் சாத்துவிகம். தாமதத்தில் ராசதம் எனவும் ஒன்பது வகைப்படும்.

9. கே: அந்த குணதத்துவத்திலிருந்து எந்த தத்துவந் தோன்றும்?

ப: புத்தி தத்துவந் தோன்றும். ஆனாலும் குணவடிவாகவே இருக்கும்.

சூத்திரம் 2. அதிகரணம் 3, செய்யுள் 58.
(சித்தமாம்.........நிற்கும்)

1. கே: புத்தி தத்துவம் எப்படி நிற்கும்?
ப: அந்த அந்த உயிர்கள் செய்த புண்ணிய பாவங்கள் தன்னிடத்தில் சேரப்பெற்றும், அந்த இருவினைக்கீடாக வந்த விடயத்தை இஃது இதுவென நிச்சயித்தும், நிச்சயித்தபின்னர் சுக துக்கமோக வடிவாய் பரிணமித்தும், பரிணமித்தவழி உயிரின் அறிவு தொழில்களுக்கு விடயமாகியும், முதல்வன் ஆணையால் நிற்கும்.

2. கே: சித்தமாம் அவ்வியக்தம் என்பதற்கு என்னபொருள்?
ப: சித்திக்கப்பட்டதாகிய மூலப்பகுதி என்பது பொருள்.

3. கே. சித்தமாம் அவ்வியக்தம் என்பதனை சித்தத்தின்மேல் வைத்து ஏன் கூறவில்லை?
ப: சித்தம் என்பது மனம் தோன்றின பின்பு தோன்றுவது, மனத்துள் அடங்கி நிற்பது. ஆதலால் முன்னர் கூறவில்லை.

4. கே: பரிணமித்தல் என்றால் பொருள் என்ன?
ப: மயங்குதல்.

சூத்திரம் 2, அதிகரணம் 3, செய்யுள் 59
(ஆங்காரம்.........என்றே)

1. கே: புத்தி தத்துவத்திலிருந்து எந்த தத்துவம் தோன்றும்?
ப; ஆங்கார தத்துவந் தோன்றும்.

2. கே: ஆங்காரம் எப்படிப்பட்டது?
ப: (1) என்னோடு ஒப்பாவார் எவரும் இல்லையென நிற்கும் (2) அகந்தைக்கு வித்தாய் நிற்கும் (3) வாயில் காட்சிக்கு விடயமாய்த் தோன்றிய தொன்றனை இது இன்னதென புத்தி தத்துவம் நிச்சயிக்கும் படியாக, யான் என்றும் எனது என்றும் புத்தி தத்துவத்தோடுகூடி எழுந்து ஆன்மாவோடு வேற்றுமையின்றி நிற்கும்.

3. கே. அகந்தைக்கு வித்தாய் என்பதற்குப் பொருள்என்ன?
ப: செருக்குக்கு விதையாய் என்பது பொருள்.

4. கே: வாயில் காட்சி என்றால் என்ன?

ப: ஐம்பொறிகளால் அறிவது. (அதாவது) மெய், வாய், கண், மூக்கு, செவிகளாலறிவது.

5. கே: அந்த ஆங்காரம் எத்தனை வகைப்படும்?

ப: (1) தைசத அகங்காரம், (2) வைகாரிகாங்காரம், (3) பூதாதி அகங்காரம்.

6. கே: ஏன் இப்படி மூன்று வகைப்படும்?

ப: உயிர்களுக்குள்ள குணவேற்றுமையால் மூன்று வகைப்படும்.

7. கே: புத்தி தத்துவத்தின் செய்கை என்ன?

ப: இது இன்னதென நிச்சயிக்கும்.

சூத்திரம் 2, அதிகரணம் 3, செய்யுள் 60.
(மனமது.........முன்னோர்)

1. கே: தைசத அகங்காரத்திலிருந்து எந்த தத்துவந் தோன்றும்?

ப: மனமும் ஞானேந்திரியங்களும் தோன்றும்.

2. கே: ஞான இந்திரியங்கள் எவை?

ப: மெய், வாய், கண், மூக்கு, செவி

3. கே: மனத்தின் தொழில் என்ன?

ப: மனம் நினைக்கும் (அதாவது) சித்தமாய் நின்று சிந்திக்கும். பிறகு அதனிடத்தில் சந்தேகித்து நிச்சயிக்கிறதாகிய ஆசையை உண்டுபண்ணும்.

4. கே: வைகரி அகங்காரத்திலிருந்து எவை தோன்றும்?

ப: கன்மேந்திரியம் ஐந்தும் தோன்றும்.

5. கே: கன்ம இந்திரியங்கள் எவை?

ப: வாக்கு, பாதம், பாணி. பாயுரு, உபத்தம்.

6. கே: வாக்கு, பாதம், பாணி பாயுரு, உபத்தம் என்றால் பொருள் என்ன?

ப: வாக்கு - வாய்; பாதம் - கால்; பாணி - கை; பாயுரு - மலம் போகும் வழி; உபத்தம் - ஆண்குறி பெண்குறி-

சூத்திரம். 2, அதிகரணம். 3, செய்யுள். 61,
(நற்செவி........ என்றே)

1. கே: ஞான இந்திரியங்களுக்கு வடமொழிப் பெயர் எவை?
சுரோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம்.

2. கே: இவைகளுக்கு தென்மொழிப் பெயர் என்ன?
ப: சுரோத்திரம் - காது; தொக்கு - மெய்; சட்சு - கண்; சிங்குவை - நாக்கு; ஆக்கிராணம் - மூக்கு.

3. கே: ஞானேந்திரியத்துக்கு வேறுபெயர் என்ன?
ப: புத்தி யிந்திரியம்.

4. கே: ஞானேந்திரியங்களுக்கு விடயங்கள் எவை?
ப: சுரோத்திரத்துக்கு விடயம் சத்தம்; துவக்குக்குவிடயம் பரிசம்; சட்சுக்கு விடயம் உருவம்; சிகுவைக்கு விடயம் இரதம்; ஆக்கிராணத்துக்கு விடயம் கந்தம்.

5. கே: பூதங்கள் எவை? பூதகுணங்கள் எவை?
ப: பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், பூதங்களாம். சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தங்கள், பூதகுணங்களாம்.

சூத்திரம் 2, அதிகரணம் 3, செய்யுள் 62.
(வாக்கொடு.........ஓதினரே)

1. கே: கன்மேந்திரியங்களின் தொழில்கள் என்ன?
ப: வாக்கு, வசனிக்கும்; பாதம், நடக்கும்; கை, தானம் பண்ணும்; பாயு, மலத்தைக் கழிக்கும்; உபத்தம், ஆனந்தப் படும்; (கமனம் - நடத்தல்) விசர்க்கம் - கழித்தல்.

சூத்திரம் 2, அதிகரணம் 3, செய்யுள் 63.
(வாயாதி....... ஆன்மா)

1. கே: புறக்கருவிகள் எவை?
ப: கன்மேந்திரியம் ஐந்தும், ஞானேந்திரியம் ஐந்துமாம்.

2. கே: புறக்கருவி யென்றல் பொருள் என்ன?
ப: உடம்பின் புறத்திலே தோன்றிவிடயிக்கும் கருவி களாம்.

3. கே: உட்கருவிகள் எவை?
ப: மனம், புத்தி, சித்தம், ஆங்காரம்.

4. கே: உள் அந்தக் கரணங்கள் எவை?
ப: காலம், நியதி, கலை, வித்தை, அராகம்.

சூத்திரம் 2, அதிகரணம் 3, செய்யுள் 64.
(ஓசை.........புரியட்டகந்தான்)

1. கே: பூதாதி அகங்காரத்திலிருந்து தோன்றுவன யாவை?
ப: தன்மாத்திரை ஐந்தும் தோன்றும்.

2. கே: தன் மாத்திரைகள் எவை?
ப: சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்.

3. கே: புரியட்டகம் உடம்பு எவை?
ப: சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம், மனம், புத்தி, அகங்காரமாகிய எட்டுங் கூடிய உடம்பாம்.

4. கே: தன்மாத்திரையாகிய, சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்கிற ஐந்துக்கும், ஞானேந்திரியங்களின் விடயங்களாகிய சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்கிற ஐந்துக்கும் வேறுபாடு என்ன?
ப: தன்மாத்திரையாகிய ஐந்துக்கும் காரண பூதமென்று பெயர், விடயங்களாகிய ஐந்துக்கும் புலன்கள் என்று பெயர்.

சூத்திரம் 2, அதிகரணம் 3, செய்யுள் 65.
(சாற்றிய.........பாவத்தாமே)

1. கே: தன்மாத்திரையிலிருந்து தோன்றபவை எவை?
ப: பஞ்சபூதங்கள்.

2. கே: பஞ்சபூதங்கள் எப்படி தோன்றுகின்றன?
ப: சத்தத்திலிருந்து ஆகாசமும், கந்தத்திலிருந்து பிருதிவியும், பரிசத்திலிருந்து வாயுவும், ரூபத்திலிருந்து நெருப்பும், ரசத்திலிருந்து அப்புவும், தோன்றுகின்றன.

3. கே: தூலபூதங்கள் எவை?
ப: பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம்.

4. கே: சூக்கும பூதங்கள் எவை?
ப: தன்மாத்திரை ஐந்துமாம்.

5. கே: வியத்தி ரூபம் என்றால் என்ன?
ப: இயைந்து நிற்பதாம்.

சூத்திரம் 2, அதிகரணம் 3, செய்யுள் 66.
(இரந்தரமாகி ......கொள்ளே)

1. கே: பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம். இவற்றின் குணங்களும் தொழில்களும் எவை?

ப: (பிருதிவி - மண்) அது கடினமாதலாகிய குணமும், தரித்துக்கொள்ளுதலாகிய தொழிலையும் உடையது. (அப்பு-நீர்) அது குளிர்தலாகிய குணமும், பதஞ்செய்தலாகிய தொழிலேயும் உடையது. (தேயு - நெருப்பு) அது சுடுதலாகிய குணமும் ஒன்றுவித்தலாகிய தொழிலையும் உடையது. (வாயு - காற்று) அது சலித்தலாகிய குணமும், திரட்டுதலாகிய தொழிலையும் உடையது. (வான் - ஆகாயம்) அது வெளிப்படுதலாகிய குணமும், இடங்கொடுத்தலாகிய தொழிலும் உடையது.

சூத்திரம் 2, அதிகரணம் 3, செய்யுள் 67.
(மண் புனல் ....வவ்வுமாமே)

1. கே: மண், புனல், அனல், கால், வெளி இவற்றின் வடிவுகள் எவை?

ப: மண் நாற்கோணம், புனல் பிறைவடிவம், அனல் முக்கோணம், காற்று அறுகோணம், வெளி வட்டம்.

2. கே: மண், புனல், அனல், கால், வெளி இவற்றின் நிறங்கள் எவை?

ப: மண் பொன்மை நிறம்; புனல் வெண்மை; அனல் செம்மைநிறம்; காற்று கறுப்புநிறம்; வெளி தூமவடிவு; தூமம் - புகை)

3. கே: மண், புனல், அனல், கால், வெளி, இவுற்றின் எழுத்துக்கள் எவை?

ப: மண் லகாரம்; புனல் வகாரம்; அனல் ரகாரம்; கால் யகாரம்; வெளி ஹகாரம்.

4. கே: பீசம் என்றால் என்ன? கோகநதம் என்றால் என்ன?
ப: பீசம் எழுத்து; கோகநதம் தாமரை.

சூத்திரம் 2, அதிகரணம் 3, செய்யுள் 68.
(குறிகள் ... ... நீர்மை)

1. கே: மண், புனல், அனல், கால், வெளி இவற்றின் அடையாளங்கள் எவை?

ப: மண்ணுக்கு அடையாளம் வச்சிரம்; புனலுக்கு தாமரை; அனலுக்கு சுவத்தி; காற்றுக்கு அறுபுள்ளி; வெளிக்கு அமுத விந்து;

2. கே: மண், புனல், அனல், கால், வெளி, இவற்றின் அதிதெய்வங்கள் எவை?

ப: மண்ணுக்கு அயன்; புனலுக்கு மால்; அனலுக்கு உருத்திரன்; காற்றுக்கு மகேசுரன்; வெளிக்கு சதாசிவம்.

3. கே: மண், புனல், அனல், கால், வெளி இவற்றின் பூதங்கள் எவை?

ப: மண்ணுக்கு பிருதிவி; புனலுக்கு அப்பு; அனலுக்கு தேயு; காற்றுக்குவாயு; வெளிக்கு ஆகாயம்.

4. கே: மண், புனல், அனல், கால், வெளி, இவற்றிற்கு அத்துவாக்கள் எவை?

ப: மண்ணுக்கு மந்திராத்துவா; புனலுக்கு பதாத்துவா; அனலுக்கு வன்னத்துவா; தேயுவுக்கு புவனத்துவா; வாயுவுக்கு தத்துவாத்துவா; வெளிக்கு கலாத்துவா.

5. கே மந்திரம் முதலிய அத்துவாக்கள் எவை?

ப: (1) மந்திராத்துவா (2) பதாத்துவா (3) வன்னத்துவா (4) புவனத்துவா (5) தத்துவாத்துவா (6) கலாத்துவா.

6. கே: நிவிர்த்தி முதலிய கலைகள் எவை?

ப: நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியதீதாகலை.

7. கே: மண். புனல், அனல், கால் வெளிகளுக்கே அல்லாமல் வேறு எவைகளுக்கு அடையாளங்கள், அதிதெய்வங்கள், பூதங்கள், அத்துவாக்கள், உண்டு?

ப: நிவிர்த்தி முதலிய ஐந்து கலைகளுக்கும் உண்டு.

8. கே: அகப்பூதங்கள் என்றால் எவை?

ப: தன்மாத்திரைகள்.

9. கே: அகப்பூதங்கள் அ தா வ து தன்மாத்திரைகளின் இயல்பு, எந்த செய்யுளால் அறியலாம்?

ப: சூ. 2, அ. 3, செ. 64 (ஓசை நற்பரிசம் என்ற செய்யுளில் நேச இந்திரியம் என்றதால் அறியலாம்)

10. கே: அகப்புறப் பூதங்கள் எவை?

ப: புரியட்டக உடம்பு,

11. கே: அகப்புறப் பூதங்களின் இயல்பு, எந்த செய்யுளால் அறியலாம்?

ப: சூ. 2, அ. 3, செ. 64. (ஓசை நற்பரிசம் என்ற செய்யுளில் ஆசைசேர் என்றதால் அறியலாம்.

12. கே: தத்துவங்களின் தொகை எத்தனை?

ப: 36.

சூத்திரம் 2, அதிகரணம் 3, செய்யுள் 69.
(சுத்ததத்துவங்கள் ....செப்பில்)

1. கே: சைதன்னியம் என்றால் என்ன?

ப: சத்து என்பதாம்.

2. கே: சைதன்னியங்கள் எவை?

ப: சுத்ததத்துவங்கள் ஐந்துமாம்.

3. கே: சுத்ததத்துவங்கள் ஐந்தும் எப்படிப்பட்டது?

ப: சடமாயினும், சிற்சத்திக்கு சுதந்திரவடிவமாம்.

4. கே: புருடதத்துவம் எப்படிப்பட்டது?

ப: சித்த சித்தாம்.

சூத்திரம் 2, அதிகரணம் 3, செய்யுள் 70.
(ஐந்து ....கண்டமாமே)

1. கே: சுத்ததத்துவங்கள் எவை?

ப: (1) சுத்தவித்தை (2) ஈசுரம் (3) சாதாக்கியம் (4) சத்தி (5) சிவம்

2. கே: சுத்தா சுத்ததத்துவங்கள் எவை?

ப: (1) காலம் (2) நியதி (3) கலை (4) வித்தை (5) அரகம் (6) புருடன் (7) மாயை.

3. கே: மிச்சிரம் என்றால் பொருள் என்ன?

ப: கலந்தது என்பதாம்.

4. கே: அசுத்த தத்துவங்கள் எவை?

ப: ஞானேந்திரியம் 5; கன்மேந்திரியம் 5; தன்மாத்திரை 5; பூதம் 5, அந்தக்கரணம் 4. ஆக 24.

5. கே: புமான் என்றால் பொருள் என்ன?

ப: ஆன்மா.

6. கே: பிரேரகாண்டம் எவை?

ப: சுத்ததத்துவம் ஐந்தும் அ தா வ து சிவதத்துவம் ஐந்தும்.

7. கே: போக சயித்திருகாண்டம் எவை?

ப: மிச்சிரதத்துவம் ஏழுமாம். அதாவது வித்தியாதத்துவம் ஏழுமாம்.

8. கே: போக்கிய காண்டம் எவை?

ப: ஆத்தும தத்துவம் 24-மாம். அதாவது அசுத்த தத்துவம் 24-மாம்.

சூத்திரம் 2, அதிகரணம் 3, செய்யுள் 71.
(தத்துவரூப ...... தத்துவங்காண்)

1. கே: காரியப் பிரபஞ்சம் எவை?

ப: 36 தத்துவங்களுமாம்.

2. கே: 36 தத்துவங்களின் வடிவம் எப்படிப்பட்டது?

ப: அருவம், உருவம், அருவுருவமாயுள்ளது.

3. கே காரியப் பிரபஞ்சம் எதிலிருந்து உண்டாயிற்று?

ப: மாயையிலிருந்து உண்டாயிற்று.

4. கே: காரியப் பிரபஞ்சம் எத்தனை வகைப்படும்.

ப: தூலம், சூக்குமம், அதிசூக்குமம் என மூத்திறப்படும்.

5. கே: இந்த மூன்றுவகையை எப்படிக் கூறலாம்?

ப: தூலம் பொது, சூக்குமம் பொதுச்சிறப்பு, அதி சூக்குமம் சிறப்பு என்று கூறலாம்.

6. கே: அணுபக்கம் என்றால் என்ன?

ப: தத்துவங்களேயாம்.

7. கே: சம்பு பக்கம் என்றால் என்ன?

ப: தத்துவங்களின் அதிதெய்வங்கள்.

சூத்திரம் 2, அதிகரணம் 3, செய்யுள் 72.
(தத்துவம்.........வாகும்)

1. கே: 36 தத்துவங்களும் சங்கார காலத்தில் எங்கே ஒடுங்கும்?

ப: அந்தந்த தத்துவங்கள் அவ்வவற்றின் காரணங்களில் ஒடுங்கும்.

2. கே: நிலம் முதல் மூலப்பகுதி ஈறாய 24 தத்துவங்கள், யாரால் ஒடுங்கும்?

ப: ஸ்ரீகண்டருத்திரரால், மூலப்பகுதி தத்துவத்தில் ஒடுங்கும்.

3. கே: மூலப்பகுதிக்கு மேலுள்ள ஆறு தத்துவங்களும், யாரால் ஒடுங்கும்?

ப: வித்தையீசராகிய அனந்தரால், பிரகிருதிமாயையில் ஒடுங்கும்.

4. கே: சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம் மூன்றும், யாரால் ஒடுங்கும்?

ப: லயத்தில் நின்ற சிவனால் ஒடுங்கும்.

5. கே: சத்தி தத்துவம், சிவ தத்துவம் இரண்டும், யாரால் ஒடுங்கும்?

ப: சுத்த சிவனால் ஒடுங்கும்.

6. கே: சுத்தசிவன், லயசிவன், அனந்தர், ஸ்ரீகண்டர், இவர்களின் வேற்றுமை எவை?

ப: சுத்தசிவன் ஒருவனே, நித்தியன். மற்றவர் அநித்தியர்,

7. கே: மூலப்பகுதிக்கும், குணதத்துவத்திற்கும் வேறுபாடு என்ன?

ப: மூலப்பகுதி, அவ்வியக்தமாயுள்ளது. குணதத்துவம், வியக்தமாயுள்ளது.

8. கே: அவ்வியக்தம் என்றால் பொருள் என்ன?

ப: குணங்கள் வேறுபடாமல் சேர்ந்தே யிருப்பது.

9. கே: வியக்தம் என்றால் பொருள் என்ன?

ப: குணங்கள் வேறுவேறாய்ப் பிரிந்திருப்பதாம். (இது பரிணாமமல்ல)

சூத்திரம் 2, அதிகரணம் 4, செய்யுள் 73.
(மொய்தரு……… இறைக்கே)

1. கே: சமயங்கள் எத்தனை வகைப்படும்?

ப: (1) அகச்சமயம் (2) அகப்புறச்சமயம் (3) புறச்சமயம் (4) புறப்புறச்சமயம் என 4-வகை.

2. கே: புறச்சமயம், புறப்புறச் சமயம், அகப்புறச் சமயம். இம்மூன்றுக்கும் உரியதெய்வம், எங்கே நிலை பெற்றிருக்கும்?

ப: பூதம் முதல், அசுத்தமாயா தத்துவம் ஈறாக, ஒவ்வொரு தத்துவங்களில், நிலைபெறும்.

3. கே: சைவம் எப்படிப்பட்டது?

ப: ஏகன், அநேகன், இருள், கருமம். மாயை இரண்டு, இந்த ஆறு பொருள்களின் உண்மையை விளக்குவது, அறுவகைச் சமயத்துக்குந் தலைமையானது.

4. கே: அறுவகை சமயத்துக்கும், மேலான சமயமாகிய சைவத்துக்குத் தெய்வமாய் நிற்பது எது?

ப: அதிகாரசிவம், போகசிவம், லயசிவங்களாம்.

5. கே: அதிகார சிவம் என்றால் எது?

ப: சுத்தவித்தை, ஈசுர தத்துவத்திலிருந்துகொண்டு படைக்கும் சிவம்.

6. கே: போக சிவம் என்றால் எது?

ப: சதாசிவ தத்துவத்திலிருந்துகொண்டு காக்கும் சிவம்.

7. கே: லயசிவம் என்றால் எது?

ப: சிவதத்துவம், சத்தி தத்துவத்திலிருந்து கொண்டு பிரபஞ்சத்தை ஒடுக்கும் சிவம்.

8. கே: அதிகாரசிவம், போகசிவம், லயசிவம் இவை எங்கே நிலைபெறும்.

ப: சுத்தவித்தை முதலியவாகப் பொருந்திய ஐந்து தத்துவங்களில் ஒவ்வொன்றில் நிலைபெறும்.

9. கே: சித்தாந்த சைவத் தெய்வமாகிய சுத்தசிவம் எங்கே நிற்கும்?

ப: 36 தத்துவங்களையும் கடந்து நிற்கும்.

சூத்திரம் 2, அதிகரணம் 4, செய்யுள் 74.
(சிவசத்தி.........என்பர்)

1. கே: இறைவன் எப்படி இருந்துகொண்டு தத்தம் தொழில்களைச் செய்வான்?

ப: சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், ஈசன், உருத்திரன், மால், அயன் என்று ஒன்றில் ஒன்றாகத் தோன்றி தத்தம் தொழில்களைச் செய்வன்.

2. கே: இந்த ஒன்பதிலும் எந்த எந்த திருமேனி கொண்டிருப்பன்?

ப: சிவம், சத்தி, நாதம், விந்துவில், அருவத் திருமேனி நான்கு கொண்டும், மகேசன், உருத்திரன், மால், அயனில் உருவத்திருமேனி நான்கு கொண்டும், சதாசிவனில், அருவத் திருமேனி ஒன்று கொண்டும், வேற்றுமையின்றி இருந்து தொழில்களைச் செய்வன்.

சூத்திரம் 2, அதிகரணம் 4, செய்யுள் 75.
(சத்தியாய் ...... நிற்பன்)

1. கே: சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், ஈசன், உருத்திரன், மால், அயன், என்கிற ஒன்பதில் சத்திபேதம் எவை?

ப: சத்தியும் விந்துவும் சத்திபேதம், மற்றவை சிவபேதம்

2. கே: சிவம், நாதம், சதாசிவன், ஈசன், உருத்திரன், மால், அயன், என்கிற ஏழு சிவபேதத்துக்கும் உரிய சத்திபேதம் எவை?

ப: சிவத்துக்கு சத்தி, நாதத்துக்கு விந்து, சதாசிவத்துக்கு மனோன்மணி, மகேசனுக்கு மகேசை, உருத்திரனுக்கு உமை, மாலுக்குத் திரு, அயனுக்கு வாணி.

3. கே: இறைவன் சிவபேதம் ஏழிலும் நின்று நடத்தும்போது பராசத்தி எப்படி நிற்பாள்?

ப: பராசத்தி இறைவனோடு, தாதான்மியமாய், துணையாய் நிற்பாள்.

சூத்திரம் 2. அதிகரணம் 4 செய்யுள் 76,
(சத்திதான் ....சத்திதானே)

1. கே: சத்தியும் சிவமும் எப்படி இசைந்து நிற்கும்?

ப: மரமும் காழ்ப்பும்போல சத்தியானது நாதம் முதலியவற்றில் கூடியிருக்கும், சிவம் சத்தி முதலியவற்றை அதிட்டித்து நிற்கும்.

சூத்திரம் 2, அதிகரணம் 3, செய்யுள் 77.
(சிவம்சத்தி ....தெரியுமன்றே)

1. கே: இறைவன் சத்தியும் சிவமுமாகச் செய்யும் செய்கையெல்லாம் எதற்காகச் செய்கிறான்?

ப: நம்மனோர்:பொருட்டாகச் செய்யும் நாடகமேயாம்.

2. கே: சத்தி தத்துவம் எதிலிருந்து தோன்றும்

ப: சிவ தத்துவத்திலிருந்து தோன்றும்

3. கே: சாதாக்கிய தத்துவம் எதிலிருந்து தோன்றும்

ப: சத்தி தத்துவத்திலிருந்து தோன்றும்

4. கே: பிரபஞ்சமெலாம் எதனால் தோன்றும்

ப: சத்தியும் சிவமும் புணர்தலால் தோன்றும்

5. கே: சத்தியும் சிவமும் புணர்ந்து பிரபஞ்சத்தைத் தோற்றுவித்தாலும் அவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்று சொல்லப்படுவார்கள்

ப: பிரமசாரி யென்றும், கன்னி யென்றும், சொல்லப்படுவார்கள்.

சூத்திரம் 2, அதிகரணம் 4, செய்யுள் 78.
(தனுகரண.........யாவன்)

1. கே: தத்துவங்களாலானவை எவை?

ப: தனு, கரண, புவன, போகங்களும்; பெத்தம் முத்திகளும்; பெத்தம் முத்திகளிற் படும் பேதங்களனைத்துமாம்.

2. கே: தத்துவங்களின் இயைபு எப்படி?

ப: உயிர்களோடு இயைவன. (முதல்வனோடு இயைவன அல்ல)

சூத்திரம் 2, அதிகரணம் 4, செய்யுள் 79.
(எல்லாமாய்.........புகுந்ததன்றே)

1. கே: தத்துவங்கள் உயிரினோடு எல்லாமாகி யடைந்தது எதற்காக?

ப: இருவினைகளை நுகர்வித்து நீக்குதற்காகவும், அதனால் பக்குவம் எய்தியவழி, மேலைக்கு, வித்ததாகாதபடி, தீக்கையால் அவற்றை நுகர்வித்து, பின்பு பற்றறக் கழியும் பொருட்டு, ஆணவமலம், போக்குதற்பொருட்டுமாம்.

சூத்திரம் 2, அதிகரணம் 4, செய்யுள் 80.
(ஒன்றதாய்.........நின்றே)

1. கே: கேவலம் என்றால் என்ன?

ப: ஆணவமலம் உயிரிற்சேர்ந்து ஆன்மாவின் அறிவையும் தொழிலையும் மலறத்து நிற்பது.

2. கே: ஆவாரக சத்தி யென்றால் என்ன?

ப: ஆன்மாவின் அறிவையும், தொழிலையும் மறைக்கும் சத்தி.

3. கே: போத்திருத்துவம் என்றால் என்ன?

ப: போகநுகர்ச்சிக்கு வினைமுதலாதலாம்.

4. கே: அதோநியாமிகா சத்தி என்றால் என்ன?

ப: போக்கிய சத்தியை உண்டு பண்ணுவது.

5. கே: ஆணவ மலத்தின் இயல்பு எவை?

ப: (1) எண்ணிறந்த உயிர்களிலும் செம்பில் களிம்பு போல, அநாதியே கலந்து நிற்பது. (2) கேவலத்தில் ஆவாரக சத்தியால் அஞ்ஞானத்துக்குக் காரணமாய் நிற்பது. (3) சகலத்தில் அதோநியாமிக சத்தியால் அஞ்ஞான நிகழ்ச்சிக்குக் காரணமாய் நிற்பது.

சூத்திரம் 2, அதிகரணம் 4, செய்யுள் 81
(மலமென.........கொள்ளே)

1. கே: மாயா காரியம் எவை?
ப: உலகு, உடல், கரணம் முதலியன.

2. கே: மாயாகாரியமே மறைத்தலைச் செய்யும் என்றால் குற்றம் என்ன?
ப: மாயாகாரியங்கள் உயிர்களுக்குவேறாக நின்று இச்சா ஞானக்கிரியைகளை எழுப்பும், அறிவை மறைக்காது.

3. கே: மலத்தின் செயல் என்ன?
ப: உயிரோடு ஒற்றித்து நின்று இச்சாஞானக் கிரியைகளை மறைக்கும்.

சூத்திரம் 2, அதிகரணம் 4, செய்யுள் 82-83
(மாயையே.........மாயே) (பரிதியை.........

1. கே: மாயையே உயிர்களினுடைய இச்சாஞானக் கிரியைகளை மறைத்து நிற்கும் என்பதற்கு நீ சொல்லுகிற உதாரணம் எது?
ப: சூரியனுடைய ஒளியை மேகம்வேறாய் நின்று மறைக்கும் என்பது.

2. கே: உயிர்களுக்கு மாயை நீங்கினால் இச்சா ஞானக் கிரியைகள் விளங்கும் என்பதற்கு நீ சொல்லும் உதாரணம் எது?
ப: சூரியனை மறைத்துக் கொண்டிருக்கிற மேகம் நீங்கினால் சூரியனுடைய சோதி விளங்கும் என்பதாம்.

3. கே: இந்த இரண்டு உதாரணங்களும் ஏன் பொருந்தாது?
ப: மேகம்போல மாயை மறைக்குமானால் மறைத்தலாலாகிய காரியம் சூரியனிடத்தில் உண்டானாற்போல உயிர்களிடத்தில் மறைத்தலா லாகிய காரியம் நடக்கவேண்டும். அது இல்லையாகலால் பொருந்ாது.

சூத்திரம் 2, அதிகரணம் 4, செய்யுள் 84.
(போதகாரியம்.......வேறுமன்றே)

1. கே: மாயைக்கும் மலத்துக்கும் வேறுபாடு என்ன?

ப: மலத்தாணுகிய அஞ்ஞானம், மேகத்தாலாகிய மறைவு போல அல்ல. உயிரோடுகலந்து குணம்போலத் தோன்றி நிற்பது. மாயை விருப்பத்தாலே ஆணவமாகிய இருள்கெட தீபம்போல, கலை முதலாகிய தத்துவங்களைத் தருவது. தொழிலில் இவ்விரண்டில், மலம் இருளைப்போன்றதாம். மாயை ஒளியைப்போன்றதாம். ஆகவே இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று பகைபோல.

சூத்திரம் 2, அதிகரணம் 4, செய்யுள் 85.

(புருடன்....... சீவன்)

1. கே: அவித்தை, குணி யென்பதற்குப் பொருள் என்ன?

ப: அவித்தை யென்பது அஞ்ஞானம், குணி யென்பதற்கு குணத்தையுடையது?

2. கே: அஞ்ஞானம் எதனிடத்தில் கலந்திருக்கிறது?

ப: உயிரினிடத்தில் கலந்திருக்கிறது.

3. கே: அஞ்ஞானத்தை உயிரின் குணம் என்ருல் என்ன குற்றம்?

ப: உயிர் சடமாதலால் கூடாது.

4. கே: குருடனுடைய கண்ணின், ஒளிக்குணத்தை, மறைத்து நிற்பது எது?

ப: படலம்.

5. கே: அந்தப்படலம் கண்ணினுடைய குணமா? வேரு?

ப வேறு.

6. கே: மலம் எப்படிப்பட்டது?

ப: மலம், அஞ்ஞானத்தைத் தன்னுடைய குணமாகக் கொள்ளும். தான் குணிப் பொருளாய் நிற்கும், சடமாகும்.

7. கே: பாடாண வாதிகளின் கொள்கை எது? சித்தாகாது.

ப: உயிருக்கு அறியாமையே குணம் என்பதாம் (இது பொருந்தாது)

சூத்திரம் 2. அதிகரணம் 4, செய்யுள் 86.

(மும்மலம்.........இன்னும்)

1. கே: மும்மலம் எவை?

ப: ஆணவம், கன்மம், மாயை

2. கே: கன்மம் என்பவை எவை?

ப: தன்மமும், அதன்மமுமாம்

3. கே: மாயை எப்படிப்பட்டது?

ப: நித்தமாயும், அருவாயுள்ளது.

4. கே: ஆணவம், மாயை, கன்மங்கள் எவைகளைப்போன்றவை?

ப: ஆணவம் உமி, கன்மம் முளை, மாயை தவிடு போன்றவை.

5. கே: ஆணவம், மாயை, கன்மம், இம்மூன்றும் என்ன செய்யும்?

ப: ஆணவம் போத்திருத்துவத்தையும், கன்மம் போகத்தையும், மாயை பந்தத்தையும் உண்டுபண்ணும்.

6. கே: போத்திருத்துவம் என்றால் என்ன?

ப: முளை தோன்றுவதற்கு நிமித்த காரணம்போல, போக நுகர்ச்சிக்குவினை முதலாதல் தன்மை.

7. கே: ஆணவம், மாயை, கன்மத்தோடு இன்னும் கூடிய மலங்கள் எவை?

ப: திரோதாயி, மாயேயம்

8 கே: போகத்தை உண்டுபண்ணுதல் என்றால் என்ன?

ப: உயிரின்கண் சுக துக்கங்களை முதற் காரணமாய் நின்று தோற்றுவித்தல், முளைத்தல் சத்தி முளையைத் தோற்றுவிப்பது போல.

9. கே: பந்தம் பண்ணுதல் எப்படி?

ப: சுக துக்கங்கள் தோன்றுவதற்கு துணைக்காரணமாய் இருக்கும், முளைக்கிறதற்கு தவிடு உடன் நிற்பது போல தனு கரண முதலியவற்றையும், உயிரையும், இயைவித்து நிற்கும்

சூத்திரம் 2, அதிகரணம் 4, செய்யுள் 87.
(மாயையின்.........நிற்கும்)

1. கே: மாயேயம் என்பது என்ன?

ப: மாயையின் காரியம்.

2. கே: மாயேயம் என்ன செய்யும்?

ப: உயிர்களின், அறிவு, இச்சை, செயல்களை ஏக தேசப்படுத்தும்

3. கே. ஏகதேசப்படுத்தும் என்ருல் என்ன?
ப: ஒன்ரென்ருய் அறியச் செய்யும்.

4. கே: திரோதாயி என்ருல் என்ன?
ப: அந்த அந்த மலங்களை அந்த அந்த தொழிலில் பாகம் வருவிக்கும், சிவசக்தியை மறைக்கும் சத்தியாம்.

5. கே: மாயேயம் மாயையில் அடங்காதோ? ஏன் வேறு கூறவேண்டும்.
ப; பந்திப்பதில் இரண்டுக்கும் வேற்றுமையுண்டு ஆதலால் வேறு வைக்கப்பட்டது.

6. கே: திரோதான சத்தி என்பது எந்த சத்தியை?
ப: பராசத்தியை.

சூத்திரம் 2, அதிகரணம் 4, செய்யுள் 88.
(மலம் மாயை ....மன்றே)

1. கே. கறங்கு, அலமாரும் என்பவற்றிற்குப் பொருள் என்ன?
ப: கறங்கு = காற்ருடி; அலமாரும் = சுழலும்.

2. கே: ஆணவம், மாயை, கன்மம், மாயேயம், திரோதாயி, இந்த ஐந்து மலங்களின் பயன் எவை?
ப: பிறப்பு இறப்புக்களுக்குக் காரணமாகும்.

சூத்திரம். 2, அதிகரணம். 4, செய்யுள். 89,
(அண்டசம்.........காரியங்கள்)

1. கே: நால்வகைத் தோற்றம் எவை?
ப: அண்டசம், சுவேதசம், உத்பித்சம், சராயுசம்,

2. கே: அண்டசம், சுவேதசம், உத்பித்சம், என்பவற்றின் பொருள் என்ன?
ப: அண்டசம் முட்டையில் தோன்றுவன, சுவேதசம் வியர்வவயில் தோன்றுவன. உத்பித்சம் வித்து வேர், கிழங்கிலிருந்து தோன்றுவன, சராயுசம் கருப்பையில் தோன்றுவன.

3. கே: எழுவகைப் பிறப்புக்கள் எவை?

ப: தேவர், மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம்.

4. கே: யோனி பேதங்கள் எத்தனை?

ப: 84 நூறாயிரம்

5. கே: எழுவகைத் தோற்றம், நால்வகைப் பிறப்பு, 84 நூறாயிர யோனி பேதங்களில் சுழலுகிறதை நீக்குதற்கு வழி எது?

ப: மானுடப் பிறப்பே வழியாம்.

6. கே: மானுடப்பிறப்பு எப்படிப்பட்ட அருமையுடையது?

ப: சமுத்திரத்தைக் கையால் நீந்தினதைப் போன்ற அருமையுடையது.

சூத்திரம் 2, அதிகரணம் 4, செய்யுள் 90.
(நார்பயில் ..... . ஏனுதே)

1. மானுடப்பிறவி எங்கே பிறத்தல் புண்ணியம்.

ப: வேதாகமங்கள் வழங்குகிற உத்தம நாட்டிலே பிறத்தல் புண்ணியம், அதிலும் கீழ்ஜாதியில் பிறவாமல் தவஞ் செய்தற்குரிய உத்தம சாதியில் தோன்றுதல் மேலானது. அதிலும் புறச்சமயங்களிலே செல்லாமல் உத்தம சமயத்தில் பிறத்தல் புண்ணியம்,

சூத்திரம் 2, அதிகரணம் 4, செய்யுள் 91.
(வாழ்வெனும்... பெற்றூரே)

1. கே: செருக்கு எவற்றால் உண்டாகும்?

ப: குலம், இளமை, கல்வி, செல்வம் அதிகாரங்களால் உண்டாகும்.

2. கே: யார் மலத்தாலாகிய துன்பம்நீங்கி வீடுபேறெய்துவர்?

ப: செருக்கு ஒழிந்து, செருக்குடையார் பின் சென்று, ஏக்கமடையாமல். உயர்ந்த சாதியிலே, உயர்ந்த குடியிலே, சைவசமயத்தில் எய்தும் புண்ணியப்பேறு எய்தி, சித்தாந்த நெறி உணர்ச்சியால், சிவபிரானை வழிபடப் பெறுவபர்களே வீடுபேறெய்துவர்.

சூத்திரம் 2, அதிகரணம் 4, செய்யுள் 92.
(மானுடப்பிறவி............அந்தோ)

1. கே: அலமருதலை நீக்குதற்குரிய பணி எவை?

ப: மனத்தால் நினைத்தல், வாயால் வாழ்த்தல், மந்திரங்கள் சொல்லல், காயத்தால் பணிதலாம்.

2. கே: கடவுள் மானுடப் பிறவியை ஏன் வகுத்தருளினார்?

ப: நினைத்தல், வாழ்த்தல், மந்திரம் சொல்லல், பணிதலாகிய தொழில்களாகிய இவை மற்றைப் பிறவிகளால் முடியாமையால் அவை முடியும் பொருட்டு, மானுடப்பிறவியை வகுத்தருளினார்.

3. கே: அந்த அரன் பணி எங்கே செய்தால் பயன்படும்?

ப: மண்ணுலகத்தில் செய்தால் பயன்படும்.

4. கே: சாதிவிசேடமும், குடிப்பிறப்பு விசேடமும், ஏன் வேண்டும்?

ப: மற்றைப் பிறவிகளினால் கூடாமையால், பிறவி விசேடம் வேண்டப்படும்.

சூத்திரம் 2, அதிகரணம் 4, செய்யுள் 93.
(கருவினுள்............பாருய்ய)

1. கே: மானுடயாக்கை எப்படிப்பட்டது?

ப: (1) கருப்பத்தில் அழியினும் அழியும், (2) பிறந்தவுடனே அழியினும் அழியும், (3) பிறந்து சிலகாலமிருந்து அழியினும் அழியும், (4) பாலனாயும் அழியும், (5) தருணனாயும் அழியும், (6) விருத்தனாயும் அழியும், (7) இவ்வளவு காலம் இருக்குமென்று அறியவராது. நீர்க்குமிழிபோல எப்பொழுதாவது அழியுந்தன்மை யுடையது.

2. கே: இந்த யாக்கையின் மயக்கத்தை யார் விடுவார்கள்?

ப: யாக்கை நிலையாமை, இளமை நிலையாமையை, உணர்ந்தவர்கள்.

சூத்திரம் 2, அதிகரணம் 4, செய்யுள் 94.
(ஒருபுலன்............மன்றே)

1. கே: யாக்கையிலுள்ள அறிவு எப்படிப்பட்டது?

ப: விடயங்களை ஒருங்கே அறியாது. ஒரு விடயத்தை அறியும்போதும் விட்டுவிட்டறியும், அப்படி அறிவதும், உறக்

கத்திலும், மூர்ச்சையிலும் சிறிதும் அறியாது. வாழ்க்கையின் பொருட்டு உண்டாகிய செல்வமும், மயக்கப் பொருளும், கனுப்பொருளும் போல, தோன்றியபொழுதே மாய்வதும் இடையே மாய்வதுமாம். ஆதலால், அறிவும் நிலையாது, யாக்கையும் நிலையாது என்று உணர்வார்களுக்குமையலை விடுதல் கூடும்.

சூத்திரம் 2, அதிகரணம் 4, செய்யுள் 95.
(அரிசனம்.........ஒப்பர்)

1. கே: அதிகாரஞ்செய்து செருக்குடையவர்கள் எப்படிப் பட்டவர்?

ப: பிணத்துக்கு ஒப்பாவர்.

2. கே: பிணத்தின் தன்மை எப்படியிருக்கும்?

ப: வாசனை பூசி, மாலையணிந்து, பொன்னுடைசாத்தி, பரிவாரம் பின்னேவர, காவுவோர் சிவிகை சுமக்க, வாத்தியம் முழங்க, சின்னம் ஊத, சத்திரம் சாமரம் சூழ பேச்சின்றி இருக்கும்.

இரண்டாஞ் சூத்திரம் முற்றும்.

பிரமாண இயல் மூன்ரும் சூத்திரம்.

1. கே: முதல் சூத்திரத்தில் கூறியது என்ன?

ப: பதி உண்மைக்குப் பிரமாணம் கூறினர்.

2. கே: இரண்டாஞ் சூத்திரத்தில் கூறியது என்ன?

ப: பாசம் உண்மைக்குப் பிரமாணம் கூறினர்.

3. கே: மூன்ருஞ் சூத்திரத்தில் என்ன கூறுகிருர்?

ப: பசு உண்மைக்குப் பிரமாணம் கூறுகின்ருர்.

சூத்திரம் 3, செய்யுள் 1,
(உயிரெனப்படுவது.........துரியாதீதம்)

1. கே: சூனிய ஆன்மவாதி உயிரே இல்லையென்றது ஏன் பொருந்தாது?

ப: உயிர் இல்லையென்று சொன்னது, உயிர்தானே சொல்லிற்று. ஆதலால் உயிர் சூனியம் என்பது பொருந்தாது.

2. கே: தேகான்மவாதி, உடம்பே உயிர் என்றது, ஏன் பொருந்தாது?

ப: உடம்புக்குள் ஏதோ ஒன்று இருந்துகொண்டு, என்னுடையது உடல், என்று சொல்லுகிறபடியால் சொன்னது தானே உயிர். உடல் உயிரல்லவே. அதனுல் பொருந்தாது.

3. கே: இந்திரிய ஆன்மவாதி, மெய், வாய், கண், மூக்கு, செவிகளாகிய ஐந்து இந்திரியங்களுமே, அறிவதால், ஐந்து இந்திரியங்களுமே உயிர் என்பது ஏன் பொருந்தாது?

ப: அப்படி அறிவதாகிய ஞானமே யல்லாமல், இச்சை கிரியைகளும், வேண்டுமாதலால் இம்மூன்றையும் உடையதே உயிர்.

4. கே: சூக்கும தேக ஆன்மவாதி, சத்தம், ஸ்பரிசம், ரூபம், இரசம், கந்தம், மனம், புத்தி, அகங்காரம் ஆகிய எட்டுங்கூடிய சூக்கும தேகமே உயிர் என்பது ஏன் பொருந்தாது?

ப: சூக்குமதேகத்தில் அறிந்த கனவை, நனவிலே அறிந்து கொள்வது ஒன்று உண்டு. அதுவே உயிர்.

5. கே: பிராண ஆன்மவாதி பிராண வாயுவே உயிர் என்பது ஏன் பொருந்தாது.

ப: பிராணவாயு, ஒடுங்கினவிடத்தில், இன்ப துன்பப் பயனை அறியாது. ஒடுங்காத இடத்திலே, இன்பதுன்பப் பயனை அறியும். அப்படியில்லாமல், ஒடுங்கினவிடத்திலும், ஒடுங்காத இடத்திலும் இன்பதுன்பப் பயனை, அறிவது உயிர். ஆதலால் பிராண வாயுவே உயிர் என்பது பொருந்தாது.

6. கே: விஞ்ஞான ஆன்மவாதி பிரமமே உயிர், என்பது ஏன் பொருந்தாது?

ப: பிரமம் அறிந்தாங்கு அறியும். அவத்தைப்பட்டு அறியாது. ஆதலால் அவத்தைப்பட்டு அறிவது ஒன்று உண்டு. அதுவே உயிர்.

7. கே: சமுகான்மவாதி உடம்பு, இந்திரியங்கள், பிராண வாயு, சூக்கும உடம்பு, பிரமம், எல்லாம் கூடியதே உயிரென்று சொல்லுவது ஏன் பொருந்தாது?

ப: இவற்றையெல்லாம் நீங்கிய துரியாதீதத்திலே இருப்பது ஒன்று உண்டு. அதுதான் உயிர். சமூகம் உயிரல்ல.

சூத்திரம் 3, செய்யுள் 2.
(உடலின்.........தின்றே)

1. கே: இந்த உடம்பே, இந்த உடம்புக்கு வேருக உயிர் ஒன்று உண்டு என்று ஏன் அறியாது?

ப: உடம்பு பிணமானபோது, அந்த உடம்பு அறிகிறதா! இல்லையே! ஆதலால் உடம்பு உயிரல்ல.

2. கே: உடலிலுள்ள வாயு நீங்கினதால், உடம்பு அறியவில்லை. ஆதலால் உடலே உயிர் என்று சொன்னல் என்ன குற்றம்?

ப: வாயு நீங்காத உறக்கத்திலே அந்த உடலும் ஒன்றையும் உணரவில்லையே. ஆதலால் உறக்கத்திலும் அறிவது ஒன்று உண்டு. அதுவே உயிர்.

சூத்திரம் 3, செய்யுள் 3.
(அறிவது.........அறிந்திடாவே)

1. கே: பிணமாம்போது கெட்டொழிவதாகிய ஐம்பொறிகளே உடலில் இருந்துகொண்டு நனவின்கண் அறியும், உறக்கத்தில் அறிதலின்றி ஒடுங்கி நிற்கும். ஆதலால் ஐம்பொறிகளே உயிர் என்பது ஏன் பொருந்தாது.

ப: நனவில் கனவை அறிவதும், ஒவ்வொரு பொறியால் அறிவதன்றி ஒருங்கே அறிவன அல்ல. ஆதலால் ஒன்றென்ருய் அறிவதே இந்திரியங்களின் இயல்பு என்பதும் பொருந்தாது, அப்படியாயினும் இந்திரியங்கள் ஒன்று அறிந்ததை மற்ருரு இந்திரியம் அறியாது. ஆதலால் ஐந்து இந்திரியங்களாலும் அறிகிற உயர் வேறேயாம்.

சூத்திரம் 3, செய்யுள் 4.
(அறிந்திடும்.........ஆன்மா)

1. கே: பிராணவாயு, அடங்குதல், விடுதல் செய்தால், அறிவு நிகழக்காண்டலின், அந்த பிராண வாயுவே ஐந்தையுங்கொண்டு, அறிவதாகிய

உயிர் என்பது பொருந்தும். உறக்கத்தில், பிராணவாயு இயங்கினும், கருவிகள் இன்மையால் அறியாதாயிற்று. ஆதலால் பிராணவாயுவே உயிர் என்பது ஏன் பொருந்தாது?

ப: கரணமுதலியாகிய உயிர் இருக்கும்போது கரணங்கள் போதல் கூடாது. ஆதலால் கரணங்களையும், தன்னையுங் கொண்டறிவதாகிய உயிர்வேறாம்.

மூன்றாஞ் சூத்திரம் முற்றும்.

இலக்கண இயல் 4-ம் சூத்திரம், செய்யுள் 1,
(உணர்வன........ஆன்மா)

1. கே: இலக்கணம் என்பது என்ன?

ப: வேறு எதற்கும் இல்லாத தன்மை.

2. கே: முன்னே உள்ள 1, 2, 3, சூத்திரங்களில் என்ன கூறினர்?

ப: பதிஉண்டு, பாசம் உண்டு பசு உண்டென்று அளவை கூறினர்.

3. கே: நான்காஞ் சூத்திரத்தில் என்ன கூறுகிறார்.

ப: பதி, பாசம், பசுக்களின் இயல்பு கூறத் தொடங்கி பசுவின் இலக்கணங் கூறுகிறார்.

4. கே: அந்தக் கரணங்கள் எவை?

ப: மனம், புத்தி, சித்தம், ஆங்காரங்கள்.

5. கே: அந்தக்கரணங்களே அறியும். ஆதலால் அந்தக்கரணங்களே உயிர் என்றால் என்ன குற்றம்?

ப: ஐம்பொறிகளில் ஒன்று அறிந்ததை ஒன்று அறியாது (அதுபோல) அந்தக்கரணங்களும் ஒன்றறிந்ததை ஒன்றறியாது ஆகலான் உயிர் இவற்றின் வேறாக இருந்து ஆணவத்தோடு உடனாயிருக்கும். யான் எனது என்று செருக்கடையும். அந்தக் கரணங்களோடுகூடி அவற்றை அடக்க வேண்டுழி கனவில்

அடக்கி உட்கரணமாக்கும், ஆக்கவேண்டும் போது நனவில் சாக்கிராவத்தையில் செலுத்தி புறக்கருவியாக்கி, வேறு வேறு அவத்தை அடையும்.

6. கே: ஆன்மாவின் தடத்த இலக்கணம் எது?
   ப: ஆணவமலத்தில் பிணிப்புண்டு அவத்தையுறுதல்.
7. கே: தடத்த இலக்கணம் என்றால் என்ன?
   ப: பொது இலக்கணம்
8. கே: ஆன்மாவின் சிறப்பு இலக்கணம் எது?
   ப: சத்து அசத்தாம் (அதாவது) சதசத்தாம்.
9. கே: அவத்தை என்றால் பொருள் என்ன?
   ப: நிலை:
10. கே: என்ன என்ன அவத்தைகள் உண்டு?
   ப: (1) சாக்கிரம் (2) சொப்பனம் (3) சுழுத்தி (4) துரியம் (5) துரியாதீதம்.

சூத்திரம் 4, அதிகரணம் 1, செய்யுள் 2.
(கருவியாம்.........மேலாம்)

1. கே: பசுஞானம் என்றால் என்ன?
   ப: தன்னையுணர்தல் பசு ஞானம்.
2. கே: பதிஞானம் என்பது என்ன?
   ப: இறைவனால் உண்டாகும் ஞானம்.
3. கே: பாசஞானம் என்பது என்ன?
   ப: பாசங்களால் அறியும் ஞானம்.

சூத்திரம் 4, அதிகரணம் 1, செய்யுள் 3.
(அவ்வுடன்.........தோன்றும்)

1. கே: அகங்காரம், புத்தி, மனம், சித்தம், உள்ளம் இவைகள் எப்போது கருவியாம்?
   ப: அகங்காரத்தை அகாரமும், புத்தியை உகாரமும், மனதை மகாரமும், சித்தத்தை விந்துவும், உள்ளத்தை நாதமும், உடனாக இருந்து செலுத்திய போது கருவியாகும்.
2. கே: நால்வகை வாக்குகளும், நிவிர்த்தி முதலிய கலைகளைப் பற்றி எப்படி ஐந்தாய்த் திகழும்?

ப: சூக்குமை, பைசந்தி, மத்திமை, தூலவைகரி சூக்குமவைகரி என்று வாக்குகள் ஐவகைப்பட்டு ஐந்தாய் விளங்கும்.

3. கே: இந்த ஐந்தும், சமட்டியில், எப்படி மாறும்?
 ப: ஓம் என்று மாறும்.

4. கே: சவிகற்ப உணர்வு என்றால் என்ன?
 ப: சிறப்பறிவு.

சூத்திரம் 4, அதிகரணம் 1, செய்யுள் 4.
(அயனரி.........தோன்றும்)

1. கே: அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதங்களை அதிட்டித்து நின்று, செலுத்தும் தெய்வங்கள் எவை?

ப: அகாரத்தை அயனும், உகாரத்தை அரியும், மகாரத்தை அரனும், விந்துவை மகேசனும், நாதத்தை சதாசிவமும், அதிட்டித்து நின்று செலுத்துவார்கள்.

2. கே: ஆன்மா, எப்போது அறியும் பயனை அடையும்? எப்போது அறியாது?

ப: ஆன்மா, அந்தக் கரணங்களோடும், அக்கரங்களோடும், அதிதெய்வத்தோடும் பரவியபோது, அறியும் பயனை அடையும். அம்மூன்றனோடும் கூடாதபோது அறியாது சடமாம்.

சூத்திரம் 4, அதிகரணம் 1, செய்யுள் 5.
(ஆன்மாவில்...... வேறதாமே)

1, கே: அநேகாந்தக் கூட்டம் என்றால் என்ன?
 ப: பலபொருள் கூட்டம்.

2. கே: பலபொருள் எவை?
 ப: கரணம், அக்கரம், அதிதெய்வம்.

3. கே: ஓர்ப்பான், என்றால் பொருள் என்ன?
 ப: அறிவானாகிய ஆன்மா.

சூத்திரம் 4, அதிகரணம 2, செய்யுள் 6.
(அறிவிச்சை ....சிவனுர்க்கே)

1. கே: பரிணமம் என்ருல் பொருள் என்ன?
ப: வேறுபடுதல்.

2. கே: ஏகாநேகம் என்ருல் பொருள் என்ன?
ப: பேதாபேதம்.

3. கே: பரிணமவாதி, உயிர்களெல்லாம், பிரமப்பொருளின் பரிணமமே என்றும், அந்த உயிர், அறிவு, இச்சை, செயல்களை, அடைந்து குணமும், குணியுமாகி நிற்கும் என்று சொல்லுவது ஏன் பொருந்தாது?
ப: கருவிகள் இல்லாமல் அறியமாட்டாத உயிர், அப்படி வேறுபடுவது பொருந்தாது.

சூத்திரம் 4, அதிகரணம் 2, செய்யுள் 7,
(குணங்களை ....தன்றே)

1. கே: சாங்கியர் உயிர், குண குணித்தன்மை யில்லாமல், கேவலம் அறிவு மாத்திரமாய் நிற்கும் என்று சொல்லுவது, ஏன் பொருந்தாது?
ப: உடலின்கண், உயிர் அறிவு மாத்திரயாயிருந்தால், இச்சை செயல்கள் உண்டாகா. ஆதலால் பொருந்தாது.

2. கே: சாங்கியர் உயிரின் சந்நிதியில், உடலின் கண், கரணங்கள் செயல்படும். ஆதலால் அறிவு, இச்சை. செயல்கள் உண்டாம் என்று பின்னும் சொல்லுவதும், ஏன் பொருந்தாது?
ப: பிணமாயிருக்கும் போதும், தூங்கும்போது உடல் உயிரின் சந்நிதியிலிருந்தும், அறிவு, இச்சை, செயல் நிகழ வில்லையே. ஆதலால் அதுவும் பொருந்தாது.

3. கே: சாங்கியர் பிணமாயிருக்கும் போதும், உறக்கத்திலும், கரணங்கள் ஒடுங்கினபடியால், அறிவு, இச்சை, செயல்கள், இலவாம் என்று சொல்லுவதும் ஏன் பொருந்தாது?

ப: பிணமாயிருக்கும் போதும், உறங்கும் போதும், சந் நிதிக்குக் கேடில்லையே, ஏன் அறிவு, இச்சை, செயல்கள், நிகழவில்லை. ஆதலால் சந்நிதியில் நிகழ்தல் என்பது தொலைந்தது.

சூத்திரம் 4, அதிகரணம் 2, செய்யுள் 8.
(சந்நிதி....... என்னே)

1. கே: சாங்கியர் வியாபகமாக நிற்றல் சந்நிதியல்ல. காந்தத்தின்முன், இரும்புபோல உயிர்முன், உடம்பு தொழிற்படுதலுக்குக், காரணமாகிய குண விசேடம் என்கிற பண்பே சந்நிதி, அதனால் அறிவு, இச்சை, செயல்கள் நிகழவில்லையென்று சாங்கியர் சொல்லுவதும் ஏன் பொருந்தாது?

ப: காந்தம் இரும்பை இழுத்தலாகிய ஒரு தொழிலையே கண்டோம். அதுபோல உயிரினும் ஒரு தொழிலே நிகழ வேண்டும். அப்படியன்றி. உளறுதல், ஒடுங்கல், ஓடல், இருத்தல், கிடத்தல், நிற்றலாகிய பல தொழில்கள் உயிரினிடத்து உண்டாவதற்குக் காரணமில்லை. அதனால் பொருந்தாது.

சூத்திரம் 4, அதிகரணம். 2, செய்யுள். 9,
(உருஉயிர்.........என்னே)

1. கே: பௌராணிகர், உயிர் உருவப்பொருள் என்பார்கள். அவர்களைப் போலவே, சாங்கியரும் உயிர் உருவப்பொருள் என்று சொல்வார்கள். அவை ஏன் பொருந்தாது?

ப: உயிர் உருவப் பொருளாயிருந்தால், உயிர் பரிணமிக்க வேண்டுமே இல்லையே, அழிதல் வேண்டுமே இல்லையே காட்சிக்குப் புலனாகவேண்டுமே இல்லையே, பரிணமிக்கிறதும், அழிகிறதும், காட்சிப்படுதலுமாகிய தொழில் பூதங்களுக்கே உண்டு. ஆதலால், உயிர், பூதங்களோடு ஒப்ப, உருவமாகாதே, அதனால் உயிர் உருவம் என்பது பொருந்தாது.

சூத்திரம் 4, அதிகரணம் 2, செய்யுள் 10.
(சூக்கும்.........அநித்தமாமே)

1. கே: பூதங்கள் தூல உரு, பூதம்போல உயிர்தூல உருவல்ல, சூக்கும உரு என்றால் ஏன்பொருந்தாது?

ப: உயிர் சூக்கும உருவென்றால், புரியட்டக உடம்பாகிறதே. அதாவது, சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், மனம், புத்தி, அகங்காரம், இவை எட்டும் கூடிய உடம்பாகிறதே, அதுவுமல்லாமல், சடமுமாகிறதே, அதனால் உயிர், சூக்கும உரு என்பது பொருந்தாது.

2. கே: தூல உடம்புக்குள் இருக்கிற புரியட்டக உடம்பாகிய சூக்கும உடம்பல்ல, அந்த புரியட்ட உடம்புக்குள் இருக்கிற, அதிசூக்கும உடம்பே உயிர் என்றால் அது ஏன் பொருந்தாது?

ப: அப்படி அதிசூக்கும உடம்பாயிருப்பது, கலை முதல் மண்வரையிலுள்ள பர உடம்பாகுமே, ஆதலால் உயிர் பர உடம்பாகாதே, அதனால் அதுவும் பொருந்தாது. மேலும், சூக்கும உடம்பு பர உடம்பு எல்லாம் சடம்.

சூத்திரம் 4, அதிகரணம் 2, செய்யுள் 11.
(அருவுரு.........போமே)

1. கே: கௌளர், உயிர் அருவுருவப் பொருள் என்கிறார்களே அதுவும் பொருந்தாதோ?

ப: பொருந்தாது. ஏன் எனில், அரு உருவாகிறதுமில்லை, உரு அருவாகிறதுமில்லை. இப்படி ஒரு பொருளுக்கு மாறுபட்ட இரண்டு தன்மை உண்டாதல் இல்லை. அதனால் உயிர், அருவுருவப் பொருள் என்பது பொருந்தாது.

2. கே: அப்படிப்பட்ட அருவுருவமல்ல. விறகும் நெருப்பும் போல, அருவுருவப்பொருள் என்றால் அது ஏன் பொருந்தாது?

ப: விறகுக்குள் மறைந்திருக்கிற நெருப்பும், விறகும் வேறாகும். இவை காணப்படும். பின்பு நெருப்பும் அழிந்துவிடும். விறகும் அழிந்துவிடுமே. அதுபோல் காணப்பட்டு அழியாது. அதனால் அப்படிப்பட்ட அருவுரு என்பது பொருந்தாது

சூத்திரம் 4, அதிகரணம் 2, செய்யுள் 12.
(சந்திரன்.........அன்றே)

1. கே: தலை உவா என்பது என்ன?
   ப: அமாவாசி.

2. கே: அமாவாசி என்றால் பொருள் என்ன?
   ப: அமா என்றால் ஒன்றாக, வாசி என்றால் வசிப்பது (அதாவது) சூரியனும் சந்திரனும் ஒன்றாகக்கூடுவது என்பதாம்.

3. கே: அமாவாசியில், சந்திரன் அருவாய் நின்று. பின் முறை முறையாய் வளர்ந்து, பூரணையில் தூல உருவாய் விளங்குதல் போலவே, உயிரும் முதலில் அருவாயிருந்து, கருவில் பதிந்து, முறை முறையால் வளர்ந்து. இந்த உடம்புரு வாய்த் தோன்றுமாறு போல, உயிர் அருவுரு வம் என்பது ஏன் பொருந்தாது?
   ப: உயிர் சித்தாயும், நித்தமாயும் பந்தத்தில் பட்டு நீங்குவதா. உடம்போ அசித்தாயும், பூதகாரியமாயும் பந்த மாயும் உள்ளது. ஆதலால் உயிர் உடம்புருவமாகாது.

சூத்திரம் 4 அதிகரணம் 2. செய்யுள் 13,
(அருவுஅவிகாரி..... ...பேசிடாயே)

1. கே: பாதஞ்சலர், உயிர், ஆகாயம்போல, அருவுருவாயும், அவிகாரியாயும், உள்ளது என்று சொல்வதும் ஏன் பொருந்தாது?
   ப: உடம்பை உயிர்கட்டி நடிப்பித்து, போக்குவரவு செய்வித்து நிற்பித்தல், இருத்துதல், கிடப்பித்தல், மண்ணில் புரட்டுதல் முதலிய விகாரங்களைச் செய்யும். அருவமா யிருப்பது என்றால் இவைகளைச் செய்யாதே. அதனால் அது வும் பொருந்தாது.

சூத்திரம் 4, அதிகரணம் 2, செய்யுள் 14.
(அசித்தெனின்........ இன்றாம்)

1. கே: வைசேடிகர், உயிர் முதலில் சடமென்றும், பின் மனத்தோடுங்கூடி, சித்தாயன்றியும் என்றும் கூறுவது, ஏன் பொருந்தாது?

ப: சடப்பொருள் சித்தாதலுமில்லை, சித்துப் பொருள் சடமாதலுமில்லை. ஆதலால் பொருந்தாது.

2. கே: சைவரில் ஒருசாரார், உயிர், சித்து, அசித்து என்று சொல்வது ஏன் பொருந்தாது?

ப: மாறுபட்ட இரண்டு தன்மை, ஒன்ருக நிற்காது. அதனுல் பொருந்தாது.

3. கே: பட்டாசாரியர், கருவியையின்றி அறிதல் செய்யுமா தலால், உயிர் சித்தேயாம். என்பதும் ஏன் பொந்தாது?

ப: உயிர், அசித்தாகிய கருவியை இன்றி அறிதல் செல்லாது. ஆதலால் உயிர் கருவி உருத சித்தென்பது பொருந்தாது.

சூத்திரம் 4. அதிகரணம் 2, செய்யுள் 15.
(உயரினை.........மன்றே)

1. கே: பாஞ்சராத்திரிகள், உயிர் உடம்பிலே பரமாணுருப மாய் நிற்கும், என்பது ஏன் பொருந்தாது?

ப: உயிர் அணுருபம் என்ருல், அந்த அணு உடம்பி லுள்ள ஒரு துவாரத்தால் ஓடிப்போகுமே, அதுவேயன்றி கட்டுண்டற்கும், பாரந்தாங்குவதற்கும், உடம்படாதே ஆத லால் பொருத்தமில்லை.

சூத்திரம் 4, அதிகரணம் 2, . செய்யுள் 16
(உடலினிற் ....மன்றே)

1. கே. மிருதிநூலார், உயிர் உடம்பிலே, புல்நுனித் துளி போல, ஏகதேசமாய் இதயத்தில் நிற்க, அந்த உயிரின் அறிவு, விளக்கொளிபோல, எங்கும் வியாபிக்கும் என் று சொல்லுவதும் ஏன் பொருந்தாது?

ப: உயிர், ஏகதேசமாயின், காட்சிப்பட வேண்டுமே, அழிவதும் இலேயே, குணம் குணியளவே யாகும், வியாபித் தறியாது, அன்றியும் விளக்கின் ஒளியென்றது, விளக்கின் சூக்குமவடிவேயாம். குணமல்லவே. ஆதலால் உவமை

யாகாது. ஆகும் என்று கொண்டாலும், விளக்கின் சுடர் தொட்டால் சுடும். அதுபோல இருந்த இடத்தில் அறியும். மற்ற இடத்தில் தொட்டாலும் சுடாது. அதுபோல வியாபித்து அறியாது.

சூத்திரம் 4, அதிகரணம் 2, செய்யுள் 17.
உருலினில்.........மாயுமன்றே)

1. கே: சமணர், உயிர் உடம்பளவில் நிறைந்து நின்று, உணரும் என்பது ஏன் பொருந்தாது?

ப: உயிர் உறக்கம் உறுகிறதே, ஐம்பொறியிலும் ஒரே காலத்தில் அறிவு உண்டாகவில்லையே. உடம்பின் அளவுக்குத் தக்க அறிவாதலுமில்லையே, உடல் குறையக் குறைகிறதும் இல்லையே, ஆதலால் அதுவும் பொருந்தரது.

சூத்திரம் 4, அதிகரணம் 2, செய்யுள் 18
(எங்குந்தான்.........வேண்டும்)

1. கே: ஐக்கியவாதி, உயிர் முதல்வன்போலவே, எங்கும் வியாபகமாய் நின்று, அறியும் என்று சொல்லுவதும் ஏன் பொருந்தாது.

ப: 1. உயிர், அவத்தை உறுகிறபடியாலும் 2. போக்கு வரவு உறுதலாலும். 3. ஐம்புலன்களை ஒருங்கே அறியாமையாலும், 4. எல்லாமாய் வியாபித்தறிதலின்றி, உடம்பினுள் ஏகதேசமாய் நிற்றலானும், பொருந்தாதாம்.

சூத்திரம் 4, அதிகரணம் 2, செய்யுள் 19.
(சுத்தமாம்.........நாமே)

1. கே: ஐக்கியவாதி மறுபடியும் (1) உயிர் எங்கும் வியாபகமாய் நின்று அறிவதுவேயாம். ஆயினும், சுத்தமாயுள்ள உயிரின் அறிவை, மாயாகாரியம் தடை செய்து நிற்றலால், உறக்கமுறுகிறது, ஒரே காலத்தில் அறிவு உண்டாகாமல் ஏகதேசப்படுவதாயிற்று. என்று சொன்னதும் ஏன் பொருந்தாது?

ப: அறிவு விளங்குதற்குக் காரணமாயுள்ளது மாயா காரியம், அப்படியிருக்க மாயாகாரியந் தடைசெய்தது என்று சொல்லுவது கூடாது. சுத்தமாயுள்ள உயிரை, மாயா காரியங்கள் பந்தித்தது என்று சொன்னுல், வீடுபெற்ற வழியும், பந்தித்தது எனப்பட்டு முத்தியின்ருய் முடியும், வீடுபெற்ற பின் மாயாகாரியம் உருது என்ருல், அநாதி நிலையோடு வேற்றுமையில்லையாம், ஆதலால் அநாதியிலே பந்தமுறுத லின்றி, முத்தனுய் விளங்குதல் வேண்டும். ஆதலால் பொருந்தாது.

2. கே: அகக்கரணங்கள் எவை?

ப: மனம், புத்தி, சித்தம், ஆங்காரம்.

சூத்திரம் 4, அதிகரணம் 2, செய்யுள் 20.

(அசித்தரு.........ஆன்மா)

1. கே: ஔபச்சிலேடிக வியாபகம் என்ருல் பொருள் என்ன?

ப: இரட்டைச் சிலேடை (அதாவது) இருபொருள் அடங்கியிருக்கும் ஒரு சொற்ருெடராம். உதாரணம் ஆறு முடிக்குமரன் என்கிற ஒரு சொற்ருெடர். (1) ஆறு + முடிக்கும் அரன் என்றும், ஆறு + முடி + குமரன் என்றும், இருபொருள் அடங்கியிருப்பதாம். அதாவது சித்து. அரு, வியாபகப் பொருளை உள்ளடக்கி உடனுயிருப்பதாம். (பதியாம்)

2. கே: அசித்து அருவியாபகம் என்ருல் பொருள் என்ன?

ப: ஒரு காலத்திலும் அசித்தாதல் இல்லாத அதாவது சடமாகாத வியாபகப் பொருள். அதாவது எக்காலத்திலும் சடமாகாத பொருள். அதாவது பசுவாம்.

3. கே: அதிருக்கும சித்து எது?

ப: பதி, அதாவது சிவம். (நீரின் நிழல்போல உள்ளது)

4. கே: பசுத்துவம் என்ருல் என்ன?

ப: ஆணவம்.

5. கே: தூலசித்தென்ருல் என்ன?

ப: உயிர்.

6. கே: உயிரினுடைய அநாதிநிலை எது? அதாவது உயிரினுடைய தன் உண்மை எது?

ப: ஒருவாற்றுனும் அசித்தாகாதது, வியாபகப்பொருளா யுள்ளது, அதிசூக்கும சித்தாயில்லாதது, தூலசித்தாயுள்ளது, அதுவதுவாதலை உடையது, ஆணவமலத்தில் மறைந்து கிடப்பது.

சூத்திரம் 4, அதிகரணம் 2, செய்யுள் 21.
(மாயையின்.........ஆன்மா)

1. கே: அசுத்தமாயை எவை?
ப: 24-தத்துவங்கள்.

2. கே: கேவலம், சமட்டி, வியட்டி, என்றுல் பொருள் என்ன?
ப: கேவலம் என்றுல் தனி, சமட்டி யென்றுல் பொது வியட்டி என்றுல் சிறப்பு.

3. கே: குணம், குணி என்றுல் பொருள் என்ன?
ப: குணம் என்றுல் தன்மை, குணி என்றுல் தன் மையை உடையது.

4. கே: காரண சரீரம் எது?
ப: அநந்த தேவரால் கலக்குண்ட பாகம் பொது வகையால் அறிவு இச்சை செயல் விளங்குவது ஆன்மா, மலமும் தானுமாய் புருடதத்துவம் இடமாகக்கொண்டு நிற் கிற மிகநுண்ணிய இறுதி நிலையாம்.

5. கே: கஞ்சுக சரீரம் எவை?
ப: கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்கிற ஐந்துடன் கூடியது. அறிவு, இச்சை, செயல்கள் வியட்டிருப மாய் விளங்குவது.

6. கே: குணசரீரம் எவை?
ப: புரியட்டக உடம்பு. அதாவது அந்தக்கரணம் முத லியவற்றை தம்முள் அடக்கிநிற்கும் முக்குணங்கள்.

7. கே: பரசரீரம் எது?
ப: காரணசரீரம், கஞ்சுகசரீரம், குணசரீரமாகிய எல்லா சரீரத்துக்கும் காரணமாயிருப்பது?

8. கே: தூலசரீரம் எது?

ப: (எலும்பு, தோலால் ஆகியது) அதாவது பெரிய உடல்

9. கே: விளக்கொளி எப்படிப்பட்டது?

ப: புறஇருளால் மறைக்கப்படாதது. அதாவது சூக்குமஒளி

10. கே: கண்ணொளி எப்படிப்பட்டது?

ப: புற இருளால் மறைக்கப்படுவது. அதாவது தூலஒளி

சூத்திரம் 4, அதிகரணம் 2, செய்யுள் 22.
(சூக்கும… …ஆன்மா)

1. கே: சாக்கிரம் முதலிய அவத்தைகள் எவை?

ப: சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்.

சூத்திரம் 4, அதிகரணம் 2, செய்யுள் 23.
மருவானந்தம் ……புறமாம்)

1. கே: ஐங்கோசங்கள் எவை?

ப: (1) அன்னமயகோசம் (2) பிராணமயகோசம் (3) மனோமயகோசம் (4) விஞ்ஞானமயகோசம் (5) ஆனந்தமயகோசம்.

2. கே: ஆனந்தமயகோசம் என்றால் என்ன?

ப: காரண சரீரம்.

3. கே: விஞ்ஞானமய கோசம் என்றால் என்ன?

ப: கஞ்சுக சரீரம்.

4. கே: மனோமய கோசம் என்றால் என்ன?

ப: குண சரீரம்.

5. கே: பிராணமய கோசம் என்றால் என்ன?

ப: சூக்கும சரீரம்.

6. கே: அன்னமய கோசம் என்றால் என்ன?

ப: தூல சரீரம்.

7. கே: ஐங்கோசங்களைப் பற்றி, வேதத்தில் எப்படி கூறியிருக்கிறது?

ப: ஒவ்வொரு கோசமும், ஒவ்வொரு பறவையாகவும், அவற்றுள் ஒவ்வொன்றை, ஐவகைப்படுத்தி, முகம் முதலிய உறுப்புக்களாகவும், உருவகஞ் செய்யப்பட்டிருக்கிறது.

சூத்திரம் 4, அதிகரணம் 2, செய்யுள் 24.
(தோற்பாவை.........மாறே)

1. கே: ஆர்ப்பாய என்பதன் பொருள் என்ன?
   ப: பந்திக்கப்பட்ட.

2. கே: ஆன்மா ஐந்து கோசங்களிலும் வேற்றுமையின்றி செலுத்துமாறு எப்படி?
   ப: (1) அன்னமய கோசத்தில், பாரில் தேரைச் செலுத்துவது போலவும் (2) பிராணமய கோசத்தில், மரப் பாவையினை இயக்குவோர் போலவும் (3) மனோமயகோசத்தில்: தோல்பாவையினை ஆட்டுவோர் போலவும் (4) விஞ்ஞானமய கோசத்தில், பரகாயப் பிரவேசஞ் செய்வோர் தன்மைபோலவும் (5) ஆனந்தமய கோசத்தில், பலவேடங் கட்டி ஆடுவோர் தன்மைபோலவும் செலுத்தும்.

சூத்திரம் 4, அதிகரணம் 2, செய்யுள் 25.
(என்னுடல்......காண்டி)

1. கே: அபேதம் என்றால் பொருள் என்ன?
   ப: வேறுபாடின்மை.

2. கே: பேதம் என்றால் பொருள் என்ன?
   ப: வேறாக இருப்பது.

3. கே: புறப்பொருள் என்றால் என்ன?
   ப: தனக்கு வேறாயிருக்கும் பொருள்.

4. கே: அகப்பொருள் என்றால் என்ன?
   ப: தன்னைவிட்டுப் பிரிக்கமுடியாத பொருள்.

5. கே: புறப்பொருளுக்கு உதாரணஞ் சொல்லு?
   ப: என்வீடு.

6. கே: அகப்பொருளுக்கு உதாரணஞ் சொல்லு?
   ப: எனதுடல், எனதுயிர்.

7 கே: பாச உணர்வு என்பது என்ன?
   ப: தன்னின் வேறாக இருக்கிற பொருளை எனது என்று சொல்லுவது.

8. கே: எனதுடல், எனதுபொறி. எனதுயிர் என்று அபேத மாகக் கூறினல் என்ன குற்றம்?

ப: உன்னுடைய நகம், மயிர் முதலியன உன்னை விட்டு நீங்குதல் போல உயிரும் உன்னைவிட்டு நீங்கும்.

சூத்திரம் 4, அதிகரணம் 2, செய்யுள் 26.
(பொன்னணி.........பாரே)

1. கே: இராகுவின் தலையென்ருல் பொருள் என்ன?

ப: இராகுவேறு, இராகுவின் தலைவேறு என்றில்லா மல், இராகுவே தலையாயிருக்கிறது.

2. கே: இராகுவினது தலையென்ருற்போல, என்னுடைய ஆன்மா என்ருல் குற்றம் என்ன?

ப: இராகுவினது தலையென்றது, அபேதம் பற்றிய வழக்கு, அஉ சிறுபான்மை வழங்குவதே யன்றி, பெரும் பான்மை வழங்குவதில்லை, அதுபோல உனது உடலில் அணிகின்ற நகை, முதலியவற்றை, அபேதம் பற்றி எனது என்பதுபோல. பிரித்துப் பார்க்காத மடமையாகும்.

சூத்திரம் 4, அதிகரணம் 2, செய்யுள் 27.
(உடல்யா........காண்)

1. கே: அபேதம் பற்றிய வழக்கென்ருல் என்ன?

ப: வேருகக் காணுதல் இன்றி, ஒன்ருகக்காணும் காட்சி யாம்.

2. கே: சிறுபான்மை வழக்கு எது?

ப: ஆன்மாவை வேருகக் காணுமல், ஒன்ருகக் காணும் கருத்துடையார் வழக்கு.

3. கே: பெரும்பான்மை வழக்கு எது?

ப: விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசத்தை எனது என்றல்,

4. கே: ஏன் அப்படிக் கூறுகிருர்கள்?

ப: மனேமய கோசம், பிராணமய கோசம், அன்ன மய கோசங்களை வேருகக்காணும் கருத்தால்.

சூத்திரம் 4, அதிகரணம் 2, செய்யுள் 28.
(புந்தியை ...... காண்)

1. கே: உபசாரம் என்ருல் என்ன? உதாரணங் காட்டு.
ப: ஒன்றை மற்ருென்ருகக் கூறுவது. சிவபிரானை ஆன்மா என்றும் ஆன்மாவை சிவபிரான் என்றும் கூறுவது.

2. கே: என்றன் ஆன்மா என்றது எப்படி ஆகுபெயர்?
ப: ஆன்மா என்றது, தன்ேனாடு இயைபுடைய, பிறிதொரு பொருளை (முதல்வனை அல்ல) பிறிது பொருள் உடல்

3. கே: ஆகு பெயர் என்பது என்ன? உதாரணங்காட்டு.
ப: ஒரு பொருளோடு இயைபுடைய வேருெரு பொருளாம். இயைபில்லாத வேறுபொருளல்ல. எனக்கு ஒரு கெஜம்கொடு என்ருல் கெஜம் என்றது துணியையோ, நாடாவையோ உணர்த்தும். பாலையோ, நெய்யையோ உணர்த்தாது.

சூத்திரம் 4, அதிகரணம் 2, செய்யுள் 29,
(அறிவுடன் ....மாமே)

1. கே: ஆன்மாவின் வேருகிய ஐங்கோசங்களை, ஆன்மா பொருந்துதலாலே, ஐங்கோசங்களையும்,ஆன்மா என்று உபநிடதங்களில் கூறியதற்குக் காரணம்?
ப: இருளில் மறைந்து கிடக்கின்ற பொருளை விளக்கிக் காட்டுகிற ஒளியை விளக்கு என்னுமல், ஒளியை வீசும் விளக்கிருக்கின்ற தகழியை விளக்கு என்ருற்போல, தானியாகு பெயராம்.

2. கே: தானி யென்பது என்ன? உதாரணங்காட்டு.
ப: தானமாக இருப்பது தானியாம். ராஜதானியென்ருல் (ராஜன் வசிக்க தானமாயிருப்பதாம்).

சூத்திரம் 4, அதிகரண 2, செய்யுள் 30.
(கண்டுணர் ....நிற்கும்)

1. கே: ஓடுக்கம் என்றது எதை? அது எப்படிப்பட்டது?
ப: சுழுத்தியை, கனவுபோல் சொல்லவராதது, கருதி உணர்தற்பாலது.

2. கே: எருதவும் வராதவை எவை?

ப: சித்தம் செல்லாத உண்டியும் உணவும்.

சூத்திரம் 4, அதிகரணம் 2, செய்யுள் 31.
(புருடனே.........போல்வன்)

1. கே: முதல்வன் எப்படிப்பட்டவன்?

ப: சுத்தனுகியும், சித்தனுகியும், இருப்பவன். அதாவது (சுத்த, சித்து) ஆதலால் மாயாகாரியங்களைப் பற்றுது.

2. கே: ஆன்மா எப்படிப்பட்டது?

ப: ஆணவமலத்தில் மறைந்து அருவனுய் நிற்பது. ஆதலால் மாயாகருவிகளைப்பற்றி நிற்பது.

சூத்திரம் 2, அதிகரணம் 3, செய்யுள் 32.
(படைகொடு........காவலாக)

1. கே: புருடன், ஐந்தவத்தைப்படுதலை ஆசிரியர் எப்படி விளக்குகிறுர்?

ப: அரசன், படைத்தலைவர் முதலானவர்களோடுகூடி, உலாப்போந்து, மாளிகை புகும்போது, வாயில்கள்தோறும் அவரவர்களை நிறுத்தி, காவலும்வைத்து, அந்தப் புரத்தினில் தனியே செல்வதைக்காட்டி விளக்குகிறுர். அதுபோல புருடன் உடம்பின்கண், அகக்கருவிகளிலிருந்து நீங்கி பிராணவாயுவை காவலாக நிறுத்தி, ஐந்தவத்தை உறும் என்கிறுர்.

சூத்திரம் 2, அதிகரணம் 3, செய்யுள் 33.
(சாக்கிரம் . ..... ஒன்றே)

1. கே: (1) நுதல் (2) களம் (3) இதயம் (4) நாபி (5) மூலம் (6) இலாடம் இவற்றின் பொருள் என்ன?

ப: (1) நுதல் - நெற்றி; (2) களம் - கழுத்து; (3) இதயம் - மார்பு; (4) நாபி - தொப்புள்; (5) மூலம் - அடிவயிறு; (6) இலாடம் - நெற்றி.

2. கே: சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தைகள் எவை?

ப: (1) சாக்கிரம் (2) சொப்பனம் (3) சுழுத்தி (4) துரியம் (5) துரியாதீதம்.

3. கே: சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தைகளுக்கும், உரிய இடங்கள் எவை?

ப: சாக்கிரம் - புருவமத்தி; சொப்பனம் - கழுத்து; சுழுத்தி - நெஞ்சு; துரியம் - நாபி; துரியாதீதம் - மூலாதாரம்.

4. கே: சாக்கிரம்முதலிய ஐந்து இடங்களிலும் உயிர் எத்தனை எத்தனைகருவிகளோடு இருந்து தொழிற்படும்?

ப: (1) சாக்கிரத்தில் கருவி 35; (2) சொப்பனத்தில் கருவி 25; (3) சுழுத்தியில் கருவி 3; (4) துரியத்தில் கருவி 2 (5) துரியாதீதத்தில் கருவி 1, இப்படி கூடியிருந்து தொழிற் படும்.

6. கே: 35 கருவிகள் எவை?

ப: ஞான இந்திரியம் 5; கன்ம இந்திரியம் 5; தன்மாத் திரை 5; அந்தக்கரணம் 4; புருடன் 1; வாயு 10; வசனுதி 5 ஆக 25.

6. கே: 25 கருவிகள் எவை?

ப: தன்மாத்திரை 5; அந்தக்கரணம் 4; புருடன் 1; வாயு 10; வசனுதி ാ. ஆக 25.

7. கே: 3.கருவிகள் எவை?

ப: சித்தம், பிராணன், புருடன் ஆக 3.

8. கே: 2 கருவிகள் எவை?

ப: பிராணன், புருடன் ஆக 2.

9. கே: ஒரு கருவி எது?

ப: புருடன்.

சூத்திரம் 4, அதிகரணம்3, செய்யுள் 34.

(இருவகை .. சாரும்)

1. கே: சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தைகளும் எத்தனை வகைப்படும்?

ப: கிழ்நோக்கிச்சென்று ஒடுங்கும் முறை ஒன்று, மேல் நோக்கிச்சென்று தோன்றும் முறை ஒன்று, என இரண்டு வகைப்படும்.

2. கே: ஒடுங்கும் முறையும், தோன்றும்முறையும் எதற்காக?

ப: ஒடுங்கும் முறை கன்மத்தை சம்பாதிக்கக் காரணம், தோன்றும் முறை கன்மத்தை அநுபவிக்கக் காரணம்.

3. கே: இந்த இரண்டு காரணங்களும் எதற்காக?

ப: தோன்றும்முறை பிறவியை அறுக்க, ஒடுங்கும்முறை பிறவிக்கு வித்தாக.

4. கே: யோகாவத்தை எவை?

ப: (1) இயமம் (2) நியமம் (3) ஆசனம் (4) பிராணுயாமம் (5)பிரத்தியாகாரம் (6)தாரணை (7) யோகம் (8) சமாதி.

5. கே: புறக்கரணங்கள் எவை?

ப: கன்ம இந்திரியம் 5, தன்மாத்திரை 5, பூதம் 5, புலன் 5.

6. கே: உட்கரணங்கள் எவை?

ப: மனம், புத்தி, சித்தம், ஆங்காரம்.

சூத்திரம் 4, அதிகரணம் 3, செய்யுள் 35
(அறிதரும்... . ...வீடுகூட)

1. கே. சாக்கிரத் தானத்திலுள்ள ஐந்தவத்தைகள் எவை?

ப: (1) சாக்கிரத்தில் சாக்கிரம் (2) சாக்கிரத்தில் சொப்பனம் (3) சாக்கிரத்தில் சுழுத்தி (4) சாக்கிரத்தில் துரியம் (5) சாக்கிரத்தில் துரியாதீதம் என ஐந்துவகை.

2. கே: இவ்வைந்தையும் எப்படி அறியலாம்?

ப: கருவியால் விடயங்களை அறியுந்தோறும், நுண்ணுணர்வாலறியலாம்,

3. கே: வேறுள்ள அவத்தைகள் எவை?

ப: (1) கேவல அவத்தை (3)சகலாவத்தை (3) சுத்தாவத்தை.

4. கேவலாவத்தை என்ருல் என்ன?

ப: 37-வது செய்யுளில் கூறியபடி தன்னுடைய இச்சாஞானக்கிரியைகளில் நிகழ்ச்சி சிறிதுமின்றி தான்மாத்திரையேயுளனுதல்.

5. கே: சகலாவத்தை என்ருல் என்ன?

ப: தநு, கரணுதிகளோடு முதல்வன் கூட்ட கூடிவிளங்கும் அவதரம்.

6. கே: சுத்தாவத்தை என்ருல் என்ன?

ப: உயிர் பஞ்சமலங்களும் நீங்கி பிறவி ஒழிந்து இச்சா ஞானக் கிரியைகள் எங்கும் வியாபித்து விளங்குவது.

சூத்திர 4, அதிகரணம 3, செய்யுள் 36.

(ஐந்து ……என்னே)

1. கே: சாக்கிரத்தில் கலாதிகளைச் செலுத்தி நிற்கும் கருவிகள் எவை

ப: (1) சிவம் (2) சத்தி (3) சாதாக்கியம் (4) ஈசுரம் (5) சுத்தவித்லை என்ற கருவிகள்

2. கே: சொப்பனத்தில் கலாதிகளைச் செலுத்தி நிற்கும் கருவிகள் எவை?

ப: (1) சிவம் (2) சத்தி (3) சாதாக்கியம் (4) ஈசுரம் என்ற கருவிகள்.

3. கே: சுழுத்தியில் கலாதிகளைச் செலுத்திநிற்கும் கருவிகள் எவை?

ப: (1)சிவம் (2)சத்தி (3) சாதாக்கியம் என்ற கருவிகள்

4. கே: துரியத்தில் கலாதிகளைச் செலுத்திநிற்கும் கருவிகள் எவை?

ப: (1) சிவம் (2) சத்தி என்ற கருவிகள்.

5. கே: துரியாதீதத்தில் கலாதிகளைச் செலுத்திநிற்கும் கருவி ஏது?

ப: சிவம் என்ற கருவியாம்.

சூத்திரம் 4, அதிகரணம் 3, செய்யுள் 37.

(கேவலசகல………துடைத்தே)

1. கே: காரியவவத்தைகள் எவை?

ப: (1) சாக்கிரம் (2) சொப்பனம் (3) சுழுத்தி (4) துரியம் (5) துரியாதீதம்.

2. கே: காரணாவத்தை எவை?

ப: (1) கேவலாவத்தை (2) சகலாவத்தை (3) சுத்தாவத்தை.

சூத்திரம் 4, அதிகரணம் 3, செய்யுள் 38.

(அறிவிலன் ……. ஆன்மா)

1. கே: போக்கிய காண்டக் கருவிகள் எவை?

ப: புத்தி முதலான 8 குணங்கள், அவை (1) தன்மம் (2) ஞானம் (3) வைராக்கியம் (4) ஐசுவரியம் (5) அதன்மம் (6) அஞ்ஞானம் (7) அவைராக்கியம் (8) அநைசுவரியம்.

2. கே: போக காண்டம் எவை?

ப: கலை. வித்தை, அராகம், புருடன், மாயை.

3. கே: கேவலாவத்தையில் ஆன்மாவுக்கு எவை எவை இல்லை? என்ன உண்டு

ப: (1) உடம்பில்லை (2) கலாதி அறிவு இல்லை (3) புத்தி குணம் எட்டும் இல்லை (4) அறிவில்லை (5) இச்சையில்லை (6) தொழிலில்லை (7) சுதந்திரமில்லை (8) போகமில்லை (9) தோற்றக் கேடுகள் இல்லை (10) ஏகதேசியாதலில்லை (மலத்தோடு வியாபி).

4. கே: பிராகபாவம் என்றால் என்ன?

ப: இல்லாமை.

சூத்திரம் 4, அதிகரணம் 3, செய்யுள் 39.

(உருவினைக்கொண்டு .. .. சென்றே)

1. கே: சகலாவத்தையில் ஆன்மாவுக்கு எவை எவை உண்டு?

ப: (1) உரு (3) கலாதியோடு சேர்தல் (3) புத்தி குணம் எட்டையும் சேர்தல் (4) இச்சையை அடைதல் (5) அறிவு பெறுதல் (6) தொழிலுறுதல் (7) சத்தாதிகளில் விருப்பம் (8) போகம் நுகர்தல் (9) தோற்றக்கேடுகள் பெறுதல்(10) ஏகதேசியாதல் ஆகியவை உண்டு.

சூத்திரம் 4, அதிகரணம் 3. செய்யுள் 40,
(இருவினை .....)

1. கே: சுத்தாவத்தையாவது எப்படி இருப்பது?
ப: (1) இருவினையொப்பு (2) சத்திநிபாதம் (3) குருவருள் (4) ஞானசாதனம் (5) மும்மல நீக்கம் (6) வாதனை நீக்கம் (7) ஞானப்பெருக்கம் முறையேகிடைப்பது. முன் சொன்னபத்தும் நீங்கப்பெற்று திருவருள் கூடுதல் சுத்தாவத்தை.

2. கே: இருவினையொப்பு எப்படிப்பட்டது?
ப: சத்தமாதியாம் விடயங்களில், புரிவதும் செய்தல், கழிதற்கு ஏதுவாகியது.

3. கே: சத்திநிபாதம் எப்படிப்பட்டது?
ப: போகபோக்கியக் கருவிகளில், செறிவு கழிதற்கு ஏதுவாகியது?

4. கே: குருவருள் எப்படிப்பட்டது?
ப: உருக்கழிதற்கு ஏதுவாகியது.

5. கே: ஞானசாதனம் எப்படிப்பட்டது?
ப: எல்லா யோனியும் புக்குழலுதல், கழிதற்கு ஏதுவாகியது.

6. கே: மும்மலநீக்கம் எப்படிப்பட்டது?
ப. சென்று, திரிதருதலாகிய ஏகதேசத்தன்மை, கழிதற்கு ஏது வாகியது.

7. கே: வாதனைநீக்கம் எப்படிப்பட்டது?
ப: சத்தமாதியாம் விடயந்தன்னில் நுகர்வது, கழிதற்கு ஏதுவாகியது.

8. கே: ஞானப்பெருக்கம் எப்படிப்பட்டது?
ப: பாச அறிவு, இச்சை, செயல்கள், கழிதற்கு ஏது வாகியது.

சூத்திரம். 5, அதிகரணம். 1, செய்யுள். 1,
(பொறிபுலன் . ... நிற்பன்)

1. கே: ஐந்தாஞ் சூத்திரத்தில் என்ன கூறுகின்றார்?
ப: திரோதான சத்தியின் இயல்பு கூறுகின்றார்.

2. கே: ஏன் திரோதான சத்தியின் இயல்பு கூறுகின்றீர்.

ப: பாசத்தின் இயல்பை கூறவேண்டியதற்காக.

3. கே: பாசத்தின் இயல்பைக்கூற திரோதானசத்தியின் இயல்பை ஏன் கூறவேண்டும்?

ப: திரோதானசத்தி, பாசத்தையுள்ளடக்கி நிற்கிற படியால்.

4. கே. ஐம்பொறிகள் எப்படிப்பட்டவை?

ப: தத்தம் விடயங்களை அறிந்தும் தம்மையும் அறியமாட்டா, தம்மை அதிட்டித்து நின்ற உயிரையும் அறிய மாட்டா.

5 கே: அந்தக்கரணங்கள் எப்படிப்பட்டவை?

ப: தங்கள் தங்களுடைய விடயங்களை அறிந்தும் தங் களையும் அறியமாட்டா, தங்களை அதிட்டித்து நிற்கும் உயிரை யும் அறியமாட்டா.

6. கே: ஆன்மா எப்படிப்பட்டது?

ப: முதல்வனுடைய சிற்சத்தியால், வினைப்பயன்களை அனுபவிக்கும் தம்மையும் அறியாது, தம்மைச் செலுத்தி நிற் கும் திருஅருளையும் அறியாது.

7. கே: சிவம் எப்படிப்பட்டது?

ப: தன்னையறியமாட்டாத உயிரோடு உடனுயிருந்து முழுவதும் அறிந்தும் அறிவித்தும் நிற்கும்.

சூத்திரம் 5, அதிகரணம் 2, செய்யுள் 2.
(இறைவனே........ களிப்பனுதி)

1. கே: பங்கயம் அலர்தலுக்குக் காரணம் எவை?

ப: பங்கயமும் காரணம், இரவியும் காரணம்.

2. கே: உழவு முதலிய செயல்களின் பயனுக்குக் காரணம் எவை?

ப: உழவு முதலிய செயல்களும் காரணம், விளை நிலமும் காரணம்.

3. கே: அறிவு எல்லோருக்கும் ஒரேமாதிரியாயில்லாமல் ஏற்றத்தாழ்வாய் இருப்பதற்குக் காரணம் என்ன?

ப: அவரவர்கள் செய்த கன்மங் காரணமாக முதல் வனே காரணம்.

4. கே: கன்மமே காரணம் என்று ஏன் சொல்லக்கூடாது?

ப: கன்மத்தைப் பக்குவப்படுத்துவதும் முதல்வனே, பக்குவப்படுத்தி அதன் பயனைத் தருவதும் முதல்வனேயாம்.

சூத்திரம் 5, அதிகரணம் 2, செய்யுள் 2.
(அறிந்திடும் ....அறிவனன்றே)

1. கே: அறிவு ஏற்றத்தாழ்வாவதற்கு கன்மத்தைச்செய்யும் உயிரே ஏன் காரணமாயிருக்கக்கூடாது?

ப: முதல்வன்தானே அறியுந்தன்மையுடையவன். உயிர் முதல்வனைப்போல தானே அறியும் சுதந்திரமில்லாதது. ஆனால், அறிவிக்க அறியுந்தன்மையுடையது. அதனால் அப்படி அறியப்பட்டுவருகிற உயிர் ஒவ்வொரு விடயத்தை ஒவ்வொரு இந்திரியத்தால் அறிகிறபடியாலும், அப்படி அறியப்பட்டவற்றை மீள மறக்கிறபடியாலும், உயிர் காரணமாகாது.

சூத்திரம் 5, அதிகரணம் 2, செய்யுள் 4.
(கருவியால் ... ... அருளினலே)

1. கே: தாத்துவீகங்கள் எவை?

ப: தத்துவங்களையுடைய பொருள்.

2. கே: காட்டு என்றால் பொருள் என்ன?

ப: விளக்கிக்காட்டுவது காட்டு.

3. கே: கால தத்துவம் எப்படிப்பட்டது?

ப: கன்மத்தை முந்தாமலும், பிந்தாமலும், வரையறுத்துச் செலுத்துவதாம்.

4. கே: நியதி தத்துவம் எப்படிப்பட்டது?

ப: கன்மத்தை ஏறாமலும் குறையாமலும் நிறுத்துவது.

5. கே: நால்வகை வாக்குக்கள் எவை?

ப: சூக்குமை, பைசந்தி, மத்திமை வைகரி.

6 கே: உயிர் எப்படி உணரும்?

ப: கருவி, பொருள், காட்டு, காலம், கருமம், உரு, நூல், அளவு ஆகிய எட்டும் வேறுமொரு சேதனப்பொருளும், கூடிநின்று ஒரு விடயத்தை உணர்த்த உணரும். அல்லுழி

உணராது. ஆதலால் இவைகளைக்கொண்டு கூட்டி, அறிவிக்க, ஒரு சேதனப் பொருள் வேண்டப்படும். ஆதலால் இறைவனையின்றி அறிதல் செய்யாது.

சூத்திரம் 5, அதிகரணம்2, செய்யுள் 5.
(கருவியும்.........நிற்பன்)

1. கே: இறைவனுடைய சூக்கும ஐந்தொழில் எவை?
 ப: உயிர்களுக்கு இறைவன் கேவலத்தில் செய்வதாம்.

2. கே: இறைவனுடைய தூல ஐந்தொழில் எவை?
 ப: 1. சிருட்டி 2. திதி 3. சங்காரம் 4. திரௌபவம் 5. அநுக்கிரகம்.

3. கே: அதிசூக்கும ஐந்தொழில் எவை?
 ப: 224-புவனமும் திருமேனியாகவும் 84-நூறுயிர யோனி பேதங்களும் அவயவங்களாகவும் இச்சாஞானக்கிரியைகள் உட்கரணமாகவும் இறைவன் கைக்கொண்டு அறிவுக்கறிவாய் நின்றுணர்த்துதல்.

4. கே: அநவத்தை என்பதற்குப் பொருள் என்ன?
 ப: முடிவில்லாமலே போதல்.

5. கே: தானே இறைவன் தனியனாய் அறிந்தும், ஆக்கியும், உணர்த்தியும் நிற்கும் என்று ஏன் கூறினார்?
 ப: இறைவனுக்கு கருவி முதலியன கூடி அறிவு நிகழ வேண்டாமையானும், உயிர்கட்குப்போல முதல்வனுக்கும் மேலே ஒருவனை அவாவப்படும் என்று அநவத்தையாய் முடியாமைக்குக் கூறினார்.

சூத்திரம் 5, அதிகரணம் 3, செய்யுள் 6.
(இறைவன்.........அன்றே)

1. கே: பாரிசேடம் என்றால் என்ன?
 ப: சேடம் என்றால் மிகுதி. பாரி என்பது சேடம் என்பதற்குத் துணைச்சொல்.

சூத்திரம் 5, அதிகரணம் 3, செய்யுள் 7.
(உலகமே ....நாதன்)

1. கே: நாடகம் நடிப்பன் என்பதற்குப் பொருள் என்ன?

ப: கரணத்தாற் செய்யாமல் சங்கற்பத்தால் செய்தலே யாம்.

2. கே: உயிர் உணர்த்துவதும், இறைவன் உணர்த்துவதும், எப்படி ஒப்புமை.

ப: உயிர், உடம்பு முதலியவற்றைக் கொண்டுணரும், முதல்வன் உலகம் முதலியவற்றைக் கைக்கொண்டுணர்த்துவன்.

சூத்திரம் 5 அதிகரணம் 3. செய்யுள், 8
(தெரிந்துகொள்.........மேலோன்)

1. கே: முதல்வன் உயிர்களுக்கு ஏகதேச அறிவைக் கொடுத்தலும், சிறு போகம் கொடுத்து பிறவியில் படுத்தலும் எதற்காக?

ப: அதனுல் பருவம் முதிர்வித்து, வியாபக அறிவை நிகழ்வித்து பரபோகம் கொடுத்தற்பொருட்டாம்.

சூத்திரம் 5, அதிகரணம் 3, செய்யுள் 9.
(அருளது ....ஈசன்)

1. கே: முதல்வன் உயிருக்கு சிறு போகம் கொடுத்து, வியாபக அறிவைக்காட்டி, பரபோகம் கொடுத்தல் எப்படிப்பட்டது?

ப: கருணையேயாம்.

2. கே: இறைவனுடைய கருணை எப்படிப்பட்டது?

ப: இறைவனுக்கு இயற்கையான குணம் எனப்படும் சத்தியாம்.

3. கே: குணம் எது, குணி எது?

ப: சத்தி குணம், சிவம் குணி.

4. கே: குணமும் குணியும் எப்படி இருக்கும்?

ப: குணத்தைவிட்டு குணி பிரியாமல் இருக்கும்.

சூத்திரம் 6, செய்யுள் 1.
(அறிவுறும் ....நின்றிடாவே)

1. கே: ஆசிரியர் ஆருஞ்சூத்திரத்தில் என்ன கூறுகின்றுர்?

ப: பதிப்பொருளுக்கு இலக்கணம் கூறுகின்றூர்.

2. கே: ஈசன் சுட்டியறியப்படும் பொருள் என்ருல் என்ன குற்றம்?

ப: ஈசன் சுட்டி அறியப்படும் பொருள் என்ருல் அசித்தும், அசத்துமாம். அதாவது சடமாய் அழிந்துபோவதாம்.

3. கே: ஈசன், எவ்வாற்ருனும் அறியப்படாத பொருள் என்ருல் என்ன குற்றம்?

ப: சூனியமாம்.

4. கே. ஈசன் சுட்டி அறியப்படும் பொருளுமல்லன். எவ்வாற்ருனும் அறியப்படும் பொருளுமல்லன் என்ருல் பின்னை எப்படிப்பட்டபொருள்?

ப: சுட்டி அறியப்படுதலும் எவ்வாற்ருனும் அறியப்படாமையுமாகிய சித்தோடு சத்தாய் நிற்கும் பொருள். (எங்கும் வியாபகமாதலின்)

5. கே: தடத்தலக்கணம் என்ருல் என்ன?

ப; பொது இயல்பு.

6. கே: சொரூப லக்கணம் என்ருல் என்ன?

ப: சிறப்பு இயல்பு.

7. கே: முதல்வனுடைய தடத்த லக்கணம் எது?

ப: பஞ்சகிருத்தியம் செய்வது.

8. கே: முதல்வனுடைய சொருபலக்கண்ம் எது?

ப: சித்துச்சத்து.

சூத்திரம் 6. அதிகரணம் 1, செய்யுள் 2.
(ஆவதாய்.........எல்லாம்)

1. கே: சுட்டறிவு எப்படிப்பட்டது?

ப: (1) தோற்றமும், நாசமும் உடையது (2) ஓரிடம் விட்டு ஓரிடம் தாவுதலையுடையது (3) தனு, கரணம், புவன போகங்களாய் பலவேறு வகைப்படுவது (4) மலத்தோடு விரவுதலையுடையது (5) மலத்தில் வேறுபட்டொழிவது. ஆதலால் அசத்தேயாம் சத்தாகாதாம்.

சூத்திரம் 6, அதிகரணம் 1, செய்யுள் 3.

(மண் தனில்.........என்பர்)

1. கே: இந்திரஜாலம் எப்படிப்பட்டது?
   ப: தோன்றும்போதே இல்லையாய் வேறுபடுவது.

2. கே: கனுக்காட்சி எப்படிப்பட்டது?
   ப: கடைசிவரை போகாமல் இடையே அழியப்படுவது.

3. கே: பேய்த்தேர் எப்படிப்பட்டது?
   ப: ஒருகாரணங்காட்டி அழியப்படும்?

4. கே: கமுதிரதம் என்றால் என்ன?
   ப: பேய்த்தேர், அதாவது, கானல்நீர், இது நல்ல வெய்யிலில் மணல் வெளியில் நீர்போல் தோன்றுவதாம்.

5. கே: இந்திரஜாலம், கனுக்காட்சி, பேய்த்தேரைப் போன்றவை எவை எவை?
   ப: (1) மண்ணுலகில் அரசனாய் வாழ்தல் (2) விண்ணுலகில் இந்திர பதவி, அயன்பதவி, மால்பதவி, 84-நூறாயிரயோனி பேதங்கள். இவைகளில் பொருந்திய வாழ்வுகள் முதலியன.

சூத்திரம் 6, அதிகரணம் 2, செய்யுள் 4.

(உணராத........போலும்)

1. கே: சுட்டறிவால் உணராத பொருள் எவை?
   ப: ஆகாயப்பூவால். கட்டிய மாலை ஒன்று, ஆமை மயிரால் திரித்த கயிறு ஒன்று.

2. கே: சுட்டறிவால் உணராத பொருளாகிய இந்த மாலையையும், கயிற்றையும் சத்துஎனக் கொண்டால் படும் இழுக்கென்னை?
   ப: சத்தெனக் கொண்டதனால் உனக்கு என்ன பயன். அதனால் உனக்கு ஆகக்கடவதாகிய செயலுமில்லையே, அதனால்

சூத்திரம் 6, அதிகரணம் 3, செய்யுள் 5.

(தத்துவம்.........எல்லாம்)

1. கே: அநிர்வசனம் என்றால் பொருள் என்ன?

ப: உள்பொருளுமன்று, இல்பொருளுமன்று, இரண்டு மாவதுமன்று, வேறுமன்று, என்று இன்னவிதமென்றுசொல்ல முடியாத பொருள்.

2. கே: பிரமப்பொருளை அ நி ர் வ ச ன மா ய் கூறப்படும் பொருள் என்றால் என்ன குற்றம்?

ப: அநிர்வசனமாய்க் கூறப்படும் பொருள், ஒன்று உண்டோ, இல்லையோ என்று கேட்டால், நீ இல்லையெனில் பிரமப்பொருள் நாஸ்திகமாய், சூனியப்பொருளாய்விடும். அதனால் அப்படி சொல்லக்கூடாது என்று நீ எண்ணி, உண்டு என்றால் உன் வாய்மொழியே உள்பொருளாகிய சத்தாகிவிடுகிறதே. அநிர்வசனப் பொருள் அல்ல என முடிகிறதே. ஆதலால் பிரமப்பொருளை, அநிர்வசனமென்று சொல்லமுடியாது. பிரமப்பொருள் உள்பொருளாயின், சுட்டியறியப்படவேண்டும் அது சுட்டியறியப்படாத மனம், வாக்கு, காயங்களைக் கடந்த மெய்ப்பொருளாம்.

சூத்திரம் 6, அதிகரணம் 3, செய்யுள் 6.
(அறிபொருள்.........நிற்கும்) (மாயாவாதி)

1. கே: பிரமம் சுட்டறிவால் அறியப்படும் பொருள் என்றால் என்ன குற்றம்?

ப: சுட்டறிவால் அறியப்பட்ட பொருள், சடமாய் அழிதலுமாம்.

2. கே: பிரமம் எவ்வாற்றானும், அறியப்படாத பொருள் என்றால் என்ன குற்றம்?

ப: எவ்வாற்றானும் அறியப்படாத பொருளுக்கு, தோற்றக்கேடுகளில்லை.

3. கே: அறியப்படாத பொருள், சத்து என்றால் என்ன இழுக்கு?

ப: அறியவல்ல ஆன்மாவால், அறிதல்வேண்டும். அது இல்லாவிடில் அந்தப் பொருளும் இல்லையாகி, அதனால் பெறக்கடவதோர் பயனும் இல்லையாம்.

4. கே: அறியப்படும் பொருள் என்பதும், இழுக்கு, அறியப்படாதபொருள் என்பதும் இழுக்கு, என்றறிந்தவனுக்குஎப்படி அறியவரும்?

ப: அச்சிவப் பொருளோடு ஒற்றித்து நின்று, அவனருளாலே, அறிதற்பாலதாம்.

5. கே: அங்ஙனம் அறியும்போது அச்சிவப்பொருள் எப்படி நிற்கும்?

ப: அச்சிவப்பொருள், அந்த அறிவேயாயும், நிற்கும், வேறுமாயும் நிற்கும், உடனுமாயும் நிற்கும்.

சூத்திரம் 6, அதிகரணம் 3, செய்யுள் 7.
(பாவிப்பது... ...ஞலே) (பாதஞ்சலர்)

1. கே: முதல்வன் அநந்நியமாயவழி காண்பானும், காட்சிப் பொருளாமாறும், அருளானுபகரிக்கப்படுமாறும் யாங்ஙனம்?

ப: அறிவேயாதலும், வேருதலும், உடனுதலுமாகிய முத்திறமும், தன்கண் தோன்ற நிற்கும் அத்துவித இயைபு உடைமையால், அவ்வாருதல் செல்லும்.

2. கே: பாவனையாவது கருவிகளோடு கூடி நின்று, செய்வது என்பது, ஏன் பொருந்தாது?

ப: கருவிகளோடு கூடிச்செய்வது சகலமாய் முடியும் ஆதலால் பொருந்தாது.

3. கே: பாவனையாவது கருவிகளை நீங்கி நின்று செய்வது என்பது ஏன் பொருந்தாது?

ப: கருவிகளை நீங்கி நின்று செய்வது கேவலமாய் முடியும், ஆதலால் அதுவும் பொருந்தாது.

4. கே: கருவிகளோடு கூடி அறியாமலும், கருவிகளோடு கூடாமல் அறிவதும், இல்லாமல் அறிவது என்ருல் என்ன குற்றம்?

ப: அது, அநிர்வசனீயம் எனப்பட்டு, பாழாய் முடியுமாகலால் பொருந்தாது.

5. கே: பாவனைக்கு எய்தாத பொருளை எய்தியதாக வைத்து, பாவிக்கும் பொருள் நான் என்று தன்மேல் வைத்துப்பாவிப்பது என்பது ஏன் பொருந்தாது?

ப: அதனல் யாதொரு பயனுமில்லை.

6. கே: மற்று, எப்படி பாவிப்பது பாவனையாகும்?

ப: அநந்யமாக நின்று, அப்பரம்பரன் அருளால் காண்டலே, ஈண்டைக்கு உரிய பாவனையாம்.

சூத்திரம் 6, அதிகரணம் 3, செய்யுள் 8.
(அந்நிய.........ஈசன்) (சமவாதசைவர் சிவ சமவாதி)

1. கே: பரம்பரன் அருளால், பாவிக்கப்படுவது என்னுது. மலமாசு தீர்ந்தவழி, சிவத்தோடு ஒப்பதாய உயிரறிவே, முதல்வனை அறியும் என்றல் படும் இழுக்கென்னை?

ப: அச்சிவம், ஒன்ருய், உடனுமாய், வேருய், நிற்பதுவே ஆகலானும், அப்படி அவன் நிற்கும், அந்தநிலை, அறிவானும், அறிபொருளும், அறிவும் எனப்பகுத்தறிய வாராமையானும், உயிரறிவால் அறியப்படும் பொருளல்ல என்பதாம்.

சூத்திரம் 6, அதிகரணம் 3, செய்யுள் 9.
(ஒன்றெனு.........லாமே)

1. கே: சிவம், உயிருக்கு வேருய் நிற்றல் என்பது எப்படி பெறப்படும்.

ப: சிவமும் உயிரும் ஒன்று என்ருல், அப்படி ஒன்று என்று அறிகிற பொருள் ஒன்று உண்டு என்பது, பெறப் படுதலாலே சிவம், உயிருக்கு வேருய் நிற்கும்.

2. கே: சிவமும், உயிரும், உடனுதல் எதனுல் பெறப்படும்?

ப: உயிரறிவுண்டு, சிவ அறிவுண்டு, சிவ அறிவு உயி ரறிவை விட்டு நில்லாது அதனுல் பெறப்படும்.

3. கே: உயிரே சிவம் என்னும்படி, ஒன்ருதல் எப்படி பெறப்படும்?

ப: நீரில் நிழல்போல, இறையறிவும், உயிரறிவும் கலந்து நிற்றலால் உயிரே சிவம் என்னும்படி முதல்வன் உயிரோடு ஒன்ருதல் பெற்ரும்.

4. கே: அத்துவித நிலை என்பது எது?

ப: வேருய், உடனுய், ஒன்ருய் நிற்பதேயாம்.

சூத்திரம் 7, செய்யுள் 1.
(அனைத்தும் ....தன்றே)

1. கே: சாதனம், சாதித்தல், பாரிசேடம், சத்து, அசத்து, என்பதற்குப் பொருள் கூறு?

ப: சாதனம்=கருவி; சாதித்தல்=உபயோகப்படுத்தல்; பாரிசேடம்=மிகுதி; சத்து=அறியும் பொருள்; அசத்து=அறியப்படாத பொருள்.

2. கே: உயிர் வேருகியும், சத்தோடு கூடி சத்தாகியும், அசத்தோடு கூடி அசத்தாகியும், அறியும் என்ருல், உயிர் தன்னை அறியுமோ அறியாதோ?

ப: சத்தென்று தனித்து அறியப்படுவதுமன்று, அசத்தென்று தனித்தறியப்படுவதுமன்று, அந்த இரண்டினையும் அறியும் முகத்தால் அறியும் என்பதாம்.

3. கே: சத்தாகிய சிவமே, அசத்தாகிய பாசம் அனைத்தினையும், அறியும் என்று சிவாத்துவித சைவர், கூறுவது ஏன் பொருந்தாது?

ப: சத்தாகிய சிவம், வியாபக அறிவு, ஆதலால், எவற்றினையும், ஒருங்கே அறிந்து நிற்பதன்றி, ஏகதேசமாய்ப் பகுத்து ஒன்றை அறியாது.

4. கே: அற்றேல், சிவம் வியாபக அறிவாயினும், உயிரின் பொருட்டு, அசத்து எனப்படும் கருவிகரணங்களிடமாக நின்று, பகுத்தறிதல் கூடும் எனப் பின்னும் சிவாத்துவித சைவர் கூறுவது ஏன் பொருந்தாது?

ப: இரவிமுன் இருள்போல, சத்து எதிர், அசத்து முனைத்து நில்லாமையால். அசத்தினிடமாய் நின்று, அறியும் என்பது கூடாது.

5. கே: விகாரமின்றி நிற்கும் ஆன்ம சந்நிதியில், அசத்தாகிய கருவியே, சத்தாகிய சிவத்தை, சிவகரணமாய் நின்று அறிவது எனச் சிவசங்கிராந்தவாதி சொல்லுவது ஏன் பொருந்தாது?

ப: சத்துக்கு எதிர் அசத்து முனைத்து நில்லாமையால் வேறொன்றை அறிவதற்குத்தான் கருவியாய் நிற்பதன்றி, தனக்கு ஓர் அறிவில்லாதாகலானும், அசத்தை அறியும் என்றல் கூடாது.

சூத்திரம் 7, அதிகரணம் 3, செய்யுள் 2
(சத்தசத் ....போலும்)

1. கே: சத்தாகிய பதியும், அசத்தாகிய பாசமும், எப்படிப் பட்டது?
ப: ஒன்றை ஒன்று அறியும் உரிமையில்லாதது.

2. கே: சத்தாகிய பதியையும் அசத்தாகிய பாசத்தையும் அறியும் உரிமை உடையது எது?
ப: பசுவாம்.

3. கே: பசு எப்படிப்பட்ட உரிமையையுடையது?
ப: பதிக்கும், பாசத்துக்கும் வேறாய், பதியிலும், பாசத்திலும், மலரின்கண் நாற்றம்போல, அதுவதுவாய் நின்று, சதசத்தாவதாகிய ஒரு உரிமையை உடையதாம்.

சூத்திரம் 7, அதிகரணம் 3, செய்யுள் 3.
(சுத்தமெய்ஞ்.........போலும்)

1. கே: முப்பொருள்களுள், நித்த, வியாபக, சித்து எவை?
ப: சிவமும் உயிருமாம்.

2. கே: சிவமும் உயிரும் எப்படிப்பட்ட சித்து?
ப: உயிர் தூலசித்து, சிவம் அதிசூக்கும சித்து,

3. கே: சிவம் அதிசூக்கும சித்தாதலின், அசத்து அதன் முன் நில்லாது. உயிர் தூல சித்தாதலின் அதன் எதிர் அசத்து முனைத்து நிற்கும் என்பது எப்படி அறியலாம்?

ப: கடலும் தூய்மையானது, நீரும் தூய்மையானது, ஆனாலும் உப்பு கடலைப்பற்றாமல், நீரைப்பற்றி நிற்றல்போலவேயாம்.

சூத்திரம் 7, அதிகரணம் 3, செய்யுள் 4, (அறிவிக்க… …அருளினுலே)

1. கே: வியஞ்சகம் என்ருல் என்ன?
ப: காட்டுங் கருவி.

2. கே: உயிர் தூலசித்து என்பது எப்படி அறியப்படும்?
ப: தன் அறிவு விளங்குதற்குக் காட்டுங் கருவியின்றி, விளங்காமையானும், அறிந்தபின் அழிவின்றி நிற்றலானும், உயிர் தூலசித்தாம்.

3. கே: சிவன் சூக்கும சித்தென்பதை எப்படி அறியலாம்?
ப: சிவம், உயிரினிடத்துள்ள மலத்தை நீக்கி. அறிவிக்கும் வியஞ்சகப் பொருள், தனக்கொரு வியஞ்சகம் வேண்டாதது. ஆதலால் அதிசூக்கும சித்தாம்.

சூத்திரம் 8. (மன்னவன்………வைப்பன்)

1. கே: சாதனம், சாதித்தல், உரிமை, பேறு, மனஎழுச்சி, வருவாய், சேறல் இவற்றிற்குப் பொருள் என்ன?

ப: சாதனம் - கருவி, சாதித்தல் - கருவியை உபயோகித்தல், உரிமை - சொந்தம், பேறு - செல்வம், மனஎழுச்சி - உற்சாகம், வருவாய் - வரும்வழி, சேறல் - செல்லுதல்.

2. கே: நான்காம் சூத்திரத்தில் என்ன கூறினுர்?
ப: பசுவின் இலக்கனம் கூறினுர்.

3. கே: ஐந்தாம் சூத்திரத்தில் என்ன கூறினுர்?
ப: பாசத்தின் இலக்கணம் கூறினுர். அதாவது திரோதான சத்தியின் இலக்கணங் கூறினுர்.

4. கே: ஆருஞ்சூத்திரத்தில் என்ன கூறினுர்?
ப: பதிப்பொருளின் இலக்கணங் கூறினுர்.

5. கே: 7, 8, 9, வது சூத்திரங்களில் என்ன கூறத் தொடங்கினுர்?
ப: சாதனங்களின் இயல்பு கூறத் தொடங்கினுர்.

6. கே: பதி, பாசம், பசு, என்கிற முப்பொருள்களுள், சாதித்துப் பெறுதற்குரிய அதிகாரம் உடையது பசுவேயாம் என்று கூறுகிறார்?

ப: ஏழாஞ் சூத்திரத்தில் என்ன கூறுகின்றார்.

7. கே: பரதந்திரன், நித்த, முத்த, சுத்த, சித்தன், தூல அருந்ததி நயம், சோபான முறை, மரபு, இவற்றிற்குப் பொருள் கூறுக.

ப: பரதந்திரன் - பிறர்வசப்பட்டவன், நித்தன் - அழியாதவன், முத்தன் - எல்லாப்பற்றுக்களையும் விட்டவன், சுத்தன் - மலப்பற்று இல்லாதவன், சித்தன் - அறிவு உள்ளவன், தூல அருந்ததி நயம் - அருந்ததி நக்ஷத்திரத்தை அறியவேண்டினால், அது மிகவும் சிறியது. ஆதலால், அதன் பக்கத்திலுள்ள பெரிய நக்ஷத்திரத்தை அறிந்து, அதன் பிறகு அதன் அருகில் உள்ள அருந்ததியை அறியவேண்டும். அதுபோல, சின்ன பொருளை அறியவேண்டின், முதன் முதலாக பெரிய பொருளை அறிந்தே அதன்பின் அந்த சின்னபொருளை அறியவேண்டும் என்பதாம். சோபானமுறை - படிப்படியாய் அறிவது. மரபு - முறை.

8. கே: எது காட்சிப்புலனாதல் முடியாது?

ப: உயிர். மும்மலச் சுழலில்பட்டு வருந்துதலை அறிய முடியாது.

9. கே: எது காட்சிப் புலனாகும்?

ப: உயிர், ஐம்பொறிச் சுழலில்பட்டு வருந்துதலை, அறியலாம்.

10. கே: எட்டாஞ் சூத்திரத்தில் என்ன கூறினார்?

ப: ஐம்பொறியிற்பட்டு, உயிர் வருந்துவதைக் கூறினார்.

11. கே: உயிர் எப்படி வருந்திற்று?

ப: தன்னிலையிலிருந்து, தவறி ஐம்பொறியாகிய வேடரிடத்தில் அகப்பட்டு, அறிவிழந்து, தன்னையும் அறியாமல், தலைவனையும் அறியாமல், வருந்திற்று.

12. கே: அங்ஙனம் வருந்தும் உயிரை ஈசன் எப்படி வாழ்விப்பன்?

ப: உயிர், முன்னே செய்துள்ள தவமுதிர்ச்சி பார்த்து குரு வடிவங்கொண்டு வந்து உணர்த்தி, ஐம்பொறியிலிருந்து

நீங்கும்படி, மலவலிமையைக்கெடுத்து, மீட்டு, தொன்னிலையில் தவருதபடி வைத்து வாழ்விப்பன்.

13. கே: ஏன் ஈசன், உயிர்களை இப்படி வாழ்விக்கிறுன்?
ப: அப்படி வாழ்வித்தல், அவனுக்குக் கடப்பாடாம்.

14. கே: அப்படி வாழ்வித்தல், ஈசனுக்குக் கடப்பாடு என்பதற்கு ஒரு உதாரணம் கூறு?
ப: பிள்ளைமைப்பருவத்தால், வேடருட்பட்டு, பரதந்திரனுய், தன் சாதிக்குரிய பெருந்தகைமையை, இழந்து, இழிதொழில் பயிற்றி, வருந்தும் மன்னவ குமாரனை, அவன் தந்தை, காப்பாற்றும் கடமைபோல.

சூத்திரம் 8, அதிகரணம் 1, செய்யுள் 2.
(உறைதரு ....பாதந்தான்)

1. கே: மனித உயிர்கள் எத்தனை வகைப்படும்?
ப: மூவகைப்படும்.

2. கே: ஏன் மூவகைப்படும்?
ப: பந்தவேறுபாட்டால்.

3. கே: மூவகை உயிர்கள் எவை?
ப: சகலர், பிரளயாகலர், விஞ்ஞானுகலர்.

4. கே: சகலர் என்பவர் யார்?
ப: ஆணவம், கன்மம், மாயை, என்கிற மும்மலங்களையும் உடையவர்.

5. கே: பிரளயாகலர் என்பவர் யார்?
ப: ஆணவம், கன்மம், என்கிற இரண்டு மலங்களை உடையவர்.

6. கே: விஞ்ஞானகலர் என்பவர் யார்?
ப: ஆணவமல மாத்திரம் உடையவர்.

7. கே: சத்திநி பாதம் என்ருல் என்ன?
ப: சத்தி - அருள், நிபாதம் - பதிதல், அதாவது, அருள் பதிதல்.

8. கே: சத்திநி பாதம் எத்தனை வகைப்படும்?
ப: (1) மந்ததரம், (2) மந்தம், (3) தீவிரம், (4) தீவிரதரம் என நாலுவகைப்படும்.

9\. கே: தீக்கை என்பதற்குப் பொருள் என்ன?
ப: மலத்தைக் கெடுத்து, ஞானத்தைக் கொடுப்பது.

10\. கே: சாதாரதீக்கை என்ருல் என்ன?
ப: குண்டம், மண்டலங்களோடு செய்யும் தீட்சை.

11\. கே: சாதாரதீக்கைக்கு உரியவர் யார்?
ப: சகலர்.

12\. கே: நிராதார தீக்கை என்ருல் என்ன?
ப: குண்டம், மண்டலங்கள், புறத்தேயின்றிச் செய்வது.

13\. கே: நிராதார தீக்கைக்கு உரியவர் யார்?
ப: பிரளயாகலரும், விஞ்ஞானகலரும்.

14\. கே: இருவினை ஒப்பு என்பது என்ன?
ப: நல்வினை தீவினையினுல் உண்டாகிய, பயனில்லாமல் ஒத்திருத்தல்.

15\. கே: சகலருக்கு எப்படி மலத்தை நீக்குவார்?
ப: இருவினை ஒப்புவந்தவுடன், முதல்வன், மந்ததரம் மந்தம், தீவிரம், தீவிரதரம் என்னும் நால்வகைச் சத்திநி பாதத்தின்வைத்து, இவ்வுலகில் குருமூர்த்தியை அதிட்டித்து நின்று, சாதாரதீக்கை செய்து, மலத்தை நீக்குவன்.

16\. கே: பிரளயாகலருக்கு முதல்வன் எப்படி மலத்தை நீக்குவன்?
ப: இருவினை ஒப்பின்கண், தீவிரம் என்னும் சத்தினிபாதத்தில் வைத்து, நிராதாரமாகி, முன்னின்று உணர்த்தி மலங்களை நீக்குவன்.

17\. கே: விஞ்ஞானகலருக்கு முதல்வன், எப்படி மலத்தை நீக்குவன்?
ப: இருவினை ஒப்பின்கண், தீவிரதரம் என்னும சத்தினிபாதத்தில் வைத்து, நிராதாரமாகி, உள்நின்று உணர்த்தி மலத்தை நீக்குவன்.

சூத்திரம் 8, அதிகரணம் 1, செய்யுள் 3.
(பலவிதம்.........நிகழும்)

1\. கே: மலபரிபாகம் என்ருல் என்ன?
ப: மலம் பக்குவப்படுதல்.

2. கே: மலபரிபாகம் எத்தனை வகைப்படும்?

ப: பலவகைப்படும்.

3. கே: சாதாரதீக்கை, எத்தனை வகைப்படும், அவை எவை?

ப: திரு அருள் நோக்கம், பரிசம், வாக்கு, பாவனை, நூல், யோகம், ஔத்திரி, சாம்பவமும், என்பன. இவை ஔத்திரிக்கு அங்கம்.

4. கே: ஔத்திரி தீக்கை என்றால் என்ன?

ப: நோக்கம் முதலியவற்றை தனக்கு அங்கமாகக் கொண்டு, தாம் அங்கியாகி இருப்பது.

5. கே: ஔத்திரிதீக்கை எத்தனை வகைப்படும்? அவை,

ப: ஞானவதி, கிரியாவதி, என இரண்டு வகைப்படும்.

6. கே: ஞானவதி தீக்கை என்றால் என்ன?

ப: குண்டம், மண்டலம், அங்கி, நெய், சுருக்கு, சுருவம், முதலியன மனத்தால் கற்பித்துக்கொண்டு அகத்தே செய்வது.

7. கே: கிரியாவதி தீக்கை யென்றால் என்ன?

ப: குண்டம், மண்டலம், அங்கி, நெய், சுருக்கு, சுருவம், ஆகுதி எல்லாம் புறத்தே செய்வது.

8. கே: இந்த ஞானவதி, கிரியாவதியாகிய ஔத்திரி தீக்கை இன்னும் எத்தனை வகைப்படும்?

ப: ஞானவதி நிர்ப்பீசம், ஞானவதி சபீசம், கிரியாவதி நிர்ப்பீசம், கிரியாவதி சபீசம், என நான்கு வகைப்படும்.

9. கே: ஔத்திரி தீக்கை என்பதற்குப் பொருள் என்ன?

ப: ஹூதம் என்றால் - ஓமம் என்று பொருள், ஹூத சகிதம் என்றால் ஔத்திரி, ஆதலால் ஓமசம்பந்தமுடையது ஔத்திரியாகும்.

10. கே: சம்பாதஹோமம் என்றால் என்ன?

ப: சமய ஆசாரத்துக்கு யோக்கியதையாக்கும் தீக்கை.

11. கே: நயனம், பரிசம், வாக்கு, பாவனை, நூல், யோகம், இவை ஆறும் எத்தனை வகைப்படும், அவை என்ன என்ன?

ப: சுதந்திரமாகச் செய்யப்படுவனவும், அவுத்திரிக்கு, அங்கமாகச் செய்யப்படுவனவும், என இருவகைப்படும்.

12. கே. சுதந்திரமாகச் செய்யப்படுவது எது?

ப: ஔத்திரிக்கு உரியரல்லாதாருக்குச் செய்வது.

சூத்திரம் 8, அதிகரணம 1, செய்யுள் 4.
(பாலரொடு.........காலே)

1. கே: சமயி, புத்திரர், சமயம், விசேடம், நிர்வாணம், சத்தியோ நிர்வாணம், அசத்தியோ நிர்வாணம் என்பது என்ன?

ப: சமயி என்றால் சமய தீக்கையுள்ளவன், புத்திரர் என்றால் விசேஷ தீக்கையுடையவன், சமயம் என்றால் சமய தீக்ஷை மாத்திரம், விசேடம் என்றால் விசேஷ தீக்ஷை மாத்திரம், நிருவாணம் என்றால், முத்தி தீக்ஷை.

2. கே: சத்தியோ நிர்வாணம் என்றால் என்ன?

ப: திட்சை செய்தவுடனே முத்தி அடைவது.

3. கே: நிர்ப்பீச தீக்கையென்பது என்ன?

ப: பாலர், அறிவீனர், முதியோர், மாதர், பலபோகத்தவர், மிக்கநோயினர் இவர்களுக்கு, மலபரிபாகம் உடையவராயும்; தீக்கைக்குப்பின், உறுதியாகத் தவறாமல் செய்யக்கூடிய சமய ஆசாரங்களைச் செய்யும் வல்லமையில்லாதவராதலால், இதனை உணர்ந்து, கன்மங்களையும், சமயாசாரத்தையும், ஆகுதியால் சுத்திசெய்து, நித்திய கன்மமாத்திரையில், ஏற்றவாறு, அநுட்டிக்கும், அதிகாரமுடையவராகச் செய்தலாம்.

4. கே: நிரதிகார தீக்கை என்று ஏன் பெயர்?

ப: நித்திய கன்ம மாத்திரையில், அதிகாரங்கொடுத்து, நைமித்திகத்தும், காமிகத்தும், அதிகாரங்கொடாமை.

5. கே; நைமித்திகம் என்றால் என்ன?

ப: திருவிழா முதலியன.

6. கே: காமியம் என்றால் என்ன?

ப: யாகாதி முதலியன.

7. கே: சமியதீக்கை என்றால் என்ன?

ப: சம்பாத ஹோமத்தால், மாணுக்கனை தூய்மைசெய்து, சைவ ஆசாரத்துக்கு அதிகாரியாக்குவது.

8. கே: விசேடதீக்கை என்றால் என்ன?

ப: மாணுக்கனது ஆன்மாவை வாகீசுரனால், வாகீசுவரியின், கருப்பநாடியில் செலுத்தி, மீளவாங்கி, சிவபுத்திரனாகச் செய்து, சிவபூசை செய்ய, யோகநெறிசெல்ல, சிவாகமங்களையோத, அதிகாரியாக்குவது.

8. கே: நிர்வாண தீக்கை என்றால் என்ன?

ப: முத்திக்கு பக்குவமுடையவனாகச் செய்வது.

9. கே: அசத்தியோ நிருவாணம் என்றால் என்ன?

ப: தேகாந்தத்தில் முத்தியைத்தருவது.

10. கே: நிருவாணம் என்றால் என்ன?

ப: தீக்கை செய்தவுடனே முத்தியைத் தருவது.

11. கே: நிர்ப்பீச தீக்கை என்றால் என்ன?

ப: சமய ஆசாரத்தோடு செய்யப்படும், நிருவாண தீக்கையும், அதற்கு அங்கமாகவும், சுதந்திரமாகவும் செய்யப்படும், சமய விசேடங்களும், நிர்ப்பீச தீக்கை என்க.

சூத்திரம் 8, அதிகரணம் 1, செய்யுள் 5.
(ஓதியுணர்ந்து ....அன்றே)

1. கே: சபீச தீக்கை என்கிற, சாரதிகார தீக்கை என்பது என்ன (அதாவது) அதிகாரத்தோடு கூடிய தீக்கை?

ப: மலபரிபாகத்தோடு, கற்றறியும் வல்லமையும், மிக உடையாருக்கு, ஆசாரியர் சமயாசாரமும், கன்மமும், கிறுத்தி, மற்றவற்றை சுத்திசெய்து, நித்தியம், நைமித்திகம், காமியம், இம்மூன்றிலும் அதிகாரமுடையவராகச் செய்தலாம்.

2. கே: சபீச தீக்கை என்கிற சாதிகார தீக்கையுள்ளவர்கள் எத்தனை வகைப்படுவார்கள்.

ப: தீக்கை வேறுபாட்டால், சாதகர் என்றும், ஆசாரியர் என்றும் இருவகைப்படுவர்.

3. கே: இந்த சபீச தீக்கை என்கிற சாதிகார தீக்கை எத்தனை வகைப்படும்?

ப: உலக தருமிணியென்றும், சிவதருமிணியென்றும் இருவகைப்படும்.

4. கே: உலக தருமிணியென்ருல் என்ன?
ப: இல்லறத்தாருக்கு (திரோதான சத்திருப) சிகாச்சேதமின்றிச் செய்வது.

5 கே: சிவதருமிணியென்ருல் என்ன?
ப: துறவறத்தாருக்கு (திரோதான சத்திருப) சிகாச்சேதத்தோடு செய்வது.

6. கே: உலக தருமிணி தீக்கைக்கு வேறு பெயர் எது?
ப: பௌதிக தீக்கை.

7. கே: சிவதருமிணி தீக்கைக்கு வேறு பெயர் எது?
ப: நைட்டிக தீக்கை.

சூத்திரம் 8, அதிகரணம் 1, செய்யுள் 6.
(அழிவிலாக்.........கண்ணும்)

செ. 7. (மந்திரங்கள்........தானும்)

செ. 8. (வித்தையினை........ஈசனுமே

செ. 9. (சாந்தியா.........யைந்தே)

1. கே: அத்துவா என்ருல் பொருள் என்ன?
ப: கன்மங்கள் நிகழும் வழி.

2. கே: அத்துவா சுத்திசெய்தல் எதற்கு?
ப: பிறவியை அறுக்க.

3. கே: அத்துவாக்கள் எத்தனை? அவை எவை?
ப: அத்துவாக்கள் ஆறு; அவை, வன்னுத்துவா, பதாத்துவா, மந்திராத்துவா, புவனுத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவாவாம். அதாவது, வன்னம் என்ருல் எழுத்து, பதம் என்ருல் சொல், மந்திரம் என்ருல் சொற்ருெடர், புவனம் என்ருல் நிலம், தத்துவம் என்ருல் பொருள், கலையென்ருல் செயல்.

8. கே: நல்வினை தீவினை யென்ருல் என்ன?
ப: இந்த வன்னம், பதம், மந்திரம், புவனம், தத்துவம் கலை ஆறையும் பிழையில்லாமல் செய்தல் நல்வினை, இந்த ஆறையும் பிழை பொருந்தச் செய்தல் தீவினை.

9. கே: இந்த ஆறு அத்துவாக்களும், எப்படி அடங்கி யிருக்கும்?

ப: தத்துவம் புவனத்திலடங்கும், புவனம் எழுத்தி லடங்கும், எழுத்து பதத்திலடங்கும், பதம் மந்திரத்திலடங் கும். மந்திரம் கலையிலடங்கும்.

10. கே: இந்த ஆறு அத்துவாக்களும் எத்தனை வகைப்படும்?

ப: அசுத்தாத்துவா, மிச்சிராத்துவா, சுத்தாத்துவா, என மூன்று வகைப்படும்.

11. கே: அசுத்தாத்துவாக்கள் எவை?

ப: பிரகிருதி முதல் மண் ஈருக உள்ளவை.

12. கே: மிச்சிராத்துவாக்கள் எவை?

ப: காலம் முதல் மாயை ஈருக உள்ளவை.

13. கே: சுத்தாத்துவாக்கள் எவை?

ப: சிவம் முதல் சுத்தவித்தை ஈருக உள்ளன.

14. கே: இந்த அத்துவாக்கள் ஐந்தும் நிவர்த்திகலை, பிர திட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்திய தீதாகலையில் எப்படி அடங்கும்?

ப: நிவிர்த்திகலையில், மந்திரம் 2, பதம் 28, எழுத்து 1 புவனம் 108, தத்துவம் 1, அடங்கும். பிரதிட்டா கலையில் மந்திரம் 2, பதம் 21, எழுத்து 24, புவனம் 56, தத்துவம் 23 அடங்கும். வித்தியாகலையில், மந்திரம் 2, பதம் 20, எழுத்து 7, புவனம் 27, தத்துவம் 7, இவை அடங்கும். சாந்திகலையில், மந்திரம் 2, பதம் 11, எழுத்து 3, புவனம் 18, தத்துவம் 3 இவை அடங்கும். சாந்தியதீதா கலையில், மந்திரம் 3, பதம் 2 எழுத்து 16, புவனம் 15, தத்துவம் 2, இவை அடங்கும்.

15. கே: இந்த கலைகள் ஐந்தினுக்கும், அதி தெய்வங்கள் எவை?

ப: நிவிர்த்தி கலைக்கு, அதிதெய்வம் பிரமன். பிரதிஷ்டா கலைக்கு அதிதெய்வம் மால், வித்தியாகலைக்கு, அதிதெய்வம் உருத்திரன், சாந்தி கலைக்கு அதிதெய்வம், மகேச்சுரன், சாந்தி அதிதா கலைக்கு அதிதெய்வம் சதாசிவம்.

16. கே: மந்திரம், பதம், எழுத்து, புவனம், தத்துவம், கலை இவை எத்தனை எத்தனை?

ப: மந்திரம் 11, பதம் 81, எழுத்து 51, புவனம் 224 தத்துவம் 36, கலை 5.

17. கே: வியாத்தி யென்றால், பொருளென்ன?

ப: அடங்கி நிற்றல்.

சூத்திரம் 8, அதிகரணம் 1, செய்யுள் 10.
(மூன்று ... . இடிப்பன்)

1. கே: தீக்கையில், மலசுத்திகளைச் சொல்லாமல், அத்துவ சுத்திகளைச் சொன்ன காரணம் என்ன?

ப: அறுதி மறைப்பாகிய, ஆணவமலமும், வாதனை பற்றிவரும் ஆகாமிய வினையும், இறைவனுடைய, ஞான சத்தியால் ஒழியும், அதனாலும், ஆணவமலத்தை முதிர்விக்கும் பொருட்டு, சம்பாதித்த கன்மமலத்திலே, ஈட்டிய முறையால் அன்றி பக்குவமுறையால் அனுபவித்ததுபோக பாக்கியுள்ள கன்மமலமும், அதற்குப் பற்றுக்கொடுத்து நிற்கிற, மாயேய மலமும், கிரியாசத்தியால் உடம்பு உள்ளவரையில் அனுபவிக்கவேண்டிய பிராரத்தவினை அனுபவத்தால் ஒழியும் அதனாலும் கிரியா சத்தியின் விருத்தியாகிய தீக்கையினாலே, எஞ்சிநின்ற கன்மங்களைச் சுத்திசெய்தற் பொருட்டு அவற்றிற்குப் பற்றுக்கோடாகிய அத்துவாசுத்தி கூறப்பட்டது.

2. கே: உயிர் பருவம் அடைதல் என்றால் என்ன?

ப: அறிவித்தவாறே அறியவல்ல செவ்வித்தாதல்.

சூத்திரம் 8, அதிகரணம் 3, செய்யுள் 11.
(புறச்சமயம் .... சேர்வர்)

1. கே: உயிர்கள் எப்பொழுது சித்தாந்த சைவத்தை அடையும்.

ப: 11-வது செய்யுள் புறச்சமய நெறிநின்றும் என்பது முதலிய ஒன்பதிலும் சென்றால் அருள் அடைவர், அது ஒரு காலத்தில் முடிவதன்று. (இதுவாயில்)

2. கே: சிவபிரானுடைய திருவடியை உயிர்கள் எப்பொழுது சேர்வர்?

ப: சித்தாந்த சைவத்திலும் சரியை, கிரியை யோகத்தை அனுட்டித்த பின்பு ஞானத்தால் அடைவர்.

சூத்திரம் 8, அதிகரணம் 2, செய்யுள் 12

(இம்மை........யாமை)

1. கே: ஏனைச் சமயத்தார் கூறும் முத்திகள் எவை?

ப: நிலம் முதல் நாதம் ஈறாக உள்ள முப்பத்தாறு தத்துவங்களின் இடைப்படுவனவாம்.

2. கே: உலோகாயதர் சொல்லும் முத்தி எது?

ப: பதினாறாண்டுள்ள அரிவையரைக்கூடி இன்புறுதலே முத்தி என்பர்.

3. கே: மீமாஞ்சகர் கூறும் முத்தி எது?

ப: யாகாதி கன்மங்கள் செய்து சுவர்க்காதிலோக போகம், நுகர்தலே முத்தி என்பர்.

4. கே: சௌத்திராந்திகர் கூறும் முத்தியெது?

ப: உருவம், வேதனை, ஞானம், குறி, வாதனையாகிய ஐவகைக் கந்தங்களும் முற்றக் கெடுகையேயாம்.

5. கே: ஆருகதர் கூறும் முத்தி எது?

ப: அனந்தஞானம் முதலிய எண் குணங்களை அடைதலே முத்தி என்பர்.

6. கே: வைசேடிகர் கூறும் முத்தி எது?

ப: முடிவில் உயிர் பாடாணம்போல் கிடக்கையே முத்தி என்பர்.

7. கே: சாங்கியர் கூறும் முத்தி எது?

ப: தத்துவங்களைப் பகுத்து, உணரும் விவேகஞானமே முத்தி என்பர்.

8. கே: மாயாவாதி கூறும் முத்தி எது?

ப: மாயை, பிரமங்களை, விசாரிப்பதே, தன் மெய் வடிவாம் சிவத்தைச் செம்மையே பெறுகை முத்தியென்பர்.

9. கே: சிவ சமவாதிகள் முதலிய அகச்சமய நூலார்கூறும் முத்தி எது?

ப: தன் உண்மை வடிவாகிய சிவசாருப முதலிய பத முத்திகளைச் செவ்விதாகப்பெறுதலே, முத்தி.

10. கே: வேதாகமங்களின் உண்மையை உணர்ந்த நாம் கூறும் முத்தி எது?

ப: 36 தத்துவங்களுக்கும் அப்பாற்பட்ட சிவபெருமான் திருவடியைச் சேர்தலே முத்தி.

சூத்திரம் 8, அதிகரணம் 2, செய்யுள் 13.
(ஓது சயயங்கள்.........அடங்கும்)

கே: சமயங்களும், சமய நூல்களும் எப்படியிருக்கின்றன?

ப: ஒன்றேடொன்று மாறுபட்டிருக்கின்றன.

2. கே: சமயங்களும், சமயநூல்களும், மாறுபட்டிருப்பதால், எது முதன்மையான சமயம், எது முதன் யான நூல் என்று எப்படி காணலாம்?

ப: இது பொருந்தும், இது பொருந்தாது, என்கிற பிணக் கில்லாமல், இவையெல்லாம் ஓரிடத்திலே காணப்பட்டு நின் றது எந்த சமயமோ, அது தான் முதன்மையான சமயம். அந்த சமயப்பொருளை உணர்த்தும் நூலே முதன்மையான நூலாம்.

3. கே: இவையெல்லாம் எந்த நூலில் அடங்கியிருக்கிறது?

ப: வேதாகமங்களில் அடங்குகிறது. இது முதல்வனுல் செய்யப்பட்டது.)

4. கே: முதன்மையான நூல் எது? முதன்மையான சமயம் எது?

ப: வேதாகமங்களே, முதன்மையான நூல். அவற் றில் கூறிய சமயமே முதன்மையான சமயம்.

5. கே: வேதாகமங்களில் சொல்லப்படாத சமயிகள் சொல்லும் இலக்கணம் எப்படிப்பட்டது?

ப: கண்ணில்லார் பலர்கூடி யானையின் இலக்கணங் களைக் கூறுதல்போலாம்.

சூத்திரம் 8, அதிகரணம் 2, செய்யுள் 14.
(அருமறை.........ஒருதே)

1. கே: நூல்கள் எத்தனை வகைப்படும்?

ப: முதல் நூல், வழிநூல், சார்பு நூல், பூர்வபக்கநூல் என பலவகைப்படும்.

2. கே: முதல் நூல் என்பது எது?

ப: முதல்வனால் செய்யப்பட்ட வேதமும், ஆகமமும் ஆம்.

3. கே: வழிநூல் என்றால் என்ன?

ப: வேதாகமப் பொருளை, உள்ளவாறு உணர்ந்தோர் பிறர்க்கு இனிது விளங்குதற்பொருட்டு, நால்வகையாப்பால் செய்த நூலாம்.

9. கே: பூர்வபக்க நூல் என்றால் என்ன?

ப: வேதாகமங்களின் பொருளை, உள்ளவாறு, தாம் அறிந்த அளவில் உணரமாட்டாதார் சில பொருள்களை எடுத்துக்கொண்டு, அப்பொருள்களை, தொகுத்தும், விரித்தநூல் களாம்.

10. கே: சார்புநூல் என்றால் என்ன?

ப: காருடம், தக்கிணம் முதலிய ஆகமங்களும், சிக்கை, கற்பசூத்திரம், முதலிய . வேதாகமங்களும், சார்பு நூலாம்.

11. கே: சமுத்திர கலசநயம் என்றால் என்ன?

ப: சமுத்திரத்திலுள்ள ஜலம் முழுவதையும், தன்னுள் அடக்கமுடியாதவர், ஒருகலசத்தில் சமுத்திர நீரை மொண்டு கொண்டு, சமுத்திரம் முழுவதையும் அடக்கிவிட்டேன் என் பது போலாம்.

12. கே: நால்வகை யாப்பு எவை?

ப: (1) அகவல்பா, (2) வெண்பா, (3) கலிப்பா, (4) வஞ்சிப்பா.

13. கே: சமயநூல் அல்லாத நூல்கள் எவை?

ப: ஸ்மிருதி, புராணம், கலைகள், உபாங்கம் முதலிய வைகளாம்.

சூத்திரம் 8, அதிகரணம் 2 செய்யுள் 15,
(வேதநூல்...... மாகும்)

1. கே: இறைவனால் செய்யப்படாத நூல்கள் எவை?

ப: (1) வழிநூல் (2) சார்புநூல் (3) பூர்வபக்கநூல்கள்

2. கே: இறைவனால் தரப்பட்ட முதனூல், ஒன்று என்று சொல்லாமல், வேதமும் ஆகமும் என்று இரண்டாகச் சோன்னதற்குக் காரணம் என்ன?

ப: உலகர்க்குச் செய்யப்பட்ட நூல் ஆரணம் என்றும், சத்திநிபாத முடையார்க்கு செய்யப்பட்ட நூல் ஆகமநூல். அதாவது சைவம் என்றும் பிரித்து சூத்திரமும் பாடியமும் போல செய்யப்பட்டன.

3. கே: சூத்திரம் என்றால் என்ன?

ப: பாட்டுகளைப்போல்வது, பாடியம் என்றால் என்ன? அர்த்தத்தைப் போன்றது.

4. கே: வேதநூல், சைவநூல்களின் வேறுபாடு என்ன?

ப: வேதம் பொதுநூல், சைவம், சிறப்பு நூலாம்.

5. கே: சிவாகமம் எப்படிப்பட்டது?

ப: வேதத்தில் கூறும் கருமகாண்டப் பொருளுக்கு வேண்டிய அவசியமான பொருள்களையும், வேதமுடிபாகிய உபநிடதத்தின் சாரத்தையும், வேறு .எடுத்துக்கொண்டு விளக்குவது.

6. கே: உபநிடதம் என்றால் என்ன?

ப: வேதத்தின் முடிபாகிய நூல். (இதுவே வேதாந்தம்)

சூத்திரம் 8, அதிகரணம் 2, செய்யுள் 16.
(சித்தாந்தத்தே.........பிராந்தி)

1. கே: சித்தாந்தத்தின் பெருமையைக் கூறு?

ப: சிவபிரான் காருண்ணியத்தானே, ஆசாரிய மூர்த்தமாய் எழுந்தருளிவந்து, பக்குவ ஆன்மாக்களுக்கு ஒரே சநனத்தில், நோக்கம் முதலிய தீக்கைசெய்து, ஞானசாகரத்தில் மூழ்குவித்து, சிவானந்தம் மேலிடச்செய்து, செநநம் ஒன்றிலே மும்மல அழுக்கைக் கழுவி, சீவன் முத்தராகச்செய்து பிறப்பை அறுத்து திருவடிக்கீழ் வைக்கும் பெருமையை உடையது.

2. கே: சித்தாந்த நூலின் பெருமையை எதனால் அறியலாம்?

ப: உபமந்நிய முனிவரும், அகத்திய முனிவரும் சொல்லிய வாயு சங்கிதை, சிவகீதையால் அறியலாம்.

3. கே: சித்தாந்தப் பெருமையை அறியாதவர்கள் என்ன செய்வர்?

ப: தத்தமக்கு வேண்டியவாறெல்லாம், துர் அபிமானங் கொண்டு பிதற்றி நரகில் வீழ்வர்.

சூத்திரம் 8, அதிகரணம் 2, செய்யுள் 17.
(இறைவனுவான்.........சிவற்கே)

1. கே: சிவபிரானுக்கே உரிய மூன்று குணங்கள் எவை?

ப: (1) முற்றுணர்வு (2) முடிவிலாற்றல் (3) எல்லா முதன்மையுண்டு.

2. கே: அம்மூன்று குணங்களை எப்படி அறிந்தோம்?

ப: வேதங்களையும், ஆகமங்களையும் அருளிச்செய்ததால் முற்றுணர்வு உடைமையையும், வேதாகமங்களின் வழிச் செல்வோருக்கும், செல்லாதோர்க்கும் சுகதுக்கங் கொடுத்தலால் முடிவிலாற்றலுடைமையையும், இன்ப துன்ப நுகர்ச்சியால் அதற்குக் காரணமாகிய இருவினைகளை நீக்குதலால் பேரருளுடைமையும், நாம் அறிந்தோம்.

3. கே: (1) முற்றுணர்வு (2) முடிவிலாற்றல் (3) எல்லா முதன்மை உண்டு என்பதை இன்னும் எவற்றாலறியலாம்?

ப: சௌநம் ஒன்றிலே திருக்கடைக்கண் சேர்த்திஞான வாரிமடுத்து, ஆனந்தம் பொழிந்து, மலங்கழுவி பாதமலர்க் கீழ்வைத்தலால் அறியலாம்.

சூத்திரம் 8, அதிகரணம் 3, செய்யுள் 18.
(சன்மார்க்கம்....... என்பர்)

1. கே: சைவத்திறத் தடைந்தவர்கள், சிவனடியைச் சேர்தற்குரிய நெறிகள் எவை?

ப: (1) தாதமார்க்கம் (2) சற்புத்திர மார்க்கம் (3) சக மார்க்கம் (4) சன்மார்க்கம்.

2. கே: இந்த நான்கு மார்க்கங்களுக்கும், வழங்கப்படும் பெயர்கள் எவை?

ப: முறையே (1) சரியை (2) கிரியை (3) யோகம் (4)ஞானம் என வழங்கப்படும்.

3. கே: இந்த நான்கு நெறியிலும் நின்றவர்களுக்குப் பயன் என்ன?

ப: முறையே (1) சாலோகம் (2) சாமீபம் (3) சாருபம் (4) சாயுச்சியமாம்.

4. கே: இந்த நான்கு பதவிகளுக்கும் வேறுபெயர் என்ன?

ப: சாலோகம், சாமீபம், சாருபம் மூன்றுக்கும் பத முத்தி என்று பெயர். சாயுச்சியத்துக்கு பரமுத்தி என்றுபெயர்.

சூத்திரம் 8, அதிகரணம் 3, செய்யுள் 19.
(தாதமார்க்கம்.........இருப்பர்)

1. கே: தாதமார்க்கம் அதாவது சரியைகள் எவை?

ப: கோயில் அலகிடல், மெழுகல், விளக்கிடுதல், நந்த வனம் வைத்தல், பத்திர புஷ்பம் எடுத்தல், மாலைகட்டல், வாழ்த்தல், அடியாரை வணங்குதல். அடியார்க்குக் குற்றேவல் செய்தல், இப்படி புறத்தொழில் மாத்திரம் உருவத் திருமேனிக்குச் செய்தலாம்.

சூத்திரம் 8, அதிகரணம் 3, செய்யுள் 20.
(புத்திரமார்க்கம்.........காலே)

1. கே: புத்திரமார்க்கம் அதாவது கிரியையாவது யாது?

ப: புறத்தொழில் அகத்தொழில் இரண்டாலும், அரு உருவத் திருமேனியை நோக்கி, மலர், தூபம், தீபம், திருமஞ்சனம், அமுது முதலியனதேடி, ஐந்து சுத்தி செய்து, ஆசனம், மூர்த்தி, மூலத்தை ஆவாகித்து, அர்ச்சித்து, நித்தியாக்கினியும் செய்வதாம்.

2. கே: ஐவகைச்சுத்தி எவை?

ப: (1) ஆத்மசுத்தி (2) தானசுத்தி (3) திரவியசுத்தி (4) மந்திரசுத்தி (5) லிங்க சுத்திகளாம்.

சூத்திரம் 8, அதிகரணம் 3, செய்யுள் 21.
(சகமார்க்கம் ....பெறுவர்)

1. கே: ஐம்பொறிகள் எவை?

ப: மெய், வாய், கண், மூக்கு, செவி.

2. கே: ஐம்புலன்கள் எவை?

ப: சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்பவையாம். அவை, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமாம். (சத்தம் முதல் ஐந்தும் தன்மாத்திரை அல்ல.

3. கே: இருவகை மூச்சு எவை?

ப: ரேசகம், பூரகம், (அதாவது) உச்சுவாசம், நிச்சுவாசம் அதாவது வெளியில் விடும் மூச்சு ரேசகம், உள்ளே வாங்கும் மூச்சு பூரகம்·

4. கே: அட்டாங்கயோகம் என்பன எவை?

ப: இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி.

5. கே: ஆறு, ஆதாரங்கள் எவை?

ப: (1) மூலாதாரம் (2) சுவாதிஷ்டானம் (3) மணிபூரகம் (4) அனுகதம் (5) விசுத்தி (6) ஆஞ்ஞை.

6. கே. ஆறு ஆதாரத்துக்கும் உள்ள இடங்கள் எவை?

ப: (1) மூலாதாரம் - குறிக்கும் குய்யத்துக்கும் நடு இடம், (2) சுவாதிட்டானம் - குறியின் அடி. (3) மணிபூரகம் - நாபி, (4) அனுகதம் மார்பு, (5) விசுத்தி - தாலுமூலம், (6) ஆஞ்ஞை - புருவநடு, தாலு - நாக்கு.

7. கே: இந்த ஆறு இடங்களுக்கும் உரிய தெய்வங்கள் எவை?

ப: மூலாதாரத்திற்கு, கணபதி, சுவாதிஷ்டானத்திற்கு பிரமன், மணிபூரகத்துக்கு, மால், அனுகதத்துக்கு, உருத்திரன். விசுத்திக்கு, மகேச்சுரன். ஆக்ஞைக்கு, சதாசிவம்.

சூத்திரம் 8, அதிகரணம் 3, செய்யுள் 22.
(சன்மார்க்கம்…… ..காணே)

1. கே: சன்மார்க்கமாவது யாது?

ப: நன்னெறி, அதாவது ஞானம்.

2. கே: முப்பொருள்களின் தடத்த லட்சணம் எவை?

ப: பதியின் தடத்த லக்கணம் பஞ்சகிருத்தியம் செய்தல், பசுவின் தடத்த லக்கணம் அவத்தையடைதல். பாசத்தின் தடத்த லக்கணம் அறிவை மறைத்தல்.

3. கே: முப்பொருள்களின், சொரூப லட்சணம் எவை?

ப: பதியின் சொரூப லக்கணம் சிவசத்து, பசுவின் சொரூப லக்கணம் சதசத்து, பாசத்தின் சொரூப லக்கணம் அசத்து.

4. கே: 1. ஞானம் 2. ஞேயம் 3. ஞாதிரு என்ருல் பொருளென்ன?

ப: 1. ஞானம் என்பது அறிவு 2. ஞேயம் என்பது அறியப்படும் பொருள் 3. ஞாதிரு என்பது அறிபவன்.

5. கே: கருமகாண்டம் என்பது என்ன?

ப: யாகாதிகளைப்பற்றிச் சொல்வது.

6. கே: ஞானகாண்டம் என்பது என்ன?

ப ஞானத்தைக் குறித்துச் சொல்வது.

7. கே: அகண்டாகாரம் என்பதற்குப் பொருளென்ன?

ப: கண்டிக்கப்படாத பெரியவடிவம்.

8. கே: சித்த வியாபகம் என்பதற்குப் பொருளென்ன?

ப: அழியாமல் நிறைந்திருப்பது.

9. கே: சச்சிதானந்தப் பிழம்பு என்பதற்குப் பொருளென்ன?

ப: சத்து + சித்து + ஆனந்தம். சத்தாகவும், சித்தாகவும் இருந்து இன்பத்தைத் தருவது.

10. கே: தூல அருந்ததி நியாயம் என்ருல் என்ன?

ப: தூலமாயுள்ள பொருளைக்காட்டியே சிறிய உருவுள்ள அருந்ததியைக் காட்டலாம்.

சூத்திரம் 8, அதிகரணம் 3. செய்யுள் 23,
(ஞானநூல்.........எல்லாம்)

1. கே: வேள்விகள் எத்தனை, அவை எவை எவை?

ப: 1. கன்ம வேள்வி 2. தவ வேள்வி 3. ஜெப வேள்வி 4. தியான வேள்வி 5. ஞான வேள்வி என ஐந்து.

2. கே: கன்ம வேள்வி என்ருல் என்ன?

ப: யாகம் முதலியன செய்தல்.

3. கே: தவ வேள்வி என்ருல் என்ன?
ப: பொறிகளை அடக்குதல்.

4. கே: ஜெப வேள்வி என்ருல் என்ன?
ப: மந்திரம் ஜெபித்தல்.

5. கே: தியான வேள்வி என்ருல் என்ன?
ப: இறைவன் திருவடியை நினைந்துகொண்டே இருத்தல்

6. கே: ஞான வேள்வி என்ருல் என்ன?
ப: 1. ஞானநூலை ஓதுதல், 2. ஓதுவித்தல், 3. கேட்பித்தல், அதாவது பிறர்க்கு உணர்த்தல், 4. கேட்டல், 5. சிந்தித்தலாம். இவை ஐந்தும் ஞான வேள்வியாம்.

7. கே: இந்த ஐந்து வேள்விகளின் பயன் என்ன?
ப: கன்மவேள்வி, தபவேள்வி, ஜெபவேள்வி, தியான வேள்வி இந்நான்கும் போகத்தை ஊட்டும்; ஞான வேள்வி ஒன்றே வீடுபேற்றைத் தரும்.

சூத்திரம் 8, அதிகரணம் 3, செய்யுள் 24.
(கேட்டலுடன்........தானே)

1. கே: உண்மை ஞானம் எனப்படுவன எவை?
ப: கேட்டல் சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடுதல் என நான்கேயாம்.

2. கே: உண்மை ஞானம் எவற்ருல் உண்டாகாது, எதனுல் உண்டாகும்?
ப: ஓதல், ஓதுவித்தல், கேட்பித்தலால் உண்டாகாது, குரு உபதேசத்தால் உண்டாகும்.

3. கே: உண்மை ஞானத்தைப் பெற்றவர் என்ன பயனை அடைவர்?
ப: வீட்டினை அடைவர்.

4. கே: உண்மை ஞானத்தைப் பெருதவர் யார்?
ப: தீக்கையால் அத்துவ சுத்திபண்ணப்பட்டு, ஓதல், ஓதுவித்தல், கேட்பித்தல் மாத்திரம் உடையவர். இவ்வுலகில் உயர்குலத்தில் பிறந்து ஆசிரியன்மாட்டுக் கேட்டல் முதலிய நெறியால் நிட்டை யடைந்து வீடுபேறெய்துவர்.

சூத்திரம் 8, அதிகரணம் 3, செய்யுள் 25.
(தானம்.........நற்றுளே)

1. கே: பசு புண்ணியம், எப்படிப்பட்டது?

ப: கன்மயோகங்களைச்செய்து சுவர்க்கத்தைப்பொருந்தி, போகங்களை, அனுபவித்து, மேலே மேலேபோயும், மீளுதற்குக் காரணமாயுள்ளது,

2. கே: சிவ புண்ணியங்கள் எவை?

ப: சரியை, கிரியை, யோகங்களாம்.

3. கே: பசு புண்ணியங்கள் எவை?

ப: (1) தானங்கொடுத்தல், (2) வேள்வி வேட்டல், (3) புண்ணிய தீர்த்தமாடல், (4) பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம், ஆகிய தங்கள் தங்கள் நிலையில் தவறாது நிற்றல், (5) தபசு செய்தல், (6) பிராயச்சித்தம் பண்ணல், (7) விரதம் காத்தல்களாம்.

4 கே: சிவ புண்ணியங்களைச் செய்தவர்கள் என்னபயனை அடைவார்கள்.

ப: பத முத்திகளில் நெடுங்காலம் வைகி, உலகமெலாம் சங்காரப்படும்போது முதல்வன் அருள் செய்தால் திருவடியில் கலப்பர், அருள் செய்யாவிடில், மீண்டும் ஜனனம் பெற்று குருவருளால் ஞான நெறியைத் தலைப்பட்டு வீடு எய்துவர். (மேவாது தப்பினவர்போல.)

5. கே: யாரைப்போல?

ப: உண்மை ஞானம் மேவாது, தப்பினவரைப்போல.

6. கே. உண்மை ஞானத்தை, மேவாது தப்பினவர், எப்படி வீட்டை அடைவர்?

ப: பதமுத்திகளுக்கு ஈட்டப்பட்ட புண்ணியத் தலைவராய், ஆண்டு, இன்பத்தினை அனுபவித்து, முதல்வன் அருளால், உலகினில் உயர்ந்த நற்குலத்தில் தோன்றி குருவால் கேட்டல், தெளிதலால் ஞானநிட்டை அடைந்து, வீடு எய்துவர்.

சூத்திரம். 8, அதிகரணம். 2, செய்யுள். 26,
(சிவஞானச்.........தானே)

1. கே: விதிவழி என்றால் என்ன?
ப: நூலில் நியமித்தபடி.

2. கே: சிவஞானிகளுக்குக் கொடுக்கும், தானம் எப்படிப் பட்டது?
ப: நிலமும் மலையும்போல, மிக்கு ஓங்குவது.

3. கே: சிவஞானிகளுக்கு தானஞ்செய்தவர், என்னபயனை அடைவர்?
ப: சிவலோக பதவி முதலிய பதங்களை அடைந்து இன்பம் அனுபவித்து, சனனமரணம் படாமல், பாசம் நீங்கி, தவம் செய்தற்குரிய, உயர்ந்த குலத்தில் பிறந்து காலம் நீடிப்பில்லாமல், சரியை, கிரியை, யோகங்கள், எளிதில் கைகூடி, தத்துவ ஞானத்தை அடைந்து ஞான நெறியில் படுத்தி வீட்டை எய்துவர்.

சூத்திரம் 8, அதிகரணம் 2, செய்யுள் 27.
(ஞானத்தால்.........என்பர்)

1. கே: வேத முதலிய பிரமாணநூல்களின், துணிபு, என்ன?
ப: ஞானம் ஒன்றே வீடுபேற்றிற்குச் சிறந்த சாதனம். மற்ற சரியை, கிரியை, யோகங்கள், ஞானத்தைத்தரும் என்று கூறுகிறது.

2. கே: இதனை அறியாத பேதையர், என்ன கூறுகிறார்?
ப: தீக்கையே வீடுபேற்றைத்தரும். ஐவகை வேள்வியே, வீடுபேற்றைத்தரும். பத்திநெறியே வீடுபேற்றைத் தரும் என்கிறார்.

3. கே: ஞானமே வீடுபேற்றிற்குச் சிறந்த காரணம் என்பது எப்படி?
ப: ஞானம் அல்லாதன எல்லாம் அஞ்ஞானம். அஞ்ஞானத்தால் பந்த முறுதல் கூடும். வீடு அடையமுடியாது. அஞ்ஞானப்பகுதிகள் எல்லாம், ஒளிமுன் இருள்போல ஞானத்தின்முன் சத்திகெட்டொழியும். அவையொழிய பந்தம்

நீங்கும். அது நீங்க முத்தி கைகூடும். ஆதலால் ஞானமே சிறந்த காரணம்.

4. கே: ஞானத்துள்ளும் தார்க்கிகர், சாங்கியர், மாயாவாதி முதலியோர் கூறும் ஞானம் எப்படிப்பட்டது?

ப: அவர் கூறும் ஞானம், பாசஞான பசுஞானங்கள். ஆதலால் அவை பந்தமுறுத்தும்.

சூத்திரம் 8. அதிகரணம் 2, செய்யுள் 28.
(சூரிய ....தோன்றும்)

1. கே: நேரியன், பரியன் என்பனவற்றிற்குப் பொருள் என்ன?

ப: நேரியன் - சிறிய வடிவினன், பரியன் - பெரிய வடிவினன்.

2. கே: நிருவிகற்பம், சவிகற்பம் என்பவைகளுக்குப் பொருள் என்ன?

ப: நிருவிகற்பம் - பொது அறிவு, சவிகற்பம் - சிறப்பறிவு, அதாவது இன்னது என்று விளங்காத அறிவும், இன்னது என்று விளங்குகிற அறிவும் ஆம்.

3. கே: மேல், ஈரிரண்டாம் கிளக்கில் ஞானம் என்றவை எவை?

ப: 24-வது செய்யுளில் கூறிய, கேட்டல், ஞானம், சிந்தித்தல் ஞானம், தெளிதல் ஞானம், நிட்டைகூடும் ஞானமாகிய உண்மை ஞானமாம்.

4. கே: கேட்டல் ஞானம் மாணுக்கனுக்கு எப்படி உண்டாகும்?

ப: கற்பிக்கும் அருளோடு கூடிவந்த ஞானசிரியன் சந்நிதி மாத்திரத்தாலே உண்டாகும்.

5. கே: அடிஞானமாகிய கேட்டல் ஞானம் உண்டானதும், எவை உண்டாகும்?

ப: பதி, நிர்விகற்ப ஞானமாய் விளங்கித் தோன்றும், அப்பதியினுள்ளே பசுவும் நிர்விகற்பமாய் விளங்கித்தோன்றும். அப்பசுவினுள்ளே பிரபஞ்சவடிவாகிய பாசமும், நிர்விகற்பமாய் விளங்கித் தோன்றும். பின் முதல்வன் உயிர்க்

குயிராய், நேரியனாய் நின்றநிலையும், முதல்வன் பூரணமாய் நின்ற நிலையும் நிர்விகற்பமாய் விளங்கித் தோன்றும்.

6. கே: ஆசானுடைய சந்நிதியிலே பதியும், பதியில் பசுவும், பசுவில் பாசமும், பின் முதல்வன் உயிர்க் குயிராய் சிறிய வடிவினனாகி நிற்கும் நிலையும், அண்டங்கள் எல்லாம் தன்னுள் அடங்கி நிற் கும் நிலைக்கு ஓர் உதாரணம் கூற?

ப: கிரணத்தோடு தோன்றுகிற சூரியனுடைய சந்நிதியிலே, சூரிய காந்தக் கல்லில் நெருப்பு விளங்கித் தோன்றுதல் போலாம்.

7. கே: வியாபகம் வியாப்பியம் என்றால் பொருள் என்ன?

ப: வியாபகம் என்றால் எங்கும் நிறைந்தது, வியாப்பியம் என்றால் எங்கும் நிறைந்த பொருளில் அடங்கி நிற்பது.

8. கே: எது வியாபகம்? எது வியாப்பியம்?

ப: பதி வியாபகம், பசு வியாப்பியம், பசு வியாபகம் உலகம் வியாப்பியம்.

9. கே: இச்செய்யுளின் கருத்தென்ன?

ப: ஆசிரியன் ஞானமே, மாணாக்கனிடத்தும் சென்று பற்றும்.

10. கே: சங்கிரமம் என்றால் பொருள் என்ன?

ப: பற்றுதல்.

11. கே: சங்கிரமம் எந்த பொருளுக்கு உண்டு?

ப: சித்துக்குச் சங்கிரமம் கூடாது. சடத்துக்குச் சங்கிரமம் உண்டு.

சூத்திரம் 8, அதிகரணம் 2, செய்யுள் 29.

(மிக்கதொரு.........காண்பர்)

1. கே: சத்திநிபாதம், என்பதற்குப் பொருள் என்ன?

ப: சத்திபதிதலாம்.

2. கே: சத்திநிபாதம் எத்தனை வகைப்படும்?

ப: (1) துரியாதீதம் (2) துரியம் (3) மந்தம் (4) மந்ததரம் என நான்குவகைப்படும்.

3. கே: ஏது திருட்டாந்தம் என்றால் என்ன?

ப: ஏது என்றால் காரணம்; திருஷ்டாந்தம் என்றால் உதாரணம்.

4. கே: சீவன் முத்தர் என்றால் யார்?

ப: உயிரோடிருந்தும், பற்றற்றவர்.

5. கே: அத்துவிதம் என்பது, எப்படி இருப்பது?

ப: ஞாயிற்றின் ஒளியும், கண்ணொளியும் கலந்திருப்பது போலாம்.

6. கே: ஒருவருக்கு கேட்டலறிவு, எப்பொழுது முதிர்ந்து, முறுக விளையும்?

ப: பக்குவ முதிர்ச்சியாலே, சத்திநிபாதம் மேவிய பொழுது முறுகவிளையும்.

7. கே: கேட்டலறிவு முதிர்ந்து, முறுகவிளைந்தபின் எப்போது சிந்திக்க நுழைவார்கள்?

ப: தம் ஆசாரியராவது அல்லது தம்மோடு பயின்ற. ஒரு சாலை மாணுக்கரில், தம்மின் முத்தாருள் ஒருவராவது, சிந்திப்பிக்க அப்போது, நூற்பொருளைச் சிந்திக்கப்புகுவார்கள்,

8. கே: எப்படிச் சிந்திப்பார்கள்?

ப; முன்னொடு பின், மலைவற, ஏது திருட்டாந்தத்தால் சிந்திப்பார்கள்.

9. கே: ஏது திருட்டாந்தத்தால், சிந்தித்தபின், என்ன உண்டாகும்?

ப: நிட்டைகூட வேட்கை உண்டாகும்.

10. கே: நிட்டை கூடப்பெற்றவர், பின் என்ன செய்வார்?

ப: உலகின்கண், விருப்பு, வெறுப்பின்றி, சிந்தித்தலையே மேற்கொண்டு ஓட்டையும், செம்பொன்னையும், ஒக்கவே நோக்குவதாய மற்றொன்றிலே பற்றின்றி, சீவன் முத்தர்களைப் போல. சிவமும் தாமும், அத்துவிதமாய், சிவத்தோடு கூட நின்று தாமிருப்பதை அறியாமல், சிவத்தோற்றம் ஒன்றுமே கண்டு நிர்விகற்பம், சவிகற்பம், இரண்டிற்கும் இடை நிலத்தே நிற்பர்.

சூத்திரம் 8, அதிகரணம் 2, செய்யுள் 30,
(அறியாமை.........ஆயே)

1. கே: இருவகைப்பாசம் எவை?
ப: அறியாமையும், அறிதலுமாம்.

2. கே: அறியாமையும், அறிதலுமாகிய, இருவகைப் பாசங்களை எப்படி நீக்கலாம்.
ப: ஆசிரியரின் திருவருளால் நீக்கலாம்.

3. கே: எப்படி அடங்கி இருக்கவேண்டும்?
ப: தம் அறிவிலே கேட்கும் முறையால் கேட்டு, சிந்திக்கும் முறையால் சிந்தித்து, அன்புசெய்து, அந்தக்கரணங்களோடு, சேராமல் அடங்கி நிற்றல் வேண்டும்.

4. கே. இங்ஙனம் அடங்கி நிற்றலால் பயன் என்ன?
ப: முதல்வனுடைய இயல்பு, கேட்டல் காலத்தே, பொருள்தன்னைப்பற்றி, பேதமாய்த்தோன்றி, சிந்தித்தகாலத்து கலப்புபற்றி, அபேதமாய்த் தோன்றி, தெளிந்தபின், இவ்விரண்டும் இன்றி நேரியனும் பரியனுமாய முறைமைபற்றி எவற்றினும் ஒற்றித்து நின்று ஒன்றிலும் பற்றிலனாய் வேறு தோன்றும்.

5. கே: நேரியன், பரியன் என்பதற்குப் பொருளென்ன?
ப: நேரியன், என்றால், அணுவுக்கு அணுவாயிருப்பவன். பரியன் என்றால் அண்டமெலாம் அணுவாம்படிபெரியவனாயிருப்பவன்.

சூத்திரம் 8, அதிகரணம் 2, செய்யுள் 31.
(புண்ணியம்.........நிற்பன்)

1. கே: புண்ணிய பாவங்களின் பயன் என்ன?
ப: புண்ணியம் மேலுலகத்தில் இன்பத்தைத் தரும். பாவம் கீழுலகத்தில் துன்பத்தைத் தரும்.

2. கே: புண்ணிய பாவம் இரண்டும் எதை ஒக்கும்?
ப: புண்ணியம் பொன் விலங்கை ஒக்கும், பாவம் இரும்பு விலங்கை ஒக்கும். ஆனால் இரண்டும் விலங்கேயாம்.

3. கே: புண்ணிய பாவமாகிய இரண்டு விலங்கையும் எந்த அரத்தால், அராவலாம்.

ப: புண்ணியனைப் பூசித்தலாகிய அரத்தினுலே அராவி அறுக்கலாம்.

4. கே: பூசித்தல் என்றுல் என்ன?

ப: ஞானநூலை ஓதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், சிந்தித்தலாம்.

5. கே: ஞான பூசையின் பயன் என்ன?

ப: தெளிதலாம்.

6. கே: ஞான நிட்டை என்பது என்ன?

ப: உயிர் கரணங்களின் வசப்படாமல் இறைவனுடைய வியாபகத்தை நினைந்திருத்தல்.

7. கே: கீழுள்ள நரகத்திற்கும், மேலுள்ள சுவர்க்கத்திற்கும் செல்லுதற்குக் காரணம் எவை?

ப: புண்ணியமும், பாவமும்.

8. கே புண்ணிய பாவம் என்கிற காரணமாகிய விலங்கை பூசித்தலாகிய அரத்தால் அறுத்தால் என்ன காரியம் உண்டாகும்?

ப: பூமி, நரகம், சுவர்க்கங்களில் செல்லுதல் ஒழியும்

9. கே: பூமி, நரகம், சுவர்க்கங்களில் உயிர் செல்லுதல் ஒழிந்தால் எங்கே இருக்கும்?

ப: உயிர், கரணங்களின் வசப்படாமல், இறைவனுடைய வியாபகத்தை அடைந்து, ஞாயிறு எங்கு எழில் எமக்கு என் என்று, தனக்கு அதனுலாகிய பயனின்மையை அறிந்து சிவன் முத்தராகி இம்மையே இவ்வுடம்பு நீங்கி பரமுத்தி நிலையில் தமது வியாபகம் எங்கணும் அறிவு விளங்கப்பெற்று முதல்வனை ஒத்து நிற்பர்.

10. கே: ஏகதேசச் செலவு ஒழிந்து இறைவனுடைய வியாபகத்தை அடைதற்கு என்ன உதாரணங் காட்டுகிறுர்?

ப: மாசில் நீங்கியவழி ஆடையினது வெண்மை ஆடை முழுதும் விளங்கினுற்போல என்ருர்.

11. கே: இவ்வுடம்பு உழல்வதற்கு என்ன உதாரணங் காட்டுகிறூர்.

ப: இங்குளி வாங்குங்கலம்போல என்கிறூர்?

12. கே: இங்குளி வாங்கும் கலம் என்றுல் என்ன?

ப: பெருங்காயத்திலிருந்து வாசனையைப் பெற்ற பாண்டம் போல என்பதாம்.

சூத்திரம் 8, அதிகரணம் 2, செய்யுள் 32.

(ஞாலமதில்.........பயில்வர்)

1. கே: ஞானநிட்டை யுடையவர்களுடைய செயல்கள் எப்படிப்பட்டவை. எவை அவை?

ப: (1) நன்மையில்லை (2) தீமையில்லை (3) ஒரு பலத்தை நாடுவதும் இல்லை (4) தவமில்லை (5) விரதமில்லை (6) ஆச்சிரமச் செயலில்லை (7) தியானமில்லை (8) சித்த சலனமில்லை (9) சமயத்துக்குரிய வேடமுமில்லை (10) விடயங்களைப் பற்றுதலுமில்லை (11) விடயங்களை விடுதலுமில்லை (12) அந்தக் கரணங்களை அடக்கவேண்டும் என்கிற நியமமில்லை (13) தாமத குணத்தையும் இராசத குணத்தையும் அடக்கி சத்துவகுணச் செயல்களைச் செய்யவேண்டும் என்பதுமில்லை, குலத்தின்மத்தியிலேஒழுகவேண்டுமென்பது மில்லை பாலர்போல, உன்மத்தர்போல, பேய்பிடி யுண்டவர்போல குணங்களைப் பொருந்தி பாடல் ஆடல்களைச் செய்தாலும் செய்வர். இவருக்கு விதித்தன செய்தலும் வேண்டாம். விலக்கியன ஒழிதலும் வேண்டாம். இவருக்கு எல்லாம் தவமேயாம்.

2. கே: பாலர் செயல் எப்படிப்பட்டது?

ப: அடியோடு ஒழிதலைச் செய்யும்.

3. கே: உன்மத்தர் செய்கை எது?

ப: ஒருகால் செய்து ஒருகால் ஒழிதலையும் உடையது?

4. கே: பேய்பிடியுண்டவர் செய்கை எது?

ப: செயலிழந்து நிற்றலாம்.

5. கே: ஆச்சிரமங்கள் எவை?

ப: (1) பிரமசரியம் (2) கிரகஸ்தம் (3) வானப்பிரஸ்தம் (4) சந்நியாசம்.

6. கே: உன்மத்தர் யார்?
ப: பைத்தியங்கொண்டவர்.

சூத்திரம் 8, அதிகரணம் 2, செய்யுள் 33.
(தேசம்........அகலார்)

1. கே: சிவஞானிகளுடைய செயல் எப்படிப்பட்டது?
ப: 33-வது செய்யுளில் கூறியபடி செய்தற்கரியவைகளை எளியவைகளாகச் செய்வர். எத்தொழிலைச் செய்தாலும் முதல்வன் திருவடியைவிட்டு நீங்கார்.

சூத்திரம் 8, அதிகரணம் 2, செய்யுள் 33.
(இன்னிலை........ சுவானுபூதிகமாம்)

1. கே: ஞானநிட்டை அடையாதவர், ஞானநிட்டையைக் கைகூட என்ன உபாயம், செய்தல்வேண்டும்?
ப: இறைவனை அண்டங்களில் வைத்து அறிந்து நின்மல துரியாதீத நிலையைக் கைகூடும்படி முயலவேண்டும்.

2. கே: நிட்டை என்பது எது?
ப: இறைவன் நிலை அகம்புறம் என்னுமல் எங்கணும் ஏகநிலையாய்க்கண்டு இறைநிறைவில் அழுந்துவதாம்.

3. கே: நின்மல துரியாதீத நிலையென்றால் என்ன?
ப: சகல சாக்கிரத்தில் தானே கருவி யொன்றனேடு கூடாமல் தொழிலிறந்து நிற்பதாம்.

4. கே: சகல சாக்கிரம் என்றால் என்ன?
ப: இறைவன் நிலையை பிண்டத்துள் ஒரு குறியில் வைத்துணர்ந்து ஆண்டுக்காணும் கரணங்களெல்லாம் பேரின்பமாகப் பேணி இவ்வாறு கருவிகளோடுந தொழிற்பட்டு நிற்பதாம்.

சூத்திரம் 8, அதிகரணம் 2, செய்யுள் 35.
(சாக்கிரத்தே .....நுடங்கிடாதே)

1. கே: பசுகரணம் என்றால் என்ன?
ப: உயிரின் கருவிகள்

2. கே: சிவகரணம் என்றால் என்ன?

ப: சிவனுடைய கருவி

3. கே: சர்வசங்க நிவிர்த்தி யென்றால் என்ன?

ப: கருவிகளிலிருந்து நீங்கி, நிட்டை மேவினவர்கள்.

4. கே: சாக்கிராதீதத்தைப் பொருந்தியவர்கள் எப்படிப்பட்டவர்கள்?

ப: நிட்டை மேவியவர்களோடு ஒப்பச் சிறந்தவர்கள்.

5. கே: கருவிகளிலிருந்து நீங்கிய, தபோதனர்களின் பெருமை எப்படிப்பட்டது?

ப: இவர் முற்பிறவியில் செய்த சிவ புண்ணியத்தைச் சொல்ல முடியாத பெருமை யுடையவர். அவர் இம்மையில் உயிர்ப்பற்று நீங்கி சிவத்தைப் பொருந்தி, இரண்டற நிற்கையால், சஞ்சரிக்கின்ற சிவமேயாவர். இன்னும் அவர்கள், முடியினை அணிந்து, அரசுபுரிந்து, அரிவையரோடு கூடியிருப்பினும் அகப்பற்று அற்றவர்களேயாவர். ஆதலால், உலகத்தாரோடு வைத்து எண்ணக்கூடாது.

6. கே: அகப்பற்று நீங்காமல், புறப்பற்று நீங்கினவர், எப்படிப்பட்டவர்?

ப: வினை ஏறுதலினாலே, பிறப்பினை அடைவர்,

சூத்திரம் 8, அதிகரணம் 3, செய்யுள் 36.

(கருவி... ...அருதே)

1. கே: இருவர் புணர்ந்த இன்பத்தை யார் அறிவார், யார் அறியமாட்டார்?

ப: இருவர் கூடிய இன்பம், வாயினால் பேசமுடியாதது. கூடினவர் அறிவார், கன்னிகை அறியாள்.

2. கே: இந்த உபமானத்தால், நீ என்ன அறிவாய்?

ப: திரு அருளைப்பெற்ற பக்குவர், தம்மையும், தலைவனையும், கருவி, அறிவு, இறந்து நின்று, அறிவார். அபக்குவர் அதைக்காணமாட்டார். ஆகையால் அவர்களுக்கு உணர்த்தவும் முடியாது.

3. கே: அபக்குவர் ஏன் தம்மையும் தலைவனையும் அறியார்?

ப: கலை முதல் பிருதிவி வரையில் உள்ள உருவில் மயங்கி, ஆன்மசொரூபம், அறியப் பெற்றிலாதவர். ஆதலின் காணுர்.

4. கே: சிவசங்கிராந்தவாதி, என்ன சொல்லுகிருர்?

ப: கலைமுதல் பிருதிவி வரையில் உள்ள கருவிகளாலே ஆன்மாவுக்கு உள்ளாகிய சிவபிரானையும் அறிவாம், என்கிருர்கள்.

5. கே: அது ஏன் பொருந்தாது?

ப: அது கற்பனை, அதாவது பாவகமேயாம்.

6. கே: கருவி, அறிவு இல்லாமல் அருளால் அறியமுடியாது என்று அவர் சொல்லுவது ஏன் பொருந்தாது?

ப: ஏகதேசமாகிய கருவி உள்ள அளவும், ஏகதேசக் காட்சி, நீங்காது. அது நீங்காததாகவே, பிறப்பும் விடாது, ஆணவமும் அருது.

7. கே: இதற்கு ஒரு உதாரணஞ்சொல்லு?

ப: பல நிறங்களால் மயங்கி, தன் ஒளியிழந்த படிகம் போலவாம்.

சூத்திரம் 8, அதிகரணம் 4, செய்யுள் 37.

(பன்னிறங்கள்........ முறைபோல)

1. கே: பொது இயல்பு என்ருல் என்ன?

ப: பிறபொருளின் தன்மையை தன்னிடத்தில் காட்டுவது பொது இயல்பு.

2. கே: சிறப்பு இயல்பு என்ருல் என்ன?

ப: தனது இயல்பை தன்னிடத்துக் காட்டுவது சிறப்பு இயல்பாம்.

3. கே: படிகத்துக்குப் பொது இயல்பு எது?

ப: தன்னைச் சேர்ந்த பச்சை, சிவப்பு முதலிய பல நிறங்களைக்காட்டி நிற்பதாம்.

4. கே: படிகத்துக்குச் சிறப்பு இயல்பு எது?

ப: தன்னைச் சேர்ந்த பச்சை, சிவப்பு முதலிய பல நிறங்களைவிட்டு நீங்கி, படிகம் தன்னிறத்தைக் காட்டுவதாம்.

5. கே: படிகத்தைப்போன்றது எது, ஏன்?

ப: படிகத்தைப்போன்றது ஆன்மா, தன்னோடு சேர்ந்த கருவியாகிய பொருளின் குணத்தையும், காட்டும், அதனோடு சேராமல் தன் குணத்தையும் காட்டும் ஆதலால்.

6. கே: ஆன்மா எப்போது தன் இயல்பை அறியும்?
ப: அருளோடு கூடினபோது.

7. கே: எப்படிப்பட்டவர் சிவத்தை அடைவார்?
ப: கருவி ஞானம் பொது இயல்பேயாய் ஒழியும்படி தன்னியல்பு விளங்குதற்கு ஏதுவாகிய உண்மை உணர்ந்தான். அத்தன்னியல்பின் விளங்கித் தோன்றும் சிவத்தையுறுவன்.

8. கே: சிவத்தை அடைந்தவர் பின், எப்படி இருப்பார்?
ப: கருவிகளின் கூட்டத்தில் வரமாட்டார்.

9. கே: இதை ஒரு உதாரணத்தால், விளக்கு?
ப: முன் நிறைந்து சிறைப்பட்ட நீர், முறிந்தவழி, கடலில் சென்று, அந்நீராய் அடங்கி, பின் மீளாதவாறுபோல.

சூத்திரம் 8, அதிகரணம் 4, செய்யுள் 38.
(எங்குந்தான் .... காணே)

1. கே: கரணங்கள் எவை?
ப: கலை முதல் மண்வரையிலுள்ள எல்லா தத்துவங்களுமாம்?

2. கே: உயிரும் சிவமயமே, கரணங்களுஞ் சிவமயமே என்றால் குற்றம் என்ன?
ப: அப்படியானால் உயிருக்கும், கருவிகளுக்கும், சிவத்துக்கும், வேற்றுமையில்லையாய் முடிகிறது. ஆதலால் உயிர் கருவியின் வழி செல்லும் சகலநிலையைக் கைவிட்டு, திருவடியைக்கூட வேண்டியதில்லை.

3. கே: எல்லாம் சிவமாதல், இல்லையென்றால், குற்றமென்ன?
ப: எவற்றிலும் வியாபகமாயும் உடன் நின்று செலுத்துவதாயும், உள்ள அவனுடைய இறைமைக் குணத்துக்கு இழுக்காய் முடியுமே ஆதலால், அதுவும் குற்றமேயாம்.

4. கே: உயிரும் சிவமே. கருவிகளும் சிவமே என்பதும், குற்றம் என்றதாலும் உயிரும் கருவிகளும்

சிவமாதல் இல்லையென்பதும் குற்றம் என்பதாலும், இப்படி இருவகையின் இன்றி, கலப்பினல் உடம்பின்கண் பொருந்திய உயிர்போல ஒப்ப நிற்பார், என்றதனல் குற்றம் என்ன?

ப: உடம்பின் கண்ணுள்ள உயிர், மெய், வாய், கண், மூக்கு, செவிகளின் உயிர் என்ன ஒப்பநிற்கும். ஒப்பநிற்பினும் அவைஆன்மபோதத்தோடு கலந்து, சேய்மைக் கண்ணுள்ள விடயத்தை வியாபித்து, அறியமாட்டா. தம்மாட்டுவந்த விடயங்களை நின்றுங்கு நின்று, இயைந்து அறிவனவேயாம், ஒளியால் ஆன்ம போதத்தோடும் விரவிசேய்மைக்கண் உள்ளவிடயத்தை கண்அறியும் முதல்வன், கருவிகளிலும்உயிர் களிலும் கலந்து நின்றுலும், வேற்றுமை உண்டு. ஆதலால் அதுவும் குற்றமேயாம். உயிரோ இறைஞானம் பெற்று திருவடிகளை அடையும். கருவி அங்ஙனம் ஆகா.

5. கே: இதை ஒரு உதாரணத்தால் விளக்கு?

ப: ஒளியிழந்தகண் மாசுநீங்கியவழி, தன் ஒளியையும் தனக்கு உள்நின்று செலுத்தும் ஆன்மபோதத்தையும் ஒருங்கே பெற்றுற் போலவாம்.

சூத்திரம் 8, அதிகரணம் 4, செய்யுள் 39.
(பாசிபடு....... உரைப்பாம்)

1. கே: அதீதம், சுத்தாவத்தை என்பது என்ன?

ப: இடையருத அன்போடும் சிவத்தைப் பொருந்தலாம்

2. கே: நீர்ப்பாசியின் செய்கை எப்படிப்பட்டது?

ப: கல்லெறியப்படும் பொழுது நீங்கி, அது விடும் பொழுது பரவும்.

3. கே: சிவத்தைப் பொருந்தி, அதீதத்தை அடையும் இச்சையுடையோர் எப்படி நிற்பர்?

ப: அந்த சுத்தாவத்தை நிலையையேயாய் நிற்பர்.

4. கே: பாசி போன்றவை எவை, எப்படி?

ப: மலம், மாயை, கன்மங்கள், ஆன்மா, சிவத்தை உணரும்போது நீங்கி, உணராத சமயம் பார்த்து வந்து, ஆன்மாவைக் கூடும்.

5. கே: ஏன் அப்படிக்கூடும்?
ப: வாதனை பற்றி.

எட்டாம் சூத்திரம் முடிந்தது.

ஒன்பதாஞ் சூத்திரம்.

சூத்திரம் 9, செய்யுள் 1.

(பாசஞான.........எலாமோட)

1. கே: பேறு என்பது என்ன?
ப: திருவடிப்பேறு.

2. கே: பேறு முதலியவை எவை?
ப: பேறு, அதனை அடைதற்குரிய சாதனமும், சாதனம்வரும் வழியுமாம்.

3. கே: சாதனம் எவை?
ப: பகைப்பொருள், இது, நட்புப்பொருள் இது, என்று குருமுகத்தால் விவேகித்து அறியும் ஞானமேயாம்.

4. கே: சாதனம் செய்வது எப்படி?
ப: பாசமொருவி ஐந்தெழுத்தோதல்.

5. கே: பசுஞானமாவது யாது?
ப: நான்கு, வேதம் முதலானவைகளும் நாதம் முதலானவைகளும் உயிர் தன்கீழ் வியாப்பியமாதலின் பிரமம் என்கிற ஞானமேயாம்.

6. கே: பாசஞானமாவது யாது?
ப: உலக அறிவு, வேதம், சாத்திரம், மிருதி, புராணம், கலைஞானம், அசபை, இவை பற்றி நிகழும் ஏகதேச ஞானமும், நிலமுதல் நாதம் வரையிலுள்ளவை பற்றி நிகழும் ஏகதேச ஞானமுமாம்.

7. கே: பதிஞானமாவது யாது?
ப: ஆன்மாவின் சிற்சத்தியால் விளங்கிய ஞானம்.

8. கே: நீங்காதே தூங்குதல் என்றால் என்ன?
ப: நிட்டை கூடுதலாம்.

9. கே: பரம்பரன் எப்படிப்பட்டவன்?

ப: பாசஞானத்தாலும், பார்க்க முடியாதவன், பசுஞானத்தாலும் பார்க்க முடியாதவன், பதிஞானத்தாலே பார்க்கக்கூடியவன்.

10. கே: நாம் என்ன செய்யவேண்டும்?

ப: பதிஞானத்தாலே நம் அறிவின்கண் கண்டு அவனது திருவடிநிழலில் நீங்காமல் நிட்டை கூடவேண்டும்.

11. கே: நிட்டை கூடாவிட்டால், என்ன கெடுதி?

ப: நிலையில்லாத உலகம், நிலையுடையது போலவந்து தோன்றும்.

12. கே: உலகம் நிலையுடையது போலத் தோன்றினுல் நாம் என்ன செய்யவேண்டும்?

ப: அந்த உலகம் கானல் தேராகியது என்று கண்டு கழிக்கவேண்டும்.

13. கே: கானல் தேர் எப்படிப்பட்டது?

ப: நின்றுழி நில்லாது பரந்து திரிவது.

14. கே: அப்படி கழித்தால் என்னபயன்?

ப: திருவடிஞானம் உண்டாக, நிட்டை கைகூடும். அதுவும் அன்றி பரம்பரன் உள்ளத்தே புகுந்து ஞானத்தை விளக்கி ஞேயமாகிய தன்னைக்காட்டும், அப்போது, பாசம் முற்றும் நீங்கும், பாசம்வந்து வாதனைப் படுத்தாது.

15. கே: ஞேயம் என்றுல் என்ன?

ப: காணப்பட்டபொருள் அதாவது முதல்வன்.

16. கே: பாசம் வந்து வாதனைப்படுத்தாமல் இருக்க என்ன செய்தல் வேண்டும்?

ப: திரு அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்கவேண்டும்.

17. கே: விதிப்படி உச்சரித்தல் எப்படி?

ப: சிவாயவாசி என்பதாம்.

சூத்திரம் 9, அதிகரணம 1, செய்யுள் 2.

(வேதசாத்திரம்.......காணே)

1. கே: மூவகைஞானம் எவை?

ப: பசுஞானம் (2) பாசஞானம் (3) பதிஞானங்களாம்

2. கே: சொற்பிரபஞ்சம் எவை?

ப: வேதம், சாத்திரம், மிருதி, புராணம், கலைஞானம் அசபை முதலானவையாம்.

3. கே: பொருள் பிரபஞ்சம் எவை?

ப: நிலம், நீர்முதல் நாதம் வரையிலுள்ள தத்துவங் களாம்.

4. கே: ஏகதேச ஞானம் என்ருல் என்ன?

ப: ஒன்ருென்ருக அறிதல், ஒரே காலத்தில் எல்லாவற் றையும் அறிவதல்ல.

5. கே: வியாப்பியம் என்ருல் என்ன?

ப: எங்கும் நிறைந்துள்ள வியாபகத்துள் அடங்கி யிருப்பது.

6. கே: சிவசமவாத கொள்கை என்ன?

ப: நான்பிரமம் என்பது (அதாவது) ஏகான்மவாதக் கொள்கை.

7. கே: அநாதி முத்தன் என்ருல் பொருள் என்ன?

ப: காலம் நீங்கிய பேரறிவன் என்பதாம்.

8. கே: ஆதிமுத்தன் என்ருல் பொருள் என்ன?

ப: காலம்பெற்ற சிற்றறிவாகிய பசு என்பதாம்.

9. கே: தூலதேகம் எது?

ப: எலும்பு முதலானவைகளாலாகிய பெரிய உடல்.

10. கே: சூக்கும தேகம் எது?

ப: சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், மனம், புத்தி அகங்காரம் எட்டுமுள்ள தேகம்.

11. கே: பரதேகம் என்ருல் எது?

ப: எல்லாதேகங்களுக்கும் காரணமாயிருப்பது.

12. கே: நால்வகை வாக்கு எவை?

ப: சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரிகளாம்.

சூத்திரம் 9, அதிகரணம் 1, செய்யுள் 3.
(கரணங்கள்.........அகற்றிடீரே)

1. கே: ஆன்மா இவைகிழ் நாடல் என்ருல் என்ன?

ப: தத்துவங்கள் எல்லாம் தன்கீழ் வியாப்பியம் என்று உயிர் நினைத்தல்-

2. கே: உயிர் நான்பிரமம் என்பதே முத்தியென்றும் 36 தத்துவங்களாகிய கரணங்கள் எல்லாம் என் கிற் வியாப்பியம் என்று அறிதலே முத்தி என்றும் உயிர் சொல்லுவதால் என்ன குற்றம்?

ப: சினையிலும், முட்டையிலும், கருப்பாசயத்திலும், மரத்திலும், உயிர்கள் பொருந்தினவுடன் முத்தியாதல் வேண்டுமே, அங்ஙனமில்லையே இதுபோல் அதுவுங் குற்றமே.

3. கே: சிவசமவாத ஞானம் எது?

ப: அநாதி முத்தனைப்போல முத்தனாகிய யானும் அவ்வாறு முத்தனுவேன் என்பது.

4. கே: பாடாணவாத ஞானம் என்பது என்ன?

ப: ஆன்மா பாசங்களை விட்டு கல்லுபோல் அறிவு, இச்சை செயல்கள் சிறிதும் இன்றி நிற்றலே முத்தி.

5. கே; பேதவாத சைவர் முத்தி எது?

ப: கரணங்களில் சென்ற, தன் அறிவு பக்குவம் வந்த இடத்து அவ்வாறு செல்லாமல் தன்மாட்டு வந்து ஒடுங்குவதே முத்தி என்பர்.

6. கே: பாடாணம் என்றால் என்ன?

ப: கருங்கல்.

7. கே: பேதவாத ஞானமே, முத்தி என்பதற்கு, என்ன உதாரணம்.

ப: காலையில் சேய்மையில் சென்ற ஒருவனுடைய நிழல் உச்சிப்போதில் அங்ஙனம் செல்லாமல் தன்மாட்டு வந்து நிராதாரமாய் நிற்கும்,

சூத்திரம் 9, அதிகரணம் 1, செய்யுள் 4.
(சிவனை.........காட்டலானும்)

1. கே: முப்பொறிகள் எவை?

ப: மனம், வாக்கு, காயம்.

2. கே: பாச ஞானம் எப்படிப்பட்டது?

ப: மனம் வாக்கு காயங்களைப்பற்றி ஏகதேசமாய் நிகழும் சுட்டுணர்வாகியது, பாசஞானம்

3. கே: 1. துவக்கு, 2. மேதை, 3. மச்சை இவற்றிற்குப் பொருளென்ன?

ப: துவக்கு=உடம்பு, மேதை=தசை. மச்சை. கொழுப்பு

4. கே: தற்பிரகாசம் என்றால் என்ன?

ப: தன்னை விளக்குவது.

5. கே: பரப்பிரகாசம் என்றால் என்ன?

ப: தன்னையும் விளக்கி, ஆன்மாவையும் விளக்குவது.

6. கே: பசு ஞானமாவது யாது?

ப: தற்சொரூபமே, அறியமாட்டாது பல தலைப்பட்டு ஐயுற்று நிற்பது.

7. கே: பாச ஞானமாவது யாது?

ப: முப்பொறி முதலியனபற்றி ஏகதேசமாய் நிகழும் சுட்டுணர்வு ஆகியது.

8. கே. பதி ஞானமாவது யாது?

ப: தானே தற்பிரகாசமும் பரப்பிரகாசமுமாய் எல்லாப் பொருள்களையும் இனிது விளக்குவது.

சூத்திரம் 9, அதிகரணம் 1, செய்யுள் 5.

(கண்டிடும்........ நிறுத்தே)

1. கே: கண் எப்படிப்பட்டது.

ப: பரப்பிரகாசமாய் நிற்கும். அது தன்னியல்பையும் காணமாட்டாது. தனக்கு முதலாகிய அந்தக்கரணங்களையும் காணமாட்டாது.

2. கே: புறக்கரணங்கள் எவை?

ப: புத்தி முதலியன.

3. கே: அகக்கரணங்கள் எவை?

ப: வித்தியாதத்துவம் முதலியன.

4. கே: ஆன்மா எப்படிப்பட்டது?

ப: பரப்பிரகாசமாயுள்ளது.. தன்னியல்பையும் அறியாது தனக்கு உயிராய் உணர்த்தி நிற்கும் முதல்வனையும் காண மாட்டாது.

5. கே: அகக்கரணங்கள் எப்படிப்பட்டது?

ப: தம்மியல்பையும் காணமாட்டாது, தனக்கு விடயங் களைக்காட்டுகிற உயிரையும் காணமாட்டாது.

6. கே: சிவஞானம் எப்படிப்பட்டது?

ப: தற்சொருபத்தை விளக்கி ஆன்ம சொருபத்தையும் விளங்கச்செய்து, தனக்கு ஒருகாட்டு இன்றி, அறிந்தாங்கறிந்து தற்பிரகாசமும், பரப்பிரகாசமுமாய் நிற்கும்.

7. கே: பாசம் எப்படி நீங்கும்?

ப: சிவஞானத்தை காட்டாகக் கொண்டு முதல்வனை அவ்வறிவினில் காணப்பெற்று திருவடியை தலைக்கூடின் பாசம் நீங்கும். ஆதலால் சிவபாவனையைவிடாது செய்தலே பொருத்தம்.

சூத்திரம் 9, அதிகரணம் 2, செய்யுள் 6.

(குறித்தடியின்....... புரிந்தே)

1. கே: அட்டகுணம் என்றால் என்ன?

ப: எட்டுப்பங்கு அதிகம் என்பது பொருள்.

2. கே: எட்டுச் சித்தி எவை?

ப: (1) அணிமா (2) மகிமா (3) லகிமா (4) கரிமா, (5) பிராப்தி (6) பிராகாமியம் (7) ஈசத்துவம் (8) வசித்துவம்.

3. கே: கோகநதன், யார்?

ப: பிரமன்.

4. கே: புவனங்கள் எத்தனை?

ப: காலாக்கினி புவனம் முதல், அனுசிருத புவனம் வரை உள்ள 224 புவனங்களுமாம்.

6. கே: கான்றசோறு, பித்திகை, என்பதற்குப் பொருளென்ன?

ப: கான்றசோறு=கக்கியசோறு, பித்திகை=சுவர்.

7. கே: அறுவகை அத்துவாக்கள் எவை?

ப: வன்னம், பதம், மந்திரம், புவனம், தத்துவம், கலையாம்.

சூத்திரம் 9, அதிகரணம் 3, செய்யுள் 7.
(கண்ட இவை........காணே)

1. கே: உயிர் எப்படிப்பட்டது?

ப: உடம்பே நானென்றும், உடம்பு நீங்கிய வழி, பிரமம் நானென்றும், இப்படி விபரீதமாக உணர்கின்றது உயிர்.

2. கே: கருடோகம்பாவனை என்றால் என்ன?

ப: மாந்திரீகன், தன்னை கருடனாக பாவனை பண்ணுவது. (கருட+அகம்=கருடோகம்)

3. கே: கருடோகம் பாவனையால் பயனென்ன?

ப: விடம் ஒழியும்.

4. கே: சிவோகம் பாவனையென்றால் என்ன?

ப: மந்திரம் உச்சரிப்பவர், தன்னை சிவனாக பாவனை பண்ணுவது.

5. கே: கண்ணொளியும், ஞாயிற்றின் ஒளியும், எப்படிப் பட்டது?

ப: வேறாயினும் வியாப்பிய வியாபக பாவகத்தால் வேற்றுமை சிறிதும் தோன்றாதவாறு, ஒற்றித்து நிற்கும்.

6. கே: தொண்டாவது யாது?

ப: உயிர், பரமும் நானல்லேன், எனக்கருதியவழி, முனைத்தல் இன்றி, ஓங்கு உணர்வில் உள்ளடங்கி அதன் வழித்தாய் நிற்றல்.

சூத்திரம் 9, அதிகரணம் 3, செய்யுள் 8.
(அஞ்செழுத்தால்.........அறனே)

1. கே: வேதாந்தம் எப்படி பாவிக்கச் சொல்லுகிறது?

ப: அது நான் ஆனேன் என்று பாவிக்கச்சொல்லுகிறது.

2. கே: வேதாந்தமகா வாக்கியம் எது? அதன்பொருள் என்ன?

ப: (மகாவாக்கியம்) தத்துவமசி (தத்+துவம்+அசி) பொருள். அது நீ ஆனாய் என்பது பொருள்.

3. கே: சித்தாந்த மகாவாக்கியம் எது? அதன் பொருள் என்ன?

ப: (மகாவாக்கியம்) சிவத்துவமசி (சிவம் + துவம் + அசி) பொருள், சிவம் நீ ஆனுய் என்பதாம்.

4. கே: கசிந்த தொண்டு என்பதற்குப் பொருள் என்ன?

ப: முனைத்து நின்று செய்யும் உலகத்தொண்டில் மேம் பட்டதொண்டு.

5. கே: ஆன்மாவும் சிவமும் நிற்கும் பரிசு எப்படிப்பட்டது.

ப: ஆன்மா உடைமையும், சிவம் உடையானுமாய் நிற்கிறது.

6. கே: ஆன்மாவும் சிவமும் உடைமையும் உடையானு மாய் நிற்கும் பரிசை எதனுல் அறியலாம்.

ப: அஞ்செழுத்து ஓது முறையில் வைத்து உணரலாம்.

7. கே: அரன் உருவம் எதனுல் அமைந்திருக்கிறது?

ப: அஞ்செழுத்தால் அமைந்திருக்கிறது.

8. கே: அங்கநியாசம், என்பது என்ன?

ப: அங்கத்தில் 11 மந்திரங்களைச் சொல்லி அதற்குரிய இடங்களைத் தொடுதல்.

10. கே: கரநியாசம் என்பது என்ன?

ப: கரத்தில் 11 மந்திரங்களைச் சொல்லி தொடுதல்.

11. கே: நம்முடம்பில் பூசைத்தானம், ஓமத்தானம். தியானத் தானம் எது?

ப: பூசைத்தானம், இதயம், ஓமத்தானம், உந்தி தியானத்தானம் புருவநடு.

12. கே: குண்டலி என்பது எது? கோதண்டம் எது?

ப: குண்டலி என்பது உந்தி, கோதண்டம் என்பது புருவநடு.

13 கே: மந்திரங்களை எப்படி கணிக்கவேண்டும்?

ப: சிவோகம் பாவனையும், அஞ்செழுத்து மந்திரமும் அந்தரியாகக் கிரியையும் என்னும் மூன்றும் ஒருவழிப்பட நின்று கணித்தல் வேண்டும்.

14. கே: கணிக்கும் முறையில் கணித்தலால் என்னபயன்?

ப: அவ்வுச்சரிப்பில் ஆன்மாவின் மாட்டுபதிப்பொருள் விளங்கித் தோன்றும்.

15. கே பதிப்பொருள் விளங்கித் தோன்றுவதற்கு உதாரணம் எது?

ப: காண்டல் செல்லாத இராகு கேதுக்கள் உபராகத்தில் அதாவது கிரகணத்தில் சந்திரர் ஆதித்தர் மாட்டுகாணப் படுதல் போலாம்.

சூத்திரம் 9, அதிகரணம் 3, செய்யுள் 8.
(நாட்டு .. ...போற்றே)

1. கே: இதயத்தை எப்படி கமலமாக விளக்குகிறார்?

ப: பிருதிவி கிழங்கு, அப்பு முதலாகிய 23 தத்துவங்கள் 8 விரல் நீளமுள்ள தண்டு. வித்தியாதத்துவம் ஏழும் சுத்தவித்தையும் எட்டு இதழ், அந்த எட்டு இதழும் பிரணவாதி எட்டு அக்கரங்களை யுடையது. ஈசுரமும் சதாசிவமும் 64 கேசரம், சத்திதத்துவம், காய், விதை சத்தன் என்று விளக்குகிறார்.

2. கே: எட்டு அக்கரங்கள் எவை?

ப: ஓம், ஹாம், ஹௌம், சிவாயநம.

3. கே: முன் 8 வது செய்யுளில் அரன் உரு ஐந்தெழுத்தால் அமைந்த உரு எனக்கூறி, அதன்பின் ஆன்மாவில் அர்ச்சித்து என்றுசொல்லி, ஈண்டு சத்தி மூர்த்தி என்றமையால் அறிவு மலைக்காதோ காரணம் என்ன?

ப: அஞ்செழுத்தால் அமைந்தது என்றது அரனுக்கு தூலவடிவம், ஆன்மாவில் அர்ச்சித்து என்பது அரனுடைய சூக்கும வடிவம், சத்திமூர்த்தி என்றது அதி சூக்குமமாதலின் மலைவாகாதாம்.

சூத்திரம் 9, அதிகரணம் 3, செய்யுள் 10.
(அந்தரிட.........அறுமே)

1. கே: அந்தரியாக பூசை என்றால் என்ன?

ப: அகத்தே, கந்தம், மலர், முதலியன கற்பித்துக் கொண்டு பூசிப்பது.

2. கே: அந்தரியாக பூசையால் என்ன பயன்?

ப: ஆன்மசுத்தியாம், முத்தி சாதனமுமாம். சிவம் விளங்கித்தோன்றும், அது தோன்ற மல மறைப்பு தேய்ந்து முடிவில் பற்றற நீங்கும்.

சூத்திரம் 9, அதிகரணம் 3, செய்யுள் 11.
(புறம்பேயும்... ...தானே)

1. கே: மெய்யடியார் செய்தி எப்படிப்பட்டது?

ப: அகத்தாதல், புறத்தாதல். ஒரு குறியின்கண், இறைவனை காணப்பெறின், அகம் புறமென்று இரண்டால் அர்ச்சனைபுரியும் இந்தச் சகம்போல, புண்ணிய பாவங்களைக் குறித்தலின்றியும், அதுவேறு, இதுவேறு எனப்பிரித்துக் காண்டலுமின்றி யாண்டும் ஒரு பெற்றியராய் இட்டபணி செய்து நிற்றலேயாம். என்று அகத்தே காணும்படி, புறத்தேயும் ஒரு குறியிற்கண்டு பூசிக்கவேண்டும். அதற்கு உபகரணம் வேண்டுமாயின், முயன்று வருந்துதலும், பிறவுயிர்களை வருத்துதலுமாகாமையின் மரத்தின்கீழ் உதிர்ந்த பூக்களும் ஆறு குளம் முதலியவற்றிலுள்ள நீரும் அயாசகமாய்வந்த அமுது முதலாயினவே ஆண்டைக்கு அமையக் கொள்ளலாம்.

சூத்திரம் 9, அதிகரணம் 3, செய்யுள் 12.
(இந்தனத்.........பாலே)

1. கே: இறைவன், அகம் புறம் என்னும் பிரிப்பின்றி, யாங்கனும் உளனுதல் எப்படி?

ப: *(1)* விறகில் தீப்போல உலகத்தாருக்கு சிறிதும் தோன்றுதவாறு, மறைந்து உடனுய் நிற்பன் *(2)* பாலின்நெய் போல, மந்ததரமலபாகம் உடையார்க்கு, ஒரு வாற்றால் தோன்றியும், தோன்றுது மறைந்து உடனுயும் நிற்பன் *(3)* பழத்தின் இரதம்போல மந்தமலபாகம் உடையார்க்கு, உய்த்துணரும் வழிவிளங்கித் தோன்றுவதாய் உடனுயும் *(4)* எள்ளின்கண் எண்ணெய்போலத் தீவிரமலபாகம் உடையார்க்கு இனிது விளங்கித் தோன்றினும், பிரித்தறியப்படாது உடனுயும் நிற்பன்.

2. கே: இறைவன் எங்கே வழிபட்டால் அருளுவன்?
   ப: எவ்விடத்தும் வந்தனை செய்தால் அருளுவன்.

3. கே: வாதனமலம், நீக்கலுறுவார்க்கு, எந்த பூசை அவசியம்வேண்டும்?
   ப: அகப்பூசை அவசியம் வேண்டும்.

4. கே: அகப்பூசை, அவசியம் வேண்டுமென்பற்கு என்ன காரணம்?
   ப: இறைவன் விளங்கித் தோன்றி, வாசனையைப் பற்றறத் தொடைத்தற்கும், தன் வண்ணமாக்கித் தனது பேரானந்தப் பெருஞ்செல்வ முழுவதும், இவனதாகச் செய்தற்கும் உரிமையுடைய விசேட இயைபு. ஆண்டையது ஆகலால்.

ஒன்பதாம் சூத்திரம் முடிந்தது.

பத்தாஞ் சூத்திரம்

சூத்திரம் 10, செய்யுள் 1.

(இவனுலகில்.........விடுமே)

1. கே: பெத்த நீக்கம் என்றால் பொருளென்ன?
   ப. பாசவிடுதி.

2. கே: முத்திப்பேறு என்றால் என்னபொருள்?
   ப: வீடு அடைதல்.

3. கே: பெத்தநிலையில் இறைவன், ஆன்மாவோடு எப்படி நிற்பன்?
   ப: முதல்வன் வேறு காணப்படுமாறின்றி, தான் ஆன்மாவேயாய், ஒற்றுமைப்பட்டு, ஆன்மாவின் வழி நிற்பன்.

4. கே: பத்தாஞ்சூத்திரம் என்ன கூறுகிறது?
   ப: பெத்தத்தினின்று நீங்கப் பெற்றார்க்கு முத்திப்பயன் பெறுமாறு வகுத்துக் கூறுகிறது.

5. கே: முத்திநிலையில் உயிர் முதல்வனோடு எப்படி நிற்றல் வேண்டும்?
   ப: உயிர், தானென வேறு காணப்படாதவாறு, அம்முதல்வனோடு ஒற்றுமைப்பட்டு, அவ்விறைபணியின் வழுவாது நிற்றல் வேண்டும்.

6. கே: அங்ஙனம் ஏகனுகி நிற்றலால் என்ன பயன்?

ப: யான் எனது என்னும் செருக்கு அறும்.

7. கே: அங்ஙனம் செருக்கு அறுதலினுல் என்ன பயன்?

ப: உயிர் செய்யும் இதம் அகிதங்கள் எல்லாவற்றை யும் இறைவன் தான்செய்யும் இதம் அகிதங்கள் என, உட னுய் நின்று ஏன்றுகொள்வன்.

8. கே. உயிர், அரன் பணியில் நிற்றலால் என்னபயன்?

ப: இந்திரியங்களின் வசமாய் நிற்கும் பரதந்திரம் ஒழியும்.

9. கே: பரதந்திரம் ஒழிதலால் பயனென்ன?

ப: ஆன்மாவுக்கு இன்பதுன்ப நுகர்ச்சி யாமாறு, பிறர் செய்யும் இதம், அகிதங்களெல்லாம் முதல்வன் தனக்கு நுகர்ச்சியாமாறு, செய்தனவே யாமென்று, பிறவி நீங்க உட னுய் நின்று ஏன்று கொள்வன்.

10. கே: (1) ஆன்மாசெய்யும் இதங்களையும் அகிதங்களையும் இறைவன் தான்செய்யும் இதமகிதம் என்று உடனுய்நின்று ஏன்றுகொள்வதாலும் (2) ஆன் மாவுக்கு இன்பதுன்பம் நுகர்ச்சியாமாறு பிறர் செய்யும் இதமகிதங்களை இறைவன் தனக்குச் செய்தனவேயாம் என்று உடனுய்நின்று ஏன்று கொள்வதாலும் ஆக இந்த இருவகையாலும் என்னபயன்?

ப: முதல்வன் செய்த இதமகிதங்கள் முதல்வனுக்குப் பணியாய்முடியும். இவனுக்கு இதமகிதம் செய்தார் மாட்டு அவ்வித மகிதங்கள் அவ்வளவினன்றி மிகுதிப்படுதற்குக் கார ணமாயியையும், இப்படி ஆர்ச்சிப்பும், நுகர்ச்சியும் இவனைப் பந்தியாதொழியவே மற்ற சஞ்சிதம், ஆணவம், மாயை யாகிய குற்றங்கள் இவனைப் பந்திக்கமாட்டாதாய் விட்டொ ழியும்.

11. கே: ஆர்ச்சிப்பு, நுகர்ச்சி என்றுல் பொருள் என்ன?

ப: ஆர்ச்சிப்பு என்பது சம்பாதித்தல், நுகர்ச்சி என்பது அனுபவித்தல்,

சூத்திரம் 10, அதிகரணம் 1, செய்யுள் 2.
(யான்செய்தேன்.........ஒழியாதன்றே)

1. கே: செருக்கு என்பது எது?
ப: யான் என்கிற அகங்காரமும், எனது என்கிற மமகாரமுமாம்.

2. கே: மலக்கோணல் எது?
ப: யான் எனது என்கிற செருக்கு.

3. கே: மலக்கோணலை எதனுல் நிமிர்த்தலாம்?
ப: ஏகனுகி நிற்கும் ஞானுக்கினியினுலே காய்ச்சி நிமிர்த்தலாம்.

4. கே: முதல்வன் எப்பொழுது, தற்சொருபத்தை விளக்கி நேராக வெளிப்பட்டுத் தோன்றுவன்?
ப: யான் எனது என்கிற அகங்கார மமகாரமாகிய செருக்கு விளைதற்குக் காரணமாகிய மலக்கோணலை ஞானுக்கினியாலே காய்ச்சி நிமிர்த்தி ஆன்மா முதல்வன் வழித்தாக நிற்கப்பெறின் வெளிப்பட்டுத் தோன்றுவன்.

5. கே: இன்னும் என்ன பயன் உண்டாம்?
ப: புண்ணிய பாவமாகிய வினைகள், சிவனைப் பொருந்தாமல் சிவனுக்குப் பணியாய், இவருக்கு இதமகிதம் செய்தார்பால், அவை மிகுதற்குத் துணைக்காரணமாய் இயையும்.

6. கே: யான் எனது என்கிற செருக்கு எப்படி ஒழியும்?
ப: மாயாகருவிகளைப் பொருந்தியறிகிற சிற்றறிவிலிருந்து நீங்கி ஏகனுகி நிற்கும் ஞானம் பெற்ருல் ஒழியும்.

7. கே: யான் செய்தேன் என்பது முதலிய நினைவுடையார்க்கு முதல்வன் என்ன செய்வான்.
ப: முதல்வன் விளங்கித் தோன்றுதலின்றி கன்மத்துக்கிடாகப் போகத்தைப் புசிப்பித்து, ஆகாமிய வினையை ஏறச் செய்வன்.

சூத்திரம் 10, அதிகரணம் 2, செய்யுள் 3.
(இந்திரியம்.........அன்றே)

1. கே: பாடிகாவலர் என்ருல் யார்?
ப: ஊர் காப்பாளர்.

2. கே: பாடி காவலர் செய்கை எப்படிப்பட்டது?

ப: பிழை செய்துள்ளாரைத் தம்முளடக்கித், தாம் ஈர்த்தவாறெல்லாம் பரதந்திரமாய்க் கிடக்கச் செய்வர்.

3. கே: பாடிகாவலர் எதனுல் அப்படி செய்கிருர்?

ப: பாடிகாவலராகிய தம்மை பரதந்திரராகச் செய்விக்கும், அரசனது ஆணைவழி நிற்கும் ஆற்றல்கொண்டு செய்கிருர்.

4. கே: பாடிகாவலரால் பரதந்திரப்பட்டவர், பாடிகாவலரையும், தம் ஆணைவழி நிற்பித்துக் கொள்ள வல்ல சுதந்திரராவது எப்படி?

ப: பாடிகாவலர்க்கும், தமக்கும், இறைவனுகிய அரசனைக் கூடி, அவ்வரசன் வழி ஒழுக வல்லராகியபோது சுதந்திரராவர்.

5. கே: இந்த உதாரணத்தால் விளங்கிக் கிடப்பது எது?

ப: வினை செய்தமைபற்றி, இந்திரியங்கள் என்னைத் தம்முள்ளடக்கி, ஈர்த்தவழியெல்லாம் பரதந்திரப்பட்டுக்கிடப்பச் செய்வதும், அவ்விந்திரியங்கள் அவ்வாறு செய்விக்கும், முதல்வனது ஆணைவழி, நிற்றலால், அவ்வாற்றல் கொண்டன்றிப் பிறிதில்லை யென்றுணர்ந்து, அவ்விந்திரியங்களையும், தன்னையுமுடையனுகிய அம்முதல்வனது தாள்களைத் தலைக் கூடப்பெற்று, அவன் பணியின் நின்றெழுகப் பெறுமாயின், அம்முதல்வன் திருவருளால், அவ்விந்திரியங்களைத் தன் ஆணைவழி நிற்பித்துக் கொள்ளவல்ல சுதந்திரனுவன்.

6. கே: அப்படி முதல்வன் வழியில் உறைத்து நிற்புழியும் பயிற்சிபற்றி ஒரோவழி அவ்விந்திரியங்களின் குறும்பு நிகழுமாயின் என்ன செய்யவேண்டும்?

ப: அதுவும் முதல்வன் செயலேயென்று பணியில் வழுவாது ஒழுக வினைகள் மடங்கி ஒழியும்.

7. கே: இப்படி அடிமைத்திறத்தில் நிற்பதால் பயன் என்ன?

ப: பொறிகளின் வழிப்பட்டு பரதந்திரன் ஆகமாட்டான்

சூத்திரம் 10, அதிகரணம் 2, செய்யுள் 4.

(சலமிலனுய் .... நீங்குந்தானே)

1. கே: அஞ்ஞான கன்மம் யாரிடத்தில் பிரவேசிக்கமாட்டாவாய் ஒழியும்?

ப: இறைவனே உள்நின்று செய்கின்ருன் ஆதலின், என்னுற் செய்யப்படும் இதம் அகிதம் எல்லாம், இறைவன் செய்யும் செயலே என்றும், இறைவன் பிறரைக்கொண்டு செய்தும் செய்வித்தும் நிற்கின்ருனுதலின், பிறரால் எனக்கு வருகின்ற இதமகிதங்களும் முதல்வன் செய்யுஞ் செயலே என்று அவனருளை யல்லாது ஒன்றனையும் கருதானுய் தம்மை யிழந்து நிற்பார்க்குமட்டும் அஞ்ஞான கன்மம் பிரவேசிக்க மாட்டாது.

2. கே: இப்படி தம்மாட்டு அடைக்கலம் புக்காரை முதல்வன் என்ன செய்வான்?

ப: தன்னைப் போலச் சுதந்திரராகச் செய்து பாதுகாப்பன். அதுவேயன்றி, அவர்மாட்டெழுந்த ஆகாமிய வினையை அவருக்கு இதமகிதம் செய்வார். உளராயவழி, அவ்வித மகிதங்களுக்குத் துணையாய் கூடச்செய்து, பிறர் செய்யும் இதமகிதங்களை மிகுவித்து நுகர்வித்து ஒழிதலுஞ் செய்வன்.

3. கே: அவர் மாட்டெழுந்த ஆகாமிய வினை அவரைச் சார மாட்டாமைக்கு என்ன உதாரணங் காட்டுகிருர்?

ப: மந்திரவலியால் அடங்கி இரைநுகரப்பெருது கிடக்கும் பாம்பு யாதானும் ஓர் இலக்குவாய்த்துழிவறிது விடாதவாறு போல என்கிருர்.

சூத்திரம் 10, அதிகரணம் 2 செய்யுள் 5,
(நாடுகளில்.........இருப்பர்)

1. கே: இறைபணியில் நிற்கும் ஞானம் எப்படிப்பட்டது?

ப: எத்துணை நன்மைகளும், எத்துணைத் தீமைகளும், இறைபணியில் நிற்கும் ஞானத்தால் தரப்படும் பேற்றைக் கொடுக்க வல்லுனவல்லவராகிய பெரும்பேருயுள்ளதாம்.

2. கே: இறைபணியில் இல்லாதவர் என்ன அடைவர்?

ப: புண்ணிய தேசங்களில் சென்று, புண்ணிய தீர்த்தமாடியும், புண்ணிய தலங்களைத் தரிசித்தும், காடுகளில் கந்தமூல, பலாதிகளை அயின்றும், மலைக் குகைகளில் யோகிருந்தும், பயனின்றி சன்னத்துட்படுவர்.

3. கே: இறைபணியில் நிற்பவர் என்ன பயனை அடைவர்?

ப: மாதர்களை தோயப்பெறினும், வீட்டினைத் தலைக்கூடி குஞ்சிதபாதத்தில் அடங்கி நிற்பர்.

சூத்திரம் 10, அதிகரணம் 2, செய்யுள் 6.

(அங்கித்.........மன்றே)

1. கே: இந்திரியங்களை தம்வழிப்படுத்த வல்ல ஞானிகள் எப்படிப்பட்டவராவர்?

ப: எவ்விந்திரியங்களிலிருந்து எத்தொழிலைச் செய்தாலும் அவர்மாட்டு விருப்பு வெறுப்பு நிகழ்ந்து மேலைக்குவித்தாதல் செல்லாமையால் பிராரத்தவினை கூடமாட்டாது.

2. கே: இந்திரியங்களை தம்வழிப்படுத்த வல்ல ஞானிகளுக்கு அவ்விந்திரியங்கள் துன்பப்படுத்த மாட்டா என்பதற்குக் காட்டிய உதாரணங்கள் எவை?

ப: அங்கித் தம்பனமுடையாருக்கு அங்கி சுடாதவாறு போலவும், மந்திரவாதிகளுக்கு விடம்பருகினும் விடம் கொலைத் தொழிலைச் செய்யாதவாறு போலவும், இந்திரியங்களின் வழிப்பட்டாலும் ஞானிகளுக்குத் துன்பமில்லை.

3. கே: தற்பணி நீத்தவர் மாட்டுள்ள பிராரத்தவினை கெட்டொழியும் என்பதற்கு என்ன உதாரணம் காட்டியுள்ளார்?

ப: வெந்தபடம்போல கெட்டொழியும், ஆனல் வாதனை மாத்திரையாய் நின்று சிறிது தாக்கும்.

4. கே: வாதனை மாத்திரையாய் நின்று எப்படி தாக்கும்?

ப: காயம் இருந்து ஒழிந்த பாத்திரத்தில், அந்தவாசனையிருந்து கந்தித்தும் ஒருகறிக்கு உபயோகமாதலின்மை போலவும், குயவன் சுழற்றிவிட்ட சக்கரம் குடம் வனையும் வரை வேகமாகச்சுற்றி பின்மெலிதாய் சுழல்வது போலவும், எல்லா மலங்களும் பின்வேறே பற்றில்லாமையால் காயமொடுமாயும்.

பத்தாஞ் சூத்திரம் முடிந்தது.

பதினோராஞ் சூத்திரம்

சூத்திரம் 11, செய்யுள் 1.

(காயமொழிந்தா.........கொண்டே)

1. கே: பதினோராஞ் சூத்திரம் என்ன கூறுகிறது?
ப: முத்திப் பயன் பெறுமாறு வகுத்துக் கூறுகிறது. காணும் உபகாரம் கூறுகிறது.

2. கே: முதல்வன், உயிர்களுக்கு எப்படி உபகரிக்கிறான்?
ப: முதல்வன், உயிருடன் நின்று விடயத்தை உயிருக்கு அறிவித்தல் மாத்திரையேயன்றி தானும் உயிர் அறிவுடன் சென்று அறிதலுஞ் செய்து வருகிறான்.

3. கே: எதைப்போல உபகரிக்கிறான்?
ப: உயிர், காட்டக்காணுந் தன்மையுடைய கண்ணுக்கு ஒரு உருவத்தைக் காணும்படி அக்கண்ணொளியோடு உயிரும் கூடச்சென்று உருவத்தைக்காட்டி அவ்வுருவத்தை உயிரும் காணுதல்போல முதல்வனும் காட்டிக்கண்டு உபகரிக்கிறான்.

4. கே: முதல்வன், உயிருக்குக் காட்டிக்கண்டு உபகரித்து வரும் உரிமையை அறிந்துகொண்டு உயிர் நிற்பதால் என்ன பயன்?
ப: உயிர் அறியவே அத்தொடர்புபற்றி அம்முதல்வனது திருவடியை அடைதற்கு இச்சையுண்டாம். அது உண்டாகவே காயம் ஒழிந்தபின் மலம் நீங்கிச் சுத்தனாய் நிற்கும் முறைமை காயத்தோடு நிற்புழித்தானே கைகூடப்பெறும். அறிவு இச்சை கைகூடவே கிரியையும் ஒரு வழிகொண்டு நிற்க, முதல்வன் திருவடியைத் தலைக்கூடப்பெற்று, சிவானுபூதியே சுவானுபூதியாகக்கொண்டு வாழ்வன்.

சூத்திரம் 11. செய்யுள் 2.

(பரஞானத்தால்.........இருப்பவர்)

1. கே: பரஞானமாவது யாது?
ப: மேலான முத்திஞானம்.

2. கே: பரஞானத்தால் சிவத்தைத் தெளிய நோக்கி அன்பு செய்யப்பெற்றவர் எப்படி யிருப்பர்?

ப: சிவத்தையே உணர்ந்துகொண்டு நிற்பரன்றி ஏனைப் பதார்த்தங்களைப்பாரார்.

3. கே: ஏன் மற்றைப் பதார்த்தங்களைப் பாரார்?

ப: ஏனைப்பதார்த்தங்கள் பிராரத்தவாதனை தாக்குதற் குரியது. ஆதலால் அவற்றைப்பாரார்.

4. கே: ஏனைப்பதார்த்தங்கள் எவை?

ப: கருவிகளாம்.

5. கே: ஏனைப்பதார்த்தங்களைக் காணவரும் ஞானங்கள் எவை?

ப: அளவை ஞானங்களாம். (அவையாவன) காட்சி அளவை, அநுமான அளவை, ஆகம அளவைகளாம்.

6. கே: அளவை ஞானங்கள் எப்படிப்பட்டவை?

ப: சுட்டுணர்வின் பேதம்.

7. கே: சாத்திரஞானம் என்பது எது?

ப: கேட்டலின் கண்ணதாகியது. நால்வகை வாக்கைப் பற்றி நிகழும் விந்து ஞானமாம்.

8. கே: கலக்கந்தரும் ஞானம் என்றால் என்ன, அது எது?

ப: ஐயந்தரு ஞானம், அதாவது சாத்திரஞானம்.

9. கே: பேதஞானமாவது யாது?

ப: சிந்தித்துத் தெளிதற் கண்ணது. இதுவே, பாவனை ஞானம், அநுபூதிஞானமாகாது.

10. கே: பாவனை ஞானமாவது யாது?

ப: பேதஞானமே.

11. கே: வாச்சிய வாசகஞானம் எது?

ப: சாத்திரஞானம்.

12. கே: சிவஞானமாவது யாது?

ப: எல்லாஞானத்துக்கும் மேலான ஞானம்,

சூத்திரம் 11, செய்யுள் 3.

(அநாதி ....காணே)

1. கே: உடம்பு எப்பொழுது முடிவுபெறும்?

ப: உடம்பு, அநாதியாய், உயிரைப்பற்றி, நீரோட்டம் போலத் தொடர்ச்சியாய் வருவது. ஆதலான் முடிவு கூறுதல் பொருந்தாது.

2. கே: உருவசிவ சமவாதிகளின் கொள்கை என்ன?

ப: முத்தியினும் நித்திய, சுத்த, மங்களகரமான திப்பிய சரீரம் உண்டு என்பர்.

3. கே: உருவசிவ சமவாதிகளின் கொள்கை ஏன் பொருந்ாது?

ப: உடம்புளதாகவே அதற்குக் காரணமாகிய மாயையும் உடம்பின்கண் நிகழும். உண்டிவினைகளுக்கு ஏதுவாகிய கன்மமும் அவ்வுடம்பை இயைவிப்பதாகிய ஆணவமலமும் நீங்குதல் இன்மையால் உடம்பும் இல்லாமையைப் பயக்கும் ஆதலால் அவர் சொல்லும்முத்தி பதமுத்தியேயாம்.

சூத்திரம் 11, செய்யுள் 4.

(தெரிவரிய.........மன்றே)

1. கே: உயிர், மெய்ஞ்ஞானத்தைப் பெற்றவழி ஆணவ மலம் எதைப்போல கெடும்?

ப: தேற்றாங் கொட்டையால் தேற்றப்பட்ட நீரில் மருவிய கலங்கல்போல ஆணவமலம் மாயாமற் சத்தி நீங்கும்.

2. கே: உயிர், மெய்ஞ்ஞானத்தைப் பெற்று சிவம்பிரகாசித்த வழி ஆணவமலம் எதைப்போலகெடும் மாயா மலம் கெடாமல் அதன் சத்திமாயும்?

ப: மிக்க அக்கினிப் பிரகாசத்துக்கு முன்னர் இருள் கெடுதல்போல ஆணவமலம் கெடும்.

3. கே: சிவம்பிரகாசித்து சீவன் முத்தனானவழி ஆணவ மலம் எதைப்போல கெடும் தான் மாயாமல் அதன் சத்திமாயும்?

ப: மருந்தினால் தடைப்பட்ட நஞ்சமும்போல ஆணவ மலம் சத்தி கெடும்.

4. கே: பின்பு அவ் ஆணவமலம் எப்படியாகும்?

ப: தான் கெடாமல் தன் சத்திகெட்டு வாதனை மாத்திரையாய் உடம்புள்ள அளவும் நின்று மற்றொரு பிறவிக்கு ஏதுவாதலின்றி கழிந்தொழியும்.

சூத்திரம் 11, செய்யுள் 5.

(ஆணவந்தான் . ...போமோ)

1. கே: பாடாணவாத சைவர் கொள்கை எது?

ப: முத்தியிலும் சகசமலம் நீங்குமாறில்லை. ஆணவ மலம் அழிந்தால் ஆன்மாவும் அழியும் என்பது.

2. கே: பேதவாத சைவர் கொள்கை என்ன?

ப: மெய்ஞ்ஞானஞ் சேர்ந்த மாத்திரையே மலம்நீங்கப் பெறும். அதுவே முத்தியாதலமையும். அதன்மேலும் திருவடியைக் கலத்தல்வேண்டாம் என்பதாம்.

3. கே: பாடாணவாத சைவர் சொன்னது ஏன் பொருந் தாது?

ப: ஆணவமலம் கெடாது. ஆணவமலத்தின் சத்தியே கெடுமாதலால் பொருந்தாது. இரசகுளிகையால் செம்பிலுள்ள களிம்புகெட செம்பு நிற்றல்போல.

4. கே: பேதவாத சைவர் சொன்னது ஏன் பொருந்தாது?

ப: மெய்ஞ்ஞானம் சேரினும் சிவம் பிரகாசித்து திருவடியில் பொருந்தவே மலம்போம்.

சூத்திரம் 11, செய்யுள் 6

(நெல்லினுக்கு.........இன்றாமே)

1. கே: அரிசியின் இயல்பு எப்படிப்பட்டது?

ப: அரிசியுடன் சகசமாய் நின்ற, முளை, தவிடு, உமிகள், அவ்வரிசியைவிட்டுக் கெட்டு ஒழிய, அவ்வரிசி கேடின்றி நிலைபெறுதல் கண்டாம். அப்போதும் அம்முளை, தவிடு, உமிகள், அவ்வரிசியில் அடங்கி நிற்கும். ஆயினும் அவ்வரிசி முன்போல வேறொரு நெல்லு, தோன்றுதற்குக் காரணமாதல் செல்லாது. ஆதலால் அம்முளை, தவிடு, உமிகள் அவ்வரிசியில் மெல்லமெல்ல நீங்கி இல்லையென்பதே தேற்றம்.

2. கே: அரிசியின் இயல்பை எதற்கு உதாரணங் காட்டுகிறார்?

ப: அநாதியாயுள்ள உயிரை மேவிய, மலம், மாயை, கன்மங்களும், நல்ல முத்தியின்கண் விட்டேநீங்கும். ஆனால்

பெத்தான்மாவை நணுகிநிற்கும். ஆதலால் அவை நாசம் இன்றும் நித்தப்பொருளேயாம் என்பதற்கு உதாரணங் காட்டுகிறார்.

3. கே: அநுபலத்தி, உபலத்தி என்பதற்குப் பொருள் என்ன?

ப: அநுபலத்தி - இன்மை ஏது, உபலத்தி - உண்மை ஏது?

சூத்திரம் 11, அதிகரணம் 2, செய்யுள் 7.
(எவ்விடத்தும்.........யாமே)

1. கே: ஆன்மாவுக்கு அறிவு, செயல்கள், விளங்குதலும், விளங்கியபின் விடயத்தில் சென்று பற்றுதலும் எப்படியமையும்?

ப: இறைவன் திருவடியால் அமையும். இறைவன் திருவடியின்றி அமையமாட்டா?

2. கே: அப்போது இறைவன் எப்படி நிற்பன்?

ப: அக்கரங்களை இயக்குதற் பொருட்டு, அக்கரங்களோடு உடன் நிற்கும் அகரம்போல உயிர்களுக்கு அறிவு செயல்கள் விளங்குதற் பொருட்டு உயிர்களோடு கலந்து நிற்பன். பின் அந்த அறிவு செயல்கள் விடயத்திற் சென்று பற்றுதற்பொருட்டு, அவ்வுயிர்களை அதிட்டித்துக்கொண்டு அவை செல்லுமாறெல்லாம் அறிந்து செலுத்தி அவ்விடயங்களிலும் உடனுகைக் கலந்து நிற்பர்.

3. கே: இதனுல் என்ன அறியக்கிடக்கிறது?

ப: ஆணவமலத்தில் நீங்கி, வேறுநின்ற உயிர்கள் இறைவனைவிட்டுத் தனித்து நிற்றல் ஓரிடத்துமில்லை என்பதாம்.

சூத்திரம் 11, அதிகரணம் 2, செய்யுள் 8.
(எங்குந் ..... காணே)

1. கே: முதவ்வன், எங்கும் செறிந்து நின்று உபகரிப்பனுயின் எல்லாருங் காண வேண்டுமே, ஏன் காணவில்லை?

ப: அருட்கண்ணுடையார்க்கன்றி அவனை அறிய முடியாது. சூரியன் விளக்கமாய் இருந்தும் குருடனுக்கு அறிய வராததுபோல.

2. கே: அந்த அருட்கண் யாருக்குக் கிடைக்கும், யாருக்குக் கிடைக்காது?

ப: பக்குவமுடையார்க்கு இடைக்கும், மற்றவருக்குக் கிடைக்காது. அதுவும் முதல்வனையின்றி சூரியன் பக்குவமுள்ள தாமரையை அலர்த்துவதுபோல அமையாது.

3. கே; முதல்வன், அவ்வருட் கண்ணை எப்பொழுது கொடுப்பான்?

ப: பருவம் பார்த்திருந்து கொடுப்பான்.

சூத்திரம் 11, அதிகரணம் 2, செய்யுள் 9.
(சென்றணையும் ....ஒன்றன்றே)

1. கே: பதிகன் என்றால் யார்?

ப: வழிப்போக்கர்.

2. கே: ஈசுவர அவிகாரவாதி மதம் என்ன?

ப: ஈசுவரன், விகாரம் இன்றி நிற்ப, உயிர்தானே பருவம்சேர்ந்த வழி, ஞானக்கண்ணைப்பெற்று அரனைத்தலைக் கூடும் என்பது-

3. கே: இதற்கு ஈசுவர அவிகாரவாதி சொல்லும் உதாரணம் எது?

ப: பதிகரால் சென்றணையும், மரநிழல்போல என்பதாம்.

4. கே: ஈசுர அவிகாரவாதி சொல்லுவது ஏன் பொருந்தாது?

ப: மரநிழலுக்கு சுதந்திரம் இன்றி, சென்றணைபவர்க்கு அச்சுதந்திரம் ஆமாறுபோல, முதல்வனுக்குச் சுதந்திரமில்லை, அவனைத் தலைக்கூடும் உயிருக்கே சுதந்திரம் எனப்பட்டு வழுவாம்.

5. கே: பரிணாமவாதிகள் கொள்கை என்ன?

ப: உயிர்கெட்டு சிவத்தை அணைந்து ஒன்றாய் நின்றது என்பது.

6. கே: பரிணாமவாதி கொள்கை ஏன் பொருந்தாது?

ப: கெட்டால் கூடுமாறு இன்மையால்.

7\. கே: பின்னும் பரிணமவாதி சொல்லுவது என்ன?
ப: கூடியபின் கெட்டது என்பது.

8\. கே: கூடியபின் கெட்டது என்பது ஏன், பொருந்தாது?
ப: கெட்டவழி முத்தி பெறுவது ஒன்றில்லை.

9\. கே: பின்னும் பரிணமவாதி சொல்லுவது என்ன?
ப: கெடுவதே முத்தி.

10\. கே: கெடுவதே முத்தியென்பது ஏன் பொருந்தாது?
ப: உயிர் நித்தமாதலால் கெடுமென்பது பொருந்தாது.

11\. கே: ஐக்கியவாதி கொள்கை என்ன?
ப: நீரிலே நீர்சேர்ந்தாற்போல உயிர் அரன் அடியைச் சேரும் என்பர்.

12\. கே: ஐக்கியவாதி சொல்லுவது ஏன் பொருந்தாது?
ப: முதல்வனும் உயிரும் தம்முள் சமமாவதில்லை.

சூத்திரம் 11, அதிகரணம் 2, செய்யுள் 10.
(செம்பிரத ....உரித்தே)

1\. கே: களிம்பு உள்ள வரையும் செம்பு, பொன்னுடன் ஒத்து ஒன்றுமாறில்லை. ஆயினும். களிம்பு நீங்கியவழி, செம்பு, பொன்னை ஒத்து ஒன்ருதன் செல்லும். அதுபோல, மலம்நீங்கிய வழி உயிர், முதல்வனோடு ஒத்து ஒன்ரும் என்பது ஏன் அடாது?

ப: உயிர்க்கு மலத்தை நீக்கும் ஆற்றலுடைய முதல்வனை, செம்பிற்குக் களிம்பை நீக்கும் ஆற்றலுடைய இரசகுளிகையோடு ஒப்புறுத்தலன்றி, அவ்வாற்றலில்லாத பொன்னோடு ஒப்புறுத்தல் ஏலாது.

2\. கே: மலம் நீங்கியவழி உயிர் என்ன சுதந்திரத்தை அடையும்?

ப: சிவானுபவம் ஒன்றற்கே உரியது, ஐந்தொழில் செய்யும் சுதந்திரம் கிடையாது.

3\. கே: முதல்வன் உயிரின் மலத்தை நீக்கி பொன்போலாக்கி திருவடிக்கீழ் வைப்பன் என்பது ஏன் பொருந்தாது?

ப: களிம்பை ஒளியச்செய்த அக்குளிகைப் பொன்ருகாது அதுபோல

சூத்திரம் 11, அதிகரணம் 2, செய்யுள் 11.
(சிவன் ....சித்தாமே)

1. கே: சீவனும், சிவனும், சித்தேயாகலால் ஒத்து ஒன்ரும் என்பதே அமைவுடைத்து. அதன்றி, உயிர் சிவானுபவம் ஒன்றினுக்கே உரித்து என வேற்றுமைப்படுத்துக் கூறுதலுக்குக் காரணமென்ன?

ப: ஞாயிற்றின் ஒளியும், கண்ணெளியும் ஒளியென்னும் பொதுமையால் ஒத்து ஒன்ருயிருப்பினும், கண்ணெளி வியஞ்சகத்தையின்றி அமையாது, அது அதுவாய் முந்திக் காணும். ஞாயிற்றின் ஒளி, தனக்கொரு வியஞ்சகத்தை வேண்டாது, தானே வியஞ்சகமாய் எல்லாவற்றையும் ஒருங்கே விளக்கி நிற்கும், கண்ணெளிக்கும் ஞாயிற்றின் ஒளிக்கும் வேற்றுமை பேரியதாயினுற்போல, சித்திரண்டுக்கும் வேற்றுமை பெரிதாம் அவ்விரண்டும் அத்துவிதமாய் நிற்றலேயன்றி ஒன்ருய்ப்போமாறில்லையாம்.

சூத்திரம் 11, அதிகரணம் 2, செய்யுள் 12,
(இரும்பை.........கலந்தே)

1. கே: சென்றணையும் நிழல்போலச் சிவனில்லாமை என்பதற்குப் பொருள் என்ன?

ப: மரம் விகாரமின்றி நிற்க, அதாவது மரம் நிர்விகாரமாய் நிற்க, வழிப்போக்கன் சென்று அணையும் நிழல்போல சிவன் விகாரமாய் நில்லாமை அதாவது நிர்விகாரமாய் நிற்றல் என்பது பொருள்.

2. கே: காந்தத்தின் செய்கை எப்படிப்பட்டது?

ப: காந்தம் விகாரமின்றி நின்றே, இரும்பை இழுக்கும்

3. கே: இறைவன் செய்கை எப்படிப்பட்டது?

ப: இறைவன் காந்தத்தைப்போல விகாரம் இன்றியே உயிரை தன்வழிப்படுத்து நிற்பன்,

4. கே: எரியின் செய்கை எப்படிப்பட்டது?

ப: எரி இரும்பைக் கெடுத்தலின்றித் தன் வண்ண மாக்கும், அதன்றி தன் வண்ணமாக்குதற்கு உரித்தாகாமல் அந்த இரும்பின்கண் உடன்தோன்றி நிற்கிற கறையை மாத்திரம் கெடச்செய்யும்.

5. கே: இறைவன் செய்கை எப்படிப்பட்டது?

ப: இறைவன் எரியைப்போல உயிரை தன் வண்ண மாகச்செய்து தன் வண்ணமாக்குதற்கு உரித்தாகாமல் உயிருடன்தோன்றி உயிரின்கண் நிற்கிற மலத்தை மாத்திரம் கெடச்செய்வன்.

6 கே: அப்பணைந்த உப்பின் செய்கை எப்படிப்பட்டது?

ப: நீரோடு சேர்ந்த உப்புதன் சுவை முழுதையும் அந் நீருக்காக்கி தன்னெடு ஒப்பசமன் செய்யும்.

7. கே: உயிரைச் சேர்ந்த இறைவன் செய்கை எப்படிப் பட்டது?

ப: இறைவன் தனக்குரிய எண் குணங்களையும் அவ் வுயிரின்கண் பதிப்பித்து தன்னேடு ஒப்பச்செய்து நிற்பன்.

8. கே: இரசகுளிகையின் செயலென்ன?

ப: இரசகுளிகை செம்பை உருக்கித் தன்னேடு கூட்டி பொன்னுகச் செய்தும் பொன்னியல்பைக் காட்டாது, தன்னுள் அடக்கி நிற்கும்.

9. கே: இறைவன் செய்கை எப்படிப்பட்டது?

ப: இறைவன் இரசகுளிகைபோலச் செய்தும் அவ்வுயிரின் இயல்பு சிறிதும் தோன்ருது அறிவு இறந்து நிற்கும்படி தனது வியாபகத்துள் அடக்கி நிற்கச் செய்வன்.

10. கே: இறைவனும் உயிரின்கண் கலந்தவழி எப்படி இருக்கும்?

ப: கரும்பும், தேனும், பாலும், கனியும், கல்கண்டும் சர்க்கரை முதலியவைகளும் கலந்தவழி அச்சுவை இவ்வியல் பிற்று என பிரித்தறிய வாராமல் ஆனந்த சொரூபமாய் நிற்பன்.

பதினேராஞ் சூத்திரம் முடிந்தது.

சூத்திரம் 12, செய்யுள் 1,
(செங்கமல……யோரே)

1. கே: பத்தாஞ் சூத்திரத்தால் எதன் இயல்பு வகுத்து கூறப்பட்டது?

ப: பாசநீக்கமாகிய பயன் பெற்ருர்க்கு சீவன் முத்தி நிலையின்கண் நிகழும் இயல்பு கூறப்பட்டது.

2. கே: பதினேராஞ் சூத்திரத்தால் எதன் இயல்பு வகுத்து கூறப்பட்டது?

ப: சிவப்பேருகிய பயன் பெற்ரோர்க்கு சீவன் முத்தி நிலையின்கண் நிகழும் இயல்பு கூறப்பட்டது.

3. கே: மும்மலங்கள் எவை?

ப: ஆணவம், மாயை, கன்மம்.

4. கே: மும்மலங்கள் என்ன செய்கின்றன.

ப: இறைவனுடைய திருவடிகளை அணைய ஒட்டாது அயர்த்தலைச் செய்விக்கிறது. (அயர்த்தல் - மறத்தல்)

5. கே: எதைப்போல எப்படி நிற்கின்றன?

ப: விளக்கற்றம்பார்க்கும் இருள்போல, அறிவற்றம் பார்த்து நிற்கின்றன.

6. கே. ஆதலால் நாம் என்ன செய்யவேண்டும்?

ப: அதற்கு அஞ்சி பரிகரித்தலுக்குத் துணையாகிய மெய்யன்பரோடு பயின்று, அப்பயிற்சி நிலைபெற திருவேடத்தையும் சிவாலயத்தையும் அரனெனவே கண்டு வழிபட்டு ஆடல் பாடல்களைச்செய்து, நாம் ஆர்க்கும் எளியோமல்லோம், எவர்க்கும் மேலானேம் என்று இறுமாப்பெய்தி, களித்து, வாழ்தல் வேண்டும். இதுவே சீவன் முத்தருடைய இயல்பு.

சூத்திரம் 12, அதிகரணம் 2, செய்யுள் 2,
(ஈசனுக்கு ……திரியே)

1. கே: காமுகனுவான் ஒருவன், ஒருவனிதையரிடத்து அன்புடையன் என்பதை எப்படிக் காணலாம்?

ப: அந்த வனிதையரின் ஒக்கலைக்கண்டுழி நிகழும் அன்புபற்றித் தெரியலாம்.

2, கே: இந்த உதாரணத்தால் என்ன தெரியவருகிறது?

ப: அடியவர்க்கு அன்பில்லாதவர் ஈசனுக்கு அன்பில்லாதவர் என்று தெரியவருகிறது. ஈசனிடத்து அன்பில்லாதவர், எவ்வுயிரின் கண்ணும் அன்பில்லர்தவரே யென்று தெரியவருகிறது. அடியார்க்கும், ஈசனுக்கும், எவ்வுயிர்க்கும் அன்பில்லாதவரே தமக்கும் அன்பில்லாதவராம்.

3. கே: கழிகாமத்த ராயினருக்கு அத்தொடர்புடையாரது இணக்கத்தில் கழிபேருவகையை ஏன் உண்டாக்குகிறது?

ப: அவ்விணக்கம் காமப்பைங்கூழை வளர்க்கும் நீராகிறபடியால்.

4. கே: நீ எப்படி இருக்கவேண்டும்?

ப: அரன்மலரடிக் கீழிருந்து அத்தொடர்புடைய அடியாரோடிணங்கி அவர் பணியை உன் பணியாக, உன்பணியாகவே தற்போதம் முனைத்தலின்றி அடியரல்லாதாரோடு இணக்கத்தில் வெறுப்புகொண்டு நீங்கி நயமொழிகூறி கும்பிட்டு கைகொட்டிக் கூத்துமாடித்திரிக.

சூத்திரம் 12, அதிகரணம் 3, செய்யுள் 3.

(அறிவரியான்.........விடவே)

1. கே: திருவேடமுடையார் எப்படி சிவமேயாவர்?

ப: உலகத்துள்ளார் தன்னை அறிதற்பொருட்டு சிவன் தன்னுடைய திருநீறு கண்டிகை முதலிய திருவேடத்தைக் கொடுத்து உயிர்க்குயிராய் அறிவினை விளக்கி அருளால் கலந்திருத்தலால் திருவேடம் சிவனுருவேயாகும். அம்மெய்யன்பர் சிவோகம் பாவனை செய்தலால் சிவனே ஆவர், இன்னும் இதயத்தானத்தில் ஒரு குறியின் கண்வைத்து முதல்வனைக் கூடுஞ்செயலானும், அப்போது தற்போதங்கெட்டு நிற்றலானும் சிவமேயாவர். ஆதலால் நீ அரனெனவே வழிபடுவாயாக, ஏன் எனின் பாசப்பற்றுடையார் பற்றுவிடுதற்காக.

சூத்திரம் 12, அதிகரணம் 3, செய்யுள் 4.
திருக்கோயில்..... ...அன்பர்க்கே)

1. கே: சரியையாளர்கள் திருக்கோயிலின் உள்ளிருக்கும் திருமேனியை என்ன கருத்தோடு வழிபட வேண்டும். வழிபடுவதனால் என்னபயன்?

ப: சிவனெனவே வழிபடவேண்டும். அப்படி வழிபட்டால் சிவபிரான் ஆண்டு வெளிப்படாது நின்று அருள் செய்வன்.

2. கே: கிரியையாளர்கள் திருக்கோவிலின் உள்ளிருக்குந் திருமேனியை என்ன கருத்தோடு வழிபட வேண்டும். அவ்வழிபாட்டால் என்னபயன்?

ப: ஈசானுதி மந்திரங்களால் சிவலிங்க முதலிய திருவுருக்கோலினுன் எனக்கருதி மந்திர நியாசத்தால் வழிபட வேண்டும். அப்படி வழிபட்டால், விறகைக் கடைந்த வழித் தோன்றும் எரிபோல அவரவர் விரும்பிய வடிவாய் அத்திரு மேனிகளில் தோன்றி நின்று அருள்செய்வன்.

3. கே: யோகிகள் திருக்கோயிலின் உள்ளிருக்கும் திருமேனி களை என்ன கருத்தோடு வழிபடவேண்டும். அந்தவழிபாட்டால் பயன் என்ன?

ப: உள்ளம் எங்கணும் இல்லமாகவாழும் சிவபிரான் இத்திருமேனியிலும் வீற்றிருந்து பூசைகொண்டருளுவன் என்று கருதி சாத்தியமந்திரங்களால் வழிபடவேண்டும். கறந்த வழித்தோன்றும் பால்போல அவரவர் விரும்பிய வடிவாய் நின்று அருளுவன்.

4. கே: சரியையாளர், கிரியையாளர். போகிகள்போல ஏக தேசமாய்க் குறித்தலின்றி அன்புமாத்திரை யால் வழிபடும்ஞானிகளுக்கு எப்படி அருள் செய்வர்?

ப: மேம்பட்ட வடிவம் எங்கணும் காணப்படாத பால் கன்றை நினைந்த புனிற்றாவின் முலையில் விம்மி யொழுகுவது போல கருணைமிகுதியால் அன்பேதானுய் எப்போதும் ஆண்டு வெளிப்பட்டுநின்று அருள் செய்வன்.

சூத்திரம் 12, அதிகரணம் 3, செய்யுள் 5.
(ஞானயோகக்.........ஏத்தே)

1. கே: சரியையாளரைப் போல ஞானிகள் வழிபடுதல் எற்றுக்கு?

ப: ஞானம், யோகம், கிரியை, சரியை என்னும் நான்கு பாதத்தில் நிகழும் கிரியை யெல்லாம், கருத்தாவின் உண்மைப் பணியாகலால், குருவின் உபகாரத்தைக் கருதி நால் வகைத் தொழிலும் ஞானிசெய்தலே கடப்பாடாம் என்பது. உட்டொழில் செய்வார் புறத்தொழிற்கும் உரியர் என்னும் முறைமையாம்.

2. கே: சரியை, கிரியை, யோகஞ் செய்வோர் தத்தம் தொழிற்கே உரியர் என்பது எப்படி?

ப: புறத்தொழில் செய்பவர் உட்டொழிற்கு உரியரல்லர் என்னும் முறைமையாம். அதாவது யோகி, யோகம், கிரியை சரியைக்கு உரியர், கிரியாவான், கிரியை, சரியை இரண்டுக்கும் உரியன், சரியாவான் சரியைக்கு மாத்திரம் உரியன்.

3. கே: குரு எத்தனை வகைப்படுவார்கள், யார், யார்?

ப: சரியாகுரு, கிரியாகுரு, யோககுரு, ஞானகுரு என நால்வகைப்படுவர்.

4. கே: இவர்கள் உபதேசிக்கும் முறைமை எப்படி?

ப: சரியாகுரு சரியைக்கு மாத்திரம் உரியவர். கிரியா குரு, சரியைக்கும் கிரியைக்கும் உரியவர். யோககுரு, சரியை, கிரியை, யோகம் மூன்றிற்கும் உரியவர். ஞானகுரு, சரியை கிரியை, யோகம், ஞானம் இந்நான்கிற்கும் உரியவர். ஆதலால் ஞானகுருவே தலைமையாய குருவாம்.

சூத்திரம் 12, அதிகரணம் 3, செய்யுள் 6.
(மந்திரத்தால்.........அன்றே)

1. கே: ஆசிரியன் இன்றியும் அடையும் ஞானங்கள் எவை?

ப: (1) மந்திரஞானம் (2) மருந்துகள் (3) யோகம் (4) மணியாகிய இரசகுளிகை (5) சாத்திரங்களிலே கூறிய படிசெய்தல் (6) வேதாகமம் முதலிய கலைஞானங்கள் (7) திரிகாலஞானம் (8) அணிமா முதலிய ஞானங்களாம்.

2. கே: திருவடி ஞானம் யாரால் உண்டாம்?

ப: ஆசிரியனால் உண்டாம், ஆசிரியனையின்றி அமையாது.

சூத்திரம் 12, அதிகரணம் 3, செய்யுள் 7.
(பரப்பிரமம்.........தானே)

1. கே: ஞானாசிரியனை எப்படி வழிபடல் வேண்டும்?

ப: (1) சொரூப சிவமும் குருமூர்த்தமே, (2) தடத்த சிவமும் குருமூர்த்தமே, (3) பரஞானமுத்தையுடையாரும் குருமூர்த்தமே (4) ஏனைத்தாவர மூர்த்தங்களும் குருமூர்த்தமே, (5) 63 நாயன்மார் முதலிய சிவபத்தர் பொருட்டாக ஆண்டாண்டு வெளிப்பட்டருளி மறையும் மூர்த்தங்களும் குருமூர்த்தமே, எனத்தேறி, அருட்குருவை வழிபடல்வேண்டும்.

2. கே: அப்படி வழிபட்டால் என்னபயன்?

ப: சிவபிரான் குருவை ஆவேசித்து நின்று- கோழி, ஆமை, மீன், இவைகளில் கோழி அண்டமாகிய முட்டையைத் தீண்டியும், ஆமை தன் முட்டையைக் கருதியும், மீன் தன் முட்டையை நோக்கியும் பரிவுற்று தம் வண்ணமாகச் செய்யுமாறு போல, குருவானவர் நாடோறும் செய்யும் பரிசத்தாலும், கருதலாலும், நோக்கலாலும், அவ்வுயிரைத் தன் வண்ணமாகச் செய்தருளுவன்.

பன்னிரண்டாஞ் சூத்திரம் முடிந்தது.

சிவஞான சித்தியார் சுபக்கச் சுருக்க வினாவிடை முடிந்தது.

ஸ்ரீ மெய்கண்ட தேவர் திருவடி வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
அருணந்தி வரலாறு கடைசிவரிக்கு மேல்வரியில்,		மக	பூரம்
2	6	முகந்	முகர்ந்
2	26	மெப்	மெய்
5	2	மாக்தி	மாத்தி
15	13	அவயவம	அவயவம்
16	13	அவயவம	அவயவம்
21	1	சடம்	சடம்
21	23	மாரும்	மாகும்
23	2	காரிப்	காரியப்
23	13	மண	மண்
24	14	காரண்யம்	காரணம்
24	19	இலபொருள	இல்பொருள்
24	கடைசி	தோன்றும	தோன்றும்
25	1	தரும	தரும்
27	9	பஞசம்	பஞ்சம்
28	1[illegible]	சுத்த	அசுத்த
33	29	நிவர்த்தி	நிவிர்த்தி
34	15	அன்று	அன்று
34	19	யிருப்பது	யிருப்பது.
45	12	கேடட	கேட்ட
46	23	அழிபபு	அழிப்பு
47	8	மலங்களை	மலங்களை
54	கடைசி	இது	இவை
63	1	சென்னி	செனனி
70	19	நிறுத்தோடு	நிறத்தோடு
70	26	எனன	என்ன
71	27	சிறுப்பு	சிறப்பு
73	14	அளவை	அளவை கூறுகின்றார்
80	6	துன்மம்	துன்பம்
80	26	கண்மாமு	கண்மரமு
89	22	தெப்வத்தி	தெய்வத்தி
103	7	அறிநது	அறிந்து
104	20	உண்ணேள்	உண்ணேன்
104	20	உண்டாள்	உண்டான்
118	3	அரகம்	அராகம்
118	11	பிரோகா	பிரேரக

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
125	17	உயிர்	அஞ்ஞானம்
127	29	வியர்வவயில்	வியர்வையில்
132	27	உயர்	உயிர்
136	2	சிவனுர்	சீவனுர்
137		உளறுதல்	உன்னுதல்
138	2	சூக்கும்	சூக்கும
138	11	புரியட்ட	புரியட்டக
139	16	நீங்குவதா	நீங்குவது
139	26	கெய்யது	செய்யாது
139	31	யன்றி	யறி
143	16	பாகம்	பாகம்.
154	19	எங்படி	எப்படி
151	கடைசி	சுழுததி	சுழுத்தி
168	26	என்னும	என்னும்
172	29	நல்வினே	கல்வினே
176	10	முதன்	முதன்மை
178	2	ஆகமும்	ஆகமமும்
	3	சோன்ன	சொன்ன
	27	அழுக்கைந்	அழுக்கைக்
192	24	கருவிகளோடுந	கருவிகளோடுங்
193	15	இருப்யினும்	இருப்பினும்
163	28	சத்நதி	சந்நிதி
164	3	அறிவில்லாதா	அறிவில்லாததாகலா
165	14	சாதத்தல்	சாதித்தல்
166	6	ததிநலம்	ததிநியாயம்
177	13	கலசநயம்	கலச நியாயம்
178	2	பதில்	
183	24	பெருதவர்	பெற்றவர்
184	கே. 4		
187	6 கே.		
187	30	துரியாதீதம்துரியம் - தீவிரதரம் தீவிரம்	
190	31	மாசில்	மாசு
19:	24	ளோடுந	ளோடுங்
194	5	அறிவாம்	அறியலாம்
217	28	முதவ்	முதல்
220	16	பேரிய	பெரிய
223	4	அன்பில்லர்	அன்பில்லா.

பாண்டியன் அச்சகம், சிதம்பரம்.